இயேசு கிறிஸ்து யார்?

அவர் எப்படிப்பட்டவர்?



WOG

BIBLE MINUTES

இயேசு கிறிஸ்து யார்?

அவர் எப்படிப்பட்டவர்?

மூலம்:

தலை சிறந்த வேதபாடங்கள்

R.ஸ்டான்லி புத்தகங்கள்

GotQuestions இணையம்

WOG BOOKS 186

First Edition 2025

Editor / *தொகுப்பாசிரியர்*:

Yesudas Solomon / *ஏசுதாஸ் சாலொமோன்*
Mathanraj Joshua / *மதன்ராஜ் ஜோசுவா*

Source / *மூலம்*:

வேதபாடங்கள், R.ஸ்டான்லி புத்தகங்கள், GotQuestions

Published By / *பதிப்பு*:

Bible Minutes, www.WordOfGod.in

Copyright: Public Domain / *இலவசம் / பொதுதளம்*

This book is not copyright protected. You are free to download, print and make copies without any permission from us. *இந்தப் புத்தகத்தை நாங்கள் காப்புரிமைக்கு உட்படுத்தவில்லை. ஆகையால் நீங்கள் இந்தப் புத்தகத்தை எங்களுடைய அனுமதி இல்லாமலேயே மறுப்பதிப்புச் செய்துக்கொள்ளலாம்.*

Download / *பதிவிறக்கம்*:

www.WordOfGod.in and www.Archive.org

Contact Us / *தொடர்புக்கு*:

WhatsApp: +91 7676505599
Email: wordofgod@wordofgod.in

பொருளடக்கம்

முகவுரை 1

1. இயேசு கிறிஸ்து யார்?..... 3

2. ஏன் கன்னி பிறப்பு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது? 8

3. கிறிஸ்துவின் வருகையைக் குறித்து பழைய ஏற்பாட்டில் எங்கே முன்னறிவிக்கப்பட்டுள்ளது?..... 11

4. இயேசு தேவனா? இயேசு தாம் தேவன் என்று எப்பொழுதாவது கூறினாரா?..... 14

5. இயேசு, தேவனுடைய குமாரன்..... 17

6. இயேசு இந்த பூமிக்கு வந்தது எதற்காக?..... 26

7. இயேசு எப்படிப்பட்ட தோற்றத்தில் இருந்தார்?... 42

8. இயேசு கிறிஸ்து எவ்வகையில் தனித்துவமானவர்?44

9. இயேசு தேவனுடைய ஒரேபேறான குமாரன் என்பதன் அர்த்தம் என்ன?..... 47

10. இயேசு தாவீதின் குமாரன் என்பதன் அர்த்தம் என்ன? 50

11. இயேசு நம்முடைய பிரதான ஆசாரியர் என்பதன் அர்த்தம் என்ன? 53

12. யோவான் 1:1, 14 ஆகிய வேதப்பகுதி இயேசு தேவனுடைய வார்த்தை என்று அறிவிப்பதன் அர்த்தம் என்ன?..... 56

13. இயேசு ஒருவர்தான் பாவமில்லாமல் பிறந்தாரா? 59

14. இயேசு கிறிஸ்து தேவனின் அவதாரமா?..... 64

15. இயேசு சர்வ வல்லமையுள்ள தேவனா?..... 67

16. இயேசு ஒரு யூதரா?..... 74

17. இயேசு தேவ ஆட்டுக்குட்டி என்பதன் அர்த்தம் என்ன? 77

18. இயேசு தேவனுடைய குமாரன் என்பதன் அர்த்தம் என்ன? 80

19. இயேசுதான் பிதாவா?..... 82

20. இயேசுதான் பிதாவை வெளிப்படுத்தினார்..... 84

21. இயேசுவாய் வந்தவர்தான் பிதாவா? 86

22. இயேசு கிறிஸ்துவின் வெவ்வேறு பெயர்கள் மற்றும் தலைப்புகள் யாவை? 90

23. மத்தேயுவிலும் லூக்காவிலும் இயேசுவின் வம்சவரலாறுகள் ஏன் மிகவும் வித்தியாசமானதாக இருக்கிறது?..... 98

24. இயேசு ஒரு கட்டுக்கதையா? இயேசு மற்ற பண்டைய புற மதங்களிலிருந்த கடவுள்களின் நகலா? 101

25. இயேசு மெய்யாகவே ஜீவித்திருந்தாரா? இயேசு ஜீவித்திருந்தார் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் ஏதேனும் உண்டா? 111

26. உண்மையான வரலாற்று இயேசு யார்?..... 116

27. இயேசுவின் குழந்தை பருவத்தில் என்ன சம்பவித்தது? 119

28. இயேசு மனுஷகுமாரன் என்பதன் அர்த்தம் என்ன?121

29. கடவுள் ஏன் இயேசுவை அனுப்பினார், ஏன் முன்னரே ஏன் அனுப்பவில்லை?..... 123

30. கிறிஸ்துவின் தெய்வீகம் வேதாகமத்தின் அடிப்படையிலானதா? 128

31. இயேசுவின் சோதனைகளுக்கான பொருள் மற்றும் நோக்கம் என்ன? 133

32. இயேசு எப்போதாவது கோபமாக இருந்தாரா?.. 136

33. உபபரநிலை ஒற்றுமை என்றால் என்ன? இயேசு எப்படி ஒரே நேரத்தில் தேவனாகவும் மனிதனாகவும் இருநிலையில் இருக்க முடியும்? 139

34. இயேசுவின் நாமத்தில் ஜெபிப்பது என்றால் என்ன? 141

35. இயேசு ஏன் உவமைகளில் போதித்தார்?..... 143

36. இயேசுவும் சாத்தானும் சகோதரர்களா?..... 146

37. இயேசு சைவ உணவு உண்பவராக இருந்தாரா? ஒரு கிறிஸ்தவர் சைவ உணவு உண்பவராக இருக்க வேண்டுமா?151

38. யூதாஸ் இயேசுவை ஏன் காட்டிக் கொடுத்தார்?153

39. இயேசு பாவஞ்செய்யக் கூடியவராக இருந்தாரா (பாவஞ்செய்யக்கூடியவர் அல்லது பாவஞ்செய்ய முடியாதவர்)? இயேசு பாவஞ்செய்ய முடியாதவராக இருந்தாரானால், அவர் சோதிக்கப்படுதலின் அவசியம் என்ன?..... 158

40. இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்றால் என்ன அர்த்தம்?..... 162

41. இயேசு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினார், ஆனால் அதை ஒழிக்கவில்லை என்பதன் அர்த்தம் என்ன?..... 165

42. இயேசு எப்படி, யாருக்கு நம்முடைய மீட்கும் பொருளின் விலைக்கிரயத்தைச் செலுத்தினார்?..... 170

43. சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு இயேசு என்ன விசாரணைகளை எதிர்கொண்டார்?..... 172

44. கெனோசிஸ் என்றால் என்ன?..... 175

45. கிறிஸ்துவின் அன்பு என்றால் என்ன?..... 178

46. ஏசாயா 53-ஆம் அதிகாரத்தில் 'பாடநுபவிக்கும் வேலைக்காரன்' என்பது இயேசுவைப் பற்றிய தீர்க்கதரிசனமா? 181

47. நான் ஏன் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை வைக்கவேண்டும்? 186

48. இயேசு அவருடைய மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையே மூன்று நாட்கள் எங்கே இருந்தார்? 196

49. இயேசு ஏன் இவ்வளவு துன்பங்களை அனுபவிக்க வேண்டும்? 200

50. சிலுவையில் இயேசு கிறிஸ்து கூறிய கடைசி ஏழு வார்த்தைகள் யாவை, மற்றும் அவற்றின் அர்த்தம் என்ன?204

51. சிலுவையின் நிலையங்கள் என்றால் என்ன, அவற்றிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்? 207

52. ஆதாமின் சாபத்தையும் இயேசு அனுபவித்தாரா?220

53. இயேசு இறந்தபோது தேவாலய திரைச்சீலை இரண்டாக கிழிக்கப்பட்டதன் முக்கியத்துவம் என்ன? 223

54. மயக்கநிலைக் கோட்பாடு என்றால் என்ன? இயேசு சிலுவையில் அறையப்பட்டபின்பு உயிர் பிழைத்தாரா? 227

55. இயேசு வெள்ளிக்கிழமை சிலுவையில் அறையப்பட்டாரா? அப்படியானால், அவர் ஞாயிற்றுக்கிழமை உயிர்த்தெழுந்திருக்க, எப்படி மூன்று நாட்கள் கல்லறையிலிருந்தார்? 232

56. இயேசு தனது மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையில் நரகத்திற்குச் சென்றாரா? 237

57. இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதல் உண்மையா?241

58. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஏன் முக்கியமானது? 244

59. இயேசு கிறிஸ்துவின் பரமேறிச் செல்லுதலின் பொருள் மற்றும் முக்கியத்துவம் என்ன?.....249

60. கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் பொருள் என்ன?252

61. நம்முடைய பாவத்திற்கான விலையை இயேசு செலுத்தினார் என்றால், நாம் ஏன் இன்னும் நம் பாவத்தின் விளைவுகளை அனுபவிக்கிறோம்?.....255

62. கிறிஸ்து எப்பொழுது திரும்ப வருவார்?.....260

63. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்றால் என்ன? 263

64. இயேசு எப்போது திரும்பி வருகிறார் என்பதை அறிய முடியுமா?.....266

65. இயேசு இரவிலே திருடன் வருகிற விதமாய் திரும்புவார் என்றால் என்ன அர்த்தம்?.....269

66. இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள் என்பதன் அர்த்தம் என்ன?.....272

67. இயேசு இரட்சிக்கிறார் என்பதன் அர்த்தம் என்ன?275

68. பரலோகத்திற்கு போகிறதற்கு ஒரே வழி இயேசு மட்டும்தானா?.....279

69. இயேசுவுக்கு சகோதர சகோதரிகள் (உடன்பிறந்தவர்கள்) இருந்தார்களா?.....283

70. இயேசு கிறிஸ்துவின் பன்னிரண்டு (12) சீஷர்கள் / அப்போஸ்தலர்கள் யார்?.....286

71. இயேசு 'நான் இருக்கிறேன்' என்று சொன்னபோது என்ன அர்த்தம் கொண்டார்?.....289

72. "இயேசு மட்டுமே" / "ஒன்றான பெந்தகொஸ்தே"-க்களின் நம்பிக்கைகள் என்ன?.....291

73. மறுரூபமாதலின் பொருள் மற்றும் முக்கியத்துவம் என்ன? 294

74. இயேசு பிரதான தூதனாகிய மிகாவேலா?.....297

75. ஜனங்கள் ஏன் இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதபடிக்கு நிராகரிக்கிறார்கள்?.....299

76. 'இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று' இயேசு சொன்னபோது என்ன அர்த்தம் கொண்டார்?.....302

77. இயேசு எப்படி நம் ஓய்வுநாள் ஓய்வாக இருக்கிறார்?305

78. கிறிஸ்துவை உண்மையாக பின்பற்றுதல் என்பதன் அர்த்தம் என்ன? 311

79. மத்தேயு 16:18 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாறை எது? 315

80. இயேசு பரிபூரண ஜீவனை வாக்குத்தத்தமாக அளித்தபோது அவர் எதை அர்த்தப்படுத்தினார்?.....319

81. மலைப் பிரசங்கம் என்றால் என்ன?.....323

82. தேவன் மன்னிக்காத பாவம் ஏதேனும் உள்ளதா?326

83. இயேசு நம்முடைய பாவத்திற்காக மரிப்பதற்கு முன்பு மக்கள் எப்படி இரட்சிக்கப்பட்டார்கள்?.....330

84. நீங்கள் எவ்வளவு இளமையாக இருக்கும்போது உங்களுடைய இரட்சகராக இருக்கும்படிக்கு இயேசுவிடம் கேட்கலாம்? 333

85. கிறிஸ்துவுக்காக பாடநுபவித்தல் எப்போதும் கிறிஸ்துவைப் பின்பற்றுதலின் ஒரு பகுதியாக இருக்கப் போகிறதா?.....335

86. இயேசுவின் இரத்தத்தைச் சொல்லி மன்றாடுவது வேதாகமத்தின் படியானதா?.....340

87. இயேசு தேவனென்றால், அவர் தேவனிடம் எப்படி ஜெபிக்க முடியும்? இயேசு தன்னிடமே ஜெபித்துக்கொள்ளுகிறாரா?344

88. அன்புள்ள இயேசு சுவாமி என்று ஜெபிக்கலாமா?347

89. இயேசு ஊதியது ஏன்?.....350

90. இயேசு மட்டும் தான் பரலோகம் போனாரா?....352

91. கிறிஸ்துவின் ஆயிர வருட ஆட்சி.....354

92. நியாயத்தீர்ப்பு செய்பவர் பிதாவா? இயேசுவா? 361

93. நீதிமொழிகளில் சொல்லப்படும் "ஞானம்" இயேசுவா? 363

94. இரட்சிப்பின் வழி என்றால் என்ன?.....367

95. யார் இரட்சிக்கப்பட முடியும்? யாராவது இரட்சிக்கப்பட முடியுமா?.....371

96. இரட்சிப்பின் திட்டம் என்றால் என்ன?.....374

97. நான் எப்படி தேவனுடைய பிள்ளையாக முடியும்?378

98. நான் ஒரு இந்து, நான் எதற்காக கிறிஸ்தவனாகவேண்டும்? 383

99. நான் ஒரு முஸ்லீம், கிறிஸ்தவனாக மாறுவதை நான் ஏன் கருத்தில் கொள்ள வேண்டும்?.....396

100. தேவனிடத்தில் நான் எப்படி சரியான நிலையைப் பெறமுடியும்?.....401

101. கிறிஸ்தவன் என்றால் என்ன?.....404

102. பாவியின் ஜெபம் என்றால் என்ன?.....407

103. மன்னிப்பு கிடைத்ததா? தேவனிடமிருந்து நான் எவ்வாறு மன்னிப்பைப் பெறுவது?.....410

104. நான் எப்படி ஒரு கிறிஸ்தவனாக முடியும்?....414

105. கிறிஸ்தவத்திற்கு நான் எப்படி மாறுவது?..... 417

106. பரலோகத்திற்கு செல்லுதல் - எனது நித்திய இலக்குக்கு எப்படி நான் உத்தரவாதம் அளிக்க முடியும்?..... 420

107. நான் எனது விசுவாசத்தை இயேசுவின்மேல் வைத்திருக்கிறேன்... இப்பொழுது அடுத்து என்ன?..... 424

முகவுரை

வாசகர் அனைவருகும் அன்பின் வணக்கம். இந்த புத்தகம் இயேசு கிறிஸ்துவைப்பற்றி தெளிவாக அறிந்துக்கொள்ள வேண்டும் என்னும் நோக்கத்தோடு வெளியிடப்படுகிறது. அச்சுப்புத்தகமாக வெளியிடுவதைக்காட்டிலும் மின்-நூலாக/PDF வெளியிட்டால் சுலபமாக அனைவருக்கும், அதாவது பார்வையில்லாதோர், கிறிஸ்தவரல்லாதோர், நாத்திகர்கள், வெளிநாட்டில் வாழும் தமிழர், புத்தகம் வாங்க வசதியில்லாதோர் என அனைவருக்கும் இலகுவாக கிடைக்கும் என்று எண்ணுகிறோம். இது இலவசமாக கொடுக்கப்படுகிறது.

இந்த புத்தகத்தில் உள்ள கட்டுரைகள் ஒவ்வொன்றும் தலை சிறந்த வேதவல்லுனர்களால் எழுதப்பட்டவை. இவைகள் வெவ்வேறு வேதப்பாடங்கள், R. ஸ்டான்லி அண்ணன் புத்தகங்கள், GotQuestions இணையம் ஆகியவைகளில் இருந்து தேர்ந்து எடுக்கப்பட்டவை.

*இந்த புத்தகவரிசையில் **"கிறிஸ்தவ கடவுள் யார்? அவர் எப்படிப்பட்டவர்?"**, **"பரிசுத்த ஆவியானவர் யார்? அவர் எப்படிப்பட்டவர்?"** என்னும் கூடுதலான இரண்டு புத்தகங்களும் இலவசமாக வெளிவந்துள்ளன.*

இந்த புத்தகங்களை மற்றவர்களோடும் பகிர்ந்துக்கொள்ளுங்கள்.

தாழ்மையோடு,

ஏசுதாஸ் சாலொமோன்

மதன்ராஜ் ஜோசுவா

1. இயேசு கிறிஸ்து யார்?

தேவன் இருக்கிறாரா? என்கிற கேள்வியைப்போல் அல்லாமல், ஒரு சிலர் மட்டுமே இயேசு கிறிஸ்து ஜீவித்திருந்தாரா? என்று கேள்வியை எழுப்புகிறார்கள். இயேசு கிறிஸ்து உண்மையாகவே ஒரு மனிதன் என்றும் இஸ்ரவேல் தேசத்தில் ஏறத்தாழ 2000 ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர் என்றும் பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். இயேசுவின் முழுமையான தனித்துவத்தைக் கூறும்போது தான் விவாதமே வருகிறது. உலகில் உள்ள எல்லா பெரிய மதங்களும் இயேசு கிறிஸ்துவை ஒரு பெரிய தீர்க்கதரிசி அல்லது ஒரு நல்ல போதகர் அல்லது ஒரு தேவ மனிதன் என்று போதிக்கின்றன. ஆனால் வேதாகமம் மட்டும்தான் அவரை தீர்க்கதரிசியிலும், நல்ல போதகரிலும் மற்றும் ஒரு தேவ மனிதன் என்பதிலும் மேலானவராக எடுத்துரைக்கிறது.

சி.எஸ்.லூயிஸ், "வெறும் கிறிஸ்தவம்" *(Mere Christianity)* என்கிற தமது புத்தகத்தில் பின்வருமாறு எழுதுகிறார்: "இயேசுவைப் பற்றி மக்கள் எப்போதுமே சொல்லும் முட்டாள்தனமான காரியத்தை அப்படியாரும் சொல்லக்கூடாது என இங்கே தடைபோட விரும்புகிறேன்: 'இயேசுவை ஒரு பெரிய ஒழுக்கநெறி போதகராக ஏற்றுக்கொள்ள நான் தயாராய் இருக்கிறேன், ஆனால் அவர் தேவனாக இருப்பதாக கோருவதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை'. நாம் சொல்லக்கூடாத காரியம் இது ஒன்றுதான். ஒரு மனிதன் வெறும் மனிதனாக இயேசு சொன்ன காரியங்களை கூறினால், அவர் ஒரு பெரிய தார்மீக போதகராக இருப்பதில்லை. அவர் ஒரு பைத்தியக்காரத்தனமானவராக இருக்க வேண்டும், அதாவது அவர் ஒரு வேட்டையாடப்பட்ட முட்டை அல்லது அவர் நரகத்தில் இருக்கிற பிசாசாக இருப்பார். நீங்கள் தெரிவு செய்ய வேண்டும். இந்த மனிதன் தான், தேவனுடைய குமாரனாக இருந்தார் மற்றும் இருக்கிறார் அல்லது இந்த மனிதன் ஒரு பைத்தியக்காரனன் அல்லது மோசமானவன். அவரை முட்டாள் என

கருதி வாயை அடைத்துபோடலாம், அவர்மேல் துப்பலாம், பிசாசு என்று கூறி கொலையும் பண்ணலாம் அல்லது நீங்கள் அவருடைய காலடியில் விழுந்து அவரை கர்த்தர் என்றும் தேவன் என்றும் அழைக்கலாம். ஆகையால், அவர் ஒரு போதகர் மட்டும்தான் எனக்கூறிக்கொண்டு முட்டாள்தனமா ஆதரவு அளிக்க முன்வரக்கூடாது. அவர் அந்த தெரிந்துகொள்ளுதலை நமக்கு அளிக்கவில்லை. அவர் அதை விரும்பவுமில்லை.

அப்படியென்றால் இயேசு கிறிஸ்து தன்னை யாரென்று உரிமை கோரினார்? வேதாகமம் அவர் எப்படிப்பட்டவராக இருக்கிறார் என்று சொல்கிறது? முதலாவதாக நாம் இயேசு கிறிஸ்து என்ன சொல்கிறார் என்று பார்ப்போம். "நானும் பிதாவும் ஒன்றாக இருக்கிறோம்" (யோவான் 10:30). சாதாரணமாக இதை பார்ப்பதற்கு, இயேசு தன்னைக் குறித்து தேவன் என்று சொன்னதாக இவ்வசனத்தில் தெரியாமல் போகலாம். ஆனால் இயேசு இப்படி சொன்னதும் அதற்கு யூதர்கள் எடுத்துக்கொண்ட விதம் மற்றும் யூதர்களின் பிரதிபலிப்பை கவனியுங்கள்: 'யூதர்கள் அவருக்கு பிரதியுத்தரமாக, நற்கிரியையினித்தமாக நாங்கள் உன் மேல் கல்லெறிகிறதில்லை – நீ மனிதனாயிருக்க உன்னை தேவன் என்று சொல்லி இவ்விதமாக தேவ தூஷணம் சொல்லுகிறபடியினால், உன் மேல் கல்லெறிகிறோம் என்றார்கள்" (யோவான் 10:33). இந்த வாக்கியத்தை இயேசு கிறிஸ்து கூறியது மூலம், தன்னை தேவனென்று குறிப்பிட்டதாக யூதர்கள் புரிந்து கொண்டார்கள். அவர்கள் இப்படி பிரதிபலித்ததால், இயேசு அதை மறுக்கவோ, மாறுத்தரம் சொல்லவோ இல்லை. இதிலிருந்து "நானும் பிதாவும் ஒன்றாக இருக்கிறோம்" என்று இயேசு கூறியது அவர் தேவனாக இருக்கிறார் என்பதை தெளிவுபடுத்துவதற்குத்தான் என்பது தெளிவாகிறது. மற்றொரு உதாரணம் யோவான் 8:58, "ஆபிரகாம் உண்டாவதற்கு முன்னமே நானிருக்கிறேன் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார்". இங்கேயும் யூதர்கள் அவர் மேல் கல்லெறியம்படி கல்லுகளை எடுத்துக்

கொண்டார்கள் (யோவான் 8:59). இயேசு தன்னைக் குறித்து குறிப்பிடும் பொழுது, 'நான்" என்று குறிப்பிடுவதை பார்க்கலாம். அது பழைய ஏற்பாட்டில் தேவன் தன்னைக் குறித்து தமது நாமத்தை வெளிப்படுத்தியதிற்கு ஒப்பாயிருக்கிறது (யாத்திராகமம் 3:14). இயேசு கிறிஸ்து தேவன் என்று சொல்லாவிட்டால், யூதர்கள் அவர மேல் கல்லெறியும் படி ஏன் கற்களை எடுத்துக் கொள்ளவேண்டும்?

"அந்த வார்த்தை தேவனாயிருந்தது" என்று யோவான் 1:1 சொல்லுகிறது. "அந்த வார்த்தை மாம்சமாகி" என்று யோவான் 1:14 குறிப்பிடுகிறது. இவைகள் இயேசு கிறிஸ்துவே, மாம்சத்தில் வந்த தேவன் என்பதை தெளிவாக வெளிப்படுத்துகிறது. இயேசுகிறிஸ்துவின் சீஷனாகிய தோமா "என் ஆண்டவரே, என் தேவனே" என்று அழைக்கிறார் (யோவான் 20:28). இயேசுகிறிஸ்து இங்கேயும் அதைத் திருத்தவில்லை மாறாக அதை ஏற்றுக்கொண்டவராகவே இருக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் இயேசுகிறிஸ்துவைக் குறித்து "மகாதேவனும், நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து" என்று தீத்து 2:13ல் குறிப்பிடுகிறார். அப்போஸ்தலனாகிய பேதுரு "நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து" என்று 2 பேதுரு 1:1ல் குறிப்பிடுகிறார். பிதாவாகிய தேவனும் இயேசுவின் தெய்வீகத்திற்கு சாட்சியாக இருக்கிறார். "குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது" (சங்கீதம் 45:6; எபிரெயர் 1:8). பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை சூளுரைக்கிறது. "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்" (ஏசாயா 9:6).

ஆகவேதான் இயேசு கிறிஸ்து வெறும் ஒரு நல்ல போதகர் மட்டும்தான் என்கிற கூற்றை சி.எஸ். லூயிஸ் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

இயேசுகிறிஸ்து தெளிவாக தன்னை மறுக்க முடியாத அளவில் தேவனென்று அறிக்கையிடுகிறார். அவர் தேவனாக இல்லாமலிருப்பாரானால் அவர் வெறும் பொய்யராக இருப்பார். அதுமட்டுமன்றி அவர் தீர்க்கதரிசியிலும், போதகரிலும் இருந்து வேறுபடுகிறவராகவும் இருப்பார். நவீன காலத்து பண்டிதர்கள் இயேசு சொன்ன கூற்றில் இருந்து இயேசுகிறிஸ்துவை தேவனாக எடுத்துக்கொள்ள விருப்பமற்று, அவரை வரலாற்று மனிதராக அங்கிகரீக்கிற அவர்கள், அவர் உரைத்த காரியங்களை மாத்திரம் அவர் கூறியது அல்ல என மறுதலித்து வாதிடுகிறார்கள்.

இயேசுவின் வாழ்க்கையை அபத்தமாக்கும்படியாக. உண்மையான வரலாற்று நாயகனான இயேசு சொன்னதாக வேதாகமம் சொல்கிற அநேக காரியங்களை சொல்லவில்லை என்று கருத்து தெரிவிக்கிறார்கள்.

இயேசு எந்த காரியங்களை கூறினார் அல்லது செய்தார் என்று வேதாகமம் கூறுகிற விஷயத்தில் அதற்கு எதிராக கேள்வி கேட்க நாம் யார்? இயேசுவோடு வசித்த, வாழ்ந்த, ஊழியம் செய்த சீஷர்களைக் காட்டிலும் (யோவான் 14:26) மேலாக இரண்டாயிரம் வருடத்திற்கு பின்பாக வந்த இந்த காலத்தில்லுள்ள பண்டிதர்களால் இயேசு கிறிஸ்து என்ன செய்தார் மற்றும் என்ன சொன்னார் என்கிற காரியங்களை எப்படி அறிந்து கொள்ள முடியும்?

இயேசுகிறிஸ்துவின் தனித்துவம் மற்றும் உண்மையான அடையாளங்களுக்கடுத்த கேள்வி ஏன் இத்தனை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது? இயேசுகிறிஸ்து தேவனா? இல்லையா?

என்கிற காரியம் ஏன் முக்கியத்துவப்படுத்தப்பட வேண்டும்? ஏனென்றல் இயேசு கிறிஸ்து தேவனாக இல்லாமல் இருப்பாரேயானால், உலகத்தின் பாவத்திற்கான பரிகாரமாக அவர் சிந்திய இரத்தம் போதுமானதாக இருந்திருக்காது (1 யோவான் 2:2). தேவன் ஒருவர் மாத்திரமே ஒரு நித்திய பரிகாரத்தை செய்ய முடியும் (ரோமர் 5:8; 2 கொரி. 5:21). நமது பாவ கடன்களை தீர்க்க இயேசு கிறிஸ்து தேவனாக இருக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. மேலும் இயேசுகிறிஸ்து நம்முடைய பாவத்திற்காக மரிக்கவேண்டுமானால் அவர் மனிதனாக இருக்கவேண்டியதும் அவசியமாக இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின்மேல் வைக்கிற விசுவாசத்தின் மூலமாக மட்டுமே நாம் இரட்சிக்கப்பட முடியும். இயேசு தெய்வீகத்தன்மையுள்ளவராக இருக்கிறார் என்கிற காரியமே அவர் ஒருவரே இரட்சிப்பின் வழியாக இருக்கிறார் என்பதற்கும் காரணமாக இருக்கிறது. இயேசு தெய்வீகத்தன்மையுள்ளவராக இருக்கிறபடியினால்தான், "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று அவரால் பறைசாற்ற முடிந்தது.

2. ஏன் கன்னி பிறப்பு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது?

கன்னி பிறப்பின் உபதேசம் என்பது மிகவும் முக்கியமானதாகும் (ஏசாயா 7:14; மத்தேயு 1:23; லூக்கா 1:27, 34). முதலில் வேதவாக்கியங்கள் இந்த நிகழ்வை எப்படி விளக்குகின்றதென்று பார்ப்போம். மரியாளின் "இது எப்படி ஆகும்?" (லூக்கா 1:34) என்ற கேள்விக்கு பதிலாக காபிரியேல், "பரிசுத்த ஆவி உன்மேல் வரும், உன்னதமானவருடைய ஆவி உன்மேல் நிழலிடும்" (லூக்கா 1:35) என்று கூறுகிறான். தேவதூதன் யோசேப்பிடம் மரியாளை விவாகம் பண்ண பயப்பட வேண்டாம் என்று தைரியப்படுத்துகிறான். "அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது" (மத்தேயு 1:20). மத்தேயு "அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள்" (மத்தேயு 1:18) என்று கன்னியைக்குறித்து கூறுகிறார். கலாத்தியர் 4:5 கன்னி பிறப்பைக் குறித்து போதிக்கிறது. "ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்."

இந்த வாக்கியங்களிலிருந்து இயேசுவின் பிறப்பு மரியாளுடைய உடலில் பரிசுத்த ஆவியானவர் நிழலிட்டதனால்தான் உண்டானது என்று தெள்ளத்தெளிவாகிறது. பொருள் தன்மையில்லாத (ஆவி) மற்றும் பொருள் தன்மையுடைய (மரியாளின் கர்ப்பபை) இவை இரண்டும் ஈடுபட்டுள்ளது. மரியாள் தானே கர்ப்பம் தரித்திருக்க முடியாது. அப்படி இருக்கும்போது அவள் ஒரு 'பாத்திரமாய்' மட்டுமே இருந்திருக்கிறாள். தேவன் மட்டுமே 'மனு உருவெடுத்தல்' என்ற அற்புதத்தை நிகழ்த்தியிருக்க வேண்டும்.

எனினும், மரியாளுக்கும் இயேசுவுக்கும் இருந்த உடல்ரீதியான தொடர்பை நாம் மறுப்போமானால் இயேசு ஒரு மனிதனாக இருப்பது என்பது முடியாத காரியம். வேதம் முழுமையான மனிதனாக நம்மைப்போல் இருந்தார் என்று போதிக்கின்றது. இதை அவர் மரியாளிடத்திலிருந்து பெற்றுக்கொண்டார். அதே நேரத்தில் இயேசு முழுவதும் கடவுளாக, நித்தியமாக, பாவசுபாவம் இல்லாதவராகவும் இருந்தார். *(யோவான்1:14; 1 தீமோத்தேயு 3:16; எபிரேயர் 2:14 -17).*

இயேசு பாவத்தில் பிறக்கவில்லை. அதாவது அவருக்கு பாவசுபாவம் இல்லை *(எபிரேயர் 7:26).* பாவ சுபாவம் என்பது தகப்பனின் மூலமாக ஒரு சந்ததிலிருந்து அடுத்த சந்ததிக்கு மாறிக்கொண்டிருகிறது *(ரோமர் 5:12, 17, 19).* "கன்னி பிறப்பு" என்பது இந்த பாவ சுபாவத்தின் இடையூரை சுற்றிவளைத்து நித்திய கடவுளை ஒரு முழுமையான மனிதனாக இருக்க அனுமதித்தது.

3. கிறிஸ்துவின் வருகையைக் குறித்து பழைய ஏற்பாட்டில் எங்கே முன்னறிவிக்கப்பட்டுள்ளது?

இயேசு கிறிஸ்துப் பற்றிய பல பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் உள்ளன. நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசனங்களின் எண்ணிக்கையை சில உரைபெயர்ப்பாளர்கள் குறிப்பிடுகிறார்கள். தெளிவான மற்றும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுபவைகள் பின்வருமாறு.

இயேசுவின் பிறப்பைக் குறித்து - ஏசாயா 7:14: "ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்." ஏசாயா 9:6: "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்." மீகா 5:2: "எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது."

இயேசுவின் ஊழியத்தையும் மரணத்தையும் குறித்து - சகரியா 9:9: "சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார்." சங்கீதம் 22:16-18: "நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பொல்லாதவர்களின் கூட்டம் என்னை

வளைந்துகொண்டது; என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள். என் எலும்புகளையெல்லாம் நான் எண்ணலாம்; அவர்கள் என்னை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்பேரில் சீட்டுப்போடுகிறார்கள்."

இயேசுவைப் பற்றிய தெளிவான தீர்க்கதரிசனம் ஏசாயா 53-ம் அதிகாரம் முழுவதுமாகும். ஏசாயா 53:3-7 மிக முக்கியமாக தவறாக கருத முடியாதது: "அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக் குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்."

தானியேல் 9-ஆம் அதிகாரத்தில் "எழுபது ஏழுகள்" தீர்க்கதரிசனத்தில், மேசியாவாகிய இயேசு "சங்கரிக்கப்படுதல்" குறித்து

மிகவும் துல்லியமான தேதியை முன்கூட்டியே முன்னறிவித்தது. இயேசு பெற்றுக்கொண்ட அடிகளை துல்லியமாக விவரிக்கிறது ஏசாயா 50:6. சகரியா 12:10ல், இயேசு சிலுவையில் மரித்தார் என்பதைக் குறிப்பிடுகிறதான மேசியாவைக் "குத்துதல்" முன்னறிவிக்கப்பட்டு இருக்கிறது. இதுபோன்று இன்னும் பல உதாரணங்கள் கூறலாம், ஆனால் இவை போதும். பழைய ஏற்பாடு மிக நிச்சயமான நிலையில் மேசியாவாக இயேசு வருவதை முன்னறிவிக்கிறது.

4. இயேசு தேவனா? இயேசு தாம் தேவன் என்று எப்பொழுதாவது கூறினாரா?

"நான் தேவனாக இருக்கிறேன்" என்று இயேசு நேரடியாக கூறியதாக வேதாகமத்தில், எந்த இடத்திலும் பதிவு செய்யப்படவில்லை. அதற்காக அவர் தான் தேவன் என்று எந்த இடத்திலும் எடுத்துரைக்கவில்லை என்று அர்த்தமல்ல. உதாரணமாக இயேசு கிறிஸ்து என்ன சொல்கிறார் என்று பாருங்கள், "நானும் பிதாவும் ஒன்றாக இருக்கிறோம்" (யோவான் 10:30). சாதாரணமாக இதை பார்ப்பதற்கு, இயேசு தன்னைக் குறித்து தேவன் என்று சொன்னதாக இவ்வசனத்தில் தெரியாமல் போகலாம். ஆனால் இயேசு இப்படி சொன்னதும் அதற்கு யூதர்கள் எடுத்துக்கொண்ட விதம் மற்றும் யூதர்களின் பிரதிபலிப்பை கவனியுங்கள்: 'யூதர்கள் அவருக்கு பிரதியுத்தரமாக, நற்கிரியையினித்தமாக நாங்கள் உன் மேல் கல்லெறிகிறதில்லை - நீ மனிதனாயிருக்க உன்னை தேவன் என்று சொல்லி இவ்விதமாக தேவ தூஷணம் சொல்லுகிறபடியினால், உன் மேல் கல்லெறிகிறோம் என்றார்கள்" (யோவான் 10:33). இந்த வாக்கியத்தை இயேசு கிறிஸ்து கூறியது மூலம், தன்னை தேவனென்று குறிப்பிட்டதாக யூதர்கள் புரிந்து கொண்டார்கள். அவர்கள் இப்படி பிரதிபலித்ததால், இயேசு அதை மறுக்கவோ, மாறுத்தரம் சொல்லவோ இல்லை. இதிலிருந்து "நானும் பிதாவும் ஒன்றாக இருக்கிறோம்" என்று இயேசு கூறியது அவர் தேவனாக இருக்கிறார் என்பதை தெளிவுபடுத்துவதற்குத்தான் என்பது தெளிவாகிறது. மற்றொரு உதாரணம் யோவான் 8:58, "ஆபிரகாம் உண்டாவதற்கு முன்னமே நானிருக்கிறேன் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார்". இங்கேயும் யூதர்கள் அவர் மேல் கல்லெறிந்து கொலை செய்யும்படி கல்லுகளை எடுத்துக்

கொண்டார்கள், காரணம் மோசேயின் பிரமாணத்தின்படி இது தேவதூஷணம் ஆகும் (லேவியராகமம் 24:15).

"அந்த வார்த்தை தேவனாயிருந்தது" என்றும் "அந்த வார்த்தை மாம்சமாகி" என்றும் (யோவான் 1:1, 14) குறிப்பிட்டு அப்போஸ்தலனாகிய இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தை யோவான் மீண்டும் வலியுறுத்தி கூறுகிறார். இந்த வசனங்கள் இயேசு கிறிஸ்துவே, மாம்சத்தில் வந்த தேவன் என்பதை தெளிவாக வெளிப்படுத்துகிறது. "ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" என்று அப்போஸ்தலர் 20:28 கூறுகிறது. அப்போஸ்தலர் 20:28, தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபை, என்று சூளுரைக்கிறது. ஆகவே, இயேசு தேவனாக இருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் சீஷனாகிய தோமா "என் ஆண்டவரே, என் தேவனே" என்று அழைக்கிறார் (யோவான் 20:28). இயேசுகிறிஸ்து அதைத் திருத்தவில்லை மாறாக அதை ஏற்றுக்கொண்டவராகவே இருக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் இயேசுகிறிஸ்துவைக் குறித்து "மகாதேவனும், நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து" என்று தீத்து 2:13ல் குறிப்பிடுகிறார். அப்போஸ்தலனாகிய பேதுரு "நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து" என்று 2 பேதுரு 1:1ல் குறிப்பிடுகிறார். பிதாவாகிய தேவனும் இயேசுவின் தெய்வீகத்திற்கு சாட்சியாக இருக்கிறார். "குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது" (எபிரெயர் 1:8). பிதாவாகிய தேவன் இயேசுவை இங்கே "தேவனே" என்று

குறிப்பிடுவதிலிருந்து மெய்யாகவே இயேசு தேவனாக இருக்கிறார் என்பது தெளிவாகிறது.

வெளிப்படுத்தின விசேஷத்தில் தேவதூதன் அப்போஸ்தலனாகிய யோவானை நோக்கி, தேவன் ஒருவரையே ஆராதனை செய்வாயாக என்று கூறுவதைப் பார்க்கிறோம் (வெளி. 19:10). வேதாகமத்தின் பல பகுதிகளில் இயேசுகிறிஸ்து ஆராதிக்கப்படுவதையும் ஆராதனையை அவர் ஏற்றுக்கொள்வதையும் பார்க்கிறோம் (மத்தேயு 2:11; 14:33; 28:9, 17; லூக்கா 24:52; யோவான் 9:38). அவரை ஆராதித்ததற்காக ஒருவரையும் அவர் கடிந்துகொள்ளவில்லை. இயேசு தேவன் இல்லையென்றால், வெளிப்படுத்தின விசேஷத்தில் தேவதூதன் யோவானிடம் கூறியதுபோல, இயேசுவும் என்னை ஆராதிக்க வேண்டாம் தேவனை ஆராதியுங்கள் என்று கூறியிருக்கலாம். இவைகள் மட்டுமன்றி, இயேசுவின் தெய்வீகத்தைக் குறித்து இன்னும் பல வேத வசனங்கள் குறிப்பிடுகின்றன.

இயேசு தேவனாக இருக்கவேண்டும் என்பதற்கு மிக முக்கியமான காரணமென்னவெனில், அவர் தேவனாக இல்லாவிட்டால், அவரது மரணம் உலகத்தின் பாவத்தை போக்குவதற்கு விலைக்கிரயமாக செலுத்தப்பட்டிருக்க முடியாது (1 யோவான் 2:2). தேவனாலேயல்லாமல் ஒரு சிருஷ்டியினால் நித்தியமான தண்டனைக்குரிய விலையை செலுத்த முடியாது. அப்படி செலுத்தப்பட்டது என்றால் அது தேவன் ஒருவரால் மட்டுமே சாத்தியம் (2 கொரிந்தியர் 5:21). அப்படியென்றால் இயேசு கிறிஸ்து தேவனாக இருக்க வேண்டும். மரித்த இயேசு மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்து, பாவம் மற்றும் மரணத்தின் மேல் வெற்றி சிறந்து நிருபித்தார்.

5. இயேசு, தேவனுடைய குமாரன்

இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்ற சத்தியமே கிறிஸ்தவத்தின் இருதயம் போன்ற மையப் பகுதியாக நிலவுகின்றது. கிறிஸ்துவே நமது மார்க்கத்தின் மையமாக இருக் கின்றார். அவரே நமது விசுவாசத்தின் அஸ்திபாரமாக இருக்கின்றார் (1 கொரி. 3:11), நமது பிரசங்கத்தின் மையக் கருத்தாகவும் இருக்கின்றார் (அப். 8:35; 1 கொரி. 1:23), நமது அறிக்கையின் இலக்காகவும் இருக்கின்றார் (மத். 10:32), மற்றும் நமது நம்பிக்கையின் அடித்தளமும் அவரே (1 தீமோ. 1:1). ஆகையால், அவர் மீது ஒரு பலமான விசுவாசம் மிகவும் முக்கியமாகின்றது (யோவா. 8:24). கிறிஸ்துவின் தெய்வீகத்தை நம்புவதற்கு நமக்கு ஏராளமான நல்ல காரணங்கள் இருக்கின்றன. நம்புவதற்கு ஏராளமான ஆதாரங்கள் இல்லாத எதையும் நாம் நம்பும்படி தேவன் நம்மைக் கேட்பதில்லை (யோவா. 20:31), இந்த ஆதாரம் மிகவும் பலமானது, அநேக நூற்றாண்டுகளில் இது ஆயிரக்கணக்கானவர்களை நம்பும்படியாகச் செய்துள்ளது. இயேசு, தேவனுடைய குமாரன் என்று நம்புவதற்குச் சில காரணங்களை இந்தப்பாடம் உங்களுக்கு முன் வைக்கின்றது. இவைகளைக் கவனமாகப் பரிசோதியுங்கள்.

நீங்கள் ஏற்கனவே பலமான விசுவாசமுள்ளவர்களாயிருந்தால், அவரது சீஷர்களைப் போலவே, "கர்த்தரே, எனது விசுவாசத்தைப் பெருகப் பண்ணும்" என்று அமைதியாக ஜெபியுங்கள். நீங்கள் சந்தேகங்களினால் பாரப்பட்டிருந்தால், மாற். 9:24அ வில், ஊமையான ஒரு ஆவி பிடித்த மகனுடைய தகப்பனைப் போல, "விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்" என்று ஜெபியுங்கள்.

ஏனென்றால் அவர் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுகின்றார்

இயேசுவின் பிறப்புக்கு நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்னதாகக் கூறப்பட்ட தீர்க்கதரிசனங்களைக் கவனியுங்கள். அவருடைய பிறப்பு தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டது. ஆபிரகாம், யூதா மற்றும் தாவீது ஆகியோரது வம்சாவழியில் அவர் பிறந்தார் (ஆதி. 12:3/மத். 1:2; ஆதி. 49:10/மத். 1:2, 6). ஆபிரகாமுக்கு அநேக சந்ததி யார்கள் இருந்தனர், ஆயினும் குடும்பத்தின் பெயர் கூட தீர்க்க தரிசனத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டது (எரே. 23:5; ஏசா. 11:1/ மத். 1:6). அவர் கன்னிகையிடத்தில் பிறப்பார் என்பது ஏசா. 7:14ல் முன்னுரைக்கப்பட்டு, மத். 1:18-25ல் நிறைவேறியது. பெத்லகேம் என்ற ஊர் அவர் பிறக்கும் இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது (மீகா 5:2). அவரது பிறப்பின்போது அநேக பிள்ளைகள் கொல்லப் படுவார்கள் என்பதும் தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்டது (எரே. 31:15/மத். 2:16-18).

அவர் எகிப்துக்குக் கொண்டு செல்லப்படுவது பற்றி தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தனர் (ஓசி. 11:1/மத். 2:13-15), கலிலேயாவில் அவரது வாழ்வு (ஏசா. 9:1, 2/மத். 4:12-16), மற்றும் எருசலேமில் அவர் ஜெயமுள்ளவராகப் பிரவேசித்தல் (சகரி. 9:9/மத். 21:1-11) ஆகிய வையும் முன்னுரைக்கப்பட்டன. அவரது ஊழியமும் முன்னுரைக்கப் பட்டது, அவருக்கு முன்னோடினவராக ஒருவர் போவார் என்றும் தீர்க்கதரிசிகள் சொன்னார்கள் (மல்கி. 3:1; ஏசா. 40:3/மத். 3:1-3). அவரது குணமாக்கும் ஊழியத்தைப் பற்றியும் (ஏசா. 53:4/மத். 8:16, 17), அவர் உவமைகளினால் போதிப்பதைப் பற்றியும் (ஏசா. 6:9, 10/ மத். 13:10-17), புறஜாதியாரின் மத்தியில் அவருடைய ஊழியத்தைப் பற்றியும் (ஏசா. 42:1-4/மத். 12:15-21), அதிகாரிகளால் அவர் புறக்கணிக்கப்படுவது பற்றியும் (சங். 118:22/யோவா. 1:11) அவர்கள் பேசினார்கள்.

இயேசுவின் மரணமானது தீர்க்கதரிசனத்தில் மிகவும் விளக்கமாகச் சித்தரிக்கப்பட்டது. அவர் தமது நண்பனால் (சங். 41:9/மத், 26:47-50) முப்பது வெள்ளிக் காசுகளுக்காக காட்டிக் கொடுக்கப்படுவது (சகரி. 11:12/மத். 26:14-16) பழைய ஏற்பாட்டில் படம் பிடித்துக் காட்டப் பட்டது. பழங்கால வேதவசனங்களில் அவர் தமது விரோதிகளுக்கு முன்பாக எப்படி நடந்து கொள்ளுவார் என்பதும் (ஏசா. 53:7/மத். 27:12, 14), அவர் எப்படி மரணமடைவார் என்பதும் (சங். 22:16/மத். 27:35அ) மற்றும் அவரது உடையின் பேரில் சீட்டுப் போட்டு பங்கிடப்படும் என்பதும் (சங். 22:18/மத். 27:35ஆ, இ) முன்னுரைக் கப்பட்டது. அவர் மரணமடையும் போது கூறிய வார்த்தைகளும் (சங். 22:1/மத். 27:46), அவரது எலும்புகள் முறிக்கப்படாது என்பதும் (சங். 34:20/யோவா. 19:33), அவருடைய விலா உருவப்படும் என்பதும் (சகரி. 12:10/யோவா. 19:34, 37), அவரது அடக்கமும் (ஏசா. 53:9/மத். 27:57-60), அவரது உயிர்த்தெழுதலும் (சங். 16:10/லூக். 24:1-9; அப். 2:25-32), மற்றும் அவர் பரத்துக்கேறுதலும்கூட (சங். 68:18/லூக். 24:50-53) முன்னுரைக்கப்பட்டது.

ஒரு மீட்பர் அல்லது இரட்சகர் வருவார் என்று கூறுவது தீர்க்கதரிசிகளுக்கு ஒப்பீட்டளவில் மிகவும் சுலபமாய் இருந் திருக்கலாம். ஆயினும், அவர்கள் முன்னுரைக்கும் மேற்பட்ட குறிப் பிட்ட விபரங்களை சேர்த்துக் கொடுத்திருப்பதைப் பார்க்கும்போது, இது மறுக்க முடியாத ஒரு வடிவமைப்பாகக் கட்டப்பட்டிருப்பது உறுதியாகின்றது.

இந்தத் தீர்க்கதரிசனங்கள் எல்லாம் நிறைவேறின என்பது எதை அர்த்தப்படுத்துகிறதென்று யோசித்துப் பாருங்கள், மனிதனுடைய முன்னறிவும் ஞானமும் அடுத்த இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் நடக்கப் போவதைப் பற்றிக் கூட முழு நிச்சயத்துடன் ஆழ்ந்தறிந்து கூற முடியாததாய் இருக்கின்றது. அரசியல் தலைவர்கள், நாடு முழுவதும் பரவியுள்ள தங்கள் முகவர்களைப் பயன்படுத்தி, சில சமயங்களில் தேர்தல் முடிவுகளை முன்னதாகவே கணிக்க முடிகின்றது! இயேசுவைப்

பற்றிய இந்த தீர்க்கதரிசனங்களோ, இன்றிலிருந்து நானூறு வருடங்களுக்குப் பிறகு தலைவராகப் போகின்ற ஒருவருடைய பிறப்பிடம், அவரது வம்சாவழி, அவரது பள்ளிப் பருவம், அவரது ஆட்சிக் கால அளவு, மற்றும் அவர் இறக்கப் போகும் இடம் மற்றும் விதம் ஆகியவை பற்றி முன்னுரைத்தல் போன்றதாக இருக்கின்றது.

உண்மையான தீர்க்கதரிசனத்தைச் சோதித்துப் பார்க்க முடியும், ஏனென்றால் அது எதிர்கால நிகழ்ச்சிகளை வெளிப்படுத்துகின்றது. அது தற்செயலாக நடக்க முடியாத நிகழ்ச்சிகளைக் கொண்டதாயிருக் கின்றது. ஒரு தீர்க்கதரிசனமானது, வரலாற்றுப் பூர்வமாக நிறைவேறும் பொழுதுதான் அதன் சரியான தன்மை காணப்படுகின்றது. ஒரு தீர்க்கதரிசனம் நிறைவேறுதலைத் தவிர, எழுதப்பட்ட அல்லது பேசப்பட்ட வேறு எந்த ஆதாரமும் இந்த விவாதத்தை உறுதிப்படுத்த முடியாது. இயேசு தெய்வீகமானவர் என்பதை இது ஒருபுறம் நிரூபிக்கின்றது, மறுபுறத்தில் இந்த தீர்க்கதரிசனங்களை எழுதிய மனிதர்கள் எல்லாரும் ஏவப்பட்டே எழுதினர் என்பதையும் இது நிரூபிக்கின்றது.

ஏனென்றால் அவரது தெய்வீகத்தின் உரிமைகோருதல், அவரது ஊழியங்களுடன் ஒத்திசைந்துள்ளது

இயேசு தம்மைப் பற்றி தைரியமாகவே உரிமை கோரினார். ஆபிரகாமுக்கு முன்பே தாம் இருப்பதாக அவர் கூறினார் (யோவா. 8:58), உலகம் உண்டாவதற்கு முன்பே தாம் தேவனோடு இருந்ததாக அவர் கூறினார் (யோவா. 17:5, 24), தாம் வானத்திலிருந்து இறங்கி வந்ததாகவும் அவர் கூறினார் (யோவா. 6:38, 62), வானத்திலும் பூமியிலும் தாம் சகல அதிகாரமும் பெற்றிருப்பதாகவும் அவர் கூறினார் (மத். 28:18). அவர், முன்பிருந்த ஒரு மனிதரின் மறுபிறவியல்ல;

மாறாக, அவர் மனித உருவில் பூமிக்கு வந்த தேவன் ஆவார் (யோவா. 1:1-18). அவரது தெய்வீகத்தை மறுப்பவர்கள் பலரும் அவரை வெறுமனே ஒரு "நல்ல" மனிதர் மட்டுமே என்று சொல்லுகின்றனர். ஆயினும் அவர் தாம் உரிமை கோரியதன்படியானவர் இல்லை யென்றால் அவர் ஒரு பொய்யராகவும், எத்தராகவும் அல்லவா இருப்பார்-நிச்சயமாகவே அவர் "நல்ல" மனிதராகக் கூட இருக்க முடியாதே!

அவருடைய உரிமைகோரல்கள் உண்மை என்பதை அவரது ஊழியங்கள் காண்பிக்கின்றன. இயேசு அநேக அற்புதங்களைச் செய்தார். வேதாகம வரலாற்று ஆசிரியர்கள் அவரது அற்புத ஊழியங் களுக்குச் சாட்சி கொடுத்திருக்கின்றார்கள் (மத். 11:4,5; யோவா. 20:30, 31). உலக வரலாற்று ஆசிரியர்கள் கூட அவர் அற்புதங்களைச் செய்தார் என்று சாட்சி கொடுத்திருக்கின்றார்கள்.

அவரது ஊழியங்களும் அவரது வார்த்தைகளும் ஒன்றாயிருந்தன.

"நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" (யோவா. 8:12அ) என்று அவர் கூறினார்; பிறகு அவர் ஒரு பார்வையற்றவரை வெளிச்சத்தைக் காணும்படி செய்தார் (யோவா. 9:6, 7). "ஜீவ அப்பம் நானே" என்று அவர் கூறினார் (யோவா. 6:35அ), ஐந்து அப்பங்கள் இரண்டு மீன் களைக் கொண்டு ஐயாயிரம் மனிதர்களுக்கு அவர் உணவு கொடுத்தார் (யோவா. 6:10,11). "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று அவர் கூறினார் (யோவா. 11:25அ); பிறகு அவர் மரித்தோரி லிருந்து லாசருவை உயிரோடு எழுப்பினார் (யோவா. 11:43, 44).

ஏனென்றால் அவர் பாவமில்லாத வாழ்க்கை நடத்தினார்

இயேசுவை அறிந்தவர்கள், அவர் பாவமில்லாத வாழ்க்கை வாழ்ந்ததாகச் சொல்லுகின்றனர். இந்த மனிதர்கள் தேவனால் ஏவப் பட்டவர்களாயிருந்தனர்!

நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல் எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார் (எபி. 4:15).

அவர் பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை (1 பேதுரு 2:22).

அவருடைய வாழ்க்கையைக் கற்றறிந்தவர்கள் அவரை நல்லவர் என்று கருதியிருக்கின்றார்கள் (லூக் 18:18). அவரிடத்தில் குற்றம் கண்டு பிடிக்கத் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருந்த அவருடைய விரோதிகளும் கூட அவரது நற்பண்பை அறிந்திருந்தார்கள். அவர் அசாதாரணமான ஒரு செயலைச் செய்தார் அவரைப் பரிசோதித்துப் பார்த்து அவரிடத்தில் பாவம் எதையாவது கண்டு பிடிக்க முடியுமா என்று அவரே அறைகூவல் விடுத்தார் (யோவா. 8:46அ).

அவருடைய மரணத்தின் போது கூட அவரது நற்பண்புகள் ஒப்புக் கொள்ளப்பட்டது. பிலாத்துவின் மனைவியுடைய மதிப்புரையை கவனியுங்கள் (மத். 27:19), பிலாத்துவின் மதிப்புரையை கவனியுங்கள் (மத். 27:23), ஏரோதின் மதிப்புரையை கவனியுங்கள் (லூக். 23:14), சிலுவையிலறையப்பட்ட கள்ளனின் மதிப்புரையை கவனியுங்கள் (லூக். 23:41), நூற்றுக்கு அதிபதியின் மதிப்புரையை கவனியுங்கள் (மத். 27:54) மற்றும் யூதாஸின் மதிப்புரையையும் கூட கவனியுங்கள் (மத். 27:4).

ஏனென்றால் உலகின் மேல் அவரது வாழ்வு தொடர்ந்து விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது.

அநேக நினைவுச் சின்னங்கள் அவரது வாழ்வைக் கனப்படுத்து கின்றன: கர்த்தருடைய நாள் (வெளி. 1:10), கர்த்தருடைய பந்தி (1 கொரி. 11:20-29; மத். 26:26-28), ஞானஸ்நானம் (ரோமர் 6:3-5), மற்றும் நமது நாட்காட்டிகளில் தேதியைக் கணக்கிடும் முறையும் கூட (கி.மு. மற்றும் கி.பி.) எந்த வித கேள்விக்கும் இடமில்லாத வகையில் அவர் உலகத்தின் மாபெரும் மனிதராவார்-மாபெரும் தன்மை என்று மனிதர் குறிப்பிடும் எல்லா தன்மைகளும் கொண்டவராயிருக்கின்றார். அவருக்கு பெரிய பாரம்பரியமோ, முறையான கல்வியோ (யோவா. 7:15), சொத்துக்களோ, அரசியல் அல்லது இராணுவ பலமோ மற்றும் விளையாட்டுத் திறமையோ இவை எதுவும் இருந்ததில்லை; ஆனாலும் கூட, கடந்த இருபது நூற்றாண்டுகளாக மனித குலத்தில் அவர் பெற்றிருக்கின்ற செல்வாக்கைப்பற்றி யார் ஒருவரும் கேள்வியெழுப்ப மாட்டார்கள். அவர் வெறும் மனிதராக மட்டும் இருந்தால், இவ்வுலகமானது அவரை விடப் பெரியவர் ஒருவரை இன்று உருவாக்கியிருக்க முடியாதா? அப்படிச் செய்வதற்கு உதவியாக இரண்டாயிரம் வருடங்களின் முன்னேற்றங்கள் இவ்வுலகில் இருக்கின்றனவே! கற்றலில் உள்ள நமது முன்னேற்றங்களுக்கு மத்தியில், இந்த உலகமானது உண்மையான தலைமைத்துவத்தை எதிர்பார்த்து தவிக்கின்றது. ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவை நோக்க முடியும்; அவரே வழியாக இருக்கின்றார். எல்லா மனிதருக்கும் அவர் எல்லாமுமாக இருந்திருக்கின்றார், இருக்கின்றார். "அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும்" (ஏசா. 9:6ஆ).

முடிவுரை

உறுதியாகவே, இயேசு, தேவனுடைய குமாரனாக இருக்கின்றார். அவர் தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்று நம்புவதற்கு, இந்தக் காரணங்களை மறுபடியும் பரிசோதித்துப் பாருங்கள். அவர்

இருக்கின்றார் என்று நம்புங்கள், அவர் மூலமாக உங்கள் வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணம் செய்யுங்கள்.

வார்த்தை உதவிகள்

பரத்துக்கேறுதல் - மேலே செல்லுதல், மேலே தூக்கப்படுதல்,

கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பிறகு, மறுபடியும் தேவனோடிருக்கும்படியாக மேலே எடுத்துக் கொள்ளப்பட்ட நிகழ்ச்சியே பரத்துக்கேறுதல் ஆகும்.

தேவப்பண்பு -தேவன்; தேவனுடைய இயல்பு; தேவனாக இருத்தல்.

வம்சாவழி - முன்னோர்களின் பட்டியல். இயேசுவின் வம்சா வழியானது (மத். 1:1-16) அவர் தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவரைப் பற்றிய தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக இருந்தார் என்பதைக் காண்பித்தது.

கர்த்தருடைய நாள் - புதிய ஏற்பாட்டின் சபையாரால் வாரத்தின் முதல் நாள் (ஞாயிற்றுக் கிழமை) என்பது ஆராதனைக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டது (அப். 20:7).

கர்த்தருடைய பந்தி - புளிப்பில்லாத அப்பத்தை உண்டு திராட்ச இரசத்தைக் குடிக்கும்படி இயேசுவால் ஏற்படுத்தப்பட்ட நினைவுச் சின்னமாகும் (1 கொரி. 11:20, 23-26ஐக் காணவும்). புதிய ஏற்பாட்டின் சபையார் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் இதைக் கடைப்பிடிக்கின்றார்கள்.

உயிர்த்தெழுதல் - இறந்து போன நபர் மறுபடியும் உயிர் வாழ்க்கைக்குத் திரும்ப எழுதல், (இயேசுவின்) உயிர்த்தெழுதலானது மரணத்தின்மேல் இயேசு அதிகாரம் உடையவராயிருப்பதற்கு நிரூபணமாகும், மற்றும் அவரின் மேல் விசுவாசம் கொண்டு, அவரைப்

பின்பற்றும் யாவரும் இந்த பூமியில் அவர்களின் வாழ்க்கை முடிந்த பிறகு, பரலோகத்தில் அவரோடே கூட என்றென்றும் வாழ முடியும்.

6. இயேசு இந்த பூமிக்கு வந்தது எதற்காக?

நீங்கள் உங்கள் நகரத்தின் சாலையில் நடந்து செல்லும்போது, செய்தி நிருபர் ஒருவர் உங்களிடத்தில் வந்து, "உலகத்தின் தொடக்கத் திலிருந்து நடந்துள்ளவற்றில் நீங்கள் மாபெரும் நிகழ்ச்சியாகக் கருதும் ஒரே சம்பவம் எது?" என்று கேட்டால், நீங்கள் என்ன சொல்லுவீர்கள்? அவருக்கு நீங்கள் எவ்விதம் பதில் அளிப்பீர்கள்? மனித வரலாற்றின் எந்த நிகழ்ச்சியானது மற்ற எல்லா நிகழ்ச்சிகளைக் காட்டிலும் பெரிதாய் இருக்கின்றது? கர்த்தராகிய இயேசு நமது இரட்சகராக இவ்வுலகத்திற்கு வந்த நிகழ்ச்சி என்பதே எனது பதிலாக இருக்கும்.

உலக வரலாற்றில் மிகவும் நாடி அடையக்கூடிய நிகழ்ச்சியாக இருப்பது தேவனுடைய குமாரனாகிய இயேசுவின் வாழ்க்கையே- அவரது திரு அவதாரம், அவர் மாம்சத்தில் வந்தது என்பவைகளே ஆகும். இயேசு தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதை எப்படியும் விட்டுவிடாதிருக்க வேண்டும் என்று கருதவில்லை என்பதாகப் பவுல் எழுதினார். அவர், "தம்மையே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார்" (பிலி. 2:7). யோவானின் நற்செய்தியின்படி, "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவா. 1:14).

கிறிஸ்துவானவர் தெய்வீகமேயில்லாதவர் போல அந்த அளவுக்கு மனித இயல்புடனிருந்தார்; மற்றும் அவர் மனித இயல்புக்கு அப்பாற்பட்டவர் போல அந்த அளவுக்கு தெய்வீகமானவராகவும் இருந்தார் என்று நாம் சொல்லக் கூடும். இயேசு மனிதராக வந்தபோது மற்ற எல்லா மனிதர்களும் பிறந்தது போலவே அவரும் பிறந்ததின்

மூலம் மனித குலத்துடன் அவர் தம்மை முழுமையாக அடையாளப் படுத்திக் கொண்டார் (லூக். 2:6), அவர் எல்லா மனிதர்களைப் போலவே வளர்ந்தார் (லூக். 2:40), மனித குலத்தின் எல்லா சந்ததியார்களைப் போலவே அவரும் எல்லாப்பாடுகளையும் பட்டார் (எபி. 5:8, 9), மற்றும், வியாதி, அழிவு மற்றும் மரணம் இவற்றால் மனிதர்கள் சிலுவையிலே கொல்லக்கூடிய அளவுகூட - பாதிக்கப்படும் ஒரு சரீரத்திலே அவர் வாழ்ந்தார் (பிலி. 2:8, 9). அவர் முற்றிலும் ஒரு மனிதராகவே இருந்தார், அதனால் மனுஷ குமாரனானார்; இருந்தாலும் அவர் முற்றிலும் தெய்வீகமானவராதலால் தேவ குமாரனாவும் இருந்தார் (எபி. 2:14, 17, 18). மனித இயல்பையும், தெய்வீக இயல்பையும் ஒரு நபர்த்துவத்துக்குள் இணைக்கும் முழுமையான இணைப்பாளராக அவர் இருந்தார். அவர் தமது தெய்வீக இயல்பை தியாகம் செய்யாமலே மனிதராக ஆனார்; அவர் நம்மைப் போலவே ஆன போதிலும் தெய்வீகமானவராகவே இருந்தார்.

இயேசு இந்த பூமிக்கு வந்த இவ்விதமான இயல்பானது வினயமான சில கேள்விகளை எழுப்பக்கூடியதாக இருக்கின்றது: இயேசு ஏன் இவ்விதமாக இந்த பூமிக்கு வந்தார்? மனித குலத்திற்குள் அவர் பிரவேசித்ததற்கான நோக்கம் என்ன? தேவனுடைய தெய்வீகமான மகன் எதற்காக முழுமையான மனிதனாகவே ஆகும்படித் தம்மைத் தாழ்த்தினார்? இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் யாவும் ஒரே ஒரு வாக்கியத்தில் சுருக்கமாகத் தரப்பட முடியும்: "தமது ஊழியம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் மூலம் தமது நாமத்திற்கென்று தமது சபையென்று அவர் அழைக்கும் மக்களை, அழைப்பதற்காகவே அவர் வந்தார்" (மாற். 10:45; லூக். 19:10).

வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், சபை என்பதே அவர்

இந்த பூமிக்கு விஜயம் செய்ததின் விளைவாக இருக்கின்றது. இயேசு ஒரு புத்தகத்தை எழுதவில்லை, ஒரு கல்லூரியை நிறுவவில்லை அல்லது சரீரப் பிரகாரமான ஒரு குடும்பத்தை நிர்மாணிக்கவில்லை.

அவருடைய இப்பூமிக்குரிய ஊழியத்தில் உண்மையாக உண்டாக்கப் பட்டது சபை மட்டுமே. அவர் தாம் கட்டி எழுப்புவதாகக் கூறிய சரீரம் என்பது அவர் "என் சபை" (மத். 16:18) என்ற சொற்றொடர் களால் அழைத்த ஆவிக்குரிய ஒரே சரீரம் மட்டுமே. இயேசு தமது ஊழியத்தில் நிலைநிறுத்திய ஒரே அஸ்திபாரம் என்பது சபையின் அஸ்திபாரம் மட்டுமே. ஆகையால், கிறிஸ்துவின் பூமிக்குரிய வருகையில் ஒரே ஒரு படைப்பாக இருந்தது சபை மட்டுமே என்று சொல்ல முடியும்.

நற்செய்திப் புத்தகங்களால் உறுதிப் படுத்தப்பட்டது இந்த சத்தியமானது நற்செய்திப் புத்தகங்களால் வலிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நற்செய்திப் புத்தகம் ஒவ்வொன்றும் இயேசு தமது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் நிலை நாட்டவிருந்த பரலோக இராஜ்யமாகிய இந்த சபையையே சுட்டிக் காட்டி, அதை நோக்கியே வழி நடத்துகின்றதாய் உள்ளது.

கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பற்றி நற்செய்திப் புத்தகங்களில் படிக்கும் ஒருவர் அவரது ஊழியத்தைப் பற்றி எழும்பும் பின்வரும் மூன்று கருத்துக்களைக் கண்டுபிடிக்கின்றார்: (1) அவரது ஊழியம் ஒரு விஷயத்தை நிறைவேற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டது, (2) அவர் ஊழியம் செய்த முறையானது, மேலான ஒன்றை ஆயத்தம் செய்வதற்காக இருந்தது, மற்றும் (3) அவரது ஊழிய முறைமையானது தொடர்ந்து செய்யப்பட வேண்டியதாய் இருந்தது.

முதலாவதாக, இயேசு இந்த பூமியில் ஊழியம் செய்தபோது அவர் உலக முழுவதற்கும் சுவிசேஷம் அறிவிக்கும் பணியை மேற்கொண் டிருக்கவில்லை என்பதை நற்செய்திப் புத்தகங்கள் சுட்டிக்காட்டு கின்றன. அவர் அப்போஸ்தலர்களைத் தெரிந்தெடுத்துக் கொண்ட பிறகு, அவர்கள் உலக முழுவதும் சென்று பிரசங்கிக்க வேண்டும் என்று கட்டளையிடவில்லை, மாறாக "நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில்

பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்" (மத். 10:5ஆ, 6) என்று கூறியதன் மூலம் அவர்களது ஆர்வத்தை அமைதிப்படுத்தினார். இயேசு தமது ஊழியத்தைப் பலஸ்தீனத்தில் மட்டுமே நிறைவேற்றினார் என்பது நம்மைத்திகைப்படையச் செய்யக் கூடியதாய் இருக்கின்றது. ரோம உலகத்தின் புறம்பே இருந்த நாடுகளுக்கு அவர் சென்றதே இல்லை. உலகத்தின் ஒரு சிறு பகுதியில் பிரசங்கித்துப் போதித்தோடு அவரது ஊழியம் நிறைவேறியது. இயேசு தமது ஊழியத்தில் உலக முழுவதும் சென்றிருப்பாரேயானால், அவர் தமது ஊழியத்தை வித்தியாசமான முறையில் நிறைவேற்றியிருப்பார், வித்தியாசப்பட்ட விரிவான உபாயங்களையும், முறைகளையும் அவர் கையாண்டிருப்பார்.

இரண்டாவதாக, இயேசுவின் வாழ்வு, பணிகள் மற்றும் மரணம் ஆகியவை வரப்போகிற ஒன்றுக்கு ஆயத்தம் செய்பவைகளாகவே இருந்தன என்பதை நற்செய்திப் புத்தகங்கள் சுட்டிக்காட்டுகின்றன. "இயேசு, மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" (மத். 4:17ஆ) என்று பிரசங்கித்தார். அவர் தமது சீஷர்களுக்கு, "உம்முடைய ராஜ்யம் வருவதாக" (மத். 6:10அ) என்று ஜெபிக்க கற்றுக் கொடுத்தார். அவருடைய அற்புதங்கள் மற்றும் பதில் செயல்களினால் கவரப்பட்டு வந்த கூட்டத்தார், அவரைத் தங்களின் பூமிக்குரிய அரசராக்கும் கருத்தில் அடித்துச் செல்லப்படாதபடிக்கு அவர் மிகுந்த எச்சரிக்கையுடன் தடை செய்தார். அவர் தமது கால அட்டவணை மக்கள் கூட்டத்தார் தமக்கு ஆணையிட அனுமதிக்கவில்லை. அவர் ஒரு அற்புதம் செய்யும்போது, சில சமயங்களில் அந்த அற்புதத்தைப் பெற்றவரிடம், "ஒருவருக்கும் இதைச் சொல்ல வேண்டாம்" (மத்.8:4) என்று கேட்டுக் கொண்டார். அவர் பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்து, தனிப்பட்ட விதத்தில் அவர்களுக்குப் பயிற்சியளித்தார், ஆனால் அவர் அவர்களை விட்டுச் சென்ற பிறகு அவர்கள் செய்ய வேண்டிய ஊழியத்திற்கென்றே அவர்களுக்குப் பயிற்சி கொடுத்தார் என்பது உறுதியானதாகும் (யோவா. 14:19).

மூன்றாவதாக, இயேசுவின் ஊழியமானது முழுமையடையாத உணர்வைப் பெற்றிருப்பதாகவே நற்செய்திப் புத்தகங்கள் சித்தரிக்கின்றன. பிதாவானவர் எதைச் செய்யும்படியாக இயேசுவை அனுப்பினாரோ, அதையே அவர் செய்தார்; ஆனால் அவர் தமது பூமிக்குரிய வாழ்க்கையின் முடிவில், தமது உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து வரும் மற்ற நிகழ்ச்சிகள் மற்றும் வெளிப்படுத்துதல்கள் ஆகியவற்றை எதிர்நோக்கியிருப்பதற்குத் தமது அப்போஸ்தலர்களைத் தயார்ப்படுத்தினார். இயேசு, அப்போஸ்தலர்களிடம், "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோவா. 14:26) என்று கூறினார். மேலும் அவர் அவர்களிடம், "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவா. 16:13) என்றும் கூறினார். உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, இயேசு தாம் பரலோகத்திற்குச் செல்வதற்குச் சற்று முன்னர், தமது அப்போஸ்தலர்களை, அவர்கள் உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரை எருசலேமை விட்டுப் போகாமல் இருக்கும்படிக் கட்டளையிட்டார். அந்தப் பெலனைப் பெற்றவுடன் அவர்கள் மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்க வேண்டியதாயிருந்தது (லூக். 24:46-49).

நமது கர்த்தருடைய மரணத்திற்கு முன்னும், பின்னும் அவரது ஊழியத்தின் இந்தப் பண்புகள், அவரது சபையாகிய ராஜ்யத்தின் முக்கியக் கூறுகளை இணைத்து இப்பூமிக்கு கொண்டு வருவதற்காகவே அவை செய்யப்பட்டன என்பதைத் தெளிவாகக் காண்பிக்கின்றன. மத். 16:18ல் தமது பூமிக்குரிய ஊழியத்தின் பாரத்தை இயேசு தம்முடைய சீஷர்களுக்கு அறிவித்தார்: "நீ பேதுருவா

யிருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை." இவ்விதமாக இயேசு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வரவில்லை; பிரசங்கிக்கப் படும்படி ஒரு சுவிசேஷம் இருப்பதற்காகவே அவர் வந்தார்.

தெற்கு டகோட்டாவில் உள்ள குறிப்பிடத்தக்க ரஷ் மோர் மலையில் சிற்ப வேலைப்பாடு செய்த புகழ் பெற்ற சிற்பியாகிய கட்சன் போர்க்ளம் அவர்கள் தலைநகரான வாஷிங்டன் டி.சி.யிலும் ஆபிரகாம் லிங்கனின் தலைச் சிற்பம் ஒன்றை செதுக்கினார். அவர் தமது தொழிற் கூடத்தில் பெரிய சலவைக்கல் ஒன்றில் இருந்து அதைச் செதுக்கினார். ஒவ்வொரு நாள் காலையிலும் அந்தத் தொழிற் கூடத்தைக் கூட்டிச் சுத்தம் செய்யும் ஒரு பெண் முதன்முறையாக உயிருள்ள தலை போன்று தெரிந்த அந்த சிற்பத்தைப் பார்த்தபோது, ஒரு கணம் திகைத்துபோய் நின்று, "இந்தக் கல்லினுள் லிங்கன் பூட்டப்பட்டிருந்ததை அவர் எப்படி அறிந்தார்?" என்று கேட்டாள். மற்றவர்கள் காண முடியாததை போர்க்ளம் கண்டார் என்பதே அவளது கேள்விக்குப் பதில் ஆகும். அவர் ஒரு கலைஞரின் கண்கள் உடையவராய், சிற்பியின் உள்ளுணர்வு கொண்டவராய் இருந்தார். அவரது திறமையுள்ள கைகளும், கற்பனைத் திறன் உள்ள மனமும் சேர்ந்து அந்த முகத்தை உருவாக்கும் முன்பே அவர் அதை அந்தக் கல்லில் கண்டார்.

நற்செய்திப் புத்தகங்களின் உதவியுடன் நாம், இயேசு தமது பூமிக்குரிய ஊழியத்தில் பார்த்ததைக் காண முடியும். வரப்போகிற இராஜ்யத்தின் தரிசனமும் அதற்கான தயாரிப்புப் பணியும் அவரது ஊழியத்தில் பூட்டப்பட்டுக் கிடந்தன. அவர் அதைப் பற்றிப் பிரசங் கித்தார், அதற்காக ஆயத்தம் செய்தார், அதைத் தமது இரத்தத்தினால் விலைக்கு வாங்கினார்.

நடபடிகளினால் நிச்சயப்படுத்தப்பட்டது

புதிய ஏற்பாட்டுப் புத்தகமாகிய நடபடிகள், இயேசுவின் ஊழியம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவைகளுக்குப் பின்னால் இராஜ்யமாகிய சபையை உண்டாக்குவதன் திட்டவட்ட மான நோக்கம் இருந்தது என்று நிச்சயப்படுத்துகிறது. நற்செய்தி புத்தகங்கள் சத்தியத்தை ஒளிவு மறைவின்றி அறிவிக்கின்றன. மற்றும் வாழுகின்ற வண்ணமிகும் விளக்கங்களினால் அப்போஸ்தலருடைய நடபடிகள் அதை நிச்சயப்படுத்துகின்றன.

நமது கர்த்தர் பரலோகத்துக்கு ஏறிச் சென்று பத்து நாட்களுக்குப் பிறகு, பெந்தெகொஸ்தே நாளன்று, அப்போஸ்தலர்களின்மேல் பரிசுத்த ஆவியானவர் அற்புதமாய்ப் பொழியப்பட்டார் *(அப். 2:1-4)*; இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் என்ற சுவிசேஷமானது முதன்முறையாகப் பிரசங்கிக்கப்பட்டது; மக்கள் விசுவாசித்து, மனந்திரும்பி, தங்கள் பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ் நானம் பெற்று இந்த சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும்படி அழைக்கப் பட்டனர் *(அப். 2:38; லூக். 24:46, 47)*; பிரசங்கிக்கப்பட்ட வசனத்தை ஏற்றுக் கொண்டவர்கள் ஏறக்குறைய மூவாயிரம் பேர் இந்த அழைப்பை ஏற்று, ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர் *(அப். 2:41)*. ஆகவே, இரவைத் தொடர்ந்து பகல் வருவது போலவே, இயேசுவின் ஊழியத்தைத் தொடர்ந்து நமது கர்த்தருடைய சபை பிறந்தது.

அப்போஸ்தலருடைய நடபடிகளின் எஞ்சியுள்ள வரலாறு, சபையானது பரிசுத்த அன்பின் ஜீவாலையாக எருசலேமில் இருந்து யூதேயா, சமாரியா அதற்கு அப்பால் ரோமராஜ்யத்தின் மற்ற பாகங்கள் ஆகியவற்றில் பரவத் தொடங்கியதன் வரலாறு ஆகும். நடபடிகளில், ஏவப்பட்ட பிரசங்கம் செய்யப்பட்ட போதெல்லாம், அதைக் கேட்டவர்கள் பிரசங்கிக்கப்பட்ட வசனத்துக்குக் கீழ்ப்படிந்து சபைக்குள் பிரவேசித்தனர். நற்செய்திப் பயணம் நடைபெற்ற போதெல்லாம், உலகத்தின் புதிய பகுதிகளைப் பற்றி சபைகள்

விழிப்புணர்வு பெற்றன. பவுலின் நற்செய்திப் பயணங்கள் முன்றிலும், எருசலேம் தொடங்கி இல்லிரிக்கம் தேசம் வரைக்கும் உலகெங்கிலும் புதிய சபைகள் நிலைநாட்டப்பட்டன (ரோமர் 15:19). கிறிஸ்துவின் வருகையினால் சபை வெளியாயிற்று என்ற மிகப் பெரிய முடிவை கவனிக்காமல் ஒருவர் நடபடிகள் புத்தகத்தைப் படிக்க முடியாது.

ஒருமுறை, பிரசங்கியார் ஒருவர், "உலகத்தில் சுவிசேஷத்தை அறிவிக்கும் பணியில் நாம் இயேசு பின்பற்றின அதே நடைமுறை களைப் பின்பற்ற வேண்டும், பன்னிரெண்டு மனிதர்களை நாம் ஒன்று கூட்டி எதிர்கால ஊழியத்திற்கென்று நாம் அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும், இயேசு தாம் பயன்படுத்திய வழிமுறைகளில் நாம் எப்படி இவ்வுலகில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும் என்று காண்பித்திருக்கின்றார்" என்று சொன்னார். நிச்சயமாகவே, இயேசு தாம் செய்த ஒவ்வொன்றையும் முழு நிறைவானதாகவே செய்தார். என்றாலும், அவரது ஊழியத்தைப் பற்றிய முழுமையான ஒரு பாடமானது, அவர் உலகமுழுவதும் சுவிசேஷத்தை அறிவிக்கும் ஊழியத்தைச் செய்யவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றது. அவரது ஊழியமானது சபைக்கு ஒரு அஸ்திபாரத்தைப் போடுவ தாகவே இருந்தது; உலக முழுவதற்குமான சுவிசேஷ ஊழியத்திற்கு ஒரு முன்மாதிரி வரைபடத்தையே அந்த ஊழியம் விட்டுச் சென்றுள்ளது. அவரது ஊழியத்தில் அவர் கையாண்ட அணுகு முறைகள், அவருடைய தனிச் சிறப்புள்ள ஊழியத்திற்கு ஏற்ற வழிமுறைகளாகவே இருந்தன, தம்மைப் பின்பற்றுவோர்களுக்கு உலக முழுவதும் சுவிசேஷம் அறிவிக்கும்படியான ஊழியத்தை ஒப்படைத் திருந்தார்-இது அவரது ஊழியத்திலிருந்து மாறுபட்டதாகவே உள்ளது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் அப்போஸ் தலர்களும், மற்ற ஏவப்பட்ட மனிதர்களும், நமது கர்த்தர் பயன் படுத்திய அணுகுமுறைகளையே பயன்படுத்துவதாக நாம் காண்ப தில்லை. அவர் உபதேசிக்கப் பின்பற்றிய அதே வழிமுறைகளை

அவர்கள் பின்பற்றவில்லை, அதாவது அவர்கள் ஒவ்வொருவரும் பன்னிரெண்டு மனிதர்களைச் சேர்த்துக் கொண்டு அவர்களுக்குப்

பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கவில்லை. மாறாக, அந்த ஏவப்பட்ட மனிதர்கள் தங்கள் பிரசங்கம் மற்றும் போதனை மூலம் சபைக்குள் மக்களைக் கொண்டு வந்தனர். இந்தப் புதிய கிறிஸ்தவர்கள் சபையின் ஒரு பாகமாக இருந்து, ஊழியம் மற்றும் சுவிசேஷ அறிவிப்புக்கென்று சபையாலேயே செறிவூட்டப்பட்டு, பயிற்சியளிக்கப்பட்டு, நம்பிக்கை யூட்டப்பட்டு, போதிக்கப்பட்டனர். இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் பலனாகவே சபையின் வாழ்வு இருப்பதாக நடபடிகளின் புத்தகத்தில் நமக்குக் காட்டப்படுகின்றது. புதிய ஏற்பாட்டில் 48 சதவிகிதம் பகுதியில் கிறிஸ்துவின் வாழ்வு பற்றியும், மற்ற 52 சதவிகிதம் பகுதியில் அவருடைய வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் விளைவாக உண்டான சபையைப் பற்றியும் கூறப்படுகின்றது.

நிருபங்களினால் மறுபடியும் உறுதிப்படுத்தப்பட்டது

சபையானது, கிறிஸ்துவின் பூமிக்குரிய வாழ்வு மற்றும் மரணத்தின் இயல்பான கனியாகவே இருக்கின்றது, என்ற சத்தியத்தை நடை முறைப்படுத்துவதைப் புதிய ஏற்பாட்டின் நிருபங்கள் வலியுறுத்து கின்றன. இந்த சத்தியத்தை நற்செய்திப் புத்தகங்கள் உறுதிப்படுத்து கின்றன, நடபடிகள் புத்தகம் இதைப் பெருக்கமடையச் செய்கின்றது, மற்றும் நிருபங்கள் இதை நடைமுறைப்படுத்துகின்றன. கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தில் இருப்பதன் மூலம் அவருடைய வாழ்வுக்கு நாம் பதில் கொடுப்பது எப்படி என்பதை நிருபங்கள் நமக்குக் காட்டுகின்றன.

விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் மூலம் கிறிஸ்துவுக்குள் வருவதைத் தேர்ந்து கொண்ட மக்களுக்கு இந்த நிருபங்கள் எழுதப் பட்டன.

அவர்கள், கிறிஸ்துவின் வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த் தெழுதல் ஆகியவை புதியதாகக் கவனிக்கப்பட்ட காலத்தில் வாழ்ந் தவர்கள் ஆவார்கள். கிறிஸ்துவானவர் கர்த்தரென்று கனப்படுத்தப் படுகின்றார் என்பதும், நாம் அவரது சபையாராக இருக்கும் பொழுதுதான் அவரது மனித வாழ்க்கை நமக்குள் சரியாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது என்பதுமே ஏவப்பட்ட மனிதர்களுடைய செய்தியின் உட்கருத்தாக இருக்கின்றது.

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாக வாழ்ந்து, அதற்கென்று ஊழியம் செய்யும்படியாகவே ஒவ்வொரு நிருபத்திலும் வற்புறுத்தப்படுகின்றனர். நிருபங்கள் எல்லாம் ஒன்றுகூட்டப்பட்டுப் பார்க்கப்படுகையில், எல்லா சூழ்நிலைகள் மற்றும் வித்தியாசமான இடங்களிலும், கிறிஸ்துவின் சபையாராக இருப்பது மற்றும் வாழ்வது எப்படி என்பதைக் காட்டும் "வழிகாட்டிக் குறிப்பேடாக"வே அவை இருக்கின்றன. கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்தை நமது வாழ்வில் நடைமுறைப்படுத்துவது எப்படி என்று அவைகள் நமக்குப் போதிக்கின்றன.

கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்துடன் நாம் அவரது சரீரத்தில் பிரவேசிப்பதன் மூலம் இயேசுவை நாம் கர்த்தரென்று ஏற்று அவருக்கு நம்மை ஒப்புக் கொடுக்கின்றோம். இந்த விசுவாசப் பதில்செயலின் நிறைவுச் செயலை கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுதலோடு பவுல் இணைத்தார் (கலா. 3:27). நிருபங்களின்படி பார்க்கையில் விசுவாசம், மனந்திரும்புதல், இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்தல் ஆகியவற்றைத் தொடர்ந்து, இரட்சிப்புக்கான ஞானஸ் நானத்தைப் பெறாத வரையிலும் எவருமே இயேசுவின் சரீரமாகிய அவரது சபைக்குள் பிரவேசிப்பதுமில்லை, அவருக்குத் தம்மை ஒப்புக் கொடுப்பதும் இல்லை.

தேவனுடைய குடும்பமாகிய கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையில் நாம் ஒன்றுகூடி வாழ்ந்து, தேவனை ஆராதிக்கும்போது

மட்டுமே நாம் இயேசுவின் வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைக் கனப்படுத்துகின்றோம். பவுல் பின்வருமாறு கூறினார்:

யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்று மில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள் (கலா. 3:28).

ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங் களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராதது போல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களா யிருக்கிறோம் (ரோமர் 12:4, 5).

சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, ... ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப் பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும். நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள் (1 கொரி. 12:25-27).

வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் ... பிரசங்கித்தான் (அப். 20:7)

தேவனுடைய குடும்பமாக, கிறிஸ்துவின் சபையாக நாம் வாழ்ந்து மற்றும் தேவனை ஆராதிக்கத் தவறும்போது, கிறிஸ்து நிறைவேற்ற வந்ததை நாம் எடுத்துப் போட்டு விடுபவர்களாக, அவர் எதை நிலைநாட்ட மரித்தாரோ, அதை அழிப்பவர்களாக நாம் ஆகின்றோம்.

இயேசு அவரது சரீரமாக, அவரது சபையாக இருக்கும்படிக்கு நம்மை அழைத்துள்ளார். அவருடைய மக்கள் கிறிஸ்துவின் சபை தவிர வேறு எந்த ஒரு சபை அல்லது சரீரமாக இருந்ததாக நிருபங்கள் விளக்கம் தருவதே இல்லை. நிருபங்களின்படி பார்த்தால், இயேசு

அவரைப் பின்பற்றுவதற்கு ஒரே ஒரு வழியையும், அவருக்கு ஊழியம் செய்வதற்கு ஒரே ஒரு வழியையும், அவர் அளிக்கும் இரட்சிப்பையும் அவரது இரத்தத்தையும் பெற்றுக்கொள்வதற்கு ஒரே ஒரு வழியையும் மட்டுமே படைத்துள்ளார். அவரது ஆவிக்குரிய சரீரமாக இவ்வுல கத்தில் விசுவாசத்துடன் வாழ்வதே அந்த வழியாகும்.

ஒரு சிறு பெண் தனது வீட்டின் ஒரு மூலையில் வேதாகமம் ஒன்றைப் பார்த்தாள். அவள் அதை எடுத்து தனது தாயினிடத்தில் சென்று, "அம்மா இது என்ன புத்தகம்?" என்று கேட்டாள். அவளுடைய தாய் அதற்கு, "அது தேவனுடைய வேதாகமம் என்ற புத்தகம்" என்றாள். குத்தப்பட்ட உள்ளுணர்வு கொண்ட அந்தச் சிறுபெண், "நாம் இதை என்றுமே பயன்படுத்தவில்லையே, எனவே இதை அவருக்கே திருப்பி அனுப்பி விட்டால் என்ன?" என்று கூறினாள்.

உண்மை என்னவென்றால், நாம் அதை வாசித்தும் கூட இன்னும் பயன்படுத்தாமல் இருக்கக் கூடும். ஒவ்வொரு உரையாடலி லும் நாம் அதை மேற்கோள் காட்டியும், ஒவ்வொரு நாளும் அதை வாசித்தும் கூட இன்னும் அதை நாம் நடைமுறைப்படுத்தத் தவறியிருக்கக் கூடும். வேதாகமத்தை உண்மையில் நடைமுறைப்படுத்துவது என்பதற்கு நாம் கிறிஸ்துவின் சபையை செயல்முறை வழியில் பின்பற்றுவது தேவையாய் இருக்கின்றது. வேதாகமத்தில் நாம் எப்படியிருக்க வேண்டும் என்று கூறப் படுகின்றபடி நாம் ஆகும்போது மட்டுமே நாம் அதைச் சரியான மற்றும் தகுதியான முறையில் பயன்படுத்துகின்றவர்கள் ஆகின்றோம்.

முடிவுரை

கிறிஸ்து மனிதராக ஆனதின் முழு ஊழிய நோக்கம் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையை உண்டாக்குவதே என்பதுதான் புதிய

ஏற்பாட்டின் ஒருங்கிணைந்த போதனையாக இருக்கின்றது. நற்செய்திப் புத்தகங்கள் இதனை வாக்குத்தத்தம் செய்வதன் மூலம் உறுதிப்படுத்துகின்றன, நடபடிகளின் புத்தகம் இதனைச் சித்தரிப் பதன் மூலம் நிச்சயப்படுத்துகின்றன, நிருபங்கள் இதனை வாழ்க்கை யின் நடைமுறையில் பயன்படுத்துவதன் மூலம் மறுபடியும் உறுதிப் படுத்துகின்றன.

நமது இரட்சிப்புக்காக வாழ்ந்து, மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தவருக்கு பதில் அளிக்கும் வகையில் அவரது சபையில் நாம் பிரவேசித்து, விசுவாசமுள்ள வாழ்க்கை வாழ்வது என்பதுதான் நமக்குள்ள ஒரே வழி என்று புதிய ஏற்பாடு கூறுவதால், இதைத் தொடர்ந்து ஒரு கேள்வி வருகின்றது: "நீங்கள் அவரது சரீரத்தில் இருக்கின்றீர்களா?" வாழ்க்கையின் முடிவை நெருங்கும்போது, நீங்கள் வாழ்வின் உண்மையான நோக்கத்தை முற்றிலுமாய்த் தவற விட்டு விட்டீர்கள் என்று கண்டறிவது எவ்வளவு பெரிய தவறாகின்றது! ஒருவேளை, இதைக் காட்டிலும் மிகுந்த வருத்தத்திற்குரியது எது வென்றால்-தேவனுடைய குமாரனானவர் இந்த பூமிக்கு வந்ததின் நோக்கத்தை நாம் தவறவிடுவதேயாகும். தேவனுடைய தெய்வீக செய்தியான இரட்சிப்பை, புதிய ஏற்பாடு நமக்கு கொடுப்பது நிச்சயமாயிருப்பது போலவே, கிறிஸ்து இந்த பூமிக்கு மனித உருவில் வந்தது நிச்சயமாயிருப்பது போலவே, அவருடைய சரீரத்தில் பிரவேசிக்காத எவரும், தங்களின் வாழ்க்கைப் பயணத்தின் முடிவில் கிறிஸ்து இந்த பூமிக்கு வந்ததின் நோக்கத்தைத் தவறவிடுவார்கள் என்பதும் வெகு நிச்சயமாய் இருக்கின்றது. இதுவே புதிய ஏற்பாடு முழுவதிலும் உள்ள அடிப்படையான உபதேசங்களின் முடிவு ஆகும்!

கிறிஸ்து இங்கு வாழ்ந்த தமது சுருக்கமான வாழ்வின் முடிவை நெருங்கும்போது, அவரால், "பிதாவே, நீர் என்னிடத்தில் செய்யும் படிக் கேட்டுக் கொண்டவைகளை நான் செய்திருக்கிறேன். எனக்காக நீர் ஒப்புவித்த ஊழியத்தை நிறைவேற்றியிருக்கிறேன்" என்று கூற முடிந்தது. அரண்மனையில் நீண்ட காலம் வாழ்ந்து, சுயநல நோக்கத்

திற்காக அரசாட்சி செய்வதைக் காட்டிலும், சில வருடங்களே வாழ்ந் தாலும், தேவனுடைய சித்தம் என்ற வட்டத்திற்குள் வாழ்வது என்பது மிகவும் சிறந்ததாகும். ஏராளமான மக்கள், தங்கள் வாழ்வின் முடிவில், "தேவனே நீர் எனக்குக் கொடுத்த ஆயுசு நாட்களில் எல்லா வருடங் களிலும் பூமியில் நான் வாழ்ந்து முடித்தேன், நான் விரும்பியவைகளை மட்டுமே நான் செய்திருக்கிறேன், எனக்கென்று நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஊழியத்தையே நான் விடாது பற்றியிருந்தேன்" என்று மட்டுமே கூற முடிகின்றது.

நாம் நமது வாழ்க்கையின் முடிவை நெருங்கும்போது, நம்மால், "கர்த்தாவே, வேதவசனங்களின் மூலம் நான் என்ன செய்ய நீர் சித்தமாயிருக்கிறீர் என்பதைக் கண்டறிந்துள்ளேன், அந்த ஊழியத் திற்கு என்னையே நான் ஒப்புக் கொடுத்திருக்கிறேன். உம்மை இந்த பூமியில் மகிமைப்படுத்த உண்மையுடன் நான் முயற்சி செய்திருக் கின்றேன், நீர் எனக்கு கொடுத்த திட்டத்தின்படி நான் வாழ முயற்சி செய்திருக்கின்றேன். நான் கிறிஸ்துவின் சபையாராக வாழ்ந்திருக் கிறேன்'' என்று கூற முடியலாம்.

வார்த்தை உதவிகள்

சபையிலே சேர்த்துக் கொள்ளப்படுதல் தேவனுக்குக் கீழ்ப்படியும் மக்களாக்கப்படுதல். இயேசுவின் பிரதான கட்டளையில் கூறப்பட்டுள்ளவைகளுக்குக் கீழ்ப்படிகின்றவர்கள் அனைவரும் இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டத்தில் தேவனால் சேர்க்கப்படுதல் *(அப். 2:41, 47).*

கிறிஸ்துவின் சபை - ஒரு கட்டிடம் அல்ல, ஆனால், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்த மற்றும் சபையில் சேர்க்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டம் ஆகும் (அப். 2:36-47ல் உள்ளதைப் போன்றது).

நிருபம் -ஒரு கடிதம். புதிய ஏற்பாட்டின் அநேக புத்தகங்கள் (ரோமர் முதல் யூதா நிருபம் வரையில் உள்ளவை), கிறிஸ்தவர் களுக்குக் கடிதங்களாகவே எழுதப்பட்டன.

சுவிசேஷத்தை அறிவித்தல் - சுவிசேஷத்தைப் பகிர்ந்து

கொள்ளும் நடைமுறை. எடுத்துக்காட்டாக தீமோத்தேயு சுவிசேஷ கனுடைய வேலையைச் செய்யும்படியாக 2 தீமோ. 4:5ல் அவருக்குக் கூறப்பட்டது.

புறஜாதியார் - யூதரல்லாத ஒரு நபர்.

யூத மார்க்கம் - யூதர்களின் இனம், அல்லது இஸ்ரவேலர்கள்; ஆபிரகாம், யாக்கோபு மூலமாக வந்த வம்சா வழியினர்.

தேவனுடைய இராஜ்யம் - மனிதர்களின் இருதயங்களிலும்

வாழ்க்கையிலும் இயேசுவின் அரசாட்சி அல்லது அதிகாரம் செய்கை.

நீதி - குற்றம் அல்லது பாவம் எதுவும் இல்லாத இயல்பு. மனிதன் தானாகவே இந்த இயல்புள்ளவனாய் இருப்பது முடியாத செயலாகும், "நீதியுள்ளவராயிருப்பது" என்றால், தேவனிடத்தில் மன்னிப்பைப் பெற்று, தேவனுக்கு முன்பாகப் பாவத்தில் இருந்து சுத்திகரிக்கப்படுதல் என்று அர்த்தமாகும். கிறிஸ்தவர்கள் தேவனுடைய வசனத்தின்படியே அன்றாடம் வாழ்க்கை நடத்துவதன் மூலம் தேவனோடு இந்த சரியான உறவு முறையை வெளிக்காட்டுகின்றார்கள்.

1 மத் 9:30; 12:16 17:9; மாற்1:43; 3:12; 5:43; 7:36; 8:30; 9:9; லூக்கா. 4:41; 8:56; 9:21 ஆகியவற்றையும் காணவும். "ஒருவருக்கும் சொல்ல வேண்டாம்" என்ற வினோதமான கட்டளை பற்றி J.W. மெக்கார்வி அவர்கள் பின்வருமாறு எழுதினார்: "இராணுவ அதிகாரிகளின் இடையீட்டினால் மக்களின் உணர்வு தேவையற்ற வகையில் தூண்டப்படுவது போன்றதாகும் இது. இயேசுவின் போதனைகளைப் பற்றி அமைதியான முறையில் மக்களைச் சிந்திக்க விடாமல் இவை தடை பண்ணக்கூடும். (மாற். 1:45ஐயும் காணவும்). சில சமயங்களில், சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு, அவர் தமது கட்டளையை திருப்பிக் கொண்டு, அவர்களுக்குச் செய்தவற்றை மற்றவர்களுக்குக் கூறும்படியும் கட்டளையிட்டுள்ளர்". J.W. McGarvey, The New Testament Commentary: Matthew and Mark [N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.], 75).

7. இயேசு எப்படிப்பட்ட தோற்றத்தில் இருந்தார்?

இயேசு அவருடைய மாம்சத்தில் வந்த மானுட அவதார காலத்தில் எப்படி இருந்தார் என்று வேதாகமம் எங்கும் ஒரு சரீர விளக்கத்தை கொடுக்கவில்லை. அவரைக் குறித்த சரீரத் தோற்ற விளக்கத்திற்கு நாம் பெற்றிருக்கிற மிக நெருக்கமான விஷயம் ஏசாயா 53:2 இல் உள்ளது, "அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமும் இல்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது." இவை அனைத்தும் நமக்குச் சொல்வது என்னவென்றால், இயேசுவின் தோற்றமானது மற்ற மனிதர்களைப் போலவே இருந்தது என்பதாகும், அதாவது அவர் சாதாரண தோற்றமுடையவராக இருந்தார். இங்கே ஏசாயா தீர்க்கதரிசி வரவிருக்கும் பாடநுபவிக்கும் தாசன் தாழ்ந்த நிலையில் இருந்து எழும்புவார் என்றும், ராஜ பதவியின் வழக்கமான அடையாளங்கள் எதையும் அணிந்திருக்க மாட்டார் என்றும், அவருடைய உண்மையான அடையாளத்தை விசுவாசத்தின் கண்ணுக்கு மட்டுமே தெரியும் என்றும் தீர்க்கதரிசனம் உரைத்தார்.

கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்கு முன்பு அவர் வாரினால் அடிக்கப்படுவார் என ஏசாயா மேலும் விவரிக்கிறார். "மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரரைப்பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடினாலே, அவரைக்கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள்" (ஏசாயா 52:14), இந்த வார்த்தைகள் அவர் இனி ஒரு மனிதனைப் போல தோற்றமளிக்காத அளவுக்கு அவர் அனுபவித்த பாடுகளையும் கொடுமையையும் விவரிக்கிறது (மத்தேயு 26:67, 27:30; யோவான் 19:3). அவரது தோற்றம் மிகவும் அந்தக்கேடு அடைந்தபடினாலே, அவரைக்கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள்.

இயேசு கிறிஸ்து யார்? அவர் எப்படிப்பட்டவர்?

இன்று இயேசுவைப் பற்றிய பெரும்பாலான படங்கள் அவரது மெய்யான உருவத்தைக் குறிப்பிடும் துல்லியமானது இல்லை. இயேசு ஒரு யூதர், அதனால் அவர் கருமையான சருமம், கருமையான கண்கள் மற்றும் கருமையான கூந்தலைக் கொண்டிருக்கலாம். இது பல நவீன படங்களில் பொன்னிறமுடி, நீலக்கண், பொலிவான தோற்றம் கொண்ட இயேசுவிலிருந்து வெகு தொலைவில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஒன்று மட்டும் தெளிவாகிறது: அவர் உண்மையில் எப்படி இருந்தார் என்பதை நாம் அறிவது அவ்வளவு முக்கியமான காரியம் என்றால், அவருடன் மூன்று வருடங்களைக் கழித்த அப்போஸ்தலராகிய மத்தேயு, பேதுரு மற்றும் யோவான் போன்றோர், மேலும் அவருடைய சொந்த சகோதரர்களான யாக்கோபு மற்றும் யூதா போன்றவர்களை அல்லாமல் வேறு யாரும் நிச்சயமாக நமக்கு ஒரு துல்லியமான விளக்கத்தை அளிக்க முடியாது. ஆனாலும், இந்த புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இயேசுவினுடைய சரீர பண்புகளைப் பற்றி எந்த விவரங்களையும் நமக்கு வழங்கவில்லை.

8. இயேசு கிறிஸ்து எவ்வகையில் தனித்துவமானவர்?

1. அவர் தேவனுடைய தனித்துவமான ஒரே பேறான குமாரன் (சங்கீதம் 2:7, 11-12; யோவான் 1:14; லூக்கா 1:35).

2. அவர் நித்தியமானவர். அவர் கடந்த நித்திய காலத்திலிருந்து இருந்தார், அவர் நிகழ்காலத்தில் இருக்கிறார், மேலும் அவர் இனிவரும் எதிர்காலத்தில் எல்லா நித்தியத்திற்கும் இருப்பார் (யோவான் 1:1-3, 14; 8:58).

3. இயேசு ஒருவர் மட்டுமே நம்முடைய பாவங்களைச் சுமந்தார், அதனால் நாம் பாவமன்னிப்பு பெற்று அவற்றிலிருந்து இரட்சிக்கப்பட முடியும் (ஏசாயா 53; மத்தேயு 1:21; யோவான் 1:29; 1 பேதுரு 2:24; 1 கொரிந்தியர் 15:1-3).

4. பிதாவினிடம் செல்லுவதற்கு இயேசு மட்டுமே வழி (ஜான் 14:6; அப்போஸ்தலர் 4:12; 1 தீமோத்தேயு 2:5); இரட்சிப்புக்கு வேறு வழி இல்லை. நம்முடைய பாவத்திற்காக பரிபூரண நீதியை பரிமாறிக்கொண்ட ஒரே நீதிமான் அவர் மட்டுமே (2 கொரிந்தியர் 5:21).

5. இயேசுவிற்கு மட்டுமே அவரது சொந்த மரணத்தின் மீது அதிகாரம் இருந்தது மற்றும் அவரது ஜீவனை மீண்டும் எடுத்துக்கொள்ளும் திறன் இருந்தது (யோவான் 2:19, 10:17-18). அவரது உயிர்த்தெழுதல் "ஆவிக்குரியது" அல்ல, மாறாக சரீரப்பிரகாரமானது (லூக்கா 24:39). மரித்தோரிலிருந்து அவரது உயிர்த்தெழுதல், மீண்டும் ஒருபோதும் மரிக்காமல் இருப்பது, அவரை தேவனுடைய தனித்துவமான குமாரனாக வேறுபடுத்தியது (ரோமர் 1:4).

6. இயேசு மட்டுமே ஆராதனையை பிதாவுக்கு சமமாக ஏற்றுக்கொண்டார் (யோவான் 20:28-29; பிலிப்பியர் 2:6), மற்றும் மெய்யாகவே பிதாவாகிய தேவன், தேவனைக் கனப்படுத்துவது போலவே குமாரனும் கனப்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறார் (யோவான் 5:23). மற்ற அனைவரும், இயேசுவின் சீஷர்களோ அல்லது தேவதூதர்களோ, அந்த ஆராதனையை ஏற்றுக்கொள்ளாமல் முறையாக அவற்றை நிராகரிக்கிறார்கள் (அப்போஸ்தலர் 10:25-26; அப்போஸ்தலர் 14:14-15; மத்தேயு 4:10; வெளிப்படுத்துதல் 19:10, 22:9).

7. இயேசுவிற்கு தான் விரும்பியவர்களுக்கு ஜீவனை கொடுக்கும் வல்லமை இருக்கிறது (யோவான் 5:21).

8. பிதாவாகிய தேவன் நியாயந்தீர்க்கும்படி சகல நியாயத்தீர்ப்பையும் இயேசுவுக்கு வழங்கியுள்ளார் (யோவான் 5:22).

9. இயேசு பிதாவுடன் இருந்தார் மற்றும் சிருஷ்டிப்பில் நேரடியாக ஈடுபட்டார், மேலும் அவருடைய கைகளால்தான் அனைத்தும் ஒன்றாக சிருஷ்டிக்கப்பட்டு தாங்கப்படுகிறது (யோவான் 1:1-3; எபேசியர் 3:9; எபிரெயர் 1:8-10; கொலோசெயர் 1:17).

10. தற்போதைய இந்த யுகத்தின் முடிவில் உலகை ஆளுகைச் செய்வது இயேசுவே (எபிரெயர் 1:8; ஏசாயா 9:6-7; தானியேல் 2:35, 44; வெளிப்படுத்துதல் 19:11-16).

11. இயேசு மட்டுமே ஒரு கன்னிகையால் பிறந்தார், பரிசுத்த ஆவியால் கருத்தரிக்கப்பட்டார் (ஏசாயா 7:14; மத்தேயு 1:20-23; லூக்கா 1:30-35).

12. தான் தேவனுடைய பண்புகளைக் கொண்டிருப்பதாக இயேசு நிரூபித்தார் [எ.கா., பாவங்களை மன்னிக்கும் மற்றும் நோயாளிகளை குணப்படுத்தும் வல்லமை (மத்தேயு 9:1-7)]; காற்று மற்றும் கடல்

அலைகளை அமைதிப்படுத்த (மாற்கு 4:37-41; சங்கீதம் 89:8-9); நம்முடன் பரிபூரணமாக பழகுவது, நம்மை முற்றிலும் அறிய, (சங்கீதம் 139; யோவான் 1:46-50, 2:23-25), மரித்தவர்களை உயிரோடு எழுப்புவது (யோவான் 11; லூக்கா 7:12-15, 8:41-55) போன்றவை அடங்கும்.

13. மேசியாவின் பிறப்பு, வாழ்க்கை, உயிர்த்தெழுதல், ஆள்தன்மை மற்றும் நோக்கம் குறித்து ஏராளமான தீர்க்கதரிசனங்கள் உள்ளன. அனைத்தும் அவரால் நிறைவேறியது வேறு யாரும் இல்லை (ஏசாயா 7:14; மீகா 5:2; சங்கீதம் 22; சகரியா 11:12-13, 13:7; ஏசாயா 9:6-7; ஏசாயா 53; சங்கீதம் 16:10).

9. இயேசு தேவனுடைய ஒரேபேறான குமாரன் என்பதன் அர்த்தம் என்ன?

"ஒரேபேறான குமாரன்" என்ற சொற்றொடர் யோவான் 3:16 இல் காணப்படுகிறது, இது கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில், "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என்று கூறப்பட்டுள்ளது. "ஒரே பேறான" என்ற சொற்றொடர் கிரேக்க வார்த்தையான மோனோஜெனேஸ் என்பதன் மொழிபெயர்ப்பாகும். இந்த வார்த்தை ஆங்கிலத்தில் "ஒரே," "ஒன்றே ஒன்று" மற்றும் "ஒரேபேறான" என பல்வேறு வகையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இங்கே இந்த கடைசி சொற்றொடர் தான் (KJV, NASB மற்றும் NKJV ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் "ஒரே பேறான" என்னும் சொற்றொடர்) பிரச்சனையை ஏற்படுத்துகிறது. கள்ளப்போதகர்கள் இயேசு கிறிஸ்து தேவன் அல்ல என்று தங்களின் தவறான போதனையை நிரூபிக்க முயன்றனர். அதாவது, திரித்துவத்தின் இரண்டாவது நபராகிய இயேசு தேவனுக்கு சமமானவர் இல்லை என்றார்கள். அவர்கள் "ஒரேபேறான" என்ற வார்த்தையைப் பார்க்கிறார்கள், இயேசு ஒரு சிருஷ்டிக்கப்பட்டவர் என்று கூறுகிறார்கள், ஏனென்றால் காலப்போக்கில் ஒரு ஆரம்பம் இருந்த ஒருவர் மட்டுமே "ஒரே பேறானவராக" இருக்கமுடியும் என்றார்கள். இங்கே கவனிக்கத் தவறியது என்னவென்றால், "ஒரேபேறான" என்பது ஒரு கிரேக்க வார்த்தையின் ஆங்கில மொழிபெயர்ப்பு. எனவே, கிரேக்க வார்த்தையின் அசல் அர்த்தத்தை நாம் பார்க்க வேண்டும், ஆங்கில அர்த்தங்களை உரையில் மாற்றக்கூடாது.

எனவே மோனோஜெனேஸ் என்பதன் அர்த்தம் என்ன? புதிய ஏற்பாடு மற்றும் பிற ஆரம்பகால கிறிஸ்தவ இலக்கியத்தின் (BAGD,

3-வது பதிப்பு) கிரேக்க-ஆங்கில சொற்களஞ்சியத்தின்படி, மோனோஜெனேஸ் இரண்டு முதன்மையான வரையறைகளைக் கொண்டுள்ளன. முதல் வரையறை "ஒரு குறிப்பிட்ட உறவுக்குள் ஒரே ஒரு மாதிரியான ஒன்றாக இருப்பது தொடர்பானது." எபிரேயர் 11:17 இல் அதன் பயன்பாட்டுடன் இணைக்கப்பட்ட அர்த்தம் இதுதான், எழுத்தாளர் ஈசாக்கை ஆபிரகாமின் "ஒரே பேறான குமாரன்" என்று குறிப்பிடுகிறார். ஆபிரகாமுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மகன்கள் இருந்தனர், ஆனால் ஈசாக்கு சாராவின் ஒரே குமாரன் மற்றும் உடன்படிக்கையின் ஒரே குமாரன் ஆவார்.

இரண்டாவது வரையறை "அதன் வகையான அல்லது வர்க்கத்தின் ஒரே ஒரு மாதிரியானது, மற்றும் தனித்துவமானது." இது யோவான் 3:16 இல் உள்ள அர்த்தமாகும். உண்மையில், இந்த வார்த்தையை இயேசுவைக் குறிப்பிடும் ஒரே ஒரு புதிய ஏற்பாட்டு எழுத்தாளர் யோவான் மட்டுமே (யோவான் 1:14, 18; 3:16, 18; 1 யோவான் 4:9 ஆகிய வசனங்களைப் பார்க்கவும்). யோவான் தேவனுடைய குமாரன் என்பதை நிரூபிப்பதில் யோவான் முதன்மையாக அக்கறை காட்டினார் (யோவான் 20:31), விசுவாசத்தினால் தேவனுடைய குமாரர்கள் மற்றும் குமாரத்திகளாகிய விசுவாசிகளுக்கு மாறாக, இயேசுவை தேவனுடைய ஒரேஒரு குமாரனாக -தேவனைப் போலவே தெய்வீகத் தன்மையைப் பகிர்ந்துகொள்வதற்காக அவர் இந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறார்.

முக்கியமான காரியம் என்னவென்றால், தேவன் மற்றும் இயேசுவை விவரிக்கும் "பிதா" மற்றும் "குமாரன்" போன்ற சொற்கள், திரித்துவத்தின் வெவ்வேறு நபர்களுக்கிடையேயான உறவைப் புரிந்துகொள்ள உதவும் மனித சொற்கள் ஆகும். ஒரு மனித தந்தைக்கும் மனித மகனுக்கும் இடையிலான உறவை நீங்கள் புரிந்து கொள்ள முடிந்தால், திரித்துவத்தின் முதல் மற்றும் இரண்டாவது நபர்களுக்கிடையேயான உறவை நீங்கள் ஓரளவு புரிந்து கொள்ள முடியும். சில கிரிஸ்துவ சமய ஆராதனை முறைகளை (யெகோவாவின்

சாட்சிகள் போன்ற), இயேசு "உருவாக்கப்பட்ட" அல்லது "பிதாவாகிய தேவனால்" பெற்றெடுக்கப்பட்டதுபோல உண்மையில் "பிறந்தார்" என்று கற்பிக்க முயன்றால் ஒப்புமையானது அர்த்தமின்றி முறிந்துவிடும்.

10. இயேசு தாவீதின் குமாரன் என்பதன் அர்த்தம் என்ன?

புதிய ஏற்பாட்டில் பதினேழு வசனங்கள் இயேசுவை "தாவீதின் குமாரன்" என்று விவரிக்கின்றன. ஆனால் இங்கே ஒரு கேள்வி எழுகிறது, தாவீது ஏறக்குறைய 1000 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்திருக்க இயேசு எப்படி தாவீதின் குமாரனாக இருப்பார்? பதில் என்னவென்றால், கிறிஸ்து (மேசியா) தாவீதின் வித்து என்கிறதான தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக இயேசு இருந்தார் (2 சாமுவேல் 7:12-16). இயேசு வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியா, அதாவது அவர் தாவீதினுடைய சந்ததி ஆவார். மத்தேயு 1-ல் இயேசு சட்டப்பூர்வ தந்தையாகிய யோசேப்பு மூலம் தாவீதின் நேரடி வம்சாவளியில் உள்ளவராக இருந்தார். லூக்கா 3-வது அதிகாரத்தில் உள்ள வம்சாவளியானது இயேசுவின் பரம்பரையை அவரது தாயார் மரியாள் மூலம் வருகிறதை வழங்குகிறது. இயேசு தாவீதின் வழித்தோன்றல், யோசேப்பு மூலம் புத்திர சுவிகாரமாகவும் மற்றும் மரியாள் மூலம் இரத்த சம்பந்தமாகவும் ஆனார். முதன்மையாக, கிறிஸ்துவை தாவீதின் குமாரன் என்று குறிப்பிடும்போது, பழைய ஏற்பாடு அவரைப் பற்றி தீர்க்கதரிசனம் கூறியது போல் அவரது மேசியாவின் தலைப்பைக் குறிப்பிடுவதாக இருந்தது.

இயேசுவை "ஆண்டவரே, தாவீதின் குமாரனே" என்று பலமுறை, விசுவாசத்தினால், இரக்கம் வேண்டி அல்லது குணப்படுத்துதலைத் தேடும் மக்களால் அழைக்கப்பட்டது. பிசாசினால் அவரது மகள் துன்புறுத்தப்பட்ட ஒரு பெண் (மத்தேயு 15:22), வழியருகே இரண்டு குருடர்கள் (மத்தேயு 20:30), மற்றும் பர்திமேயு என்கிற ஒரு குருடன் (மார்க் 10:47) ஆகியோர் தாவீதின் குமாரனே என்று உதவிக்காக கூப்பிட்டனர். அவர்கள் அவருக்கு அளித்த மரியாதைக்குரிய தலைப்புகள் அவர் மீதான நம்பிக்கையை அறிவித்தன. அவரை

"கர்த்தர்" என்று அழைப்பது அவரது தெய்வீகம், ஆதிக்கம் மற்றும் வல்லமை பற்றிய உணர்வை வெளிப்படுத்தியது, மேலும் அவரை "தாவீதின் குமாரன்" என்று அழைப்பதன் மூலம், அவர்கள் அவரை மேசியா என்று அறிவித்தனர்.

பரிசேயர்களும், மக்கள் இயேசுவை "தாவீதின் குமாரன்" என்று அழைத்ததின் அர்த்தம் என்ன என்பதை புரிந்து கொண்டனர். ஆனால் விசுவாசத்தில் கூக்குரலிட்டவர்களைப் போலல்லாமல், அவர்கள் தங்கள் சொந்த பெருமை மற்றும் வேதத்தைப் பற்றிய புரிதல் இல்லாததால் குருடர்களாக இருந்தனர், பார்வையற்ற பிச்சைக்காரர்கள் என்ன பார்க்கிறார்கள் என்பதை அவர்களால் பார்க்க முடியவில்லை - இங்கே அவர்கள் வாழ்நாள் முழுவதும் காத்திருந்த மேசியா வந்திருக்கிறார். ஆனால் அவர்கள் இயேசுவை வெறுத்தனர், ஏனென்றால் அவர்கள் தகுதியானவர் என்று அவர்கள் நினைத்த மரியாதையை அவர் கொடுக்க மாட்டார் என்று அறிந்திருந்தார்கள். எனவே, இயேசுவை இரட்சகராக மக்கள் போற்றுவதை அவர்கள் கேட்டபோது, அவர்கள் கோபமடைந்தனர் (மத்தேயு 21:15) மற்றும் அவரை கொலை செய்ய சதி செய்தனர் (லூக் 19:47).

இயேசு இந்த தலைப்பின் அர்த்தத்தை விளக்கும்படி வேதபாரகர்களையும் பரிசேயர்களையும் கேட்டு மேலும் அவர்களை குழப்பத்தில் ஆழ்த்தினார். தாவீது தன்னை "என் ஆண்டவர்" (மாற்கு 12:35-37) என்று குறிப்பிடும் போது மேசியா தாவீதின் குமாரன் என்பது எப்படி? நிச்சயமாக, நியாயப்பிரமாண ஆசிரியர்களால் கேள்விக்கு பதிலளிக்க முடியவில்லை. இயேசு அதன் மூலம் யூதத் தலைவர்கள் ஆசிரியர்களாக இருப்பதையும், பழைய ஏற்பாட்டில் மேசியாவின் உண்மைத் தன்மையைப் பற்றி போதித்ததைப் பற்றிய அவர்களின் அறியாமையையும் வெளிப்படுத்தினார், மேலும் அவர்களை அவரிடமிருந்து அந்நியப்படுத்தினார்.

தேவனுடைய ஒரே குமாரன் மற்றும் உலகத்திற்கான இரட்சிப்பின் ஒரே வழி இயேசு கிறிஸ்துவே (அப். 4:12), அவர் சரீரப்பிரகாரமாகவும் ஆவிக்குரிய ரீதியாகவும் தாவீதின் குமாரன்.

11. இயேசு நம்முடைய பிரதான ஆசாரியர் என்பதன் அர்த்தம் என்ன?

இயேசுவிற்குப் பயன்படுத்தப்படும் பல தலைப்புகளில் ஒரு தலைப்புத்தான் பிரதான ஆசாரியர்: மேசியா, இரட்சகர், தேவனுடைய குமாரன், மனுஷகுமாரன், பாவிகளின் சிநேகிதன், முதலியன. ஒவ்வொரு தலைப்பும் அவர் யார், நமக்கு என்ன அர்த்தம் போன்ற ஒரு குறிப்பிட்ட அம்சத்தில் கவனம் செலுத்துகின்றன. எபிரேயர் புத்தகத்தில், இயேசு ஒரு பிரதான ஆசாரியர் என்று அழைக்கப்படுகிறார் (எபிரேயர் 2:17; 4:14). "ஆசாரியன்" என்ற வார்த்தை இரண்டு முக்கிய அர்த்தங்களைக் கொண்டுள்ளது. முதலாவதாக, மதப்பிரகார சேவைகளில் மத்தியஸ்தம் செய்பவர் என்று அர்த்தம் உடையதாக இருக்கிறது. இரண்டாவதாக, அந்த சேவைகளைச் செய்ய பரிசுத்தமானவர் அல்லது வேறுபிரிக்கப்பட்டவர் என்று பொருள்.

வேதாகமத்தில் முதன் முதலில் இந்த வார்த்தையை ஆதியாகமம் 14-ஆம் அதிகாரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளதை நாம் காணலாம். தேவனுடைய சிநேகிதனான ஆபிரகாம், ஏலாமின் சேனையால் கைப்பற்றப்பட்ட அவரது சகோதரனின் மகன் லோத்தை மீட்க போரில் இறங்கினார். திரும்பியதும், ஆபிரகாமை சாலேமின் ராஜாவும் உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்த மெல்கிசேதேக்கு சந்தித்தார். "நீதியின் ராஜா" என்று பொருள்படும் பெயரையுடைய இந்த மனிதர், ஆபிரகாமையும், ஆபிரகாமுக்கு வெற்றியை அளித்த உன்னதமான தேவனையும் வாழ்த்தி ஆசீர்வதித்தார். இந்த ஆசீர்வாதத்திற்கு ஈடாக, ஆபிரகாம் மெல்கிசேதேக்கிற்கு யுத்தத்தில் உண்டாயிருந்த அனைத்து கொள்ளை பொருட்களிலும் தசமபாகம் (10 சதவீதம்) கொடுத்தார். இந்தச் செயலின் மூலம், ஆபிரகாம்

தேவனுடைய ஆசாரியனாகிய மெல்கிசேதேக்கின் உயர்ந்த நிலையை ஒப்புக் கொண்டார்.

பல வருடங்களுக்குப் பிறகு, ஆபிரகாமின் பேரன் லேவி ஆசாரிய கோத்திரத்தின் தந்தை என்று தேவனால் பிரித்தெடுக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்டார். சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டபோது, லேவியர்கள் ஆசரிப்புக் கூடாரத்தின் ஊழியர்களாக அடையாளம் காணப்பட்டனர், ஆரோனின் குடும்பம் ஆசாரியர்களாக மாறியது. நியாயப்பிரமாணத்திற்குத் தேவையான பல பலிகளைச் செலுத்துவதன் மூலம் மக்களுக்காக தேவனிடம் பரிந்து பேசுவதற்கு ஆசாரியர்கள் பொறுப்பேற்றனர். ஆசாரியர்களில், ஒருவர் பிரதான ஆசாரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், மேலும் அவர் வருடத்திற்கு ஒரு முறை பாவநிவாரண நாளில் இரத்தத்தின் உடன்படிக்கைப் பெட்டியில் வைப்பதற்காக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைந்தார் (எபிரேயர் 9:7). இந்த தினசரி மற்றும் வருடாந்திர பலிகளால், மேசியாவின் பாவங்களைப் போக்க வரும் வருகை வரையிலும் மக்களின் பாவங்கள் தற்காலிகமாக மூடப்பட்டன.

இயேசுவை நம்முடைய பிரதான ஆசாரியன் என்று அழைக்கும்போது, அது இந்த முந்தைய இரண்டு ஆசாரியத்துவங்களைக் குறிக்கிறது. அதாவது மெல்கிசேதேக்கைப் போலவே, சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட நிலையில் அவர் ஒரு பிரதான ஆசாரியராக நியமிக்கப்பட்டார் (எபிரெயர் 5:6). லேவிய கோத்திரத்துப் ஆசாரியர்களைப் போலவே, இயேசுவும் நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத் தாமே பலியாகச் செலுத்தியப்போது தேவனுடைய நியாயப்பிரமாணத்தை திருப்திப்படுத்துவதற்கான ஒரு பலியைச் செலுத்தினார் (எபிரேயர் 7:26-27). தொடர்ந்து ஆண்டுதோறும் பலி செலுத்தும் லேவிய ஆசாரியர்கள் போலல்லாமல், இயேசு தனது பலியை ஒரே முறை மட்டுமே செலுத்த

வேண்டியிருந்தது, அவர் மூலமாக தேவனிடம் வரும் அனைவருக்கும் நித்திய மீட்பைப் பெறும்படிச்செய்தார் (எபிரேயர் 9:12).

இயேசுவின் ஆசாரியத்துவத்தைப் பற்றிய மற்றொரு முக்கியமான விஷயம் என்னவென்றால் ஒவ்வொரு ஆசாரியரும் மனிதர்களிலிருந்து தேர்ந்தெடுத்து நியமிக்கப்பட்டவர்கள். இயேசுவோ, நித்தியத்திலிருந்து வந்த தேவனாக இருக்கிறார் என்றாலும், மரணத்தை அனுபவிப்பதற்காகவும், நம்முடைய பிரதான ஆசாரியராக திகழுவதற்காகவும் ஒரு மனிதரானார் (எபிரேயர் 2:9). ஒரு மனிதனாக, அவர் நம்முடைய எல்லா பலவீனங்களுக்கும் சோதனைகளுக்கும் உட்பட்டவர், அதனால் அவர் நம்முடைய போராட்டங்களில் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்ள முடியும் நமக்கு உதவிட முடியும் (எபிரேயர் 4:15). இயேசுவானவர் வேறு எந்த ஆசாரியர்களையும் விட பெரியவர், எனவே தான் அவர் எபிரேயர் 4:14 இல் நம்முடைய "மகா பிரதான ஆசாரியர்" என்று அழைக்கப்படுகிறார், மேலும் இது "நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" (எபிரேயர் 4:16) என்கிறதான தைரியத்தை நமக்குக் கொடுக்கிறது.

12. யோவான் *1:1, 14* ஆகிய வேதப்பகுதி இயேசு தேவனுடைய வார்த்தை என்று அறிவிப்பதன் அர்த்தம் என்ன?

யோவான் தனது நற்செய்தி நூலை எழுதியதற்கான காரணத்தை முதலில் புரிந்துகொள்வதன் மூலம் இந்த கேள்விக்கான பதிலைப் பெறலாம். அவருடைய நோக்கம் யோவான் 20:30-31 இல் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதைக் காண்கிறோம். "இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது". யோவானின் நோக்கம் இயேசு கிறிஸ்துவை தனது நற்செய்தியின் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதாகும், அதாவது இயேசு யார் (மாம்சத்தில் வந்த தேவன்) மற்றும் அவர் என்ன செய்தார் என்பதை நிறுவுவதாகும். யோவானின் ஒரே குறிக்கோள், மக்களை கிறிஸ்துவின் இரட்சிக்கும் கிரியையை நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ள வைப்பதாகும். இதை நாம் புரிந்துகொள்ளும்போது, யோவான் 1:1 இல் இயேசுவை "வார்த்தை" என்று ஏன் அறிமுகப்படுத்துகிறார் என்பதை நாம் நன்கு புரிந்துகொள்ள முடிகிறது.

"ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது" என்று அவருடைய நற்செய்தியைத் தொடங்குவதன் மூலம், யோவான் தனது யூத மற்றும் புறஜாதிய வாசகர்களுக்கு நன்கு தெரிந்த ஒரு வார்த்தையைக் கூறி அதனோடு இயேசுவை நிகராக்கி அவரை அறிமுகப்படுத்துகிறார். இந்த வேதப்பகுதியில் "வார்த்தை" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை லோகோஸ், அது அன்றைய

கிரேக்க தத்துவம் மற்றும் யூத சிந்தனை இரண்டிற்கும் பொதுவானதாய் இருந்தது. உதாரணமாக, பழைய ஏற்பாட்டில் தேவனுடைய "வார்த்தை" பெரும்பாலும் தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்கான ஒரு ஆள்தன்மையாக உருவகப்படுத்தப்படுகிறது (சங்கீதம் 33:6, 107:20, 119:89, 147:15-18). எனவே, அவருடைய யூத வாசகர்களுக்கு, இயேசுவை "வார்த்தை" என்று அறிமுகப்படுத்துவதன் மூலம், யோவான் ஒரு விதத்தில் பழைய ஏற்பாட்டிற்கு அவர்களை சுட்டிக்காட்டுகிறார் அல்லது தேவனுடைய "வார்த்தை" தேவனுடைய வெளிப்பாட்டின் ஆள்தன்மையுடன் தொடர்புடையது ஆகும். மேலும் கிரேக்க தத்துவத்தில், லோகோஸ் என்ற சொல் இடைநிலை செயலாண்மையை விவரிக்க பயன்படுத்தப்பட்டது, இதன் மூலம் தேவன் பொருட்களை உருவாக்கி அவர்களுடன் தொடர்பு கொண்டார் என்பதாகும். கிரேக்க உலக கண்ணோட்டத்தில், லோகோஸ் என்பது ஆழ்ந்த தேவன் மற்றும் பொருள் பிரபஞ்சத்திற்கு இடையே ஒரு பாலமாக கருதப்பட்டது. எனவே, அவரது கிரேக்க வாசகர்களுக்கு, லோகோஸ் என்ற வார்த்தையின் பயன்பாடு தேவனுக்கும் உலகத்திற்கும் இடையில் ஒரு மத்தியஸ்தக் கொள்கை பற்றிய யோசனையை முன்வைத்ததாக இருந்தது.

எனவே, அடிப்படையில், யோவான் இயேசுவை லோகோஸ் என்று அறிமுகப்படுத்துவதன் மூலம் என்ன செய்கிறார் என்பது அவருடைய காலத்தின் யூதர்களும் புறஜாதியாரும் நன்கு அறிந்திருக்க வேண்டும் என்று ஒரு வார்த்தை மற்றும் கருத்தை வரையறுத்து அதிலிருந்து தொடங்க அதனை ஒரு தொடக்கப் புள்ளியாகப் பயன்படுத்துகின்றார். அவ்வாறாக யோவான் அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவை அறிமுகப்படுத்துகிறார். ஆனால் யோவான் தனது யூத மற்றும் புறஜாதிய வாசகர்கள் அறிந்திருக்கும் லோகோஸ் என்ற பழக்கமான கருத்தை மீறி, இயேசு கிறிஸ்துவை கிரேக்கர்கள் உணர்ந்தது போல் ஒரு மத்தியஸ்தக் கொள்கையாக அல்ல, மாறாக

ஒரு தனி மனிதராக, முற்றிலும் தெய்வீக தன்மையுள்ளவராக, முழு மனிதராக காண்பிக்கிறார். மேலும், யூதர்கள் நினைத்தபடி கிறிஸ்து வெறுமனே தேவனுடைய வெளிப்பாட்டின் ஒரு உருவமாக அல்லது ஆள்தன்மையாக இல்லை, ஆனால் உண்மையில் தேவன் தம்மை மாம்சத்தில் வெளிப்படுத்தினார் என்பதாகும், அதனால் யோவான் பிலிப்புக்கு இயேசு கூறிய சொந்த வார்த்தைகளை அப்படியே பதிவு செய்கிறார்: "பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படி சொல்லுகிறாய்?" (யோவான் 14:9). யோவான் 1:1 இல் லோகோஸ் அல்லது "வார்த்தை" என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதன் மூலம், யோவான் தனது வாசகர்களுக்கு நன்கு தெரிந்த ஒரு கருத்தை விரிவுபடுத்திப் பயன்படுத்துகிறார் மற்றும் அதைப் பயன்படுத்தி தனது வாசகர்களுக்கு உண்மையான லோகோஸை அறிமுகப்படுத்தினார், அதாவது தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தையான இயேசு கிறிஸ்துவில் தேவன், முழுமையாக தேவன் மற்றும் இன்னும் முழுமையாக மனிதன், தேவனை மனிதனுக்கு வெளிப்படுத்தவும், அவரை நம்பும் அனைவரையும் அவர்களுடைய பாவத்திலிருந்து மீட்கவும் வந்தார் என்பதை விவரிக்கிறார்.

13. இயேசு ஒருவர்தான் பாவமில்லாமல் பிறந்தாரா?

இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை (எபி. 9:22) என்று வேதம் சொல்கின்றது. இதை விசுவாசித்து வரப்போகிற மேசியாவாகிய இயேசுவின் இரத்தம் எல்லாருடைய பாவத்திற்கும் மன்னிப்பு தரும் என்பதற்கு அடையாளமாக ஆதிப்பிதாக்கள் காளை, வெள்ளாட்டுக்கடா போன்றவற்றைப் பலியிட்டார்கள். அந்த இரத்தம் அவர்களின் பாவங்களை முடியதே ஒழிய *(சங். 32:1; ரோ. 4:7)* பாவங்கள் அழிக்கப்படவில்லை. அதனால்தான் பாவங்கள் உண்டென்ற உறுத்துதலினால் வருஷந்தோறும் இஸ்ரேலர் நினைவு கூர வேண்டியிருந்தது. *(எபி. 10:1-4)* ஆனால் இயேசுவோ தன் இரத்தத்தினால் ஒரே தரம் பாடுபட்டு மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்ததினாலே, நம்மனைவரின் பாவங்களும் நீக்கப்பட்டன; அவரும் வருஷாவருஷம் பலியாகத் தேவையில்லாததால் அவரது இரத்தம் விசேஷித்தமானதல்லவா! மாசற்ற பாவமற்ற இரத்தமல்லவா! விலையேறப் பெற்ற இரத்தமல்லவா! இன்னும் ஜீவிக்கிற இரத்தமல்லவா! *(மத். 27:4; 1 பேதுரு 1:19; எபி. 12:2-4)*. இது தேவனின் இரத்தம் என்று அப். *20:28* சொல்கின்றது. ஸ்திரியின் வயிற்றில் பிறந்த மனுஷகுமாரனின் இரத்தம் எப்படி இவ்வளவு மகிமையுள்ளதாயிருக்க முடியும்? இது கேள்வி. ஸ்திரியின் வயிற்றில் பிறந்தால்தான், மனிதன் என்று சொல்ல முடியும் என்பதால் ஸ்திரியின் வயிற்றில் இயேசு பிறந்தார். ஆனால் இவர் நம்மைப் போல் மரியாளுக்கும், யோசேப்புக்கும் பிறக்கவில்லை; ஒரு கன்னி கழிந்த பெண்ணின் வயிற்றுக்குள்ளிருந்தும் பிறக்கவில்லை. பரிசுத்த ஆவியினாலே. கன்னிமரியாளின் வயிற்றில் உற்பத்தியாகிப் பிறந்தார். அதிசய தேவன் அதிசயமாகவே பிறந்தார். இயேசுவின் மனிதரூபம் அடிமையின் ரூபம் *(பிலி. 2:7)* அது பரலோகிலேயே ஆயத்தம் பண்ணப்பட்டு மரியாள் வயிற்றில் வைக்கப்பட்டு வளர்ந்தது *(எபி.*

10:5) அல்லேலூயா! அதனாலே அது பரிசுத்தமானது என்று வேதம் சொல்கின்றது (லூக். 1:35).

அப்படியானால் ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறப்பதெல்லாம் பரிசுத்தமானது இல்லையா! இது கேள்வி. ஆதாமின் பாவத்தினாலே உலகில் பிறக்கும் அனைவரும் பாவிகளாகப்படுகிறார்கள் (ரோ. 5:19). இது வஞ்சிக்கப்பட்டு, மீறுதலுக்குட்பட்ட (1 தீமோ. 2:14) ஏவாளின் பாவத்தினால் அல்ல. ஏன் ஏவாளின் பாவம் மனுக்குலத்திற்கு வரவில்லையா? ஆணின் விந்து சினை முட்டையோடு இணைந்து கரு உண்டானாலும், குழந்தை பிறப்பது ஆணின் இரத்தத்தால்தான்; ஆணின் வித்தால்தான். குழந்தையின் ஜீவனே ஆணின் வித்திலிருந்துதான் உருவாகிறது. எல்லா மாம்சங்களின் உயிரெல்லாம் - ஜீவன் - இரத்தம் எல்லாமே ஆணின் வித்தில்தான் உள்ளது. ஆண் வித்துதான் குழந்தை பிறப்பிற்கு மூலாதாரம். ஒரு விதையை நிலத்தில் விதைக்கிறோம். வளருகின்ற செடி அல்லது மரத்திற்கு வித்து, நிலமா அல்லது விதையா? வளரும் செடியின் விதையாகிய வித்தின்படிதானே செடி இருக்கும்! மாங்கொட்டை போட்டால் பனை மரமா வரும்? நிலம் என்பது பெண்ணைப் போன்றது. அது போல பாவ ஆதாம் சந்ததியில் பிறக்கும் எல்லோருமே ஆதாமின் பாவ வித்தால் உருவாகிறார்கள்: பாவ ஜாதியாகிறார்கள்: இதைத்தான் தாவீது, நான் துர்க்குணத்தில் உருவானேன்: (சங். 51:5) என்று சொல்லுகிறான். இது உடலுறவைக் குறிக்கவில்லை. விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாகவும், விவாகம் அசுசியப்படாததாயு மிருப்பதாக (எபி. 13:4) என்ற வசனத்தின்படி விவாகம் பரிசுத்தமுள்ளது உடலுறவு பாவமல்ல என அறியலாம். இப்படியாய் ஆதாமின் பாவ ஜாதியில். பாவ வித்தில் பிறக்காமல் கன்னியின் வயிற்றில் தேவனாலே பாவமில்லாமல் பிறந்தவர் இயேசு ஒருவரே! மற்றப்படி ஆணுக்குப் பிறந்த அத்தனை பேருக்குள்ளும் ஆதாமின் பாவ வித்து பாவ ரத்தம் உள்ளது என்று அறியுங்கள். மத். 1ஐ வாசித்தால் ஆண்கள்தான் பிள்ளைகளைப் பெற்றதாக எழுதியிருப்பது இந்த அர்த்தத்தில் தான் என்று உணரலாம்.

கன்னி மரியாள் ஆணுக்குத்தான் ஆதாமின் பரம்பரையின் வித்தால்தான் பாவ இரத்தத்தினால்தான் பிறந்திருப்பதால், மரியாளின் இரத்தம் பாவ ஜாதியின் இரத்தம் தானே! அப்படியானால் இந்த மரியாளின் இரத்தம் கருவிலிருந்த இயேசுவின் இரத்தத்தோடு இணைந்திருந்தால், இயேசுவின் இரத்தமும், பாவ இரத்தமாயிருக்குமே! அப்படி ஆகியிருந்தால் உலகின் பாவங்களை இந்த இயேசுவின் இரத்தம் தீர்க்க முடியாதே! மட்டுமல்லாமல் பரிசுத்த ஆவியினால் கன்னி மரியாளுக்குள் அவர் இருந்து பிறந்திருக்க தேவையில்லையே! சிந்தியுங்கள். பரிசுத்த இரத்தம் மட்டுமே பாவங்களை மன்னிக்கும். அல்லேலூயா! தாய்க்கும் கருவிலுள்ள குழந்தைக்கும் சத்துணவை அளிக்கும் தொப்பூள் கொடிதான் தொடர்பு. சிலர் நினைக்கிறார்கள். ரோ. 3:23,24; 1 கொரி.6:11; ரோம. 10:9,10ன்படி விசுவாசத்தால் நீதிமானாய் ஆனது போல். மரியாளும் விசுவாசத்தால் நீதிமானாய் ஆகியிருக்கலாம் என்றும், அதனால் மரியாளின் இரத்தம் பாவ இரத்தம் இல்லையென்றும், இந்த இரத்தம். இயேசுவுக்குள்ளே நுழைந்து இருக்கும் என்றும், அந்த மரியாளின் இரத்தமும் சேர்ந்துதான் பாவமன்னிப்பிற்கு வழி வகுக்கிறது என்றும் கருதுகிறார்கள். ஆண் விந்தின்படி ஜீவனும் அந்த ஜீவன் இரத்தத்திற்குள்ளும் உள்ளபடியால் இந்த கருத்து விஞ்ஞான அடிப்படையில் ஒத்து வராது. மேலும் இப்படி நீதிமானாய் ஆக்கப்படுகிறவர்கள் உள்ளான மனுஷனில் தான் அதுவும் ஆவியில்தான் ஆகிறார்கள் என்றும், ஆத்மாவில் தினந்தோறும் மறுரூபமாகிறார்கள் என்றும், சரீரம் வருகையில்தான் மாற்றப்படும் என்றும் வேதம் திட்டமும் தெளிவுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அதுவரை இந்த சரீரம் மண்ணுக்குரியது – அழிந்து போகிறது என்றும் இந்த சரீரம் மூலம் வரும் விந்தோ. இரத்தமோ ஆதாமின் பாவ ஜாதிக்கு உட்பட்டதுதான் என்றும் முந்தி அறிக. மரியாளின் சரீரமும் இப்படிப்பட்டதுதானே! அப்படி இல்லையென்றால் இரட்சிக்கப்பட்ட நமக்குப் பிறக்கும் பிள்ளைகள் நன்மை. தீமை அறிகிற நிலைக்கு வந்தாலும், அவர்கள் பாவிகள் அல்ல என்று சொல்லி, இரட்சிப்புக்குள் நடத்தாமல் இருக்கலாமல்லவா! நன்மை தீமை அறியும் வரை

குழந்தைகள், ஆவி ஆத்மா சரீரம் ஆகிய அனைத்திலும் பரிசுத்தமா யிருக்கலாம்! இந்த பரிசுத்தம் தூய்மையைக் குறிக்கவில்லை; பிரித்தெடுக்கப்பட்ட - *Setapart* -நிலையை குறிக்கிறது. ஆனால் ஆதாமின் பாவ சந்ததியின் இரத்தம் இருக்கிறது என்ற உணர்வு வந்தாலே, இயேசுவின் பரிசுத்த இரத்தம் மட்டுமே எல்லோருக்கும் ஜீவனைத் தரும் என்று உணர வேண்டும். ஆமென்.

அடுத்து, "எரே. 1:5ல் எரேமியாவை கர்ப்பத்திலேயே பரிசுத்த மாக்கினது போல. மரியாள் போன்ற பலரையும் தேவன் கர்ப்பத்திலேயே பரிசுத்தமாக்கி இருப்பாரே: அதனால் அப்படிப்பட்டவர்களுக்குள் ஆதாமின் பரம்பரைப் பாவ ரத்தம் இருக்காதே!" என்று சிலர் வாதிடுகிறார்கள். "இயேசுவின் இரத்தம் மட்டுமே பாவ மன்னிப்பை தர முடியும். இந்த இரத்தம் இல்லாமல் வேறு இரத்தத்திற்கு இருக்க வழிவகுப்பவர்கள்: அவிசுவாசத்திற்கு வித்திடுபவர்கள். பரிசுத்தம் என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளன. (1) பிரித்தெடுக்கப்படுதல் (2) தூய்மை. விசுவாசமில்லாமல் யாரும் பரிசுத்தமாக முடியாது என்பதால். எரேமியா குழந்தை விசுவாசிக்க முடியாது: தூய்மை நிறை பரிசுத்தம் என்ற நிலைக்கு வரவும் முடியாது. எனவே எரே. 1:5ல் சொல்லப்பட்டது கர்ப்பத்திலேயே தேவன் எரேமியாவை பிரித்தெடுத்திருக்கிறார் என்று பொருள். ஆமென். விக்கிரக ஆராதனை மற்றும் விபச்சாரம் செய்த இஸ்ரவேல் மக்களை "பரிசுத்த ஜனம்" (உபா. 7:6: லேவி. 20:26) என்று தேவன் அழைத்தது தூய்மையால் அல்ல: பிரித்தெடுக்கப் பட்டதாலே! ஆமென். ஏழாம் நாளையும் இப்படி தனிமைப்படுத்தி பிரித்தெடுக்கப்பட்டதால் தான் அதை பரிசுத்தப்படுத்தினார் என்று வேதம் சொல்கின்றது (ஆதி. 2:3). இப்படித்தான் நம்மையும், பல தேவ மனுஷர்களையும் தாயின் கர்ப்பத்திலேயே தெரிந்து கொண்டிருக்கிறார் (ஏசா. 49:1.5) மற்றப்படி தூய்மையாக்கவில்லை.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இயேசு ஒருவர்தான் பாவமில்லாமல் பிறந்ததால், அவரின் ஒரே இரத்தம் மட்டுமே பாவ

மன்னிப்பை தருகிறது. இப்படி பாவமில்லாமல் பிறந்த இயேசு உன்னையும் என்னையும் இரட்சிக்க நம் பாவங்களை சுமந்து நமக்காய் பாவமாக்கப்பட்டு பாவியாய்த் தொங்கினார் (2 கொரி. 5:21). அதனால்தானே என்னை ஏன் கைவிட்டீர் என்று சிலுவையில் கதறினார்! பாவ நிவாரண பலியும் இவரே: பாவ நிவிர்த்தி உண்டாக்குபவரும் இவரே! (லேவி. 16:9,10). பரிசுத்தரும் இவரே குற்றவாளியானவரும் இவரே நியாயாதிபதியும் இவரே: நமக்காய் வழக்காடும் வழக்கறிஞரும் இவரே! இவரில்லையெனில் வேறு யாராவது இவரைப் போல பாவமில்லாமல் பிறந்திருந்தால் அவரையே தெய்வமாக ஏற்றுக் கொள்ளலாமே! அப்படி யாருமில்லையே! சிந்தியுங்கள்.

14. இயேசு கிறிஸ்து தேவனின் அவதாரமா?

தேவனுடைய பிள்ளையே! இன்றைக்கு இந்து மதத்தில், ராம அவதாரம், கிருஷ்ண அவதாரம், கல்கி அவதாரம் என்று இவர்களுடைய 'சாமி' பல அவதாரங்கள் எடுத்ததாக கூறப்படுகிறது. உதாரணமாய் தசரதனுக்கும் கோசலைக்கும் மகனாய் பிறந்த இராமருக்குள்ளே திருமாலின் (விஷ்ணு) மகிமை, வல்லமை, அதிகாரம் எல்லாம் நிறைந்து, திருமால் என்ற அவர்களுடைய 'சாமி' இராமராகவே வெளிப்பட்டார். இதையே அவதாரம் என்று சொல்கிறார்கள். இயேசுவும் இப்படித்தான் தேவனின் - கர்த்தரின் - அவதாரமாய் வெளிப்பட்டாரா? இது கேள்வி. வரப்போகிற அந்தி கிறிஸ்துவை கேட்டின் மகன் என்று 2 தெச. 2:3 சொல்கின்றது. கேட்டின் மகனென்றால் கிரேக்க பாஷையில் "டயபோலஸ்" (Diabolus) என்று உள்ளது. இந்த வார்த்தை சாத்தானையும், சாத்தானின் அவதாரத்தையும் குறிக்கும். அப்படியானால் அந்தி கிறிஸ்து, சாத்தானின் அவதாரம் என அறிய முடிகிறது. அதாவது மனிதனாய்ப் பிறந்த அந்தி கிறிஸ்துவுக்கு, சாத்தான் தன் வல்லமையையும், மகிமையையும். அதிகாரத்தையும் கொடுத்து. தன் பணியை அந்த மனுஷன் மூலம் செய்ய வைக்கிறான் என்று அறிகிறோம். யோ. 17:12ல் யூதாசையும் கேட்டின் மகனென்றே சொல்லப்பட்டுள்ளது; அப். 1:24ல் அவன் மரித்து தனக்குரிய இடத்திற்கு போனான் (பாதாளத்திற்கு) என்று பேதுரு சொல்வதால், இவனும் சாத்தானின் அவதாரமே! யூதாசின் ஆவியும், அந்தி கிறிஸ்துவின் ஆவியும் சாத்தானின் ஆவியே! மேலும் ஆதி. 3:15ன்படி "உன் வித்துக்கும் ஸ்திரியின் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன்" என்பது, ஸ்திரியாகிய இஸ்ரேல் சபையின் வித்தாகிய இயேசு கிறிஸ்துவுக்கும், சாத்தானின் வித்தாகிய அந்தி கிறிஸ்துவுக்கும் பகை என நாம் உணர்வதால், அந்தி கிறிஸ்து சாத்தானின் அவதாரம் என்று உறுதியாகிறது. 2 தெச.2:7ன்படி "அக்கிரமத்தின் இரகசியம்" அந்தி

கிறிஸ்து மூலம் வெளிப்படுவதால், சாத்தான் தேவ பக்திக்குரிய இரகசியத்திற்கு (1 தீமோ. 3:16) எதிராய் செயல்பட வைக்க அந்தி கிறிஸ்துவை தெரிந்து கொண்டான் என்று அறிகிறோம். இந்த அந்தி கிறிஸ்து, சாத்தானின் அவதாரமாய் இருப்பதால், அந்தி கிறிஸ்துவுக்கு எதிராளியான கிறிஸ்துவும், தேவனின் அவதாரம் என்று சிலர் கணிக்கிறார்கள். அது சரியா?

ஏற்கெனவே நான் சொன்னபடி ஒரு புருஷனுக்கும் மனைவிக்கும் பிறந்த ஒரு மனுஷன் மூலம் கிரியை செய்வது தான் அவதாரம். அந்த மனுஷன் தான் அவதாரப் புருஷன். ஆனால் நாம் ஆராதிக்கிற இயேசு கிறிஸ்துவோ ஒரு புருஷனுக்கும் மனைவிக்கும் பிறக்கவில்லை. பரலோகிலேயே தேவனால் முன் தீர்மானிக்கப்பட்ட வார்த்தையாகிய தேவன். பரலோகிலேயே மனிதக் கருவாகி மரியாளின் கர்ப்பத்திலே பரிசுத்த ஆவியானவரால் வைக்கப்பட்டு பிறந்தவர் (எபி. 10:5-7: சங். 40:6-8; லூக். 1:35). அவரின் இரத்தம் தேவ இரத்தமே (அப். 20:28); மனித இரத்தமல்ல. தேவனே மாம்சத்தில் தாமாவே வெளிப்பட்டார் (1 தீமோ. 3:16). "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாய் இருப்பதை. கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார்" (பிலி. 2:6,7) என்ற வசனத்தின்படி தேவனே மனிதனாய் வந்தார் என்று விசுவாசிக்கிறோம். அந்தி கிறிஸ்து சாத்தானின் அவதாரம் என்பதால், அந்தி கிறிஸ்து சாத்தானல்ல. அதுபோல. இயேசு கிறிஸ்து தேவனின் அவதாரம் என்றால், இயேசு கிறிஸ்து தேவனல்லவே! ஆனால், ரோ. 9:5; தீத்து 2:13; 1யோ. 5:20: 2 பேதுரு 3:10 ; 1தீமோ. 3:16 ; யோ. 1:14: 1:1 போன்ற வசனங்களின்படி இயேசுவே தேவன் என்பதால், இவர் தேவனின் அவதாரமல்ல என உணரலாம். இவர் தேவனின் அவதாரம் என்று சொன்னால், "இயேசு தெய்வமல்ல; அவர் சிருஷ்டிக்கப்பட்டவர்" என்று யேகோவா விட்னஸ் சபையாரின் கள்ள உபதேசம் உண்மையாகிவிடும்.

மேலும், இந்து மக்களிடம், 'ராமர், கிருஷ்ணன் என்றெல்லாம் பல அவதாரங்களை கடவுள் என்று வணங்குகிறீர்களே, ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கருத்து பொய்யா? பல கடவுள்கள் உண்டா" என்று கேட்டால், "இல்லை இல்லை ஒரு தேவன் தான். அவர் தான் பரமாத்மா. அவரின் அவதாரங்கள் தான் இவர்கள்" என்பார்கள். இந்த மக்களுக்கு ஒரே தேவன் என்ற கருத்து இருந்தும் அவதாரப் புருஷர்கள் என்று பலர் உருவாக்கப்பட்டிருப்பதால், ஐம்பெரும் பூதங்களை வணங்கிய மனிதன், இவர்கள் மூலம் வெளிப்பட்ட சில மகிமைகளை எண்ணி. இவர்களையும் தெய்வம் என்று எண்ணி வணங்குகின்றனர். இப்படித்தான் ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களும் மரியாள், அந்தோணியார், சவேரியார் என்று பலரை வணங்குகின்றனர்; புத்தர்களும் புத்தரை வணங்குகின்றனர்; சீக்கியரும் குருநானக்கை வணங்குகின்றனர். ஆவிக்குரிய கிறிஸ்தவனும் பொருளாசையாகிய விக்ரக ஆராதனையை வைத்திருக்கிறான்; சிலுவையை வணங்குகிறான்; பைபிள் புத்தகத்தை தொட்டுக் கும்பிடுகிறான்; பண்டிகைகள் ஆசரிப்பிலே தெய்வீகம் இருப்பதாய் எண்ணுகிறான். இவைகளெல்லாம் 2 கொரி. 4:4ன்படியான மனக்குருடால் வருவதாகும்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இயேசு கிறிஸ்து தேவனின் அவதாரமாய் வரவில்லை; தேவனே பூமியில் பிறந்தார். அல்லேலூயா! தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் அவருக்குள் இருந்தது (கொலோ. 2:9). அவர் 100க்கு 100 தேவனாகவும், 100க்கு 100 மனிதனாகவும் இருந்தார். ஆமென். எனவே அவரை அவதாரப் புருஷன் என்று ஒருவனும் சொல்லாதிருப்பானாக!

15. இயேசு சர்வ வல்லமையுள்ள தேவனா?

"இயேசு தேவனா?" என்பதை விளக்க பல செய்திகள் எழுதியிருக்கிறேன். எல்லா ஆய்ச்சிப் புத்தகங்களிலும் விளக்கியிருக்கிறேன். இன்றைய தேதியில் இயேசு கிறிஸ்து தேவன்தான் என்று "யேகோவாவின் சாட்சிகள்" போன்ற சபையார் கூட ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் 1 கொரி.8:5,6ன் படி அநேக தேவர்கள் இருந்தாலும் பிதாவாகிய ஒரே தேவன் தான் உண்டு என்றும், வெளி.21:22; 19:6 போன்ற வசனங்களின்படி பிதா தான் "சர்வவல்லமையுள்ள தேவன்" என்றும், இயேசு கிறிஸ்து எல்லாம் அவருக்கு கீழானவர் என்றும் வாதிடுகிறார்கள். ஆதியிலே வார்த்தை தேவனாயிருந்தது; அது தேவனோடிருந்தது என்று சொன்னாலும் (ஆதி.1:1) அவருக்கு மேலே பிதாவாகிய தேவன் ஒருவர் இருந்தார் என்று பதிலளிக்கிறார்கள். இப்படியான கருகலான சத்தியத்தை தேவன் மலரச் செய்வாராக!

தேவன் மூன்று ஆள்தத்துவமாய் இருக்கிறார் என்பதை நம்பாதவர்கள் செய்கிற வாதம் தான் இது. திரித்துவம் உண்டு என்றும், பிதா, வார்த்தை. பரிசுத்த ஆவியானவர் என்ற மூன்று ஆள்தத்துவத்தில் ஒரே தேவன் வெளிப்படுகிறார் என்றும். இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் என்றும் ஏராளமான வசன ஆதாரங்களோடு பல தலைப்புகளில் ஆராய்ச்சிப் புத்தகங்களில் எழுதியிருக்கிறேன். அதை ஒருவன் விசுவாசிக்கும் போது. இயேசு கிறிஸ்து சர்வ வல்லமையுள்ள தேவன் என்று நிச்சயம் நம்புவான். இயேசு நாமக்காரர்கள் (Only Jesus) திரித்துவத்தை நம்பாவிட்டாலும் "இயேசு தான் பிதா என்றும், இயேசு தான் பரிசுத்த ஆவியென்றும் சொல்லி இயேசுவே தேவன்" என்று சொன்னாலும், யேகோவா விட்னஸ் போன்ற சபையார், அவர் சர்வ வல்லமையுள்ள தேவனல்ல என்று

வாதிடுகிறார்கள். சங்.2:7, நீதி. 8:24.30 போன்றவற்றைக் காட்டி இயேசு சிருஷ்டிக்கப்பட்டவர் என்றும், கொலோ 1:15ன் படி சர்வ சிருஷ்டிக்கும் முன்பே சிருஷ்டிக்கப்பட்டவர் என்றும், அவருக்கு பிதாவாகிய சர்வ வல்லமையுள்ள தேவன். அதிகாரங்களையும், வல்லமையையும் கொடுத்து, தனக்கு அடுத்த ஸ்தானத்தில்நிறுத்தி உலக இரட்சகராய் மாற்றினார் என்றும் சொல்கிறார்கள்.

சங்.2:7 என்பது இயேசு மரித்து உயிர்த்தெழுந்ததைப் பற்றி சொல்வது என்றும் (அப். 13:32,33; எபி.5:5:1:5), நீதிமொழியில் சொல்லப்பட்ட ஞானம் இயேசு அல்ல என்றும் விரிவாய் ஏற்கெனவே எழுதியிருக்கிறேன். இன்னும் விரிவாய் அறிந்து கொள்வோம்.

வார்த்தையானவர் தேவனுக்குச் சமமாயிருந்தார். தேவனுடைய ரூபமாயிருந்தார் (பிலி.2:6; கொலோ. 1:15); இன்றைக்கும் தேவனுக்கு சமமாய் அவரது வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். மட்டுமல்ல... "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்: நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை விசுவாசிக்கிறதில்லையா? நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" (யோ. 14:9.10:10:30: 17:21) என்று இயேசுவே சொல்லியிருக்கிறார். ஏசா.42:8ல் என் மகிமையை வேறொருவனுக்கும் கொடேன் என்று கர்த்தர் கொல்லியிருக்கும்போது இயேசுவுக்கு எப்படி மேலே சொல்லப்பட்ட படி சம அந்தஸ்து தரப்பட்டது; பிதாவாகிய தேவனின் மகிமையே வார்த்தையானவருக்கும் கொடுக்கப்பட்டால், வார்த்தையானவரும் பிதாவைப் போன்ற சர்வ வல்லமையுள்ள தேவனே! "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என்று இயேசு சொன்ன உடனே, இந்த வார்த்தையின் உட்பொருள் "இயேசு சர்வ வல்லமையுள்ள தேவன் தான்" என்று அர்த்தமுள்ளதை யூதர்கள் உணர்ந்து அவர் மேல் கல்லுகளை எடுத்தார்கள். (யோ. 10:31); மேலும் தன்னை சர்வ வல்லமையுள்ள தேவனென்று சொல்லி தேவ தூஷணம் சொன்னதால் கல்லெறிகிறோம் என்று யோ. 10:33ல் விளக்கமும் கொடுக்கிறார்கள். இயேசுவின் இரட்சிப்பை உணராத இஸ்ரேலருக்குப் புரிகிறது இவர் சர்வ வல்லமையுள்ள தேவனாகவே

வெளிப்படுத்துகிறார் என்று; ஆனால் இயேசுவை இரட்சகர் என்று சொல்வோருக்கு இந்த உண்மை புரியவில்லை. பாவங்களை மன்னிக்கிறவர் சர்வ வல்லமையுள்ள தேவன் மட்டுமே! உன் பாவம் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று இயேசு சொன்னதை தேவ தூஷணம் என்று யூதர்கள் சொன்னார்கள்: மன்னிக்கும் அதிகாரமும் அவரிடம் உண்டென்றால் அவர் சர்வ வல்லமையுள்ள தேவனல்லவா? (மாற்.2:5-1). இயேசு நித்திய பிதா என்று ஏசா.9:6-7ல் உரைக்கப்பட்டதை ஒருவரும் தியானிப்பதில்லை. மனிதனாய்ப் பிறக்கும் போது இம்மானுவேல் என்று பெயரிட ஏன் முன் கூட்டியே சொல்லப்பட்டது. இமானுவேல் என்றால் "தேவன் நம்மோடு" என்று பொருள். சர்வ வல்லமையுள்ள தேவன் மனிதர்களோடு மாம்சமானார் என்று அர்த்தம் (1 தீமோ. 3:16). ஆமென். "சர்வ வல்லமையுள்ள தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லை என்றார்" இயேசு (லூக்.18:19). யோ.8:46 ல் which of you convinceth me sin என்கிறார் இயேசு. நீதிபதி பிலாத்தாலும், காட்டிக் கொடுத்த எதிரியான யூதாசாலும், தன்னாலும், ஊரிலிருந்த நூற்றுக்கதிபதி யோசேப்பாலும் பாவமில்லாத நல்லவர் என்று நிரூபிக்கப்பட்டதால், இவர் சர்வ வல்லமையுள்ள தேவன் தானே! உயிர்தெழுந்த இயேசுவைப் பார்த்து. "என் ஆண்டவனே! என் தேவனே!" (My Lord! My God!) என்றானே அதன் பொருள் புரியவில்லையா?

மேலும் தீத்து 2:13ல் இயேசுவை "மகாதேவன்" என்று சொல்லப் பட்டிருப்பதால், இவருக்கும் மேலே தேவன் ஒருவரும் இல்லையென்றும், பிதாவும், இவரும், ஆவியானவரும் 'மகாதேவன்" தான் என்றும் அறிகிறோம். 1 யோ. 5:20ல் "இவரே மெய்யான தேவன்" என்று எழுதப்பட்டிருப்பதால், இவருக்கு மேலே மெய்யான தேவன் ஒருவரும் இல்லையென்றும், பிதாவும், இவரும், ஆவியானவரும் மெய்யான தேவன் என்றும் அறிகிறோம். யோ. 17:3ல் பிதா, மெய்யான தேவன் (True God) என்று சொல்லப்பட்டுள்ளது: 1 யோ. 5:20ல் இயேசுவே மெய்யான தேவன் என்று

சொல்லப்பட்டுள்ளது. அல்லேலூயா! இருவருமே சமமான மகிமையும். மாட்சிமையும், வல்லமையும் கொண்ட தேவன் தான்! ஏசா.9:6ல் இயேசுவை வல்லமையுள்ள தேவன் *(mighty God)* என்று எழுதப்பட்டுள்ளதை தியானியுங்கள். ஒவ்வொரு மொழியிலும் தேவனுக்குரிய வார்த்தையைப் பாருங்கள்:-

எபிரேய மொழியில் - ஏல், ஏலா. ஏலோஹிம் - யேகோவா - *(YHWH-Jehovah)* - அதோன், அதோனை

ஆங்கிலத்தில் - *God* - *LORD* கர்த்தர் - *Lord* - ஆண்டவர்

தமிழில் வசன ஆதாரம் - தேவன் / கர்த்தர் ஆதி. *1:1 ; 2:4 ; 34:6 ; 15: 2*

ஆக. எங்கெல்லாம் வேதத்தில் *God, LORD, Lord* என்று வருகிறதோ அதுவெல்லம் சர்வ வல்லமையுள்ள தேவனையே குறிக்கிறது என் அறிகிறோம். தமிழ் பைபிளிலே "கர்த்தர்" என்று வரும் இடங்களிலெல்லாம் *Bold Letters* (தடித்த, பெரிய எழுத்துக்களில்) இருப்பதே அது சர்வ வல்லமையுள்ள தேவனைக் குறிக்கிறது என அறியலாம். இயேசு கிறிஸ்துவையும் "கர்த்தராகிய இயேசு கிறிஸ்து" 'கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு" "ஆண்டவனே! என் தேவனே"! என்றெல்லாம் அழைக்கப் படுவதால், பிதாவாகிய தேவனைப் போல இவரும் சர்வ வல்லமையுள்ள தேவன் என்றே அறியலாம். பிதாவையும் "கர்த்தர்" என்று வேதம் அழைக்கிறது. வார்த்தையான குமாரனையும் "கர்த்தர்" என்று வேதம் அழைக்கிறது; பரிசுத்த ஆவியானவரையும் "கர்த்தர்" என்றே வேதம் அழைக்கிறது. ஆக, மூவரும் சர்வ வல்லமையுள்ள தேவன் தான் என்று அறிகிறோம். தேவன் என்றும், கர்த்தர் என்றும் வேதத்தில் வரும் போது அது பன்மையில் ஒருமையாய்

(மூன்று ஆள்தத்துவம் கொண்ட ஒரே தேவன்) அழைக்கப்படுகிறது. மற்றப்படி ஒருவரே சர்வ வல்லமையுள்ள தேவனைக் குறிக்கிறது. ஆதி 2ம் அதிகாரத்திற்கு மேல் பழைய ஏற்பாட்டில் இப்படித் தான் பெரும்பாலான இடங்களில் எழுதப்பட்டுள்ளது. இப்படி எழுதப்பட்டுள்ள தேவனாகிய கர்த்தர், சர்வ வல்லமையுள்ள தேவனாகிய வார்த்தையான வரையே குறிக்கிறது என்றும், பழைய ஏற்பாட்டில் வெளிப்பட்டு பேசியவர், நடத்தியவர் எல்லாமே சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் தான் என்றும் "விசுவாசித்தேன்! ஆகையால் பேசுகிறேன்" என்ற அடியேனின் புத்தகத்தில் விளக்கி உள்ளேன். இதுகுறித்து கொஞ்சம் விரிவாய்ப் பார்ப்போம்.

முட்செடியில் மோசேயோடு பேசிய தூதனானவர் யார்? இந்த தூதனாகிய சர்வ வல்லமையுள்ள தேவனின் நாமம் "இருக்கிறவராகவே இருக்கிறேன் (யேகோவா)" என்பதாகும் (யாத். 3:14:6:2,3). இந்த தூதனானவர் சர்வ வல்லமையுள்ள தேவன் என்று அவரே விளம்புவதாக ஸ்தேவான் சொல்கிறான் (அப்.7:30–32). அப்படியானால் குமாரனாகிய தேவனின் பெயரும் யேகோவாதான். ஆமென். இதை நான் முன்பே எழுதி இருக்கிறேன். யாக்கோபுடன் இரவிலே போராடிய சர்வ வல்லமையுள்ள தேவனும், இந்த தூதனான வரும். யேகோவாவும். வார்த்தையாகிய கர்த்தருமானவர் தான் என்று ஓசி. 12:4,5 சொல்கின்றது. இந்த வார்த்தையாகிய சர்வ வல்லமையுள்ள தேவன், இயேசு என்று மனிதனாய் வெளிப்பட்டு, கெத்சமனேயில் தன்னைப் பிடிக்க வந்தவர்களிடம். "நசரேயனாகிய இயேசுவைத் தேடி வந்தோம்" என்று அவர்கள் சொன்னதற்காக இவரின் பதில் என்ன தெரியுமா? "நான் தான்" (I am that I am) இது முட்செடியிலே மோசேக்கு முன் சொன்ன வார்த்தை. (யோ. 18:6) "யேகோவா" என்பது இதன் பொருள். இந்த வார்த்தையின் மகிமை வெளிப்பட்ட உடனே பிடிக்க வந்தவர்கள் எதிர்த்து நிற்க முடியாமல் பின்னிட்டு விழுந்தார்கள். அல்லேலூயா! இவர் சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் யோகோவா அல்லவோ! ஆமென். யோ.8:24, 58

போன்றவற்றில் "நான் இருக்கிறேன்" என்று கத்தோலிக்க தமிழ் பைபிளில் போட்டு. "நானே இருக்கிறேன் - நாமே இருப்பவர் என்று கடவுள் ஆதியில் மோயீசனுக்கு வெளிப்படுத்தினார். முழு நிறைவுடன். எக்குறையுமின்றி இருப்பவர் (உபா.32:39: இசை 43:10 காண்). கடவுள் தமக்குரியதென வெளிப்படுத்திய பெயரை இயேசு தமதாக்கிக் கொள்கிறார். ஆகவே தாமும் உண்மைக் கடவுள் என்று கூறுகிறார்" என்று விளக்கியும் இருக்கிறார்கள். நான் இருக்கிறேன் (I am) என்று இயேசு தன்னை தேவனாகவே வெளிப்படுத்திச் சொன்னதை யூதர்கள் உணர்ந்து அவர் மேல் கல்லெறிய ஆரம்பித்தார்கள். (யோ. 8:59).

இயேசுவை ஏற்றுக் கொள்ளாத இஸ்ரேலருக்கும். பாரம்பரிய கிறிஸ்தவ சபையான ரோமன் கத்தோலிக்க சபைக்கும். இயேசு சர்வ வல்லமையுள்ள தேவன் என்று தன்னை வெளிப்படுத்துகிறார் என்று புரியும் போது, யேகோவா விடனஸ் போன்றோருக்கு புரியாதது பிசாசின் செயல் தான். மேலும் யோ.8:56ல் ஆபிரகாம், சர்வ வல்லமையுள்ள தேவனாகிய வார்த்தையான வரை கண்டு களி கூர்ந்தான் என்று எழுதப்பட்டுள்ளதால். ஆபிரகாமோடு உறவாடியவர் இவர் தான் என்று நிதானிக்க ஏது உண்டு. ஏனெனில் யோ. 5:37ன் படி ஒருக்காலும் மனிதர்கள் பிதாவாகிய தேவனின் சத்தத்தைக் கேட்டதுமில்லை; அவர் ரூபத்தைக் கண்டதுமில்லை என அறிகிறோம். சீனாய் மலையில் பேசி. 10 கற்பனைகளை கொடுத்தவர் கூட பிதா அல்ல என்றும், தூதனானவராகிய வார்த்தையாகிய தேவன் என்றும் ஸ்தேவான் சொல்ல அப். 7:38, 53 மூலம் அறிகிறோம். யாத். 6:3ன் படி இந்த வார்த்தையாகிய தேவன்."சர்வ வல்லமையுள்ள தேவன்" (எல்ஷடாய்) என்னும் நாமத்தினாலே வெளிப்பட்டார் என அறிகிறோம் (see ஆதி.17:1).

மேலும் என் மகிமையை யாருக்கும் கொடேன் (ஏசா.42:8) என்கின்ற பிதாவாகிய தேவனே, குமாரனை நோக்கி "தேவனே" (God) என்று சொல்லியிருக்க (சங்.45:6,7: எபி. 1:8,9) இயேசு சர்வ வல்லமையுள்ள தேவன் என்பதற்கு வேறு ஆதாரமும் வேண்டுமோ!

இன்னும் நான் சொல்கிறேன் கேளுங்கள்:- வெளி. 1:8ல் சர்வ வல்லமையுள்ள கர்த்தர் (Almighty) என்னும் வெளி.14:8ல் சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் (Lord God Almighty) என்றும், வெளி. 11:17ல் சர்வ வல்லமையுள்ள கர்த்தராகிய தேவன் (Lord God Almighty) என்றும் வெளி. 16:14ல் சர்வ வல்லமையுள்ள தேவன் (God Almighty) என்றும் ரோ.9:6ல் சர்வத்திற்கும் மேலான தேவன் (over all; God) என்றும் இயேசு கிறிஸ்துவைப் பற்றி சொல்லியிருப்பதை வாசியுங்கள்: தியானியுங்கள்; ஆவியானவர் பேசுவதற்கு இடங்கொடுங்கள். "இயேசுவே ஆண்டவர்" (Jesus is the Lord) இயேசுவே கர்த்தர், இயேசுவே சர்வ வல்லமையுள்ள தேவன். திரித்துவத்தில் ஒருவரான மெய்தேவன், மகா தேவன் என்று பறைசாற்றுவோம்! வாழ்க சர்வ வல்லமையுள்ள தேவனின் நாமம்! அல்லேலூயா!

16. இயேசு ஒரு யூதரா?

இயேசுவின் இனத்தைக் குறித்த கேள்வியானது சர்ச்சைக்கு அப்பாற்பட்டதாக இருக்கும் என்று தோன்றுகிறது. நிச்சயமாக இயேசு ஒரு யூதர் - இல்லையா? வேதாகமப் பதிவு சொல்கிறது, ஆம், இயேசு ஒரு யூதர். ஆனால் சிலருக்கு இருக்கும் கருத்து வேறுபாடுகள் மற்றும் ஆட்சேபனைகளை அது தடைபண்ணவில்லை. இதைக்குறித்து வேதாகமம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.

இயேசுவின் நாட்களில், ஒரு நபர் 1) யூத மதத்தில் உள்ள ஒரு தாயிக்கு பிள்ளையாக பிறந்ததினால் அல்லது 2) யூத மதத்திற்கு மதம் மாறியிருந்ததினால் அவன் அல்லது அவள் யூதராக கருதப்படுகிறார். யூதர்கள் தங்கள் வம்சாவளியை பண்டைய எபிரேயர்களிடம் இருந்து கொண்டுள்ளனர்; யூதர்கள் மதமாற்றம் மூலம் எந்த இனப் பின்னணியில் இருந்தும் மதமாற்றம் செய்யப்பட்டவர்கள். இயேசு வம்சாவளியில் வந்த ஒரு யூதர், அவர் முதல் நூற்றாண்டில் ஒரு யூதராக வாழ்க்கை வாழ்ந்தார்.

இயேசு யூதாவில் ஒரு யூதத் தாய்க்கு மகனாகப் பிறந்தார், கலிலேயாவில் ஒரு யூத வீட்டில் வளர்க்கப்பட்டு, யூதத் தலைநகரான எருசலேமில் கற்பிக்கப்பட்டார். அவர் இஸ்ரவேல் தேசம் முழுவதும் ஊழியம் செய்தார்: "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" (யோவான் 1:11). ஒரு சமாரிய ஸ்திரீயிடம் பேசுகையில், இயேசு சொன்னார், "நீங்கள் [புறஜாதிகள்] அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் [யூதர்கள்] அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது" (யோவான் 4:22). இங்கே முதல் மற்றும் இரண்டாவது நபர்களுக்குப் பயன்படுத்தப்பட்ட பிரதிப்பெயர்களில், இயேசு தம்மை யூத மக்களில் ஒருவராக இருப்பதை அடையாளம் காட்டினார்.

வேதாகமப் பதிவு இந்த உண்மைகளை விவரிக்கிறது: இயேசு கிறிஸ்து "ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்து" (மத்தேயு 1:1) என்று அவரது வம்சவரலாறில் குறிப்பிடப்படுகிறார். தேவதூதனாகிய காபிரியேல் இயேசுவின் பிறப்பை அறிவித்தபோது, அவர் "அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தில்" மற்றும் "யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்" என்று அறிவித்தான் (லூக்கா 1:32-33). இயேசுவின் தனித்துவமான ஆசாரியத்துவத்தை எழுதுகையில், எபிரேயர் நிருபத்தின் ஆசிரியர் கூறுகிறார், "நம்முடைய கர்த்தர் யூதாகோத்திரத்தில் தோன்றினாரென்பது பிரசித்தமாயிருக்கிறது" (எபிரேயர் 7:14). யூதா யாக்கோபின் மகன், அவருடைய பெயரிலிருந்தே நமக்கு யூதர் என்கிற வார்த்தை வந்தது. மரியாளின் வம்சாவளி, லூக்கா 3 ஆம் அதிகாரத்தில், இயேசுவின் தாய் தாவீது ராஜாவின் நேரடி வம்சாவளியில் வந்தவர் என்பதைக் காட்டுகிறது, இது இயேசுவுக்கு யூத சிங்காசனத்திற்கு சட்டப்பூர்வ உரிமையை வழங்குகிறது மற்றும் இயேசுவானவர் யூத வம்சாவளியைச் சேர்ந்த யூதர் என்பதை சந்தேகமின்றி நிறுவுகிறது.

இயேசு ஒரு யூத வாழ்க்கை முறையைக் கடைபிடிப்பதாகவும், யூத நியாயப்பிரமாணத்தைக் கடைபிடிப்பதாகவும் வேதாகமப் பதிவு காட்டுகிறது. அவர் ஒரு யூத வீட்டில் வளர்க்கப்பட்டார், இயேசுவின் பெற்றோர் தங்களுக்குத் தேவையான யூத நியாயப்பிரமாணங்களைக் கடைபிடிப்பதில் மிகவும் கவனமாக இருந்தனர் (லூக் 2:39). அவருடைய ஊழியத்தில், இயேசு அடிக்கடி ஜெப ஆலயங்களில் போதித்தார் (மத்தேயு 13:54; லூக்கா 6:6; யோவான் 18:20), மற்றும் தேவாலயத்திலும் கூட (லூக்கா 21:37) போதித்தார். அவருடைய போதனைகளில், இயேசு நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசிகளை அதிகாரப்பூர்வமாக சுட்டிக்காட்டினார் (மத்தேயு 5:17; 12:5; மாற்கு 10:19), அவர் மற்றவர்களுக்கு நியாயப்பிரமாணத்தை கடைபிடிக்க

கற்றுக்கொடுத்தார் (மத்தேயு 23:1-3), அவரம் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டார். இயேசு யூத மதத்தின் பரிசேயர்களுடைய பகுத்தறிவு மறு விளக்கத்தை கடுமையாக நிராகரித்தார் என்கிறபோதிலும், அவர் தம்மை யூதர்களின் மதத்தோடு அடையாளப்படுத்திக் கொண்டார் மற்றும் ஒரு யூத ரபீயாகக் கருதப்பட்டார் (யோவான் 1:38; 6:25).

ஒரு யூதனாக, இயேசு பஸ்கா பண்டிகையை ஆசரித்தார் (யோவான் 2:13), யூதருடைய கூடாரப்பண்டிகையில் பங்குக் கொண்டார் (யோவான் 7:2, 10) மற்றும் தேவாலயப் பிரதிஷ்டைபண்டிகை பண்டிகையிலும் பங்குக் கொண்டார் (யோவான் 10:22). இயேசு யூதர்களுடைய ராஜா என்று அழைக்கப்பட்டார் (மாற்கு 15:2).

பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக முன்னறிவிக்கப்பட்ட மேசியா ஒரு யூத இரட்சகர் ஆவார், ஒரு சிறப்பு நோக்கத்திற்காக தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேசியா இஸ்ரவேலை மீட்டு தேவனுக்கு சேவை செய்ய வேண்டும், பின்னர் இஸ்ரவேலுக்கு சமாதானத்தையும் நீதியையும் பாதுகாப்பையும் கொண்டுவந்து சீயோனை ஆள வேண்டும் (ஏசாயா 9:6-7; 32:1; எரேமியா 23:5; மற்றும் சகரியா 9:9 ஆகிய வசனங்களைப் பார்க்கவும்). இயேசு ஒரு யூத மேசியா, யூதர்களுக்கு அனுப்பப்பட்ட தாவீதின் குமாரன், அவருடைய பூமிக்குரிய ஊழியத்தில் அவர் "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்தில்" கவனம் செலுத்தினார் (மத்தேயு 15:24). ஆனால் அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில், இயேசு தனது தேசத்தையோ அல்லது பின்னணியையோ பொருட்படுத்தாமல், தன்னை விசுவாசிக்கும் அனைவருக்கும் இரட்சிப்பைப் அருளினார். யூதருடைய மேசியா உலக இரட்சகரானார் (எபேசியர் 2:11-22).

17. இயேசு தேவ ஆட்டுக்குட்டி என்பதன் அர்த்தம் என்ன?

யோவான் 1:29 மற்றும் யோவான் 1:36 ஆகிய வசனங்களில் இயேசு தேவ ஆட்டுக்குட்டி என்று அழைக்கப்படுகையில், பாவத்திற்கான பரிபூரணமான மற்றும் இறுதியான பலி எனக் குறிப்பிடப்படுகிறார். கிறிஸ்து யார் என்பதையும் அவர் என்ன செய்தார் என்பதையும் புரிந்துகொள்வதற்கு, நாம் பழைய ஏற்பாட்டில் இருந்து ஆரம்பிக்க வேண்டும், இது கிறிஸ்துவின் வருகை குறித்த "குற்றநிவாரணபலியைப்" (ஏசாயா 53:10) பற்றிய தீர்க்கதரிசனங்களைக் கொண்டிருக்கிறது. உண்மையில், பழைய ஏற்பாட்டில் தேவனால் நிறுவப்பட்ட முழு பலிமுறையானது, அவருடைய ஜனங்கள் பாவங்களுக்காக பாவநிவிர்த்தி செய்யப்படும் பரிபூரண பலியை இயேசு கிறிஸ்துவின் வருகையில் நிலைநிறுத்தினார் (ரோமர் 8:3; எபிரெயர் 10).

ஆட்டுக்குட்டிகளின் பலி யூதமத வாழ்க்கை மற்றும் பலிசெலுத்தும் முறைகளில் மிகவும் முக்கிய பங்கு வகித்தது. யோவான்ஸ்நானன் இயேசுவை "உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29) என்று குறிப்பிட்டபோது, அதைக் கேள்விப்பட்ட யூதர்கள் உடனடியாக பல முக்கிய புலிகளைக் குறித்து யோசித்திருக்கலாம். பஸ்கா பண்டிகையின் காலம் நெருங்கி வந்ததால், அவர்களது முதல் சிந்தனை பஸ்கா ஆட்டுக்குட்டியின் பலியாக இருந்திருக்கும். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலர்களை விடுவித்த தேவனுடைய விடுதலையை நினைவுகூரும் பண்டிகை அவர்களது கொண்டாட்டத்தில் மிகவும் முக்கியமாக பஸ்கா பண்டிகையாக இருந்தது. உண்மையில், பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டு அதனுடைய இரத்தம் வீட்டினுடைய கதவுகளுக்கு தெளித்தல் (யாத்திராகமம் 12:11-13), கிறிஸ்துவின் பாவநிவாரண

பலியை சிலுவையில் சுமந்து நிற்கும் ஒரு அழகிய சித்திரமாகும். அவர் யாருக்காக மரித்தாரோ அவர்களை அவருடைய இரத்தத்தால் மூடி மறைத்து, (ஆவிக்குரிய) மரணத்தின் தேவதூதனிலிருந்து நம்மை பாதுகாக்கிறார்.

ஆட்டுக்குட்டிகளின் பலி சம்பந்தப்பட்ட மற்றொரு முக்கிய பலி எருசலேமிலுள்ள ஆலயத்தில் பலியிடப்படும் தினசரி பலியாக இருந்தது. ஒவ்வொரு காலையிலும் மாலையிலும், ஜனங்களுடைய பாவங்களுக்காக ஒரு ஆட்டுக்குட்டியானது தேவாலயத்தில் பலியிடப்பட்டது (யாத்திராகமம் 29:38-42). மற்றவைகளைப் போலவே இந்த அன்றாட பலிகள், சிலுவையில் கிறிஸ்துவினுடைய பரிபூரண பலியை நோக்கியே சுட்டிக்காட்டுகின்றன. உண்மையில், சிலுவையில் இயேசுவின் மரணத்தின் காலம், தேவாலயத்தில் மாலை பலி செலுத்திய காலத்தில் இருந்தது. அக்காலத்திலிருந்த யூதர்கள் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளாகிய எரேமியாவையும் ஏசாயாவையும் நன்கு அறிந்திருந்தார்கள், "அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக் குட்டியைப்போல" இயேசு கொண்டுவரப்படுவார் என்கிற காரியத்தை முன்னறிவித்தார்கள் (எரேமியா 11:19; ஏசாயா 53:7). மேலும் யாருடைய பாடுகள் மற்றும் பலி இஸ்ரேலுக்கு மீட்புண்டாக்கும் என்றும் முன்னறிவித்தார்கள். நிச்சயமாக, அந்த "தேவ ஆட்டுக்குட்டி" இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு எவரும் இல்லை.

பலி செலுத்தும் முறையானது இன்று நமக்கு விசித்திரமானதாகக் கருதினால், பணம் செலுத்துதல் அல்லது மீட்டெடுத்தல் என்கிற கருத்து நாம் புரிந்துகொள்வதற்கு இன்னமும் இருக்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம் என்று நாம் அறிந்திருக்கிறோம் (ரோமர் 6:23). நம்முடைய பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. நாம் அனைவரும் பாவிகளாய் இருக்கிறோம் என்று வேதாகமம் கற்பிக்கிறதென்றும், நம்மில் ஒருவனும் தேவனுக்கு முன்பாக நீதிமான்களல்ல என்றும் நாம் அறிந்திருக்கிறோம் (ரோமர் 3:23). நம்முடைய பாவத்தின் காரணமாக, நாம் தேவனிடமிருந்து பிரிக்கப்படுகிறோம், அவருக்கு முன்பாக நாம்

குற்றவாளிகளாக நிற்கிறோம். ஆகையால், அவர் நம்மை அவரிடமாக ஒப்புரவாக்கிக்கொள்ள ஒரு வழியைக் கொடுக்கிறார் என்றால், அதற்காத்தான் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் மரிப்பதற்கு அவர் அனுப்பிய ஒரே வழியாகும். அவரில் விசுவாசம் வைக்கிற அனைவரின் பாவத்திற்காகவும் பாவநிவிர்த்தி செய்ய கிறிஸ்து சிலுவையில் பாவங்களின் தண்டனையை ஏற்றுக்கொண்டு மரித்தார்.

மரணம் மற்றும் அவருடைய உயிர்த்தெழுதல் மூலமாக தேவனுடைய பரிபூரண பலியாக சிலுவையில் அவருடைய மரணத்தின் மூலமாகவும், மூன்று நாட்களுக்குப் பின்னர் அவர் உயிர்த்தெழுந்ததாலும், நாம் அவரை விசுவாசித்தால் நித்திய ஜீவனை அடைய முடியும். *1* பேதுரு *1:18-21* வரையிலுள்ள வசனங்களில் தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ள சுவிசேஷத்தின் மகிமையான நற்செய்தியின் ஒரு பகுதியாக நம்முடைய பாவத்திற்கான பாவநிவாரணத்தை தேவன்தாமே வழங்கியிருக்கிறார் என்பதே உண்மை: "உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலமாய் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசிக்காலங்களில் வெளிப்பட்டார். உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன்மேலிருக்கும்படி, அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார்."

18. இயேசு தேவனுடைய குமாரன் என்பதன் அர்த்தம் என்ன?

இயேசு தேவனுடைய குமாரன் என்பது மனிதர்கள் மத்தியில் காண்கிறதான தகப்பன் மகன் உறவு போன்றதல்ல. இயேசு தேவனுடைய குமாரன் என்பது, தேவனுக்கு திருமணமாகி ஒரு மகனைப் பெறவில்லை. தேவன் மரியாளுடன் எந்தவிதத்திலும் உறவுடையவராயிருந்து மகனைப் பெறவும் இல்லை. இயேசு தேவனுடைய குமாரன் என்பது தேவன் மனுவுருவெடுத்து வந்த நிலை ஆகும் (யோவான் 1:1,14). மரியாள் பரிசுத்த ஆவியின் பெலத்தால் கர்ப்பந்தரித்து இயேசுவை தேவனுடைய குமாரனாகப் பெற்றாள். லூக்கா 1:35 கூறுகிறது: "தேவதூதன் அவளுக்கு *பிரதியுத்தரமாக, பரிசுத்த ஆவி உன்மேல் வரும், உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும், ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் குழந்தை பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எனப்படும்".

யூத தலைவர்களுக்கு முன்பாக அவருடைய பாடுகளின்போது, பிரதான ஆசாரியன் இயேசுவிடம் கட்டளையிட்டு கேட்டுக்கொண்டது. 'நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான்" (மத்தேயு 26:63). அதற்கு இயேசு 'நீர் சொன்னபடிதான் அன்றியும் மனுஷகுமாரன் சர்வ வல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இது முதல் காண்பீர்களென்றும் உங்களுக்குச் சொல்கிறேன் என்றார்" (மத்தேயு 26:64). யூதத்தலைவர்கள் இதற்கு இயேசு தேவதூஷனம் சொன்னார் என்று குற்றப்படுத்தினார்கள் (மத்தேயு 26:65-66). பிறகு பொந்தியு பிலாத்துவிடம் 'யூதர்கள்'; அவனுக்குப் பிதியுத்திரமாக எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணம் உண்டு, இவன் தன்னைத் தேவனுடைய

குமாரனென்று சொன்னபடியினால், அந்த நியாயப்பிரமாணத்தின்படியே, இவன் சாக வேண்டும் என்றார்கள்" (யோவான் 19:7). தன்னை தேவனுடைய குமாரன் என்று இயேசு சொன்னது தேவதூஷணமாகவும் மரணதண்டனைக்கு ஏதுவானது என்றும் ஏன் கருதப்பட்டது? யூதத்தலைவர்கள் இயேசு தன்னை யாரென்று சொல்லுகிறார் என்பதை அறிந்து கொண்டார்கள். தேவனுடைய குமாரன் எனப்படுவது தேவனுடைய சுபாவத்திலேயே இருப்பது அல்லது தேவனுக்கு சமமாக இருப்பது என்னும் பொருள்படும். தேவனுடைய அதே சுபாவத்தில் இருப்பது என்பது, தேவனாகவே இருப்பது என்ற உண்மை யூதத்தலைவர்களுக்கு தேவதூஷணமாக இருந்தது. எனவே லேவியராகமம் படி இயேசுவுக்கு மரணதண்டனையை கட்டாயப்படுத்தி கேட்டுக்கொண்டார்கள். எபிரேயர் 1:3 இதை மிகத் தெளிவாகக் கூறுகின்றது. "இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமாயிருந்தது".

வேறொரு உதாரணம் யோவான் 17,12-ல் காண்கிறோம் 'கேட்டின் மகன்' என்று யூதாஸ் சொல்லப் பட்டிருக்கிறான். சீமோனின் மகனாகிய யூதாஸ்காரியோத்து என்று யோவான் 6:71 கூறுகிறது. 'கேட்டின் மகன்' என்று கூறுவதன் அர்த்தம் என்ன? 'கேடு' என்றால் 'அழிவு' 'நரகம்' 'முழுவதும் அழிதல்' எனவே யூதாஸ் இவற்றிற்கு மகன் என்பது கிடையாது. அவனுடைய வாழ்க்கையின் அடையாளமாக மாறிவிட்டது. யூதாஸ் கேட்டின் வெளிப்பாடாய் இருந்தான். அதுபோல இயேசுவும் தேவனுடைய குமாரனாய் வெளிப்பட்டார். தேவனுடைய குமாரன் தேவன். இயேசு, தேவனுடைய வெளிப்பாடு ஆவார் (யோவான் 1:1, 14).

19. இயேசுதான் பிதாவா?

"நானே அவரென்று நீங்கள் விசுவாசியா விட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" என்ற யோ 8:24 மற்றும் 28 வசனங்களை வைத்துக் கொண்டு, இயேசு தான் பிதா என்று வாதிடும் இயேசு நாமக்கார சபையார் அதிவேகமாய் எழும்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்த வசனப்படி இயேசுதான் பிதாவா? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக.

ஆங்கில வேதாகமத்தில் "Iam he" (நானே அவர்) என்று எழுதப்பட்டிருக்கிறது. எல்லா வேதப்பண்டிதராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட King James Versionல் "Iam he" என்பதில் he என்பதை italic letter ஆகப் போட்டிருக்கிறார்கள். மட்டுமல்ல, எந்தெந்த இடங்களிலெல்லாம் தேவனைக் குறிக்கிற சொல்லாக He என்ற சொல் வருகிறதோ அந்த இடங்களிலெல்லாம் Capital Letterல் போடுவார்கள். ஆனால் இங்கோ he small letter போட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஆராய்ச்சியின் தியானத்தில் வேதப் பண்டிதர்களின் கருத்தை நோக்குவோம். கிரேக்க மூல பாஷையில் யோ 8:24,28ல் "he" என்ற வார்த்தை இல்லையாம். வெறுமனே 'I am' என்று தான் உள்ளது. இந்த I am (இருக்கிறேன்) என்ற வார்த்தை வேதத்தில் மிக மிக முக்கியமான வார்த்தையன்றோ! யாத். 3:14-15 ஐ வாசியுங்கள். முட்செடியின் நடுவே மோசேக்கு தரிசனமான நம் தேவனின் பெயர் இதுவே. அல்லேலூயா! "இருக்கிறேன்" என்ற நாமமுடைய நம் தேவன். கெத்சமனே தோட்டத்தில் யாரைத் தேடுகிறீர்கள் என்று கேட்டபோது. நசரேனாகிய இயேசுவை தேடுகிறோம் என்று யூதர்கள் சொன்ன உடனே. இயேசு சொன்ன பதிலைப் பாருங்கள். "நான்தான்" என்றார் (யோ. 18:5) (I am) நான்தான் என்று அவர் தன்னுடைய நாமத்தை (மோசேயிடம் சொல்லிய அதே நாமத்தை) கேட்டவுடனே

யூதர்கள் பின்னிட்டு விழுந்தார்களாம் (வச.6). ஏன்? அவர் நாமம் வல்லமையுள்ளது. அல்லேலூயா! மோசேக்கு முட்செடியில் "இருக்கிறேன்" என்ற நாமத்தில் தோன்றியவர் (அப். 7:3), மனிதனாக இயேசு என்ற நாமத்தில் வெளிப்பட்டார். இந்த இயேசு தான் யோ. 8:24,28ல் "இருக்கிறேன் (I am) என்ற நாமமுள்ள கிறிஸ்து நான்" என்று விசுவாசியுங்கள் என்று வேதமறிந்த இஸ்ரேலரிடம் சொல்லுகிறாரே யல்லாமல், இவர் தான் பிதாவாகிய தேவன் என்று சொல்லவில்லை. இப்படியே இயேசு சம்பாஷித்துக் கொண்டிருக்கும் போது.(நான் பிதாவினிடத்திலிருந்து வந்தேன்; பிதா என்னை அனுப்பினார்; பிதா போதித்த படியே சொல்கிறேன்; செய்கிறேன்" - இயேசு) 58ம் வசனத்தில் மறுபடியும் I am நான் இருக்கிறேன் - என்ற தன் நாமத்தை சொன்ன உடனே, யூதர்களுக்கு இவர் சொல்வது புரிந்ததால் அவர்மேல் கல் எறியும்படி கல்லுகளை எடுத்தார்கள். இதன் அர்த்தம் யூதர்களுக்குப் புரிகிறது; கிறிஸ்தவர்கள் என்று சொல்லும் சிலருக்குப் புரியவில்லையே.

ரோமன் கத்தோலிக்க தமிழ் பைபிளில் "நானே அவரென்று" குறிக்கும், மூலபாஷையில் இல்லாத "he" என்ற வார்த்தையை சேர்க்காமல், மோசேயிடம் அவர் வெளிப்பட்ட Iam (இருக்கிறேன்) என்ற நாமமே போடப்பட்டிருக்கிறது. "நானே இருக்கிறேன் (I am) என்று நீங்கள் விசுவாசிக்காவிடில் உங்கள் பாவங்களிலே மடிவீர்கள்" அருளப்பர் 8:24. ஆக, பிதாவே, இயேசு என்று இந்த வசனத்தில் இயேசு சொல்லவில்லை என்று அறிகிறோம். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

20. இயேசுதான் பிதாவை வெளிப்படுத்தினார்

"தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்" (யோ. 1:18). இதன் படி தேவனை யாரும் கண்டதில்லை என அறிகிறோம். ஆனால் ஆபிரகாம் (ஆதி. 12:7), யாக்கோபு (ஆதி. 32:30): மோசே, ஆரோன் போன்றவர்கள் (யாத். 24:10; 33:18); கிதியோன் (நியா. 6:22) மனாசே (நியா. 13:22) போன்ற பலரும் தேவனை முகமுகமாய்க் கண்டோம் என்கிறார்களே அது தவறா? தேவன் ஆவியாயிருக்கிறார் (யோ. 4:24) ஆவியாயிருக்கிற தேவனை மாம்சக்கண்களால் பார்க்க முடியாது. சேரக்கூடாத ஒளியில்வாசம்பண்ணுகிறவர்: மனுஷரில் ஒருவரும் கண்டிராதவர்: காணக்ககூடாதவர்: என்று 1 தீமோ. 6:16 சொல்கின்றது. ஆனால் இவரைக் கண்டவர் குமாரன்: அவரே தேவனின் மடியிலிருக்கிறார். ஆபிரகாம் மடியிலே லாசரு இருந்ததுபோல தேவன் ஆவியாயிருப்பதால் அவரின் ஆவியின் ரூபத்தை, மகிமையை, மனிதன் யாரும் பார்க்க இயலாது அல்லவா! நாம் ஒரு நாள் மறுரூபமாகி தேவனை முகமுகமாய்த் தரிசிக்கப் போகிறோம். இதைத்தான் சகோ. பெர்க்மான்ஸ் பாடுகிறார்:-

"உருமாற்றம் அடைந்து...

முகமுகமாக என் நேசரைக் காண்பேன்.

தொட்டு தொட்டு பார்ப்பேன்...

அப்படியானால் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் கண்டது என்ன? கண்டது தேவ ரூபமல்ல: மனித வடிவில் வெளிப்பட்ட, மனிதனால் காணக்கூடிய ரூபத்தில் வெளிப்பட்ட தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே! தேவதூராய்க் கடந்து வந்தவர் அவரே! மேலும். யோ. 14:8-9: 1 யோ. 1:1- 2ஐ வாசியுங்கள். பிதாவாகிய தேவன் மனிதர் காண்கிறபடி இதுவரைக்கும் வெளிப்பட வில்லை: ஆனால் குமாரனாகிய தேவனே அப்படி வெளிப்பட்டார். இன்றைக்கும் மனிதர் காண்கிறபடியே பரலோகம் போன குமாரனாகிய தேவன் அதே வடிவத்தில் தான் இருக்கிறார்; அதே வடிவத்தில் தான் மறுபடியும் திரும்பி வருவார். அல்லேலூயா!

21. இயேசுவாய் வந்தவர்தான் பிதாவா?

ஏசா. 9:6ல் பாலகனாய் பிறந்து நமக்கு குமாரனாய் கொடுக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவின் நாமம் "நித்திய பிதா" என்று போடப்பட்டிருப்பதால் இயேசுதான் பிதா என்றும், வேறொருவர் பிதா ஸ்தானத்தில் இல்லை என்றும் கிறிஸ்தவ வட்டாரத்தில் ஒரு சில கூட்டத்தார் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். இந்த கருகலான சத்தியத்திற்கு ஆவியானவர் பதில் கொடுப்பாராக!

"பிதா வேறு; குமாரன் வேறு. இருவரும் இரண்டு ஆள் தத்துவமுடையவர்கள்" என்று பழைய முழக்கங்களில் வசன அடிப்படையில் ஏராளமான செய்திகளை தாராளமாய் எழுதியிருக்கிறேன். கடந்த பிப்ரவரி முழக்கத்தில் கூட எழுதி உள்ளேன். அஃதல்லாமல் அடியேனின் மூன்று ஆராய்ச்சி புத்தகங்களிலும் பல தலைப்புகளில் கட்டுரைகள் எழுதியுள்ளேன். "இயேசுவின் நாமம்" சபையாரை தவிர (Only Jesus) மற்ற எல்லா சபையாரும், யேகோவா விட்னஸ் சபையார் கூட பிதாவும் குமாரனும் இரண்டு ஆள் தத்துவம் என்று நம்புகின்றனர். இங்கு குறிப்பிட்டுள்ள ஏசா.9:6ல் இயேசுவின் நாமம் "நித்திய பிதா" என்று உள்ளது. வார்த்தையாகிய தேவன் மனிதனாய் பிறந்த போது அவருக்கு இட்ட பெயர் இயேசு என்பதாகும். அவர் வார்த்தையாய் இருந்த போது தனிப்பெயர் ஏதுமில்லை. ஏனென்றால் பல மனிதர்கள் இருப்பதால் மனிதர்களுக்கு தான் Identification க்காக பெயர்கள் தேவையே ஒழிய, ஒரே தேவனுக்கு (GOD - ஏலோஹிம்) மூன்று ஆள்தத்துவமாயிருக்கும் ஒரே தேவனுக்கு பெயர் தேவையில்லை. ஒரே தேவனின் மூன்று ஆள்தத்துவத்திற்கு தேவன், வார்த்தை, பரிசுத்த ஆவி என மூன்று அழைப்பு பெயர்கள் இருந்தாலும் இது அவர்களுக்கு இடப்பட்ட காரணப் பெயர்கள்தான். வார்த்தையானவர் நம் பாவங்களுக்காக

குமாரனாக்கப்படுவார் என்று பரலோகில் முடிவானதுமே. வார்த்தையானவருக்கு குமாரன் என்றும் தேவனுக்கு பிதா என்றும் காரணப் பெயர்கள் வந்தன. நீதி.30:4ல் "அண்ட சராசரங்களை உருவாக்கின வருடைய நாமம் என்ன? அவர் குமாரனுடைய நாமம் என்ன?" என்று கேட்பதிலிருந்தே பிதாவும், குமாரனும் வேறு வேறு என்று பழைய ஏற்பாட்டு மக்களுக்கே தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது என அறிகிறோம். யோ. 12:34ல் கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறார்" என்று அவர்களே அறிக்கை யிட்டார்களே! (யோ.7:31; 11:27; 4:25; மாற்கு. 8:29 போன்ற பல வசனங்களை தியானியுங்கள்). ஆனாலும் அந்த குமாரனுக்கு கொடுக்கப்பட்ட நாமமெல்லாம் காரணப் பெயர்கள்தான். அப்படித்தான் ஏசா.9:6ல் அவருடைய நாமம் அதிசயமானவர், ஆலோசனை கர்த்தர், வல்லமையுள்ள தேவன். "நித்திய பிதா". "சமாதானப்பிரபு" என்று காரணப்பெயராக அழைக்கப்பட்டுள்ளது. இந்த நாமமெல்லாம் அவரின் மகிமையை, மாட்சிமையை, மகத்துவத்தை, வல்லமையை வெளிப்படுத்துபவைகளாகும். அதிலே ஒரு காரணப் பெயர்தான் "நித்திய பிதா" என்பது.

நித்திய பிதா என்றால் *Everlasting Father* என்று உள்ளது. இதில் *Everlasting* என்பது *Noun* (பெயர்ச் சொல்) உள்ளது. *Everlasting, Eternity* என்பதெல்லாம் ஒரே அர்த்தத்தில் வருகிறது. இதன் பொருள் *"Endles Time"* "முடிவற்ற காலம்" என்று பொருள். *Everlasting Father*- நித்திய பிதா என்றால் முடிவற்ற காலத்திற்கு தந்தை, முடிவற்ற காலத்திற்கு கர்த்தர்என்று பொருள். இதை இன்னும் கொஞ்சம் புரிந்துக் கொள்ளலாம். எபி.1:2ஐ ஆங்கிலத்திலும் வாசிப்போம். பிதாவாகிய தேவன் வார்த்தையாகிய குமாரனைக் கொண்டு "உலகங்களை உண்டாக்கினார்" *(By whom also He made the world)* என்று உள்ளது. இங்கே *"World"* உலகம் என்பதற்கு மூலபாஷையில் *Aion* என்று உள்ளது. இதன் பொருள் 'யுகங்கள்" "காலங்கள்" *(Ages, period of time course)* என்பதாகும். இந்த அர்த்தத்தில் பார்த்தால்

குமாரனாகிய தேவன். யுகங்களையும் (காலங்களையும்) திட்டமிட்டு உருவாக்கி, மனிதனுக்காக தேவ திட்டத்தை செயல்படுத்தினார் என்பதாகும். அதாவது இன்னின்ன காலங்களில் இன்னின்னவை சம்பவிக்க ஏற்படுத்திய செயற்பாடாகும். சம்பவங்கள், நிகழ்வுகள் மாறும்: முடிவுறும், ஆனால், இவர் ஏற்படுத்திய காலங்கள் முடிவற்றவை. நித்தியமானவை. இவர் காலங்களை மாத்திரம் திட்டமிடாமல் எல்லா சிருஷ்டிகளையும் உருவாக்க திட்டமிட்டு செயல்படுத்தியிருக்கிறார் (கொலோ.1:15-18; யோ.1:3. எபே.3:9) இந்த கண்ணோட்டத்தில் இவர் முடிவற்ற காலங்களின் தந்தையாக, கர்த்தராக இருக்கிறார் என்று அறிகிறோம். இதைத்தான் Everlasting Father - நித்திய பிதா என்று ஆங்கிலத்திலும், தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மற்றப்படி பிதாவாகிய தேவன் ஆள்தத்துவத்தில் ஒருவராய் இருக்கிறார். இவர்தான் இயேசுவை பூமிக்கு அனுப்பினவரும், மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தவரும், மரணத்தினின்று உயிர்த்தெழ செய்தவருமானவர். எனவே, இயேசு பிதாவாகிய தேவனால். அல்லேலூயா!

Father is He who brings forth salvation.

Son is He who arranges or executes salvation which the Father brings forth.

Holy Sirit is He who applies to the people, the salvation which was provided by the Father through the Son.

மேலும் ஏசா.9:6ல் சொல்லப்பட்ட குமாரனின் அத்தனை நாமங்களும் பிதாவிற்கு பொருந்தும். ஏனெனில் பிதாவும். குமாரனும் பரிசுத்த ஆவியானவரும் ஒரே மகிமை, மாட்சிமை, மகத்துவம், வல்லமை. குணதிசயம் உள்ளவர்கள். மூவருக்குள் உயர்வு தாழ்வே

இல்லை. மூவரும் சமமாயும் ஒன்றாயும் இருக்கிறார்கள். (திரித்துவம் - Trinity) யோ.21:5; 12:36; லூக் 16:8 போன்ற வசனங்களை பார்க்கும் பொழுது, இயேசு, அப்பா ஸ்தானத்திலும் இருக்கிறார் என்று அறியலாம். ஆக பிதாவைப் போல இவரும் அப்பா தன்மை உள்ளவர் என்றும் எடுத்துக் கொள்ளலாம். தவறில்லை. இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! இயேசுவாய் வந்தவர் பிதா அல்ல என்றும் "நித்திய பிதா" என்பதற்கு "முடிவுற்ற காலங்களின். யுகங்களின் தந்தை, கர்த்தர்" எனப்பொருள் என்றும் உணர்கிறோம். ஆமென்.

22. இயேசு கிறிஸ்துவின் வெவ்வேறு பெயர்கள் மற்றும் தலைப்புகள் யாவை?

வேதாகமத்தில் கிறிஸ்துவின் 200 பெயர்கள் மற்றும் தலைப்புகள் உள்ளன. கிறிஸ்துவின் தன்மை, தேவனுடைய திரியேக-ஒற்றுமையில் அவரது நிலை மற்றும் நம் சார்பாக பூமியில் அவரது கிரியை ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் பெயர்கள் தொடர்பான மூன்று பிரிவுகளில் ஒழுங்குபடுத்தப்பட்ட சில முக்கியமானவை பின்வருமாறு.

கிறிஸ்துவின் தன்மை

மூளைக்குத் தலைக்கல்: (எபேசியர் 2:20) - இயேசு அவருடைய திருச்சபையின் மூலக்கல்லாக இருக்கிறார். அவர் யூத மற்றும் புறஜாதியார், ஆண்கள் மற்றும் பெண்கள் என அனைத்து வயதினரிடமிருந்தும் எல்லா இடங்களிலிருந்தும் உள்ள பரிசுத்தவான்கள் அனைவரும் அவரின் பேரில் உள்ள விசுவாசத்தின் அடிப்படையில் கட்டப்பட்ட ஒரு கட்டமைப்பாக அமைகிறார்கள்.

சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்: (கொலோசெயர் 1:15) - சிலர் தவறாக எண்ணுவதுபோல தேவன் முதலில் சிருஷ்டித்தது கிறிஸ்துவை அல்ல, ஏனென்றால் வசனம் 16 கூறுகிறது, ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.

சபையின் தலையாயிருக்கிறார்: (எபேசியர் 1:22; 4:15; 5:23) - இயேசு கிறிஸ்து, ஒரு ராஜா அல்லது போப் அல்ல, சபையின் ஒரே உயர்ந்த, ராஜ்யபாரம் கொண்ட ஆளுகைச் செய்கிறவர்- அவர்களுக்காக அவர் மரித்து மற்றும் அவரில் விசுவாசம் வைக்கிறவர்களுக்கு இரட்சிப்பு அருளுகிறவர்.

பரிசுத்தவான்: (அப்போஸ்தலர் 3:14; சங்கீதம் 16:10) - கிறிஸ்து பரிசுத்தமானவர், அவருடைய தெய்வீக மற்றும் மனிதத் தன்மையிலும், அவருடைய மக்களுக்கு பரிசுத்த நீரூற்று. அவருடைய மரணத்தால், நாம் தேவனுக்கு முன்பாக பரிசுத்தமாகவும் தூய்மையாகவும் ஆக்கப்பட்டோம்.

நியாயாதிபதி: (அப்போஸ்தலர் 10:42; 2 தீமோத்தேயு 4:8) - உலகத்தை நியாயந்தீர்க்கவும் நித்தியத்தின் வெகுமதிகளை வழங்குவதற்காகவும் பிதாவாகிய தேவன் இயேசுவை நியமித்தார்.

ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமானவர்: (1 தீமோத்தேயு 6:15; வெளிப்படுத்துதல் 19:16) - பூமியில் உள்ள அனைத்து அதிகாரங்களின் மீதும், அனைத்து ராஜாக்கள் மற்றும் ஆளுகிறவர்கள் மீதும் இயேசுவுக்கு சர்வ அதிகாரம் உள்ளது, மேலும் அவருடைய நோக்கங்களை நிறைவேற்றுவதை யாரும் தடுக்க முடியாது. அவர் விரும்பியபடி அவர்களை வழிநடத்துகிறார்.

உலகத்தின் வெளிச்சம்: (யோவான் 8:12) - இயேசு பாவத்தால் இருண்ட ஒரு உலகத்திற்கு வந்தார் மற்றும் அவருடைய கிரியை மற்றும் அவரது வார்த்தைகள் மூலம் ஜீவன் மற்றும் சத்தியத்தின் ஒளியை ஊற்றினார். அவரை நம்புகிறவர்கள் அவரால் தங்கள் கண்கள் திறக்கப்பட்டு வெளிச்சத்தில் நடக்கிறார்கள்.

சமாதான பிரபு: (ஏசாயா 9:6) - இயேசு இப்பூமிக்கு வந்தது, யுத்தம் இல்லாத உலகிற்கு அமைதியைக் கொண்டுவருவதற்காக அல்ல, ஆனால் தேவனிடத்திலிருந்து பாவத்தால் பிரிக்கப்பட்ட மனிதனுக்கும் தேவனுக்கும் இடையில் சமாதானத்தை உண்டுபண்ணும்படி வந்தார். பாவிகளை பரிசுத்தமான தேவனுடன் ஒப்புரவாக்குவதற்காக அவர் மரித்தார்.

தேவனுடைய குமாரன்: (லூக்கா 1:35; யோவான் 1:49) - இயேசு "பிதாவின் ஒரேபேறானவர்" (யோவான் 1:14). புதிய ஏற்பாட்டில் 42 முறை பயன்படுத்தப்பட்ட, "தேவனுடைய குமாரன்" என்பது கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை உறுதிப்படுத்துகிறது.

மனுஷகுமாரன்: (யோவான் 5:27) - "மனுஷகுமாரன்" என்பதற்கு மாறாக இந்த சொற்றொடர் கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையுடன் இருக்கும் மனிதத்தன்மையை உறுதிப்படுத்துகிறது.

வார்த்தை: (யோவான் 1:1; 1 யோவான் 5:7-8) - இந்த வார்த்தை திரியேக தேவனில் உள்ள இரண்டாவது நபரைக் குறிக்கிறது, அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும், முதல் சிருஷ்டிப்பில் ஒன்றுமில்லாமையில் எல்லாவற்றையும் வார்த்தையினாலே சிருஷ்டித்தார், இவர் ஆதியில் பிதாவாகிய தேவனோடு இருந்தார், மற்றும் தேவனாக இருந்தார், மற்றும் அவரால் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது.

தேவனுடைய வார்த்தை: (வெளிப்படுத்துதல் 19:12-13) - இது கிறிஸ்துவைத் தவிர மற்ற அனைவருக்கும் தெரியாத ஒரு பெயர் ஆகும். இது அவரது தெய்வீக ஆள்தன்மையின் இரகசியத்தைக் குறிக்கிறது.

ஜீவவார்த்தை: (1 யோவான் 1:1) - இயேசு நித்திய ஜீவனுக்கு வழிநடத்தும் வார்த்தைகளை மட்டும் பேசவில்லை, ஆனால் இந்த வசனத்தின்படி அவர் ஜீவவார்த்தைகளாக இருக்கிறார், இது அவர்

அளிக்கும் நித்திய ஜீவனின் சந்தோஷம் மற்றும் நிறைவேறுதலைக் குறிக்கிறது.

திரித்துவத்தில் அவரது ஸ்தானம்

அல்பாவும் ஓமெகாவுமானவர்: (வெளிப்படுத்துதல் 1:8; 22:13) - இயேசு தன்னை எல்லாவற்றுக்கும் ஆதியும் அந்தமும் என்று அறிவித்தார், இது மெய்யான தேவனைத் தவிர வேறு யாரையும் குறிக்கவில்லை. நித்தியத்தின் இந்த கூற்றானது தேவனுக்கு மட்டுமே பொருந்தும்.

இம்மானுவேல்: (ஏசாயா 9:6; மத்தேயு 1:23) - எழுத்தியல் பூர்வமாக "தேவன் நம்மோடு" என்று அர்த்தமாகும். ஏசாயா மற்றும் மத்தேயு இரு வேதப்பகுதிகளும் பெத்லகேமில் பிறக்கும் கிறிஸ்து தேவனாக இருப்பார் என்றும், அவர் தமது மக்களிடையே வாழும்படிக்கு ஒரு மனிதனின் சாயலில் பூமிக்கு வருவார் என்றும் உரைக்கின்றன.

நான் இருக்கிறேன்: (யோவான் 8:58, யாத்திராகமம் 3:14) - இயேசு இந்த தலைப்பை தனக்குத்தானே சூட்டிக்கொண்டபோது, யூதர்கள் தேவதூஷணம் எனக்கூறி அவரை கல்லால் அடிக்க முயன்றனர். அவர் தன்னை நித்திய தேவன், பழைய ஏற்பாட்டின் மாறாத யேகோவா என்று அறிவிக்கிறார் என்பதை அவர்கள் புரிந்து கொண்டனர்.

எல்லாருக்கும் கர்த்தர்: (அப்போஸ்தலர் 10:36) - இயேசு உலகம் முழுவதையும், உலகிலுள்ள அனைத்து தேசங்களையும், குறிப்பாக தேவன் தெரிந்துகொண்ட மக்களையும், புறஜாதிகளையும், மற்றும் யூதர்களையும் ஆளுகிறவர்.

மெய்யான தேவன்: (1 யோவான் 5:20) - இது இயேசு, மெய்யான தேவன் என்பதற்கான நேரடி வலியுறுத்தல் ஆகும், அதாவது தெய்வீகமானவர் என்பது மட்டுமல்ல, அவரே தெய்வீகமானவர்

என்பதற்கான நேரடி கூற்று ஆகும். ஒரே ஒரு தேவன் மட்டுமே இருப்பதாக வேதாகமம் கற்பிப்பதால், இது அவருடைய தன்மையை திரியேக தேவனின் பகுதியாக மட்டுமே விவரிக்க முடியும்.

பூமியின்மேல் அவரது கிரியை

நம்முடைய விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமானவர்: (எபிரேயர் 12:2) - இரட்சிப்பு தேவனுடைய ஈவு என்று விசுவாசத்தின் மூலம் நிறைவேற்றப்படுகிறது (எபேசியர் 2:8-9), மேலும் இயேசு நம் விசுவாசத்தின் ஸ்தாபகர் மற்றும் அதை முடித்து வைப்பவர் ஆவார். ஆதி முதல் அந்தம் வரை, அவர் நம்மைக் காப்பாற்றும் விசுவாசத்தின் ஆதாரம் மற்றும் நங்கூரமாக இருக்கிறார்.

ஜீவ அப்பம்: (யோவான் 6:35; 6:48) - அப்பமானது சரீர ரீதியான அர்த்தத்தில் சரீர வாழ்வை நிலைநிறுத்துவது போல், இயேசு நித்திய ஜீவனைக் கொடுக்கும் மற்றும் பராமரிக்கும் அப்பமாக இருக்கிறார். தேவன் தமது மக்களுக்கு உணவளிக்க வனாந்தரத்தில் மன்னாவை வழங்கினார், மேலும் நமக்காக தகர்க்கப்பட்ட அவருடைய சரீரத்தின் மூலம் நமக்கு நித்திய ஜீவனைக் கொடுக்க அவர் ஜீவ அப்பமாகிய இயேசுவை வழங்கினார்.

மணவாளன்: (மத்தேயு 9:15) - கிறிஸ்துவை மணவாளனாகவும், சபையானது அவரது மணவாட்டியாகவும் இருப்பது அவருடன் நமக்குள்ள சிறப்பு உறவை வெளிப்படுத்துகிறது. நாம் உடைக்க முடியாதபடி கிருபையின் புதிய உடன்படிக்கையில் ஒருவருக்கொருவர் பிணைக்கப்பட்டுள்ளோம்.

மீட்பர்: (ரோமர் 11:26) - இஸ்ரவேலர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க தேவன் தேவைப்பட்டது போலவே,

கிறிஸ்துவும் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுவிக்க நமது மீட்பராக இருக்கிறார்.

நல்ல மேய்ப்பன்: (யோவான் 10:11,14) - *வேதாகம காலங்களில், ஒரு நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளை வேட்டையாடுபவர்களிடமிருந்து பாதுகாக்க தன் உயிரைப் பணயம் வைக்கத் தயாராக இருந்தான். இயேசு தனது ஆடுகளுக்காக தனது உயிரைக் கொடுத்தார், மேலும் அவர் நம்மை கவனித்து பராமரித்து, உணவளிக்கிறார்.*

பிரதான ஆசாரியர்: (எபிரேயர் 2:17) - *யூதர்களின் பிரதான ஆசாரியன் வருடத்திற்கு ஒரு முறை மக்களின் பாவங்களுக்கு பரிகாரம் செய்ய தேவாலயத்துக்குள் நுழைந்தான். ஆண்டவர் இயேசு சிலுவையில் ஒருமுறை தனது மக்களுக்காக அந்தச் செயல்பாட்டைச் செய்தார்.*

தேவ ஆட்டுக்குட்டி: (யோவான் 1:29) - *பாவத்திற்கான பரிகாரமாக ஒரு குற்றமில்லாத, மாசற்ற ஆட்டுக்குட்டியை பலியிட தேவனுடைய நியாயப்பிரமாணம் அழைப்பு விடுத்தது. ஆட்டுக்குட்டி சாந்தமாக கொலையுண்ணப்படுவதற்காக கொண்டுப்போகப்பட்டது போல இயேசு ஆனார், அவருடைய பாடுகளின் பொறுமை மற்றும் அவருடையவர்களுக்காக மரிக்க தயாராக இருந்தார்.*

மத்தியஸ்தர்: (1 தீமோத்தேயு 2:5) - *ஒரு மத்தியஸ்தர் இரண்டு தரத்தார்களுக்கு இடையே அவர்களை பரிந்துபேச செல்கிறார். கிறிஸ்து மனிதர்களையும் தேவனையும் பரிந்துபேசம் ஒரே ஒரு மத்தியஸ்தர் ஆவார். மரியாள் அல்லது புனிதர்களிடம் பிரார்த்தனை செய்வது விக்கிரக ஆராதனையாகும், ஏனெனில் இது கிறிஸ்துவின் மிக முக்கியமான பாத்திரத்தை புறக்கணிக்கிறது மற்றும் மத்தியஸ்தரின் பங்கை மற்றொருவருக்குக் கொடுக்கிறது.*

கன்மலை: (1 கொரிந்தியர் 10:4) - *வனாந்தரத்தில் மோசேயினால் அடிக்கப்பட்ட கன்மலையிலிருந்து ஜீவனைக் கொடுக்கும் நீர்*

பாய்கையில், இயேசு நித்திய ஜீவனின் ஜீவத் தண்ணீரைப் பாயும் கன்மலையாக இருக்கிறார். எந்தப் புயலும் அவைகளை அசைக்காதபடி, நம் ஆவிக்குரிய வீடுகளை நாம் கட்டும் கன்மலை அவரே.

உயிர்த்தெழுதலும் ஜீவனுமானவர்: (யோவான் 11:25) - *இயேசு கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தது போலவே, பாவிகளை நித்திய ஜீவனுக்கு உயிர்ப்பிப்பதற்கான வழிமுறையாக இயேசுவில் அடக்கம்பண்ணப்பட்டுள்ள நம்முடைய பாவம் அவருடன் அடக்கம்பண்ணப்பட்டு, புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு உயிர்த்தெழுப்பப்படுகிறோம்.*

இரட்சகர்: (மத்தேயு 1:21; லூக்கா 2:11) - *அவர் தம் மக்களை மீட்பதில் மரிப்பதன் மூலம், அவருடைய வல்லமையால் புதுப்பிக்க பரிசுத்த ஆவியைக் கொடுப்பதன் மூலம், அவர்களின் ஆவிக்குரிய சத்துருக்களை வெற்றி கொள்ளச் செய்வதன் மூலம், சோதனைகளில் அவர்களைத் தக்கவைப்பதன் மூலம் காப்பாற்றுகிறார் மற்றும் மரணத்தில், மற்றும் கடைசி நாளில் அவர்களை எழுப்புவதன் மூலமும் இரட்சகராக இருக்கிறார்.*

மெய்யான திராட்சச்செடி: (யோவான் 15:1) - *மெய்யான திராட்சச்செடியானது கிளைகளுக்கு (விசுவாசிகளுக்கு) ஆவியின் கனியை உற்பத்தி செய்ய வேண்டிய அனைத்தையும் வழங்குகிறது - இரட்சிப்பின் ஜீவத் தண்ணீர் மற்றும் வார்த்தையிலிருந்து ஊட்டச்சத்து அளிக்கிறது.*

வழியும் சத்தியமும் ஜீவனுமானவர்: (யோவான் 14:6) - *தேவனிடத்திற்கு செல்லுவதற்கு ஒரே வழி இயேசு மட்டுந்தான், பொய்களின் உலகில் ஒரே சத்தியம், நித்திய ஜீவனின் ஒரே மெய்யான ஆதாரம் அவரே. அவர் முன்றையும் தற்காலிக மற்றும் நித்திய அர்த்தத்தில் உள்ளடக்குகிறார்.*

23. மத்தேயுவிலும் லூக்காவிலும் இயேசுவின் வம்சவரலாறுகள் ஏன் மிகவும் வித்தியாசமானதாக இருக்கிறது?

இயேசுவின் வம்சாவளி அல்லது வம்சவரலாறு வேதாகமத்தில் இரண்டு இடங்களில் கொடுக்கப்பட்டுள்ளது: மத்தேயு 1 மற்றும் லூக்கா 3:23-38. மத்தேயு வம்சாவளியை ஆபிரகாமிலிருந்து இயேசு வரையிலும் குறிப்பிடுகிறார். லூக்கா வம்சாவளியை இயேசுவிலிருந்து ஆதாம் வரையிலும் குறிப்பிடுகிறார். இருப்பினும், மத்தேயு மற்றும் லூக்கா ஆகியோர் வேறுபட்ட இரு வம்சாவளிகளைக் கொண்டு வருவதற்கு மெய்யாகவே நல்ல காரணம் இருக்கிறது. உதாரணமாக, மத்தேயு யாக்கோபுவை யோசேப்பின் தகப்பனாக குறிப்பிடுகிறார் (மத்தேயு 1:16), அதே சமயத்தில் லூக்கா ஏலியை யோசேப்பின் தகப்பனாக குறிப்பிடுகிறார் (லூக்கா 3:23). மத்தேயு தாவீதின் குமாரனாகிய சாலமோனின் வழியாக வம்சாவளியைக் கொண்டுவருகிறார் (மத்தேயு 1:6), லூக்கா தாவீதின் குமாரனாகிய நாத்தான் வழியாக வம்சாவளியைக் கொண்டுவருகிறார் (லூக்கா 3:31). உண்மையில், தாவீது மற்றும் இயேசுவிற்கு இடையே, வம்சாவளியில் பொதுவாக காணப்படுகின்ற பெயர்கள் சொரொபாபேல் மற்றும் சலாத்தியேல் ஆகியோர்கள் மட்டுமே (மத்தேயு 1:12; லூக்கா 3:27).

வேதாகமத்தில் பிழைகள் இருப்பதாக கூறுபவர்களில் சிலர் ஆதாரங்களாக இந்த வித்தியாசங்களைச் சுட்டிக்காட்டுகின்றனர். எனினும், யூதர்கள் மிகவும் கவனமாக பதிவு செய்து வைப்பவர்களாக இருந்தனர், குறிப்பாக வம்சாவளியைப் பொறுத்தவரை அவர்கள் எவ்வித கவனக்குறைவும் பிழையுமின்றி கவனமாக குறிப்பிட்டு காத்து வந்தனர். மத்தேயுவும் லூக்காவும் ஒரே வம்சத்தின் இரண்டு முரண்பாடான வம்சாவளியினரைக் கொண்டு வருகின்றனர் என்பது

ஜீரணிக்கமுடியாத ஒரு காரியமாக இருக்கிறது. மீண்டும், தாவீதிலிருந்து இயேசு வரையிலுள்ள வம்சவரலாறுகள் முற்றிலும் வேறுபட்டவை ஆகும். வம்சாவளியில் பொதுவாக காணப்படுகின்ற பெயர்கள் சொரொபாபேல் மற்றும் சலாத்தியேல் ஆகியோர்கள் கூட அதே பெயர்களில் வேறுபட்ட நபர்களைக் குறிக்கலாம். எகோனியாவை சலாத்தியேல் தகப்பனாக மத்தேயு குறிப்பிடுகிறார், ஆனால் லூக்கா நேரியை சலாத்தியேல் தகப்பனாக குறிப்பிடுகிறார். சலாத்தியேல் மற்றும் சொரொபாபேல் போன்ற பெயருடைய பிரபலமான நபர்களின் பெயரில் அவரது மகன் செருபாபேலைப் பெயரிடுவதென்பது (எஸ்ரா, நெகேமியா புத்தகங்களைப் பார்க்கவும்) ஒரு மனிதனுக்கு சாதாரணமாக இருக்கும்.

திருச்சபையின் வரலாற்றாசிரியரான யூசீபியஸால் கொடுக்கப்பட்டுள்ள ஒரு விளக்கம் என்னவெனில், மத்தேயு முதன்மையான அல்லது உயிரியல் வினைமுறை சார்ந்த பரம்பரையைக் கொண்டுவருகிறபோது, லூக்கா "சகோதரனின் விதவையை மணம் புரியும் வழக்கம்" நிகழ்வைக் கணக்கில் எடுத்துக்கொள்கிறார். ஒரு மனிதன் தனக்கு ஒரு குமாரனும் இல்லாமல் இறந்துவிட்டால், அந்த மனிதனின் சகோதரன் விதவையையாகிய தனது சகோதரனின் மனைவியை மணந்துகொண்டு இறந்துபோன சகோதரனுக்கு ஒரு மகனைப் பெற்று அவனது சந்ததியை நிலைநாட்டுவார். யூசீபியஸினுடைய கோட்பாட்டின் படி, மெல்கி (லூக்கா 3:24) மற்றும் மாத்தான் (மத்தேயு 1:15) ஆகிய இருவரும் வெவ்வேறு சமயங்களில் ஒரே பெண்ணை திருமணம் செய்து கொண்டனர் (பாரம்பரியமாக அவளுடைய பெயர் எஸ்தா என்று நம்பப்படுகிறது). இது ஏலி (லூக்கா 3:23) மற்றும் யாக்கோபு (மத்தேயு 1:15) ஆகிய இருவரும் ஒன்றுவிட்ட உடன்பிறந்த சகோதரர்களாக இருப்பதைக் காண்பிக்கிறது. ஏலி தனக்கு ஒரு குமாரன் இல்லாமல் இறந்துவிட்டார், எனவே அவருடைய (ஒன்றுவிட்ட உடன்பிறந்த) சகோதரர் யாக்கோபு ஏலியின் விதவையை மணந்து யோசேப்பை

பெற்றெடுத்தார். ஆக, யோசேப்பு யாக்கோபினுடைய குமாரன் என்கிறபோதிலும், இது யோசேப்பு "ஏலியின் குமாரன்" என்று சட்டபூர்வமாகவும், "யாக்கோபின் குமாரன்" என்று உயிரியல் வினைமுறை சார்ந்த ரீதியாகவும் இருக்கும்படி செய்தது. எனவே, மத்தேயு மற்றும் லூக்கா இருவருமே ஒரே வம்சாவளியை (யோசேப்பின்) பதிவு செய்கிறார்கள், ஆனால் மத்தேயு உயிரியல் வினைமுறை சார்ந்த நிலையை பின்பற்றுகிறார், லூக்கா சட்டப்பூர்வமான வழிமுறையை பின்பற்றுகிறார்.

மிகவும் பழமைவாத வேதாகம அறிஞர்கள் இன்று ஒரு வித்தியாசமான பார்வையைக் கொண்டிருக்கிறார்கள், அதாவது லூக்கா மரியாளின் வம்சாவளியைப் பதிவுசெய்கிறார், மத்தேயு யோசேப்பின் வம்சாவளியைப் பதிவு செய்கிறார் என்பதாகும். தாவீதின் குமாரனாகிய நாத்தானின் வழியாக லூக்கா மரியாளின் (இயேசுவின் இரத்த உறவினர்) வழியை பின்பற்றுகிறார், ஆனால் மத்தேயு தாவீதின் குமாரனாகிய சாலொமோனின் வழியாக யோசேப்பின் (இயேசு சட்டப்பூர்வ தந்தை) வழியைப் பின்பற்றுகிறார். "மருமகன்" என்கிற கிரேக்க வார்த்தை இல்லை என்பதால், ஏலியின் மகளாகிய மரியாளை மணந்ததால், யோசேப்பு "ஏலியின் குமாரன்" என அழைக்கப்படுகிறார். மரியாள் அல்லது யோசேப்பின் வழியாக, இயேசு தாவீதின் சந்ததியாக இருக்கிறார், எனவே மேசியாவாக இருப்பதற்கு இயேசு பரிபூரணமாய் தகுதியுடையவர் ஆகிறார். தாயின் வழியில் ஒரு வம்சாவளியை கண்டுபிடித்தல் அசாதாரணமானது, இருப்பினும் மரியாளின் கன்னி பிறப்பு அப்படியாகும்படி செய்தது. லூக்காவின் விளக்கம் என்னவென்றால், "இயேசு யோசேப்பின் குமாரனென்று எண்ணப்பட்டார்" (லூக்கா 3:23).

24. இயேசு ஒரு கட்டுக்கதையா? இயேசு மற்ற பண்டைய புற மதங்களிலிருந்த கடவுள்களின் நகலா?

புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்ட இயேசுவைக் குறித்த விவரங்கள் ஓசிரிஸ், டியோனிசஸ், அடோனிஸ், ஆட்டிஸ் மற்றும் மித்ராஸ் போன்ற புறச்சமயக் கதைகளிலிருந்து பெறப்பட்ட கட்டுக்கதைகள் என்று பலர் கூறுகின்றனர். கூற்று என்னவென்றால், இந்த கட்டுக்கதைகள் நாசரேத்தின் இயேசு கிறிஸ்துவினுடைய புதிய ஏற்பாட்டின் அதே கதையாகும். டான் பிரவுன் தி டா வின்சி கோட் இல் கூறுவது போல், "கிறிஸ்தவத்தில் எதுவும் அசல் இல்லை."

நற்செய்தி எழுத்தாளர்கள் கட்டுக்கதைகளிலிருந்து தழுவி எழுதியதாக கூறப்படுவது பற்றிய உண்மையைக் கண்டறிய, (1) அந்த வலியுறுத்தல்களுக்குப் பின்னால் உள்ள வரலாற்றைக் கண்டறிவது முக்கியம், (2) கிறிஸ்துவுடன் ஒப்பிடப்படும் பொய் கடவுள்களின் உண்மையான சித்தரிப்புகளை ஆராய வேண்டும், (3) தர்க்கரீதியான மூட நம்பிக்கைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை வெளிக்கொணர வேண்டும், மேலும் (4) ஏன் புதிய ஏற்பாட்டு நற்செய்தி நூல்கள் உண்மையான மற்றும் வரலாற்று இயேசு கிறிஸ்துவின் நம்பகமான விவரங்கள் என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

இயேசு ஒரு கட்டுக்கதை அல்லது மிகைப்படுத்தப்பட்ட ஒரு காவியம் என்ற கூற்று பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தாராளவாத ஜெர்மன் இறையியலாளர்களின் எழுத்துக்களில் உருவானது ஆகும். அதாவது இயேசு, மெசொப்பொத்தாமியாவில் தம்முஸ், சிரியாவில் அடோனிஸ், ஆசியா மைனரில் ஆட்டிஸ் மற்றும் எகிப்தில் ஹோரஸ் ஆகிய பல்வேறு இடங்களில் மிகவும் பிரபலமான கருவுறுதல் கடவுள்களின் மரித்து மற்றும் மீண்டும் உயிர்த்து வரும்

நகலைத் தவிர வேறில்லை என்று அவர்கள் கூறினர். இந்த கோட்பாடுகள் மற்றும் கருத்துக்கள் அடங்கிய புத்தகங்கள் எதுவும் அன்றைய நாட்களில் உண்டாயிருந்த கல்வியாளர்களால் பெரிதாக எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. உதாரணமாக, இயேசு மறுசுழற்சி செய்யப்பட்ட தம்முஸ் என்ற கடவுள் என்னும் கூற்று சமகால அறிஞர்களால் ஆராயப்பட்டு அது முற்றிலும் ஆதாரமற்றது என தீர்மானிக்கப்பட்டது. நாம் வாழ்கிற இந்நாட்களில் சமீபத்தில் தான் இணையத்தில் இன்று கணக்கிட முடியாத அளவிற்கு எண்ணற்ற தகவல்களை பெருமளவில் மலிந்து கிடப்பதால், இப்படிப்பட்ட கருத்துக்கள் மற்றும் வலியுறுத்தல்கள் மீண்டும் உயிர் பெற ஆரம்பித்தன.

இது நம்மை அடுத்த ஆய்வுக்கு இட்டுச் செல்கிறது அதாவது பழங்கால புராண கடவுள்கள் உண்மையிலே இயேசு கிறிஸ்து என்னும் நபரை பிரதிபலிக்கிறதா? உதாரணமாக, செய்ட்கெய்ஸ்ட் (Zeitgeist) என்னும் திரைப்படம் எகிப்திய கடவுள் ஹோரஸைப் பற்றிய இந்தக் கூற்றுகளை மொழிகின்றது:

- அவர் டிசம்பர் 25-ஆம் நாள் ஒரு கன்னிகைக்குப் பிறந்தார்: இசிஸ் மரியாள்
- கிழக்கில் ஒரு நட்சத்திரம் அவரது வருகையை அறிவித்தது
- புதிதாகப் பிறந்த "இரட்சகரை" வணங்க மூன்று அரசர்கள் வந்தனர்
- அவர் 12-வது வயதில் ஒரு குழந்தை ஆசிரியரானார்
- அவர் தனது 30 வயதில் "ஞானஸ்நானம்" பெற்றார் மற்றும் ஒரு "ஊழியத்தை" தொடங்கினார்
- ஹோரஸ் பன்னிரண்டு "சீடர்களை" கொண்டிருந்தார்

- ஹோரஸ் காட்டிக் கொடுக்கப்பட்டார்
- அவர் சிலுவையில் அறையப்பட்டார்
- அவர் மூன்று நாட்கள் அடக்கம் பண்ணப்பட்டார்
- மூன்று நாட்களுக்குப் பிறகு அவர் உயிரோடு எழுப்பப்பட்டார்

இருப்பினும், ஹோரஸைப் பற்றிய உண்மையான எழுத்துக்கள் உன்னிப்பாக ஆராயப்படும்போது, அவற்றில் இதைத்தான் நாம் காண்கிறோம்:

- ஹோரஸ் இசிஸுக்குப் பிறந்தார்; அவருடைய தாயார் "மரியாள்" என்று அழைக்கப்பட்டதாக வரலாற்றில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. மேலும், "மரியாள்" என்பது அவரது உண்மையான பெயரான மிரியம் அல்லது மிரியத்தின் ஆங்கிலமயமாக்கப்பட்ட வடிவம் ஆகும். வேதாகமத்தின் அசல் நூல்களில் கூட "மரியாள்" பயன்படுத்தப்படவில்லை.

- இசிஸ் ஒரு கன்னிகை அல்ல; அவள் ஓசிரிஸின் விதவை மற்றும் ஓசிரிஸுடன் ஹோரஸைப் பெற்றாள்.

- ஹோரஸ் பிறந்தது கோயாக் என்னும் மாதத்தில் (அதாவது அக்டோபர் அல்லது நவம்பர் மாதம்), டிசம்பர் 25-ஆம் தேதி அல்ல. மேலும், கிறிஸ்துவின் உண்மையான பிறந்த தேதி குறித்து வேதாகமத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

- ஹோரஸின் பிறப்பில் மூன்று அரசர்கள் சென்றதாக எந்த பதிவும் இல்லை. கிறிஸ்துவைப் பார்க்க வந்தவர்கள் அரசர்கள் அல்ல மாறாக சாஸ்திரிகள், மேலும் அவர்களின் உண்மையான எண்ணிக்கையை வேதாகமம் ஒருபோதும் குறிப்பிடவில்லை.

- *ஹோரஸ் எந்த வகையிலும் "மீட்பர்" அல்ல; அவர் யாருக்காகவும் மரிக்கவில்லை.*

- *ஹோரஸ் 12-வது வயதில் ஆசிரியராக இருந்ததற்கான குறிப்புகள் எதுவும் இல்லை.*

- *ஹோரஸ் "ஞானஸ்நானம்" பெறவில்லை. நீர் சம்பந்தப்பட்ட நிகழ்வு ஒரேயொரு முறை ஹோரஸின் கதையில் வருகிறது அதாவது ஹோரஸ் துண்டு துண்டாக சிதறடிக்கப்பட்ட கதையில், இசிஸ் முதலை கடவுளிடம் ஹோரஸினை தண்ணீரிலிருந்து வெளியே எடுத்து வீசும்படி கோருகிறார்.*

- *ஹோரஸ் எந்த ஊழியமும் செய்யவில்லை அவருக்கென்று ஒரு "ஊழியம்" இல்லை.*

- *ஹோரஸுக்கு 12 சீடர்கள் இல்லை. ஹோரஸ் கணக்குகளின்படி, ஹோரஸ் அவரைப் பின்பற்றின நான்கு தேவதூதர்களை மட்டுமே கொண்டிருந்தார், மேலும் அவரைப் பின்பற்றின 16 மனித சீடர்கள் இருந்ததாக சில அறிகுறிகள் மற்றும் அவருடன் போரில் பங்கெடுத்த எண்ணிக்கை தெரியாத கருமான்கள் உள்ளனர்.*

- *ஹோரஸ் ஒரு சிநேகிதனால் காட்டிக் கொடுக்கப்பட்டதாக எந்த விவரமும் இல்லை.*

- *ஹோரஸ் சிலுவையில் அறையப்படவில்லை. ஹோரஸின் மரணத்தைப் பற்றி பல்வேறு கணக்குகள் உள்ளன, ஆனால் அவற்றில் எதுவுமே சிலுவையில் அறையப்படவில்லை.*

- *ஹோரஸ் மூன்று நாட்களுக்குப் புதைக்கப்பட்டதாக கணக்கு இல்லை.*

- ஹோரஸ் உயிர்த்தெழுப்பப்படவில்லை. அவர் உள்ளே சென்ற அதே உடலுடன் ஹோரஸ் கல்லறையிலிருந்து வெளியே வந்ததாக எந்த விவரமும் இல்லை. சில குறிப்புகளில் ஹோரஸ்/ஒசிரிஸ் இசிஸால் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு, பின்னர் பாதாள உலகத்தின் அதிபதியாக மாறியதாக கூறப்படுகிறது.

இவ்விரண்டு விவரங்களையும் அருகருகே வைத்து ஒப்பிடும்போது, இயேசுவும் ஹோரஸும் ஒருவருக்கொருவர் சிறிய ஒற்றுமையைக் கொண்டுள்ளனர். மற்றபடி இயேசுவிற்கும் ஹோரஸுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை என்பது தெளிவாகிறது.

இயேசு கிறிஸ்துவை ஒரு கட்டுக்கதை என்று கூறுபவர்கள் இயேசுவை மித்ராஸுடனும் ஒப்பிடுகின்றனர். ஹோரஸின் மேற்கண்ட விளக்கங்கள் அனைத்தும் மித்ராஸுக்கும் பயன்படுத்தப்படுகின்றன (எ.கா. கன்னிகைக்குப் பிறந்தவர், சிலுவையில் அறையப்படுதல், மூன்று நாட்களில் உயிர்த்தெழல் போன்றவை). ஆனால் மித்ராஸ் புராணம் உண்மையில் என்ன சொல்கிறது?

- அவர் ஒரு திடமான பாறையிலிருந்து பிறந்தார், எந்த பெண்ணிடமிருந்தும் அல்ல.

- அவர் முதலில் சூரியனுடனும் பின்னர் ஒரு பழமையான காளையுடனும் சண்டையிட்டார், இது படைப்பின் முதல் செயல் என்று கருதப்படுகிறது. மித்ராஸ் காளையைக் கொன்றார், பின்னர் அந்த காளை மனித இனத்தின் வாழ்வாதாரமான நிலமாக மாறியது.

- மித்ராஸின் பிறப்பு டிசம்பர் 25 அன்று குளிர்கால சங்கிராந்தி உடன் கொண்டாடப்பட்டது.

- அவர் ஒரு சிறந்த ஆசிரியர் என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை.

- மித்ராஸுக்கு 12 சீடர்கள் இருப்பதாக எங்கும் குறிப்பிடப்படவில்லை. மித்ராவுக்கு 12 சீடர்கள் இருந்தார்கள் என்கிற எண்ணம் ஒரு சுவரோவியத்திலிருந்து வந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது, அந்த ஓவியத்தில் மித்ராஸ் பன்னிரண்டு ராசிகளின் அடையாளங்களால் சூழப்பட்டுள்ளார்.

- மித்ராஸ் உடல் உயிர்த்தெழவில்லை. மாறாக, மித்ராஸ் தனது பூமிக்குரிய பணியை முடித்தபோது, அவர் உயிருடன் மற்றும் ஒரு தேரில் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஆரம்பகால கிறிஸ்தவ எழுத்தாளர் தெர்த்துல்லியன் மித்ராஸ் வழிபாட்டாளர்களின் மித்ராஸ் உயிர்த்தெழுதல் காட்சிகளை பற்றி எழுதினபோது, அவர் குறிப்பிட்டதாவது, இது புதிய ஏற்பாட்டு காலத்திற்குப் பிறகு நன்றாக நிகழ்ந்த ஒரு சம்பவம், எனவே ஏதேனும் நகல் எடுக்கப்பட்டு இருந்தால், அது கிறிஸ்தவத்தை தழுவி அதில் கூறப்பட்டவைகளில் இருந்து நகலெடுக்கும் மித்ராஸ் மதம் என்றார்.

கிருஷ்ணா, ஆட்டிஸ், டியோனிசஸ் மற்றும் பிற புராணக் கடவுள்களுக்கு இன்னும் பல எடுத்துக்காட்டுக்களைக் கொடுக்கலாம், ஆனால் முடிவு ஒன்றே. முடிவில், வேதாகமத்தில் சித்தரிக்கப்பட்ட வரலாற்று இயேசுவானவர் தனித்துவமானவர். புறச்சமய கட்டுக்கதைகளுக்கு இயேசுவின் ஜீவசரிதையின் ஒற்றுமைகள் வெறுமனே மிகைப்படுத்தப்பட்டவை ஆகும். மேலும், ஹோரஸ், மித்ராஸ் மற்றும் பிறரின் கதைகள் கிறிஸ்தவத்திற்கு முந்தியவை என்றாலும், அந்த மதங்களின் கிறிஸ்தவத்திற்கு முந்தைய நம்பிக்கைகளின் வரலாற்றுப் பதிவு மிகக் குறைவு ஆகும். இந்த மதங்களின் ஆரம்பகால எழுத்துக்களில் பெரும்பாலானவை கி.பி. மூன்றாம் மற்றும் நான்காம் நூற்றாண்டுகளில் இருந்து வந்தவையாகும். முன்பாக இந்த மதங்களின் கிறிஸ்தவ நம்பிக்கைகள் இருந்தது என்பதற்கு எந்த பதிவும் இல்லை, அவற்றிற்கு ஒத்ததாக இருந்தது கிறிஸ்தவ நம்பிக்கைகள் மிகவும் அப்பாவித்தனமாக உள்ளது. இயேசுவைப் பற்றிய கிறிஸ்தவ போதனைகளை நகலெடுக்கும்

மதங்களுக்கு இந்த மதங்களுக்கும் கிறிஸ்தவத்திற்கும் இடையிலான ஒற்றுமைகளைக் கூறுவது மிகவும் தர்க்கரீதியானது ஆகும்.

இது நம்மை அடுத்த ஆய்வு பகுதிக்கு இட்டுச் செல்கிறது: கிறித்துவம் புறச்சமய மர்ம மதங்களிலிருந்து தழுவப்பட்டு வந்ததாகக் கூறும் தர்க்கரீதியான தவறுகள். குறிப்பாக இரண்டு தவறுகளை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்: பொய்யான காரணத்தின் முட நம்பிக்கை மற்றும் தவறாக பயன்படுத்தப்படும் சொற்களஞ்சியம்.

ஒன்று மற்றொன்றை முந்தினால், முதல் விஷயம் இரண்டாவதை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்று சிலர் முடிவு செய்கிறார்கள். இது தவறான காரணத்தின் பிழையாகும். தினமும் காலையில் சூரிய உதயத்திற்கு முன்பு சேவல் கூவலாம், ஆனால் அதற்காக சேவல் கூவுவதால்தான் சூரியன் உதயமாகிறது என்று அர்த்தமல்ல. புராணக் கடவுள்களைப் பற்றிய கிறிஸ்தவத்திற்கு முந்தைய பதிவுகள் கிறிஸ்துவை சில நிலைகளில் ஒத்திருந்தாலும் (நமக்குத் தெரியும் அவைகள் அவ்வாறு ஒத்திருக்கவில்லை), நற்செய்தி எழுத்தாளர்கள் ஒரு தவறான இயேசுவை அவர்களாகவே கண்டுபிடித்தார்கள் என்று அர்த்தமல்ல. நாசா விண்வெளி விண்கலத் திட்டத்தை ஏற்படுத்தியது ஸ்டார் ட்ரெக் என்ற தொலைக்காட்சித் தொடர் தான் என்றுச் சொல்வதற்கு ஒத்ததாகும்.

ஒரு குறிப்பை நிரூபிக்க வேண்டும் என்பதற்காக வார்த்தைகள் மறுவரையறை செய்யப்படும்போது சொற்களஞ்சியத் தவறு உருவாகிறது. உதாரணமாக, செய்ட்கெய்ஸ்ட் (Zeitgeist) திரைப்படம் ஹோரஸ் "தனது ஊழியத்தைத் தொடங்கினார்" என்று கூறுகிறது, ஆனால் ஊழியம் என்னும் வார்த்தை மறுவரையறை செய்யப்பட்டுள்ளது. ஹோரஸுக்கு உண்மையில் "ஊழியம்" என்று எதுவும் இல்லை. அதாவது கிறிஸ்துவின் ஊழியத்தைப் போல எதுவும் இல்லை. மித்ராஸுக்கும் இயேசுவுக்கும் இடையில் ஒரு தொடர்பைக் கோருபவர்கள் மித்ராஸ் வழிபாட்டிற்கு வாய்ப்புகளைத் தொடங்கிய

"ஞானஸ்நானம்" பற்றி பேசுகிறார்கள், ஆனால் உண்மையில் அது என்ன? மித்ராஸ் ஆசாரியர்கள் குழிக்குள் துவக்கங்களை வைப்பார்கள், குழிக்கு மேல் ஒரு காளையை நிறுத்தி, காளையின் வயிற்றை அறுத்து, இரத்தம் மற்றும் முட்டுதலால் மூடுவார்கள். அத்தகைய நடைமுறை ஒருபோதும் கிறிஸ்தவ ஞானஸ்நானத்திற்கு ஒத்ததாக அல்லது ஒற்றுமையாக இல்லை - ஒரு நபர் தண்ணீருக்கு அடியில் சென்று (கிறிஸ்துவின் மரணத்தை அடையாளப்படுத்துகிறார்) பின்னர் தண்ணீரிலிருந்து திரும்பி வருகிறார் (கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறிக்கிறது). ஆனால் ஒரு புராண இயேசுவின் ஒற்றுமைகளை கூறுபவர்கள் ஏமாற்றுத்தனமாக அதே வார்த்தையை, "ஞானஸ்நானம்" என்று கூறி, இரண்டையும் இணைக்கும் நம்பிக்கையில் இரண்டு சடங்குகளையும் விவரிக்க பயன்படுத்துகின்றனர்.

இது புதிய ஏற்பாட்டின் உண்மைத்தன்மைக்கு நம்மை அழைத்துச் செல்கிறது. பண்டைய காலத்தின் வேறு எந்த எழுத்துக்களுக்கும் உள்ள அதன் வரலாற்று உண்மைத்தன்மைக்கு புதிய ஏற்பாட்டை விட அதிக ஆதாரம் இல்லை. புதிய ஏற்பாட்டில் அந்த காலத்தில் இருந்த வேறு எந்த ஆவணத்தையும் விட அதிகமான எழுத்தாளர்கள் (ஒன்பது), சிறந்த எழுத்தாளர்கள் மற்றும் முந்தைய எழுத்தாளர்கள் உள்ளனர். மேலும், இந்த எழுத்தாளர்கள் இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று கூறி தங்கள் மரணத்தை தழுவியதாக வரலாறு சாட்சியமளிக்கிறது. சிலர் உண்மை என்று நினைக்கும் பொய்க்காக மரிக்கலாம், ஆனால் பொய் என்று அறிந்தும் யாரும் அப்படி அறிந்த பொய்க்காக மரிக்க மாட்டார்கள். யோசித்துப் பாருங்கள், அப்போஸ்தலனாகிய பேதுருக்கு சம்பவித்தது போல, நீங்கள் சிலுவையில் அறையப்படுவதாக அச்சுறுத்தப்பட்டிருந்தால், உங்கள் உயிரைக் காப்பாற்ற நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் நீங்கள் தெரிந்தே சொன்ன ஒரு பொய்யை கைவிடுவதுதான், நீங்கள் என்ன செய்வீர்கள்?

கூடுதலாக, புராணம் ஒரு வரலாற்று கணக்கில் நுழைவதற்கு முன்பு குறைந்தது இரண்டு தலைமுறைகள் கடக்க வேண்டும் என்பதை வரலாறு காட்டுகிறது. ஏனென்றால், ஒரு நிகழ்வுக்கு நேரில் கண்ட சாட்சிகள் இருக்கும் வரை, பிழைகள் மறுக்கப்படலாம் மற்றும் புராண கட்டுக்கதைகளின் மிகைப்படுத்தப்பட்ட காரியங்களும் வெளிப்படும். புதிய ஏற்பாட்டின் அனைத்து நற்செய்திகளும் நேரில் கண்ட சாட்சிகளின் வாழ்நாளில் எழுதப்பட்டவை, சில பவுலின் நிருபங்கள் கி.பி. 50-க்கு முன்பே எழுதப்பட்டன. பவுல் தான் எழுதிய காரியங்களுக்கு தனது சாட்சியை சரிபார்க்க சமகாலத்தில் நேரில் கண்ட சாட்சிகளுக்கு நேரடியாக வேண்டுகோள் விடுக்கிறார் (1 கொரிந்தியர் 15:6).

புதிய ஏற்பாட்டில், முதல் நூற்றாண்டில், இயேசுவானவர் வேறு எந்த கடவுள்களுக்கும் பதிலாக தவறாக எடுத்துக்கொள்ளப்பட்டு தவறு இழைத்ததாக இல்லை என்பதை உறுதிப்படுத்துகிறது. அத்தேனே பட்டணத்தில் பவுல் பிரசங்கித்தபோது, அந்த நகரத்தின் தத்துவச் சிந்தனையாளர்கள், "அப்பொழுது எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர் அவனுடனே வாக்குவாதம்பண்ணினார்கள். சிலர்: இந்த வாயாடி என்ன பேசப்போகிறான் என்றார்கள். சிலர்: இவன் அந்நிய தேவதைகளை அறிவிக்கிறவனாகக் காண்கிறது என்றார்கள். அவன் இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தபடியினாலே அப்படிச் சொன்னார்கள். அவர்கள் அவனை மார்ஸ் மேடைக்கு அழைத்துக்கொண்டுபோய்: நீ சொல்லுகிற புதிதான உபதேசம் இன்னதென்று நாங்கள் அறியலாமா? நூதனமான காரியங்களை எங்கள் காதுகள் கேட்கப்பண்ணுகிறாய்; அவைகளின் கருத்து இன்னதென்று அறிய மனதாயிருக்கிறோம் என்றார்கள்" (அப். 17:18-20). இங்கே மிகத்தெளிவாக புரிந்துகொள்ளுகிற காரியம் என்னவெனில், பவுல் மற்ற கடவுள்களின் கதைகளை மறுபரிசீலனை செய்திருந்தால், அத்தேனே நகரத்தார் அவருடைய கோட்பாட்டை "புதிய" மற்றும் "நூதனமான" போதனை என்று குறிப்பிட்டிருக்க

மாட்டார்கள். முதல் நூற்றாண்டில் மரித்து பிறகு உயிரோடு எழுந்த கடவுள்கள் ஏராளமாக இருந்திருந்தால், ஏன், அப்போஸ்தலனாகிய பவுல் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று உபதேசித்தபோது, எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கருமான ஞானிகளில் ஏன் ஒருவரும் "ஆஹா, இது ஹோரஸ் மற்றும் மித்ராஸ் போல" உள்ளது என்று குறிப்பிடவில்லை?

முடிவாக, இயேசு புராணக் கடவுள்களின் நகல் என்கிற கூற்றானது, அதன் படைப்புகள் கல்வியாளர்களால் அன்றைய நாட்களில் தள்ளுபடி செய்யப்பட்ட ஆசிரியர்களால் கூறப்பட்டவையாகும், அவை அநேகம் தர்க்கரீதியான தவறுகளைக் கொண்டிருக்கின்றன, மேலும் புதிய ஏற்பாட்டு நற்செய்திகளுடன் ஒருபோதும் ஒப்பிட முடியாது, காரணம் புதிய ஏற்பாட்டுப் பிரதிகள் கிட்டத்தட்ட 2,000 வருட மிகச்சசியான தீவிர ஆய்வைத் தாங்கியுள்ளன. இயேசுவிற்கும் மற்ற கடவுள்களுக்கும் இடையே கூறப்படும் இணைகளின் அசல் புராணங்களை ஆராயும்போது அவை இல்லாமல் மறைந்துவிடும். இயேசு-ஒரு-கட்டுக்கதை என்னும் கோட்பாடானது ஆதாரமற்று சுயமாக தேர்ந்தெடுக்கப்பட்ட விளக்கங்கள், மறுவரையறை செய்யப்பட்ட வார்த்தைகள் மற்றும் தவறான அனுமானங்களையே நம்பியுள்ளது.

இயேசு கிறிஸ்து வரலாற்றில் தனித்துவமானவர், "நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்கள்?" (மத்தேயு 16:15) என்று கேட்ட அவருடைய சத்தம் எல்லா பொய் கடவுள்களுக்கும் மேலாக உயர்ந்து தொனிக்கிறது. அது ஒரு நபரின் நித்திய விதியை இறுதியில் தீர்மானிக்கும் கேள்வியாக இருக்கிறது.

25. இயேசு மெய்யாகவே ஜீவித்திருந்தாரா? இயேசு ஜீவித்திருந்தார் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் ஏதேனும் உண்டா?

இந்த கேள்வி பொதுவாக கேட்கப்படும்போதே இதை கேட்கிறவர் "வேதாகமத்திற்குப் புறம்பே" இருந்துதான் இந்த கேள்வியை கேட்கிறார். இயேசு ஜீவித்திருந்தார் என்பதற்கான ஆதாரத்தை வேதாகமத்தில் இருந்து குறிப்பிடுவது ஒரு சான்றாக எடுத்துக்கொள்ளவே முடியாது என்பதான கருத்தை நாம் கொடுப்பதில்லை. புதிய ஏற்பாட்டில் நூற்றுக்கணக்கான வசனங்களில் இயேசுவைக் குறிப்பிட்டு மேற்கோள்காட்டப்பட்டுள்ளது. சிலர் சுவிஷேச புத்தகங்களை இரண்டாம் நூற்றாண்டில் அதாவது கிறிஸ்துவின் மரணத்திற்கு 100 ஆண்டுகள் கழித்துதான் எழுதப்பட்டது என்று கூறுகிறார்கள். இது இப்படியாக இருந்தாலும் (நாம் அதை முழுவதுமாக எதிர்க்கிறோம்). பண்டையக் காலச் சான்றுகளை உறுதிப்படுத்த தீர்மானிக்கும் வரையறை வைத்து பார்க்கும்போது, இருநூறு ஆண்டுகள் வரைக்கும் உள்ள காலஅளவில் எழுதப்பட்ட காரியங்களை நம்பப்படுகிற சான்றுகளாக எடுத்துக்கொண்டார்கள். மேலும் பெரும்பாலான அறிஞர்கள் (கிறிஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்தவரல்லாதவர்கள்) பவுலின் நிருபங்களை பவுல் முதலாம் நூற்றாண்டில், அதாவது இயேசு மரித்ததிலிருந்து எழுந்த 40 ஆண்டுகளுக்கு முன்பாகத் தான் எழுதியிருக்க வேண்டும் என்று ஒத்துக்கொள்கிறார்கள். இப்படியிருக்க, பண்டைக்காலத்து கையெழுத்துப்பிரதிகளின் சான்றுகளின்படி, இயேசு என்ற பெயர் கொண்ட ஒரு மனிதர் இஸ்ரவேலில் முதலாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் வாழ்ந்தார் என்பதற்கு வலுவானச் சான்றுகள் உள்ளன.

கி.பி. 70ல் ரோமர்கள் எருசலேமின்மேல் படையெடுத்து வந்து இஸ்ரவேல் முழுவதையும் அழித்தார்கள், அதில் வாழந்தவர்களையும்

கொன்றுப் போட்டார்கள், பட்டணங்கள் தரைமட்டமாய் தீக்கிரையாக்கப் பட்டது. இயேசு வாழ்ந்ததற்கான சான்றுகள் அழிக்கப்பட்டிருப்பது ஆச்சரியப்படுவதற்கில்லை. மேலும் இயேசுவைக் கண்ணால் கண்ட சாட்சிகள் எண்ணற்றோர் கொல்லப்பட்டிருக்கலாம். இந்த உண்மை இயேசுவைக் நேரில் கண்ட சாட்சிகளின் எண்ணிக்கையைக் குறைத்திருக்கலாம்.

இயேசு கிறிஸ்து ரோமருடைய அதிகாரத்திற்குக் கீழிருந்த சில முக்கியமில்லாத இடங்களில் ஊழியம் செய்ததாக இருக்க, இயேசுவைக் குறித்த காரியங்கள் அந்தக்காலத்திலிருந்த வரலாற்றுச் சான்றுகளிலிருந்தே கொணரலாம். இயேசுவைக் குறித்த வரலாற்றுச்சான்றுகளில் சில மிக முக்கியமானவைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

முதல் நூற்றாண்டில் வாழ்ந்த டாக்கிடஸ் *(Tacitus)* என்னும் மிகத்துல்லியமான வரலாற்று ஆசிரியரான இவர் தன்னுடைய எழுத்துக்களில் ''கிறிஸ்தவர்கள்'' *(கிற்ஸ்தஸ் என்பது இலத்தீன் வார்த்தை)* திபேரியாவை ஆண்ட பொந்தியு பிலாத்துவின்கீழ் பாடனுபவித்தார்கள் என்று எழுதியிருக்கிறார். சுடோனியஸ், ராஜா ஆத்ரியன் என்பவருக்கு காரியதரிசியாயிருந்தவர் இப்படியாக எழுதுகிறார், கிறெஸ்டஸ் *(கிறிஸ்து)* என்ற பெயருடைய ஒரு மனிதர் முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்தார் என்று எழுதியிருக்கிறார் *(Annals 15:44)*.

ஃபிலேவியஸ் ஜோசிபஸ் என்பவர் பிரபலமான யூத வரலாற்று ஆசரியர். அவருடைய ஆண்டிகுட்டீஸில் *(Antiquities)* "அவருடைய சகோதரரான இயேசு கிறிஸ்து என்று அழைக்கப்பட்டவர்" என்று யாக்கோப்புக்கு எழுதியுள்ளார். மேலும் சர்ச்சைக்குரிய ஒரு வசனம் இருக்கின்றது, அது சொல்லுகிறது *(18:3)*, இந்த காலத்தில் இயேசு என்னும் ஒரு ஞானவான், அவரை மனிதன் என்று கூறுவது நியாயமானதாக இருக்காது. அவர்தான் அநேகரை ஆச்சரியப்பட

வைத்தவர்... அவர்தான் கிறிஸ்து... அவர் மூன்றாவது நாளிலே உயிரோடு அவர்களுக்கு தரிசனமானார். தீர்க்கதரிசிகள் இவைகளையும் மற்ற பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட அற்புதமான காரியங்களையும் அவரைக் குறித்து கூறியிருக்கிறார்கள் என்றார். மற்றொரு பதிப்பில் அந்த காலத்தில் இயேசு என்று பெயர் கொண்ட ஒரு ஞானமான மனுஷர் இருந்தார். அவர் நல்ல நடத்தை உள்ளவரும் நற்குணமுள்ளவராக இருந்தார். யூதர்கள் அநேகரும் மற்ற தேசத்து மக்களும் அவருக்கு சீஷரானார்கள். பிலாத்து அவரை குற்றப்படுத்தி சிலுவையிலறைந்துக் கொன்றான். ஆனால் அவருடைய சீஷர்கள் சீஷத்துவத்தைவிட்டு விலகவில்லை. அவர்களுக்கு அவர் சிலுவைமரணத்திற்குக்குப்பிறகு மூன்றுநாள் கழித்து தரிசனமானார் என்றும் அவர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர்தான் மேசியா, தீர்க்கதரிசிகள் இவரைக்குறித்துதான் உரைத்தார்கள் என்றும் கூறியிருக்கிறார்கள்."

ஜூலியஸ் ஆப்பிரிகானஸ், வரலாற்று ஆசிரியர் தாலஸ் கூறிய காரியங்களை குறிப்பிடுகிறார்: கிறிஸ்து சிலுவையிலறையப்பட்ட பின்பு உண்டான அந்தகாரத்தைக் குறித்து எழுதியிருக்கிறார் *(Extant Writings, 18)*.

இளையவனாகிய பிளினி, அவருடைய லெட்டர்ஸில் *(Letters 10:96)*, அவருடைய குறிப்பில் ஆதி கிறிஸ்தவ ஆராதனை பழக்கவழக்கங்களைக் குறித்தும், கிறிஸ்தவர்கள் இயேசுவைக் தேவனாக வணங்கியதையும், சீராக அன்பின் ஐக்கியத்தைக் குறித்தும், அப்பம் பிட்குதலையும் குறித்து எழுதியிருக்கிறார்.

பாபிலோனியன் தால்முதில் *(Sanhedrin 43a)*, பஸ்கா பண்டிகை நாட்களில் இயேசு சிலுவையில் அறையப்பட்டதை உறுதிச் செய்கிறது. மேலும், இயேசு மந்திரஜால வித்தையை பயன்படுத்தி யூதர்களை விசுவாசத்தை விட்டு வழிவிலகி போகும்படி செய்தார் என அவர்மேல் குற்றஞ்சுமத்தப்பட்டதையும் குறிப்பிடுகிறது.

இரண்டாவது நூற்றாண்டில் வாழ்ந்த சமோசாடாவைச் சேர்ந்த லூசியன் என்ற கிரேக்க எழுத்தாளர், கிறிஸ்தவர்களால் இயேசு வணங்கப்பட்டார், புதிய உபதேசங்களை கொண்டு வந்தார், மற்றும் சிலுவையிலறையப்பட்டார் என்றும் ஒப்புக்கொள்கிறார். இயேசுவின் போதனைகள், விசுவாசிகளின் சகோதரத்துவத்தைப்பற்றியும், மனந்திரும்புதலைப்பற்றியும் மற்ற தெய்வங்களை வெறுத்து தள்ளுவதை குறித்தும் இருந்ததாக அவர் கூறியிருக்கிறார். கிறிஸ்தவர்கள் இயேசுவின் கற்பனைகளின்படி வாழ்ந்தார்கள் மற்றும் தங்களுக்கு மரணம் இல்லை என்றும் நம்பினார்கள். அவர்கள் தங்கள் மரணத்தை வெறுத்து தன்னார்வத்தோடு தங்களை தனித்துவப்படுத்திக்கொண்டு, உலகப்பொருட்களை உதறித்தள்ளினார்கள்.

மாறா பார்-செராபியோன் *(Mara Bar-Serapion)* என்பவர் இயேசு ஞானவானாகவும் நற்பண்புள்ள மனிதனாக இருந்தார் என்று உறுதிச் செய்கிறார். மேலும் அநேகரால் இஸ்ரவேலின் ராஜா என்றும் கருதப்பட்டு, யூதரால் மரணத்துக்கு ஒப்புவிக்கப்பட்டார், அவருடைய போதனைகளில் அவரது சீஷர்கள் இன்றும் வாழ்கிறார்கள் என்று உறுதிபடுத்தினார்.

அறிவுசார்ந்த கொள்கைக்காரர்கள் எழுத்துக்கள் யாவும் இயேசுவைக் குறித்து கூறுகிறது. *(சத்தியத்தின் சுவிசேஷம், யோவானின் எழுத்துக்கள், தோமாவின் சுவிசேஷம், உயிர்த்தெழுதல் நூல், மற்றும் பல.)*

உண்மையில் பார்ப்போமானால் நாம் சுவிசேஷத்தை கிறிஸ்தவரல்லாதவர்கள் கூறிய மூலக்காரணத்திலிருந்தே தொகுத்து விட முடியும். இயேசு, கிறிஸ்து என்று அழைக்கப்பட்டார் *(ஜோசிபஸ்)*, 'அற்புதம்' செய்து புதிய உபதேசங்களைப் போதித்து யூதேயாவில் பஸ்காவின் போது கொல்லப்பட்டார் *(பாபிலோனியன் தல்முது)*, தன்னை கடவுள் என்று சொல்லி மறுபடி வரப்போவதாகவும் கூறினார்

(எலியேசர்), அதை அவருடைய சீஷர்கள் நம்பி அவரை தேவனாக வணங்கினார்கள் (பிளினி).

இயேசு கிறிஸ்து ஜீவித்திருந்ததற்கான திரளான சான்றுகள் வேதாகமத்திலும் வேதாகமத்திற்கு வெளியேயும் உள்ளன. மேலும் எல்லாவற்றையும்வி ட மிகப்பெரியச்சான்று என்னவென்றால் பன்னிரண்டு சீஷர்கள் உள்பட முதல் நூற்றாண்டு காலக்கட்டத்தில் வாழ்ந்த ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள், இயேசு கிறிஸ்துவுக்கு இரத்த சாட்சிகளாக மரிக்கவும் தயாராக இருந்தார்கள். ஜனங்கள் தாங்கள் நம்புகிற உண்மைக்கு ஜீவனைக் கொடுப்பார்களே தவிர பொய்க்காக ஒருபோதும் மரிக்க துணியமாட்டார்கள்.

26. உண்மையான வரலாற்று இயேசு யார்?

எவ்வித சந்தேகமுமில்லாமல், அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளில் ஒன்று "இயேசு யார்?" என்பதாகும். இயேசுவுக்கு உலகெங்கும் மிக உயர்ந்த பெயர் அங்கீகாரம் உள்ளது என்பதில் சந்தேகமில்லை. நமது உலக மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கு அதாவது சுமார் 2.5 பில்லியன் மக்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைக்கிறார்கள். ஏறத்தாழ 1.5 பில்லியன் மக்களை உள்ளடக்கிய இஸ்லாம், முகமதுவுக்குப் பிறகு இயேசுவை இரண்டாவது பெரிய தீர்க்கதரிசியாக அங்கீகரிக்கிறது. மீதமுள்ள 3.2 பில்லியன் மக்களில் (தோராயமாக உலக மக்கள்தொகையில் பாதி), பெரும்பாலானவர்கள் இயேசுவின் பெயரைக் கேட்டிருக்கிறார்கள் அல்லது அவரைப் பற்றி அறிந்திருக்கிறார்கள்.

இயேசுவின் பிறப்பு முதல் இறப்பு வரை அவருடைய வாழ்க்கையின் சுருக்கத்தை ஒருவர் தொகுத்தால், அது ஓரளவு குறைவாக இருக்கும். அவர் எருசலேமின் தெற்கே உள்ள ஒரு சிறிய நகரமான பெத்லகேமில் யூத பெற்றோர்களால் பிறந்தார், அதே நேரத்தில் அந்த பகுதி ரோமர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. அவரது பெற்றோர் வடக்கே நாசரேத்துக்கு சென்றனர், அங்கு அவர் வளர்ந்தார்; எனவே அவர் பொதுவாக "நசரேயனாகிய இயேசு" என்று அழைக்கப்பட்டார். அவரது தந்தை ஒரு தச்சர், எனவே இயேசு தனது ஆரம்ப ஆண்டுகளில் வர்த்தகத்தை கற்றுக்கொண்டார். சுமார் முப்பது வயதில், அவர் ஒரு பொதுவான வெளி ஊழியத்தைத் தொடங்கினார். அவர் தனது சீடர்களாக நம்பத்தகாத புகழுடைய ஒரு டஜன் மனிதர்களைத் தேர்ந்தெடுத்து, கலிலேயா கடலின் கரையோரத்தில் ஒரு பெரிய மீன்பிடி கிராமம் மற்றும் வர்த்தக மையமான கப்பர்நகூமில் ஊழியம் செய்தார். அங்கிருந்து அவர் கலிலேயா பகுதி முழுவதும் பயணம் செய்தார், எருசலேமுக்கு இடையிடையே பயணம் செய்யும் அண்டை நாடுகளான சமாரியர்கள் மத்தியில் அடிக்கடி சென்றார்.

இயேசுவின் அசாதாரண போதனைகள் மற்றும் வழிமுறைகள் பலரையும் வெகுவாக திடுக்கிட வைத்தது மற்றும் கலங்கடித்தது. அவரது புரட்சிகர செய்தி, வியக்க வைக்கும் அற்புதங்கள் மற்றும் குணப்படுத்துதல்களுடன், பெருவாரியான ஜனங்களால் பின்தொடர்தலைப் பெற்றது. மக்களிடையே அவரது புகழ் வேகமாக வளர்ந்தது, இதன் விளைவாக, யூத நம்பிக்கையில் நன்கு வேரூன்றிய மதத் தலைவர்கள் அதை கவனித்தனர். விரைவில், இந்த யூதத் தலைவர்கள் அவரது வெற்றியைப் பார்த்து பொறாமைப்பட்டு கோபமடைந்தனர். இந்த தலைவர்களில் பலர் அவருடைய போதனைகளை புண்படுத்தும் மற்றும் அவர்களின் நிறுவப்பட்ட மத மரபுகள் மற்றும் பண்டிகைகள் ஆபத்தில் இருப்பதாக உணர்ந்தனர். ரோம ஆட்சியாளர்களைக் கொண்டு அவரை கொன்றுவிட அவர்கள் விரைவாக சதி செய்தனர். இந்த நேரத்தில்தான் இயேசுவின் சீடர் ஒருவர் யூதத் தலைவர்களுக்கு மிகக் குறைந்த தொகைக்கு அவரை காட்டிக் கொடுத்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு, அவர்கள் அவரை கைது செய்து, அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்ட போலியான விசாரணைகளின் தொடரை உருவாக்கி, சிலுவையில் அறையப்பட்டு மரண தண்டனையை நிறைவேற்றினார்கள்.

ஆனால் வரலாற்றில் மற்றவர்களைப் போலல்லாமல், இயேசுவின் மரணம் அவருடைய கதையின் முடிவு அல்ல; உண்மையில், இது ஆரம்பம் மட்டுமே. இயேசு இறந்த பிறகு என்ன நடந்தது என்பதில்தான் கிறிஸ்தவம் உள்ளது. அவர் இறந்து மூன்று நாட்களுக்குப் பிறகு, அவருடைய சீடர்கள் மற்றும் பலர் அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று கூற ஆரம்பித்தனர். அவரது கல்லறை வெறுமையாக காணப்பட்டது, அடக்கம்பண்ணப்பட்ட அவருடைய சரீரம் அங்கே இல்லாமற் போய்விட்டது, மற்றும் பல தோற்றங்கள் பல மக்கள் குழுக்களால்,

பல்வேறு இடங்களில், மற்றும் மாறுபட்ட சூழ்நிலைகளில் இயேசுவால் தோன்றி காட்சியளிக்கப்பட்டது.

இவற்றின் விளைவாக, மக்கள் இயேசுவைக் கிறிஸ்து அல்லது மேசியா என்று அறிவிக்க ஆரம்பித்தனர். அவருடைய உயிர்த்தெழுதல் அவருடைய சிலுவைப் பலியின் மூலம் பாவத்தை மன்னிக்கும் செய்தியை உறுதிப்படுத்துகிறது என்று அவர்கள் கூறினர். முதலில், சுவிசேஷம் என்று அழைக்கப்படும் இந்த நற்செய்தியை அவர்கள் எருசலேமில் அறிவித்தனர், அதுதான் அவர் கொல்லப்பட்ட அதே நகரம். இந்த புதிய பின்தொடர்தல் விரைவில் சரியான வழி என அறியப்பட்டது (அப்போஸ்தலர் 9:2, 19:9, 23; 24:22 ஆகிய வசனங்களைப் பார்க்கவும்) மற்றும் வேகமாக பலுகி விரிவடைந்தது. குறுகிய காலத்தில், நம்பிக்கையின் இந்த நற்செய்தி பிராந்தியத்திற்கு அப்பாலும் பரவியது, ரோம் வரை விரிவடைந்தது மற்றும் அதன் பரந்த பேரரசின் மிகவும் வெளிப்புறமாகவும் விரிவடைந்து இருந்தது.

இயேசு சந்தேகத்திற்கு இடமின்றி உலக வரலாற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார். வரலாற்றில் இயேசுவின் தாக்கத்தைப் படிப்பதன் மூலம் "உண்மையான வரலாற்று இயேசு" என்ற கேள்விக்கு சிறந்த பதிலை அளிக்க முடியும். இயேசுவிடம் இருந்த ஒப்பற்ற தாக்கத்திற்கான ஒரே விளக்கம், இயேசு ஒரு மனிதனை விட மிக மேலானவர் என்பதாகும். இயேசு இருந்தார், இப்போதும் இருக்கிறார், அவர் தான் தேவன் மனிதனாக வந்தவர் என்று வேதாகமம் துல்லியமாக சொல்லுகிறது. உலகத்தை சிருஷ்டித்து, வரலாற்றின் போக்கை கட்டுப்படுத்தும் தேவன் மட்டுமே உலகை இந்த வகையில் மிகவும் கடுமையாக பாதிக்கமுடியும்.

27. இயேசுவின் குழந்தை பருவத்தில் என்ன சம்பவித்தது?

லூக்கா 2:41-52 இல் கொடுக்கப்பட்டதைத் தவிர, வேதாகமத்தில் இயேசுவின் இளமைக் காலம் பற்றிய வேறே எதுவும் சொல்லப்படவில்லை. இந்த சம்பவத்திலிருந்து இயேசுவின் குழந்தைப் பருவம் பற்றிய சில விஷயங்கள் நமக்குத் தெரியும். முதலில், அவர் பெற்றோரின் மகனாக இருந்தார், அவர்களுடைய மத சடங்குகளில் பக்தியுள்ளவராக இருந்தார். அவர்களின் நம்பிக்கையின் படி, யோசேப்பும் மரியாளும் ஆண்டுதோறும் பஸ்கா பண்டிகைக்கு எருசலேமுக்கு யாத்திரை மேற்கொண்டனர். கூடுதலாக, அவர்கள் தங்கள் 12 வயது மகனை 13 வது வயதில் யூத சிறுவர்கள் நினைவுகூரும் போது அவரது பார் மிட்ஜ்வாஹ்க்காக தனது முதல் விருந்தைக் கொண்டாட அழைத்து வந்தனர். அன்றைய காலத்தில் ஒரு சாதாரண குடும்பத்தில் ஒரு சாதாரண பையனை இங்கே பார்க்கிறோம்.

இந்த கதையில் இயேசு தேவாலயத்தில் நீடிப்பது குறும்புத்தனமாகவோ அல்லது கீழ்ப்படியாதவராகவோ இல்லை, ஆனால் அவர் தனது பிதாவின் காரியத்தில் இருக்க வேண்டும் என்ற அவரது அறிவின் இயல்பான விளைவாகும். அவர் தனது ஞானம் மற்றும் அறிவால் தேவாலய ஆசிரியர்களை வியப்பில் ஆழ்த்தியது அவரது அசாதாரண திறன்களைப் பேசுகிறது, அதே சமயம் அவருடைய வயது வந்தோரின் கேள்விகளைக் கேட்பது மற்றும் அவர் கேட்கும் கேள்விகள் அவர் ஒரு மாணவரின் பாத்திரத்தில் அவரது வயதுக்கு ஏற்றவாறு நடந்துகொண்டார் என்பதையும் இதுக் காண்பிக்கிறது.

இந்த சம்பவத்திலிருந்து 30-ஆம் வயதில் அவருடைய ஞானஸ்நானம் வரை, இயேசுவின் இளமைக் காலம் குறித்து நமக்குத்

தெரிந்ததெல்லாம், அவர் எருசலேமை விட்டு தனது பெற்றோருடன் நாசரேத்துக்குத் திரும்பினார் மற்றும் "அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்" (லூக் 2:51) என்பதாகும். அவர் நம் சார்பாக வழங்கிய மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு சரியான கீழ்ப்படிதலின் ஒரு முக்கிய அங்கமான 5 வது கட்டளைக்கு அடிபணிந்து தனது பூமிக்குரிய பெற்றோருக்கு தனது கடமையை நிறைவேற்றினார். அதையும் தாண்டி, நமக்குத் தெரிந்ததெல்லாம் "இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்" (லூக் 2:52).

வெளிப்படையாக, இவை அனைத்தும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று தேவன் தீர்மானித்தார். வேதாகமத்தில் கொடுக்கப்படாத இயேசுவின் இளமைக் கால கதைகளைக் கொண்ட சில கூடுதல் எழுத்துக்கள் உள்ளன (உதாரணமாக தோமாவின் நற்செய்தி நூல்). ஆனால் இந்த கதைகளில் ஏதேனும் உண்மை இருக்கிறதா மற்றும் நம்பகமானதா என்பதை அறிய நமக்கு ஒரு வழியும் இல்லை. இயேசுவின் குழந்தைப் பருவத்தைப் பற்றி அதிகம் சொல்லாமல் இருக்கவே தேவன் தேர்ந்தெடுத்தார். எனவே நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அனைத்தையும் அவர் நமக்கு அறிவித்தார் என்று நாம் அவரை நம்ப வேண்டும்.

28. இயேசு மனுஷகுமாரன் என்பதன் அர்த்தம் என்ன?

புதிய ஏற்பாட்டில் 88 முறை "மனுஷகுமாரன்" என இயேசு குறிப்பிடப்படுகிறார். தானியேல் 7:13-14-ல் உள்ள தீர்க்கதரிசனத்தில் தான் "மனுஷகுமாரன்" என்ற சொற்றொடரின் முதல் அர்த்தம் வருகிறது, "இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும் அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்." "மனுஷகுமாரன்" என்பதன் விவரணம் மேசியாவின் தலைப்பாக விவரிக்கப்பட்டது. இயேசுவே ஆட்சியின் அதிகாரத்தையும் மகிமையையும் ஒரு ராஜ்யத்தையும் கிடைக்கப்பெற்றவராக இருக்கிறார். இயேசு இந்த சொற்றொடரைப் பயன்படுத்தும்போது, அவர் மனுஷகுமாரன் பற்றிய தீர்க்கதரிசனத்தை அவருக்குக் கொடுகிறார். இது யாரைக் குறிப்பிடுகிறது என்று அந்த யுகத்தின் யூதர்கள் அந்த சொற்றொடரை நன்கு அறிந்திருந்தார்கள். இயேசு தன்னை மேசியா என்று பிரகடனம் செய்தார்.

"மனுஷகுமாரன்" என்ற சொற்றொடரின் இரண்டாவது அர்த்தம் இயேசு உண்மையிலேயே மனிதனாக இருக்கிறார் என்பதாகும். தேவன் தீர்க்கதரிசியாகிய எசேக்கியேலை "மனுஷகுமாரன்" என்று 93 முறை அழைத்தார். தேவன் வெறுமனே எசேக்கியேலை ஒரு மனிதன் என்று அழைத்தார். ஒரு மனிதனின் குமாரன் ஒரு மனிதனேயாகும். இயேசு முழுமையாக தேவன் (யோவான் 1: 1), ஆனால் அவர் ஒரு

மனிதனும் ஆகும் (யோவான் 1:14). 1 யோவான் 4:2 நமக்கு சொல்லுகிறது, "தேவஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது." ஆம், இயேசு தேவனுடைய குமாரன் - தேவனின் சாராம்சம் உள்ளவர். ஆம், இயேசு மனுஷகுமாரன் - அவர் மனிதனின் சாராம்சத்தில் மனிதனாக இருந்தார். சுருக்கமாக, "மனுஷகுமாரன்" என்கிற வார்த்தை இயேசு மேசியா என்பதையும் அவர் உண்மையில் மனிதனாக இருப்பதையும் சுட்டிக்காட்டுகிறது.

29. கடவுள் ஏன் இயேசுவை அனுப்பினார், ஏன் முன்னரே ஏன் அனுப்பவில்லை?

"காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்" (கலாத்தியர் 4:5). இந்த வசனம் "காலம் நிறைவேறினபோது" பிதா தம்முடைய குமாரனை அனுப்பினார் என்று கூறுகிறது. முதல் நூற்றாண்டின் போது பல விஷயங்கள் நிகழ்ந்தன, குறைந்தபட்சம் மனித காரணங்களால், கிறிஸ்து வரும்போது அது சிறந்ததாக தோன்றுகின்றன.

1) அந்தக் காலத்தில் யூதர்கள் மத்தியில் மேசியா வருவார் என்கிற பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. இஸ்ரவேலின்மீது உண்டாயிருந்த ரோமர்களின் ஆட்சி, யூதர்கள் மேசியாவின் வருகையை எதிர்நோக்கும் பசியைத் தந்தது.

2) பல்வேறு நாடுகளை ஒன்றாக இணைத்து ஒற்றுமையை ரோமாபுரி கொண்டுவந்தது. அதனிமித்தம் தனது அரசாங்கத்தின் கீழ் உலகின் பெரும்பகுதியை ஐக்கியப்படுத்தியது. மேலும், ரோமப்பேரரசு ஒப்பீட்டளவில் அமைதியானதாக இருந்ததால், ஆரம்பகால கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தை பரப்புவதற்கும் அனுமதிக்கப்பட்டார்கள். பயணத்தின் இத்தகைய சுதந்திரம் மற்ற காலங்களில் சாத்தியமற்றதாக இருந்திருக்கும்.

3) ரோம் இராணுவத்தை வென்றிருந்த போது, கிரேக்கம் கலாச்சார ரீதியைக் கைப்பற்றியது. கிரேக்க மொழியின் ஒரு "பொதுவான" வடிவம் (கிளாசிக்கல் கிரேக்கத்தில் இருந்து வேறுபட்டது) வர்த்தக மொழியாக இருந்தது, இது பேரரசு முழுவதும் பேசப்பட்டது, ஒரு பொதுவான மொழியால் பல்வேறு ஜனங்களின் குழுக்களுக்கு நற்செய்தியை அறிவிக்க முடிந்தது.

4) பல பொய்யான விக்கிரகசிலைகளால் ரோமர்கள்மேல் வெற்றிபெறத் தவறிவிட்டதால், அந்த சிலைகளை வணங்குவதை பலர் கைவிட்டுவிட்டனர். அதே சமயத்தில், இன்னும் "வளமான" நகரங்களில் கிரேக்க தத்துவமும் அறிவியல் காலமும் ஆவிக்குரிய நிலையில் வெறுமையாக இருந்தன. அதேப்போல கம்யூனிச அரசாங்கங்களின் நாத்திகம் இன்று ஒரு ஆவிக்குரிய வெற்றிடத்தை விட்டு விடுகிறது.

5) இரகசிய மதங்கள் ஒரு இரட்சகரான தேவனை மற்றும் இரக்கமுள்ள பலிகளை வழங்குவதற்கு அவசியமான ஆராதனையை வலியுறுத்தின, இவ்வாறு இறுதியான பலியில் விசுவாசம் வைக்கிறவர்களுக்கு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பறைசாற்றினார்கள். கிரேக்கர்களும் ஆத்மாவின் அழியாமையில் நம்பிக்கை கொண்டனர் (ஆனால் உடலில் அல்ல).

6) ரோமானிய இராணுவம் மாகாணங்களிடமிருந்து படையினரை ஆட்சியில் அமர்த்தியது, ரோமானிய கலாச்சாரத்திற்கும், அந்த வெளிப்புறமான மாகாணங்களை இன்னும் அடைந்துவிடாத எண்ணங்களை (நற்செய்தி போன்று) அறிமுகப்படுத்தியது. ஆரம்பத்தில் பிரிட்டனுக்கு சுவிசேஷத்தை அறிமுகப்படுத்தியது கிறிஸ்தவ படைவீரர்களின் முயற்சியின் விளைவாக இருந்தது.

மேலே கூறப்பட்ட கருத்துகள் ஏன் அந்த நேரத்தில் பார்த்து மனிதர்கள் வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட சமயத்தில் கிறிஸ்து வர ஒரு நல்ல நேரம் என்று ஊகிக்கின்றன என்பதை அடிப்படையாக கொண்டவை. ஆனால் தேவனுடைய வழிகள் நம் வழிகள் இல்லை என்பதை நாம் புரிந்துகொள்கிறோம் (ஏசாயா 55:8), இந்த குறிப்பிட்ட நேரத்தில் ஏன் தேவன் தம்முடைய குமாரனை அனுப்பும்படி சித்தம் கொண்டார் என்பதற்கு சில காரணங்கள் இருந்திருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம். கலாத்தியர் 3 மற்றும் 4 ஆகியவற்றின்

பின்னணியில், மேசியாவின் வருகைக்காக யூதச் சட்டங்களின் மூலமாக ஒரு அஸ்திவாரத்தை அமைத்துக்கொள்ள தேவன் விரும்பினார் என்பது தெளிவாகிறது. நியாயப்பிரமாணம் ஜனங்கள் தங்களுடைய பாவத்தின் ஆழத்தை புரிந்துகொள்ள உதவியது (அந்த நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிப்பதில் அவர்கள் தகுதியற்றவர்களாய் இருந்தனர்), அதனால் அவர்கள் மேசியாவாகிய இயேசு மூலமாக அந்த பாவத்திற்கான பரிகாரத்திற்காக உடனடியாக அவரை ஏற்றுக்கொள்வதற்காக (கலாத்தியர் 3:22-23; ரோமர் 3:19-20) அமைந்தது. மேசியாவாக இயேசுவை ஜனங்களுக்கு வழிநடத்துவதற்கு நியாயப்பிரமாணத்திற்கு "பொறுப்பு" (கலாத்தியர் 3:24) கொடுக்கப்பட்டது. இயேசு மேசியாவைப்பற்றியதான பல தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றியதன் மூலம் இதைச்செய்தார். பாவத்திற்காக பலி செலுத்தப்பட வேண்டிய அவசியத்தையும், அதனது சொந்தப் பற்றாக்குறையையும் (ஒவ்வொரு பலி செலுத்துவதன் மூலம் பிற்பாடு கூடுதல் தேவையும் இருக்கிறது) சுட்டிக்காட்டிய இந்த பலி முறைமைக்குச் சேர்க்கப்படுகிறது. பழைய ஏற்பாட்டின் வரலாறு கிறிஸ்துவின் நற்செய்தியையும் செயலையும் பல நிகழ்வுகள் மற்றும் மத விழாக்களின் மூலமாக சித்தரித்தது (அதாவது ஆபிரகாம் ஈசாக்கைப் பலிசெலுத்த விருப்பம் கொண்டது, அல்லது எகிப்திலிருந்து வெளியேற்றப்பட்ட சமயத்தில் இஸ்ரவேலர்கள் ஆசரித்த பஸ்காவின் விவரங்கள் போன்றவை), ஆகியவைகள் கிறிஸ்துவின் வேலையைப் பறைசாற்றியது.

இறுதியாக, குறிப்பிட்ட தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றும்போது கிறிஸ்து வந்தார். தானியேல் 9:24-27 வரையிலுள்ள வசனங்கள் "எழுபது வாரங்கள்" அல்லது "எழுபது ஏழுகளைப்" பற்றி பேசுகிறது. இதன் பின்னணியிலிருந்து, இந்த "வாரங்கள்" அல்லது "ஏழுகள்" ஏழு நாட்கள் அல்ல, மாறாக வருஷங்களைக் குறிக்கிறதாக இருக்கிறது. முதல் அறுபத்தொன்பது வாரங்களின் விவரங்களை நாம் வரலாற்றைப் பார்த்து சரிபார்த்துக் கொள்ளலாம் (எழுபது வாரங்கள்

எதிர்காலத்தில் நடைபெறும்). எழுபது வாரங்களின் எண்ணிக்கை "எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக்கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல்" தொடங்குகிறது (வசனம் 25). இந்த கட்டளை அர்தசஷ்டா ராஜாவினால் கி.மு. 445-ல் வழங்கப்பட்டது (நெகேமியா 2:5-ஐ பார்க்கவும்). ஏழு "ஏழுகள்" மற்றும் 62 "ஏழுகள்" அல்லது 69 x 7 ஆண்டுகளுக்குப் பிறகு, தீர்க்கதரிசனம் கூறுகிறது: "மேசியா சங்கரிக்கப்படுவார்; ஆனாலும் தமக்காக அல்ல; நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப்போடுவார்கள்; அதின்முடிவு ஜலப்பிரவாகம்போல இருக்கும்" (பெரிய அழிவு என்று பொருள்) (வச 26). இங்கே நமக்கு தவறாக புரிந்துகொள்ள இயலாத நிலையில் தெளிவாக இரட்சகராகிய மேசியாவின் மரணம் பற்றிய குறிப்பு உள்ளது. ஒரு நூற்றாண்டிற்கு முன்னால், ராபர்ட் ஆண்டர்சன் அவரது "வருகிறவராகிய பிரபு" என்கிற புத்தகத்தில், அறுபது ஒன்பது வாரங்கள் குறித்த விரிவான கணக்கீடுகளை 'தீர்க்கதரிசன ஆண்டுகளைப்' பயன்படுத்தி, லீப் ஆண்டுகளுக்கும் அனுமதிக்கிறார், காலெண்டரில் உள்ள பிழைகள், கி.மு. முதல் கி.பி. வரை, போன்றவை, மற்றும் இயேசுவின் மரணத்திற்கு ஐந்து நாட்களுக்கு முன்னர், எருசலேமிற்கு வரும் வெற்றி பவனி நாளில் அறுபத்து ஒன்பது வாரங்கள் முடிவுக்கு வந்தன என தெளிவாக விளக்குகிறார். ஒருவர் இந்த கால அட்டவணையைப் பயன்படுத்துகிறாரா இல்லையா என்பதல்ல, கிறிஸ்துவின் மனித பிறப்பின் காலம் மற்றும் மரணம் ஆகியவற்றைக் குறித்து தானியேல் புத்தகத்தில் ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே பதிவுசெய்த இந்த விரிவான தீர்க்கதரிசனத்துடன் இணைந்திருக்கிறது.

கிறிஸ்துவின் மனித அவதாரம் குறித்த நேரம் அந்த நேரத்தில் வாழ்ந்திருந்த ஜனங்கள் அவரது வருகைக்கு தயாராக இருந்தார்கள் என்பதைக் காண்பிக்கிறது. பின்னர் வந்த ஒவ்வொரு நூற்றாண்டிலும் வாழ்ந்த ஜனங்கள் இயேசுவே வாக்குப்பண்ணப்பட்ட மேசியா

என்பதற்கு போதுமான சான்றுகள் இருப்பதையும் அதிகமான விவரங்களையும் வேதவாக்கியங்கள் எடுத்துரைக்கிறது.

30. கிறிஸ்துவின் தெய்வீகம் வேதாகமத்தின் அடிப்படையிலானதா?

இயேசு தம்மைக் குறித்து கூறிய குறிப்பிட்ட கூற்றுக்களோடு கூட அவரது சீஷர்களும் கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை அறிக்கையிட்டுள்ளனர். தேவனாலே மட்டும் செய்யக்கூடியதான பாவத்தை மன்னிக்கும் தன்மை (ஆம் தேவனே பாவத்தினால் பாதிப்புக்குள்ளானவர்) (அப்போஸ்தலர் 5:31; கொலோசேயர் 3:13; சங்கீதம் 130:4; எரேமியா 31:34) இயேசுவுக்கும் உண்டு என்று பறைசாற்றினார்கள். இயேசுவின் உரிமைக்கோரல் கூற்றின்படி, "உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்து" (2 தீமோ. 4:1) என்று காண்கிறோம். தோமா இயேசுவை நோக்கி, "என் ஆண்டவரே, என் தேவனே!" என்று கூப்பிட்டார் (யோவான் 20:28). பவுல் இயேசுவை "மகா தேவனும், இரட்சகரும்" (தீத்து 2:13) என்று கூறி, மேலும் இயேசு மனிதனாக அவதரிப்பதற்கு முன், "தேவனுடைய ரூபமாயிருந்தார்" (பிலிப்பியர் 2:5-8) என்றும் சுட்டிக்காட்டுகிறார். பிதாவாகிய தேவன் இயேசுவைக் குறித்து "தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது" என்று கூறுகிறார் (எபிரேயர் 1:8). யோவான் "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை [இயேசு] தேவனாயிருந்தது" என்று குறிப்பிடுகிறார் (யோவான் 1:1). வேதாகமத்தின் பல பகுதிகள் கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை எடுத்துரைக்கின்றன (பாருங்கள்: வெளி. 1:17; 2:8; 22:13; 1 கொரிந்தியர் 10:4; 1 பேதுரு 2:6-8; சங்கீதம் 18:2; 95:1; 1 பேதுரு 5:4; எபிரேயர் 13:20), கிறிஸ்து அவரது சீஷர்களால் தேவனாக எண்ணப்பட்டார் என்பதற்கு இவற்றில் ஒன்றே போதுமானது.

பழைய ஏற்பாட்டில் யெகோவாவிற்கே (தேவனுடைய அதிகாரப்பூர்வமான நாமம்) உரிய நாமங்கள் இயேசுவுக்கும் அளிக்கப்பட்டுள்ளன. பழைய ஏற்பாட்டு நாமமான "மீட்பர்" (சங்கீதம் 130:7; ஓசியா 13:14) புதிய ஏற்பாட்டில் இயேசுவுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது (தீத்து 2:13; வெளி. 5:9). மத்தேயு 1 ல், இயேசு இம்மானுவேல்-"தேவன் நம்மோடிருக்கிறார்" என்றழைக்கப்படுகிறார். சகரியா 12:10 ல், யெகோவா தான், "அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து," கூறுகிறார். ஆனால் புதிய ஏற்பாடு இயேசுவின் சிலுவை மரணத்தைக் குறிப்பிட இந்த வசனத்தைப் பயன்படுத்துகிறது (யோவான் 19:37; வெளி. 1:7). யெகோவாவைக் குறித்தும், இயேசுவைக் குறித்தும் "குத்தினார்கள்" மற்றும் "நோக்கிப்பார்த்தார்கள்" என வேதாகமம் சொல்லுமானால், இயேசுவும் யெகோவாவும் ஒன்றாக இருக்கிறார்கள் அல்லது இருவரும் ஒன்றே என்று அர்த்தம் கொள்ளமுடியும். ஏசாயா 45:22-23 ஐ அப்போஸ்தலனாகிய பவுல் இயேசுவுக்கு உபயோகித்து வியாக்யானம் செய்கிறார் (பிலிப்பியர் 2:10-11). மேலும், இயேசுவினுடைய நாமம் ஜெபத்தில் தேவனுடைய நாமத்தோடு பயன்படுத்தப்பட்டுள்ளது, "நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" (கலாத்தியர் 1:3; எபேசியர் 1:2). கிறிஸ்து தெய்வீகத்தன்மை இல்லாதவரென்றால், இது தேவதூஷணமாகிவிடும். இயேசுவின் ஞானஸ்நானக் கட்டளையிலும் இயேசுவினுடைய நாமம் தேவனுடைய நாமத்தோடு இணைந்து காணப்படுகிறது, "பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே [ஒருமை]" (மத்தேயு 28:19; மற்றும் 2 கொரிந்தியர் 13:14 யையும் காண்க).

தேவனால் மட்டுமே செய்யக்கூடிய செயல்கள் இயேசுவுக்கு சூடப்பட்டுள்ளது. இயேசு மரித்தோரை எழுப்பினது மட்டுமல்லாமல் (யோவான் 5:21, 11:38-44) பாவத்தையும் மன்னித்தார் (அப்போஸ்தலர்

5:31, 13:38), அவர் உலகைப் படைத்து, தாங்கவும் செய்கிறார் (யோவான் 1:2; கொலோசேயர் 1:16-17). யெகோவா மட்டுமே சிருஷ்டிப்பின் போது இருந்தார் என்பதை ஒருவர் எண்ணும் போது இது மேலும் தெளிவாகின்றது. மேலும், தெய்வீகதன்மையுள்ளவர் அல்லது தேவன் மட்டுமே கொண்டுள்ள பண்புகளை கிறிஸ்துவும் உடையவராயிருக்கிறார்: நித்தியமானவர் (யோவான் 8:58), சர்வ வியாபி (மத்தேயு 18:20, 28:20), சர்வ ஞானி (மத்தேயு 16:21) மற்றும் சர்வவல்லமையுள்ளவர் (யோவான் 11: 38-44).

நான் தேவன் என்று கூறுவது ஒன்று அல்லது அது உண்மையென்று மற்றவர்களை நம்பவைத்து முட்டாளாக்குவது வேறு, பிறகு முழுக்க முழுக்க அது உண்மையென்று நிரூபிப்பது வேறு. கிறிஸ்து தன்னுடைய தெய்வீகத்தன்மைக்கான கோரிக்கையை பல அதிசயங்கள் மற்றும் அற்புதங்கள் மூலமாக நிரூபித்திருக்கிறார். இயேசுவின் அற்புதங்களில் ஒருசில: தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றியது (யோவான் 2:7), தண்ணீரின் மேல் நடந்தது (மத்தேயு 14:25), பொருட்களைப் பன்மடங்காக்கியது (யோவான் 6:11), குருடரைக் குணமாக்கியது (யோவான் 9:7), முடவரைக் குணமாக்கியது (மாற்கு 2:3), பிணியாளிகளைக் குணமாக்கியது (மத்தேயு 9:35; மாற்கு 1:40-42), மேலும் மரித்தோரை உயிரோடு எழுப்பியது (யோவான் 11:43-44; லூக்கா 7:11-15; மாற்கு 5:35) ஆகியவைகள் அடங்கும். மேலும், கிறிஸ்து தாமே மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். புறமதத்திலுள்ள புராணக்கதைகளில் பெயரளவில் மரித்து, உயிர்த்தெழும் கடவுள்களோடு ஒப்பிடும் போது, உயிர்த்தெழுதலைப் போன்ற எதுவும் மற்ற மதங்களால் வலியுறுத்தப்படவில்லை, மற்றும் மற்ற எந்தக் கோரிக்கையும் இந்த அளவிற்கு வேதத்திற்கு அப்பாற்பட்ட சான்றுகளை உடையதாயில்லை.

கிறிஸ்தவரல்லாத குற்றங்காண்கிற அறிஞர்கள் கூட ஏற்றுக் கொள்ளுகின்ற வகையில் இயேசுவைக் குறித்து குறைந்தது பன்னிரண்டு வரலாற்று உண்மைகள் இருக்கின்றன:

1. இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரித்தார்.

2. அவர் அடக்கம் பண்ணப்பட்டார்.

3. அவரது மரணம் சீஷர்களை கலங்கச் செய்து நம்பிக்கை இழக்கவும் செய்தது.

4. சில நாட்களுக்குப் பின்பு இயேசுவின் கல்லறை வெறுமையானதாக கண்டுபிடிக்கப்பட்டது (கண்டுபிடிக்கப் பட்டதாகக் கோரப்பட்டது).

5. உயிர்த்தெழுந்த இயேசுவின் காட்சிகளை உணர்ந்ததாக சீஷர்கள் நம்பினர்.

6. இதற்குப் பின்பு, சந்தேகித்தவர்கள் தைரியமான விசுவாசிகளாக மாறினர்.

7. இச்செய்தியே ஆதித் திருச்சபையின் மையப் பிரசங்கமானது.

8. இச்செய்தி எருசலேமில் பிரசங்கிக்கப்பட்டது.

9. இப்பிரசங்கத்தின் விளைவாக திருச்சபை தோன்றி வளர்ந்தது.

10. உயிர்த்தெழுதல் நாள், ஞாயிறு, ஓய்வு நாளுக்குப் (சனிக்கிழமை) பதிலாக பிரதான ஆராதனை நாளானது.

11. நாஸ்திகவாதியாக இருந்த யாக்கோபு, உயிர்த்தெழுந்த இயேசுவை கண்டபோது அவரும் விசுவாசித்து சீஷரானார்.

12. கிறிஸ்தவத்திற்கு எதிரியாயிருந்த பவுல் உயிர்த்தெழுந்த இயேசுவின் காட்சியைக் கண்ட அனுபவத்தால் மாற்றப்பட்டார்.

இந்த குறிப்பிட்ட பட்டியலை யாராவது எதிர்த்தாலும் கூட, உயிர்த்தெழுதலை நிரூபிக்கவும், சுவிசேஷத்தை நிலைநாட்டவும் ஒரு சில சான்றுகளே போதுமானது: இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், தோன்றி காட்சியளித்தல் (1 கொரிந்தியர் 15:1-5). ஒருவேளை சில கோட்பாடுகள் மேற்கூறிய ஒன்று அல்லது இரண்டு உண்மைகளுக்கு விளக்கமளிக்க முடிந்தாலும், உயிர்த்தெழுதலினால் மட்டுமே அனைத்தையும் விளக்கவும் கணக்கிடவும் முடியும். சீஷர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவைக் கண்டதாக கூறுவதை திறனாய்வாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். மக்களை மாற்றின உயிர்த்தெழுதல் போல் பொய்களோ, பிரம்மைகளோ செய்யமுடியாது. முதலாவது, இதனால் அவர்களுக்கு லாபம் என்ன? கிறிஸ்தவம் பிரசித்தி பெறவுமில்லை, நிச்சயமாக பணம் ஈட்டித்தரவுமில்லை. இரண்டாவது, பொய்யர்கள் நல்ல இரத்தச்சாட்சிகளாகயிருக்க முடியாது. தங்களது விசுவாசத்திற்காக கொடூரமான முறையில் மரித்த சீஷர்களின் விருப்பத்திற்கு சிறந்த விளக்கம் உயிர்த்தெழுதல் தவிர வேறொன்றுமில்லை. ஆம், பலர் தாங்கள் உண்மையென்று நம்பின பொய்க்காக மரிப்பார்கள், ஆனால் எவரும் உண்மையில்லை என்று தாங்கள் அறிந்த ஒன்றுக்காக மரிக்கமாட்டார்கள்.

முடிவாக, கிறிஸ்து தான் யெகோவா என்று உரிமைக்கோரினார், அதாவது அவர் தெய்வீகத்தன்மை உடையவர் (ஏதோ "ஒரு கடவுள்" அல்ல ஆனால் ஒரே உண்மையான தேவன்); அவரது சீஷர்கள் (விக்கிரக ஆராதனைக்குப் பயந்தவர்கள்) அவரை தேவன் என்று நம்பி ஏற்றுக்கொண்டனர். கிறிஸ்து தனது தெய்வீகத்தன்மையை அதிசயங்கள் (உலகையே மாற்றின உயிர்த்தெழுதல் உட்பட), மூலம் நிரூபித்தார். வேறெந்த கற்பிதக் கொள்கையும் (உத்தேசம்) இந்த உண்மைகளை விளக்க முடியாது. ஆம், கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை வேதாகமத்தின் பிரகாரமானதாகும்.

31. இயேசுவின் சோதனைகளுக்கான பொருள் மற்றும் நோக்கம் என்ன?

ஞானஸ்நானத்திற்குப் பிறகு, இயேசு "ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டு, நாற்பதுநாள் பிசாசினால் சோதிக்கப்பட்டார்" (லூக்கா 4:1-2). வனாந்தரத்தில் மூன்று சோதனைகள் இயேசுவின் விசுவாசத்தை சோதிக்கும்படி தேவனிடமிருந்து சாத்தான் மூலம் வந்தது. மத்தேயு 16:21-23 இல் இதே போன்ற ஒரு சோதனையை நாம் பார்க்கிறோம், அங்கு சாத்தான், பேதுரு மூலம், இயேசுவை அவருக்கு விதிக்கப்பட்ட சிலுவையை விட்டுவிடும்படி தூண்டுகிறான். லூக்கா 4:13 வனாந்தரத்தில் சோதனைகளுக்குப் பிறகு, "பிசாசானவன் சோதனையெல்லாம் முடித்தபின்பு, சிலகாலம் அவரை விட்டு விலகிப்போனான்", இது இயேசு மேலும் சாத்தானால் சோதிக்கப்பட்டார் என்பதைக் குறிக்கிறது, இருப்பினும் மேலும் அவர் சோதிக்கப்பட்ட சம்பவங்கள் நற்செய்தி நூல்களில் பதிவு செய்யப்படவில்லை. முக்கியமான விஷயம் என்னவென்றால், பல்வேறு சோதனைகள் இருந்தபோதிலும், அவர் பாவம் இல்லாதவராய் இருந்தார்.

இயேசுவை வனாந்தரத்தில் பிசாசினால் சோதிக்கப்பட அனுமதிப்பதில் தேவனுக்கு ஒரு நோக்கம் இருந்தது என்பது "ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டு" என்ற கூற்றிலிருந்து தெளிவாகிறது. ஒரு நோக்கம் என்னவென்றால், நம்முடைய எல்லா பலவீனங்கள் மற்றும் குறைபாடுகளிலும் (எபிரேயர் 4:15) நம்முடன் பரிதபிக்கக்கூடிய ஒரு பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார் என்று உறுதியளிப்பதாகும், ஏனென்றால் நாம் சோதிக்கப்படுவதைப் போலவே அவரும் எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டார். நம்முடைய ஆண்டவரின் மனித

இயல்பு, நம்முடைய சொந்த பலவீனங்களில் பரிதபிக்கத்தக்கதாக அவருக்கு உதவுகிறது, ஏனென்றால் அவர் பலவீனத்திற்கும் ஆளானார். "ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்" (எபிரேயர் 2:18). இங்கே "சோதிக்கப்பட்டு" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை "சோதனைக்கு உட்படுத்தப்பட்டு" என்று பொருள். எனவே, நாம் நமது வாழ்க்கைச் சூழ்நிலைகளால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, சோதிக்கப்படும்போது, இயேசு அதே சோதனைகளுக்கு உட்பட்டவராக இருக்கிறபடியினால் புரிந்துகொண்டு நமக்காக பரிதபிக்கக்கூடியவராய் இருக்கிறார் என்று நாம் உறுதியாக நம்பலாம்.

இயேசுவின் சோதனைகள் அனைத்து மனிதர்களுக்கும் பொதுவான நிலையில் உள்ள மூன்று மாதிரிகளைப் பின்பற்றுகின்றன. முதல் சோதனையானது மாம்சத்தின் இச்சையைப் பற்றியது (மத்தேயு 4:3-4), இதில் அனைத்து விதமான சரீர ஆசைகளும் அடங்கும். நம் ஆண்டவர் பசியுடன் இருந்தார், பிசாசு அவரிடம் கற்களை அப்பமாக மாற்றும்படிக்குத் தூண்டினான், ஆனால் அவர் உபாகமம் 8:3-ஐ மேற்கோள் காட்டி பதிலளித்தார். இரண்டாவது சோதனையானது ஜீவனத்தின் பெருமையைப் பற்றியது (மத்தேயு 4:5-7), இங்கு பிசாசு அவருக்கு எதிராக ஒரு வேதப் பகுதியைப் பயன்படுத்த முயன்றான் (சங்கீதம் 91:11-12), ஆனால் ஆண்டவர் அதற்கு மாறாக வேதவாக்கியத்துடன் பதிலளித்தார் (உபாகமம் 6:16), மேலும் அவர் தனது சொந்த அதிகாரங்களை தவறாக பயன்படுத்துவது தவறு என்று குறிப்பிட்டுள்ளார்.

மூன்றாவது சோதனையானது கண்களின் இச்சையைப் பற்றியது (மத்தேயு 4:8-10), மற்றும் அவர் முதலில் வந்த நோக்கம் மற்றும் சிலுவையில் அறையப்படுவதைத் தவிர்த்து மேசியாவின் விரைவான வழியை அடைய முடியுமானால், இதுதான் வழி. பிசாசுக்கு ஏற்கனவே உலகின் ராஜ்யங்களின் மீது கட்டுப்பாடு இருந்தது (எபேசியர் 2:2),

ஆனால் கிறிஸ்துவின் விசுவாசத்திற்கு ஈடாக எல்லாவற்றையும் கொடுக்க அவன் தயாராக இருந்தான். வெறும் எண்ணமே கர்த்தருடைய தெய்வீக இயல்பை நடுங்கச் செய்கிறது, மேலும் அவர் புத்திக் கூர்மையாக பதிலளித்தார், "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே" என்றார் (மத்தேயு 4:10; உபாகமம் 6:13).

நம் மாம்சம் இயற்கையாகவே பலவீனமாக இருப்பதால் நாம் பல சோதனைகளில் விழுகிறோம், ஆனால் நம்மால் தாங்க முடியாத அளவிற்கு நம்மை சோதிக்கப்பட விடாதபடிக்கு தேவன் இருக்கிறார்; அதிலிருந்து தப்பிக்கும்படி அவர் ஒரு வழியையும் வழங்குகிறார் (1 கொரிந்தியர் 10:13). ஆகையால் நாம் சோதனையை ஜெயிக்க முடியும் மற்றும் சோதனையிலிருந்து விடுபட்டதற்காக ஆண்டவருக்கு நன்றி சொல்லுவோம். வனாந்தரத்தில் இயேசுவின் அனுபவம் தேவனுக்கு திறம்பட சேவை செய்வதிலிருந்து நம்மைத் தடுக்கும் இந்த பொதுவான சோதனைகளைப் பார்க்க உதவுகிறது. மேலும், சோதனைகளுக்கு இயேசுவின் பதில் இருந்து நாமும் எவ்வாறு சரியாக பதிலளிக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்கிறோம், அதாவது வேதத்திலிருந்து பதில் அளிக்கவேண்டும். தீய சக்திகள் எண்ணற்ற சோதனைகளுடன் நம்மிடம் வருகின்றன, ஆனால் அனைத்திற்கும் ஒன்றுபோலவே மூன்று விஷயங்கள் உள்ளன: மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமை (1 யோவான் 2:16). நம் இருதயங்களையும் மனதையும் சத்தியத்தினாலே நிறைத்துக்கொள்வதன் மூலம் மட்டுமே இந்த சோதனைகளை நாம் அடையாளம் கண்டு எதிர்த்துப் போராட முடியும். ஆவிக்குரிய யுத்தத்தில் ஒரு கிறிஸ்தவ போர்ச்சேவகனின் சர்வாயுத வர்க்கம் ஒரே ஒரு தாக்கும் ஆயுதத்தை உள்ளடக்கியது, அது தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் பட்டயம் ஆகும் (எபேசியர் 6:17). வேதாகமத்தை நெருக்கமாக அறிவது பட்டயத்தை நம் கைகளில் வைக்கவும் மற்றும் சோதனைகளில் வெற்றிபெறவும் நமக்கு உதவும்.

32. இயேசு எப்போதாவது கோபமாக இருந்தாரா?

காசுக்காரர் மற்றும் மிருகங்களை விற்கிறவர்களை தேவாலயத்தை விட்டு புறம்பே துரத்திவிட்டு இயேசு சுத்தம் செய்தபோது, அவர் மிகுந்த உணர்ச்சியையும் கோபத்தையும் காட்டினார் (மத்தேயு 21:12-13; மாற்கு 11:15-18; யோவான் 2:13-22). இயேசுவின் உணர்ச்சி தேவனுடைய வீட்டின்பேரில் உண்டாயிருந்த "வைராக்கியம்" என்று விவரிக்கப்பட்டுள்ளது (யோவான் 2:17). அவருடைய கோபம் பரிசுத்தமானது மற்றும் முற்றிலும் நியாயமானது, ஏனெனில் அதன் மூலக்காரணம் தேவனுடைய பரிசுத்தம் மற்றும் ஆராதனை பற்றிய அக்கறையே ஆகும். இவை அசுத்தப்படுத்தப்பட்டு இடர்நிலையில் இருந்ததால், இயேசு விரைவான மற்றும் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்தார். இயேசு கப்பர்நகூமின் ஜெப ஆலயத்தில் இன்னொரு முறை கோபத்தைக் காட்டினார். பரிசேயர்கள் இயேசுவின் கேள்விகளுக்கு பதிலளிக்க மறுத்தபோது, "அவர்களுடைய இருதயகடினத்தினிமித்தம் அவர் விசனப்பட்டு, கோபத்துடனே சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்து" என்று வாசிக்கிறோம் (மாற்கு 3:5).

பல சமயங்களில், நாம் கோபத்தை ஒரு சுயநலமான, அழிவுகரமான உணர்ச்சியாக நினைக்கிறோம், அதை நம் வாழ்வில் இருந்து முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்றும் விரும்புகிறோம். இருப்பினும், இயேசுவே சில சமயங்களில் கோபமடைந்தார் என்பது கோபம் ஒரு உணர்ச்சியாக, ஒழுக்கம் மற்றும் ஒழுக்கம் இன்மை ஆகிய இரண்டையும் சாராத ஒன்று என்பதைக் குறிக்கிறது. இது புதிய ஏற்பாட்டில் வேறு இடங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. எபேசியர் 4:26 "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள், சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது" என்று அறிவுறுத்துகிறது. இங்கே கட்டளை என்னவென்றால் "கோபத்தைத் தவிர்ப்பது" (அல்லது அதை அடக்கவேண்டும் அல்லது புறக்கணிக்க

வேண்டும்) அல்ல, ஆனால் அதை முறையாக, சரியான நேரத்தில் கையாள வேண்டும் என்பதாகும். இயேசுவின் கோபத்தின் வெளிப்பாடுகள் பற்றிய பின்வரும் உண்மைகள் கவனிக்கப்பட வேண்டும்:

1) அவரது கோபத்திற்கு சரியான செயல் நோக்கம் இருந்தது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவர் சரியான காரணங்களுக்காக கோபமடைந்தார். இயேசுவின் கோபம் அவருக்கு எதிரான சிறு சிறு வாதங்களிலிருந்தோ அல்லது தனிப்பட்ட அவமானங்களினாலோ எழவில்லை. இதில் எந்தவித சுயநலமும் இல்லை.

2) அவரது கோபத்திற்கு சரியான கவனம் இருந்தது. அவர் தேவன் அல்லது மற்றவர்களின் "பலவீனங்கள்" மீது கோபப்படவில்லை. அவரது கோபம் பாவமான நடத்தை மற்றும் மெய்யான அநீதியைக் குறிவைத்தே இருந்தது.

3) அவரது கோபத்திற்கு சரியான அனுபந்தம் இருந்தது. மாற்கு 3:5 அவரது கோபத்தில் பரிசேயர்களின் நம்பிக்கை இல்லாமைக்கு எதிராக உள்ள அதீத மன வருத்தமாக இருந்தது என்று கூறுகிறது. இயேசுவின் கோபம் பரிசேயர்கள் மீதான அன்பு மற்றும் அவர்களின் ஆவிக்குரிய நிலை குறித்த அக்கறை ஆகியவற்றிலிருந்து தோன்றியது என்பது தெளிவாகிறது. இங்கே இயேசுவின் கோபத்தில், வெறுப்புக்கும் தவறான விருப்பத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

4) அவரது கோபத்திற்கு சரியான கட்டுப்பாடு இருந்தது. இயேசு தனது கோபத்தில் கூட தனது கட்டுப்பாட்டை மீறவில்லை அல்லது இழக்கவில்லை. அவர் தேவாலயத்தை சுத்தப்படுத்துவதை தேவாலயத் தலைவர்கள் விரும்பவில்லை (லூக்கா 19:47), ஆனால் அவர் பாவம் எதுவும் செய்யவில்லை. அவர் தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தினார்; அவரது உணர்ச்சிகள் அவரை கட்டுப்படுத்தவில்லை.

5) அவரது கோபத்திற்கு சரியான குறிப்பிட்ட காலம் இருந்தது. அவர் தனது கோபத்தை கசப்பானதாக மாற்ற அனுமதிக்கவில்லை; அவர் வெறுப்புணர்வை வைத்திருக்கவில்லை. அவர் ஒவ்வொரு சூழ்நிலையையும் சரியாகக் கையாண்டார், அவர் கோபத்தை நல்ல நேரத்தில் கையாண்டார்.

6) அவரது கோபத்திற்கு சரியான விளைவு இருந்தது. இயேசுவின் கோபம் தெய்வீக நடவடிக்கையின் தவிர்க்க முடியாத விளைவைக் கொண்டிருந்தது. இயேசுவின் கோபம், அவருடைய எல்லா உணர்ச்சிகளையும் போலவே, தேவனுடைய வார்த்தையால் கட்டுப்படுத்தப்பட்டது; இவ்வாறாக, இயேசுவின் பதில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றியது.

நாம் கோபம் கொள்ளும்போது, அடிக்கடி நமக்கு தவறான கட்டுப்பாடு அல்லது தவறான கவனம் இருக்கும். மேலே உள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரியங்களில் நாம் தோல்வியடைகிறோம். இது மனிதனின் கோபம், "நாம் யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயுமிருக்கக்கடவர்கள்; மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே" (யாக்கோபு 1:19-20). இயேசு மனிதனின் கோபத்தை வெளிப்படுத்தவில்லை, மாறாக தேவனுடைய சரியான மற்றும் நியாயமான கோபத்தையே வெளிப்படுத்தினார்.

33. உபரநிலை ஒற்றுமை என்றால் என்ன? இயேசு எப்படி ஒரே நேரத்தில் தேவனாகவும் மனிதனாகவும் இருநிலையில் இருக்க முடியும்?

உபரநிலை ஒற்றுமை என்பது எவ்வாறு தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து மனித தன்மையை எடுத்துக்கொண்டு, அதே வேளையில் தேவனாகவும் இருந்தார் என்பதை விவரிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. இயேசு எப்பொழுதும் தேவனாகவே இருந்தார் (யோவான் 8:58; 10:30), ஆனால் இப்பூமியில் அவதரித்தபோது, இயேசு மனிதனானார் (யோவான் 1:14). தெய்வீகத் தன்மையுடன் கூடுதலாக மனித தன்மையையும் கொண்டிருக்கும் இயேசு, தேவ-மனிதன் ஆவார். இயேசு கிறிஸ்து, ஒரேஒரு நபர், முழுமையான தேவன் மற்றும் முழுமையான மனிதன், இதுதான் உபரநிலை ஒற்றுமை ஆகும்.

இயேசுவின் இரண்டு தன்மைகளும் அதாவது தேவன் மற்றும் மனிதத் தன்மைகள் பிரிக்க முடியாதவையாகும். இயேசு எப்போதும் சதாகாலமும் தேவ-மனிதனாக, முழுமையான நிலையில் தேவன் மற்றும் முழுமையான நிலையில் மனிதனாக, ஒரு தனிநபரில் இரண்டு தனித்துவமான தன்மைகள் ஆகும். இயேசுவின் மனுஷீகமும் தெய்வீகமும் ஒன்றுக்கொன்று கலக்கவில்லை, ஆனால் இரண்டும் தனிப்பட்ட அடையாளத்தை இழக்காமல் ஒற்றுமையாக இருக்கின்றன. இயேசு சில நேரங்களில் மனித தன்மையின் வரம்புகளுடன் செயல்படுகிறார் (யோவான் 4:6; 19:28) மற்ற சமயங்களில் அவருடைய தெய்வீக வல்லமையின் வரம்புக்குள் இருக்கிறார் (யோவான் 11:43; மத்தேயு 14:18-21). இவ்விரண்டிலும், இயேசுவின் செயல்கள் அவருடைய ஒரே ஆள்தன்மையுள்ள நபரிடமிருந்து வருகின்றன. இயேசுவுக்கு இரண்டு தன்மைகள் இருக்கின்றன, ஆனால் ஒரே ஒரு ஆள்தன்மை.

உபபரநிலை ஒற்றுமையின் உபதேசம் என்பது ஒரே சமயத்தில் இயேசு எப்படி தேவனாகவும் மனிதனாகவும் இருக்க முடியும் என்பதை விளக்குவதற்கான ஒரு முயற்சியாகும். எனினும், முடிவான நிலையில் நாம் முழுமையாக அதனை புரிந்து கொள்ள முடியாத ஒரு உபதேசமாகும். தேவன் எவ்வாறு முழுமையாக செயல்படுகிறார் என்பதை நம்மால் முழுமையாக புரிந்துகொள்ள இயலாது. வரையறுக்கப்பட்ட மனதைக் கொண்டுள்ள மனிதர்களாகிய நாம் ஒரு எல்லையற்ற தேவனை முழுமையாக புரிந்துகொள்ள எதிர்பார்க்கக்கூடாது. இயேசு பரிசுத்த ஆவியானவர் மூலம் பிறந்த தேவனுடைய குமாரன் ஆவார் (லூக்கா 1:35). அதற்காக இயேசு கருவுற்றதற்கு முன்பாக இருக்கவில்லை என்கிற அர்த்தமல்ல. இயேசு எப்பொழுதும் இருந்தார் (யோவான் 8:58, 10:30). இயேசு கருவானபோது, தேவனாக இருப்பதோடு சேர்ந்து மனிதனானார் (யோவான் 1:1, 14).

இயேசு தேவனாகவும் மனிதனாகவும் இருக்கிறார். இயேசு எப்போதும் தேவன், ஆனால் அவர் மரியாளில் கருத்தரிக்கப்படும் வரை அவர் ஒரு மனிதனாக இல்லை. நம்முடைய போராட்டங்களில் நம்மோடு அடையாளம் காணும்படியாக இயேசு மனிதனானார் (எபிரெயர் 2:17) மேலும் முக்கியமாக, நம்முடைய பாவங்களுக்காக தண்டிக்கப்படுவதற்காக அவர் சிலுவையில் மரித்தார் (பிலிப்பியர் 2:5-11). சுருக்கமாக கூறினால், உபபரநிலை ஒற்றுமை என்பது இயேசு முழுமையான நிலையில் தேவனாகவும் முழுமையான நிலையில் மனிதனாகவும் மற்றும், இரண்டு தன்மைகளிலும் எந்த கலவையோ அல்லது இயற்கையாக நீர்த்துப்போகவோ இல்லை, அவர் ஒரே ஆள்தன்மையில் என்றென்றுமாய் ஐக்கியப்பட்டவர் ஆவார்.

34. இயேசுவின் நாமத்தில் ஜெபிப்பது என்றால் என்ன?

யோவான் 14:13-14 வரையிலுள்ள வசனங்களில், இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கவேண்டுமென்பதைக் குறித்து போதிக்கப்பட்டுள்ளது, "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்." சிலர் இந்த வசனத்தை தவறாக பயன்படுத்துகிறார்கள், அதாவது இந்த வசனத்தை தவறாகப் புரிந்து கொண்டு, "இயேசுவின் நாமத்தில்" என்று ஜெபத்தை முடித்தால், நாம் கேட்ட எல்லாவற்றையும் எபோழுதும் தேவன் நமக்கு கொடுப்பார் என்று எண்ணுகின்றார்கள். இது "இயேசுவின் நாமம்" என்பதை ஏதோ மந்திரசூத்திரமாகப் பயன்படுத்துகிறதை போலாகும். இது வேதாகமத்திற்கு உட்பட்டதல்ல.

இயேசுவின் நாமத்தில் ஜெபிப்பது என்பது அவருடைய அதிகாரத்தோடு நமது ஜெபங்களுக்கு பதில் கொடுக்கும்படி பிதாவானவரிடம் விண்ணப்பம் செய்தலாகும், காரணம் நாம் அவரது குமாரனான "இயேசுவின்" நாமத்தில் செல்லுகிறோம். இயேசுவின் நாமத்தில் ஜெபிப்பது என்பது, தேவனுடைய சித்தத்தின்படியாக ஜெபிக்கிறதாகும், "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படிகேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 5:14-15). இயேசுவின் நாமத்தில் ஜெபிப்பது என்பது இயேசுவை

மகிமைப்படுத்தும் மற்றும் கனப்படுத்தும் காரியங்களுக்காக ஜெபிப்பதாகும்.

ஜெபத்தின் முடிவில் "இயேசுவின் நாமத்தில்" என்று சொல்வது ஒரு மந்திர சூத்திரமல்ல. நாம் ஜெபத்தில் கேட்பது அல்லது சொல்லுவது தேவனுடைய மகிமைக்காக அல்லது அவரின் சித்தப்படி இல்லாதிருக்குமானால், "இயேசுவின் நாமத்தில்" என்று நாம் சொல்வது அர்த்தமற்றதாய் இருக்கும். கபடற்ற நிலையில் இயேசுவின் நாமத்தில் ஜெபிப்பதும் தேவனுடைய மகிமைக்காக ஜெபிப்பதுமே முக்கியமானது. ஜெபத்தில் பயன்படுத்தும் வார்த்தைகள் முக்கியம் அல்ல, ஜெபத்தின் நோக்கமே முக்கியம். தேவனின் சித்தத்திற்கு உட்பட்டு ஜெபிப்பதே இயேசுவின் நாமத்தில் ஜெபிப்பதற்கு சாரம்சமாகும்.

35. இயேசு ஏன் உவமைகளில் போதித்தார்?

ஒரு உவமை என்பது பரலோக அர்த்தமுள்ள ஒரு பூமிக்குரிய கதை என்று கூறப்பட்டுள்ளது. கர்த்தராகிய இயேசு ஆழமான, தெய்வீக சத்தியங்களை விளக்கும் வழிமுறையாக அடிக்கடி உவமைகளைப் பயன்படுத்தினார். இது போன்ற கதைகள் எளிதில் நினைவில் வைக்கப்படுகின்றன, கதாபாத்திரங்கள் தைரியமானவை, மற்றும் பொருள் நிறைந்த அடையாளங்களாகும். யூத மதத்தில் போதனைகளில் உவமைகள் பயன்படுத்துவது ஒரு பொதுவான ம்சுரையாகும். இயேசுவின் ஊழியத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு முன், இயேசு அனைவருக்கும் தெரிந்த பொதுவான விஷயங்களைப் (உப்பு, அப்பம், செம்மறியாடு, முதலியன) பயன்படுத்தி பல விவரங்களை ஒப்புமைகளைப் பயன்படுத்தி கூறினார், மேலும் அவருடைய போதனையின் பின்னணியில் அவற்றின் பொருள் மிகவும் தெளிவாக இருந்தது. உவமைகளுக்கு அதிக விளக்கம் தேவைப்பட்டது, அவருடைய ஊழியத்தின் ஒரு கட்டத்தில், இயேசு உவமைகளை பிரத்தியேகமாகப் பயன்படுத்தி கற்பிக்கத் தொடங்கினார்.

கேள்வி என்னவென்றால், இயேசு ஏன் தன் உவமைகளின் பொருளைப் பற்றி அறிந்துகொள்ள பெரும்பாலானவர்களை ஆச்சரியப்பட அனுமதிக்கிறார்? இதன் முதல் உதாரணம் விதை மற்றும் நிலங்களைக் குறித்த உவமையை அவர் கூறுவதில் கண்டு கொள்ளலாம். அவர் இந்த உவமையை விளக்குவதற்கு முன்பாக, அவர் தனது சீஷர்களை மட்டும் கூட்டத்திலிருந்து தனியாக விலக்கினார். அப்பொழுது, சீஷர்கள் அவரிடத்தில் வந்து: "ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர்?" என்று கேட்டார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. அவர்களுக்கோ அருளப்படவில்லை. உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவன் எவனோ அவனிடத்திலிருந்து

உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும் அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்துகொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால், நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன். ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறுகிறது; அதாவது:

காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள்; கண்ணாரக்கண்டும் அறியாதிருப்பீர்கள். இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே. உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள். அநேக தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்களென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 13:10-17).

இந்த கட்டத்தில் இருந்து இயேசுவின் ஊழியத்தில், அவர் உவமைகளில் பேசியபோது, அவர் அவற்றை தனது சீடர்களுக்கு மட்டுமே விளக்கினார். ஆனால் அவருடைய செய்தியை தொடர்ச்சியாக நிராகரித்தவர்கள் அவர்களுடைய ஆவிக்குரிய குருட்டுத்தன்மையில் அவருடைய அர்த்தத்தைப் பற்றி ஆச்சரியப்பட்டார்கள். "கேட்கிறதற்கு காதுகள்" உள்ளவர்களுக்கும் அவிசுவாசத்தில் நிலைத்திருப்பவர்களுக்கும் இடையே அவர் ஒரு தெளிவான வேறுபாட்டை ஏற்படுத்தினார் அதாவது எப்போதும் கேட்டும், ஆனால் உண்மையில் உணராமல் மற்றும் "எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிறார்கள்" (2 தீமோத்தேயு 3:7). சீஷர்களுக்கு ஆவிக்குரிய பகுத்தறிவு வரம் வழங்கப்பட்டது, இதன் மூலம் ஆவியின்

காரியங்கள் அவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டன. அவர்கள் இயேசுவிடம் சத்தியத்தை ஏற்றுக்கொண்டதால், அவர்களுக்கு அதிக சத்தியங்கள் வழங்கப்பட்டது. பரிசுத்த ஆவியின் வரம் கொடுக்கப்பட்ட விசுவாசிகளின் எல்லா சத்தியங்களும் இன்றும் பொருந்தும், அவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிறார் (யோவான் 16:13). அவர் சத்தியத்தின் வெளிச்சத்திற்கு நம் கண்களையும், நித்திய ஜீவனின் இனிமையான வார்த்தைகளுக்கு நம் காதுகளையும் திறந்திருக்கிறார்.

எல்லா காதுகளுக்கும் சத்தியம் இனிமையான இசை அல்ல என்பதை நம்முடைய கர்த்தராகிய இயேசு புரிந்து கொண்டார். எளிமையாகச் சொன்னால், தேவனுடைய ஆழமான காரியங்களில் ஆர்வம் அல்லது அக்கறை இல்லாதவர்கள் இருக்கிறார்கள். ஏன், அவர் உவமைகளில் பேசினார்? தேவனுக்கு உண்மையான பசி உள்ளவர்களுக்கு, உவமையானது தெய்வீக சத்தியங்களை உணர்த்துவதற்கான பயனுள்ள மற்றும் மறக்கமுடியாத முகாந்தரம் ஆகும். நம்முடைய கர்த்தரின் உவமைகள் மிகச் சில சொற்களில் பெரும் உண்மைகளைக் கொண்டிருக்கின்றன அதாவது மேலும் அவருடைய உவமைகள், உருவங்கள் நிறைந்தவை, எளிதில் மறக்க முடியாததாக இருக்கிறது. எனவே, உவமை காது உள்ளவர்களுக்கு ஆசீர்வாதம். ஆனால் மந்தமான இருதயங்கள் மற்றும் காதுகள் அடைத்துக்கொண்டு மெதுவாகக் கேட்பவர்களுக்கு, உவமை ஒரு நியாயத்தீர்ப்பின் அறிவிப்பாகும்.

36. இயேசுவும் சாத்தானும் சகோதரர்களா?

இல்லை, இயேசுவும் சாத்தானும் சகோதரர்கள் அல்ல. இயேசு தேவன் மற்றும் சாத்தான் அவரது சிருஷ்டிப்புகளில் ஒன்று. இயேசுவும் சாத்தானும் சகோதரர்கள் அல்ல என்பது மட்டுமல்ல, இரவும் பகலும் வித்தியாசமானது போல அவர்களும் முற்றிலும் வேறுபட்டவர்கள். இயேசு மாம்சத்தில் வந்த தேவன் அவதாரமாக இருக்கிறார்- நித்தியமானவர், அனைத்தையும் அறிந்தவர் மற்றும் சர்வவல்லமையுள்ளவர், சாத்தான் தேவனுடைய நோக்கங்களுக்காக தேவனால் உருவாக்கப்பட்ட ஒரு விழுந்துபோன தேவதூதன். இயேசுவும் சாத்தானும் "ஆவி சகோதரர்கள்" என்ற போதனை மோர்மன்களின் (பிந்தைய நாள் புனிதர்கள்) பல தவறான போதனைகளில் ஒன்றாகும், மேலும் ஓரளவிற்கு யெகோவாவின் சாட்சிகளும் கூட இதில் உட்பட்டவர்கள் தான். இந்த இரண்டு குழுக்களும் முறையாக தவறான சமய வழிபாட்டு முறைகள் என்று முத்திரை குத்தப்படுகின்றன, ஏனெனில் அவை மிகவும் முக்கியமான கிறிஸ்தவ கோட்பாட்டை மறுக்கின்றன. அவர்கள் இயேசு, தேவன் மற்றும் இரட்சிப்பு போன்ற கிறிஸ்தவ சொற்களைப் பயன்படுத்துகையில், அவர்கள் மிக அடிப்படையான மற்றும் அத்தியாவசியமான கிறிஸ்தவக் கோட்பாடுகளில் மதங்களுக்கு எதிரான கருத்துக்களையும் போதனைகளையும் கொண்டுள்ளனர். (இன்றைய பெரும்பாலான மோர்மன்கள் இயேசுவையும் சாத்தானையும் சகோதரர்கள் என்று நம்புவதை கடுமையாக மறுப்பார்கள் என்பதை நினைவில் கொள்ளவும். இருப்பினும், இந்த போதனையானது ஆரம்பகால மோர்மன்களின் நம்பிக்கையாக இருந்தது).

இயேசுவும் சாத்தானும் "ஆவி சகோதரர்கள்" என்ற போதனை, மோர்மன்களின் தவறான புரிதல் மற்றும் வேதாகமத்தின் திரிபு மற்றும் அவர்கள் அதிகாரம் வாய்ந்ததாகக் கருதும் வேதாகமத்திற்கு

அப்பாற்பட்ட சில போதனைகளிலிருந்து பிறந்ததாகும். எளிமையாகச் சொல்வதென்றால், நீங்கள் எந்த விதமான தெளிவான விளக்கக் கொள்கைகளைப் பயன்படுத்தி வேதாகமத்தைப் படித்து, இயேசுவும் சாத்தானும் "ஆவி சகோதரர்கள்" என்கிற எண்ணத்தை விட்டுவிட முடியாது. மோர்மன்கள் அல்லது பிற வழிபாட்டு முறைகள் நம்புவது போல், இயேசு முழுமையான தேவன் என்று வேதம் தெளிவாக கூறுகிறது. தேவன் தம் சிருஷ்டிக்கு அப்பாற்பட்டவர் என்று வேதம் மிகத் தெளிவாகக் கூறுகிறது, அதாவது சிருஷ்டிகராகிய கிறிஸ்துவுக்கும் அவருடைய சிருஷ்டிப்பான சாத்தானுக்கும் இடையே எந்த ஒப்பீடும் இல்லை.

இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனுக்கு அவருடைய பல மனைவிகளில் ஒருவருடன் பரலோகத்தில் பிறந்த முதல் "ஆவி குழந்தை" என்று மோர்மன்கள் நம்புகிறார்கள். இயேசுவை ஒரே மெய்யாயான தேவன் என்று ஒப்புக்கொள்வதற்குப் பதிலாக, அவர்கள் ஒரு நாள் தேவர்களாக மாறுவதைப் போலவே, அவர் தேவனாக மாறினார் என்று அவர்கள் நம்புகிறார்கள். மோர்மன் கோட்பாட்டின் படி, தேவனுடைய "ஆவி குழந்தைகளில்" முதன்மையானவராக, இயேசுவின் இரண்டாவது "தேவனுடைய" மற்றும் "ஆவி சகோதரர்" சாத்தான் அல்லது லூசிபர் மீது முதன்மையானவர். அவர்கள் கொலோசெயர் 1:15 ஐ தங்கள் "ஆதார நூல்களில்" ஒன்றாகப் பயன்படுத்துவது முரண்பாடாக உள்ளது: "அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்." ஆயினும், அவர்கள் வசனம் 16 ஐப் புறக்கணிக்கிறார்கள், அங்கு "அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது."

சிங்காசனங்கள், கர்த்தத்துவங்கள், துரைத்தனங்கள், அதிகாரங்கள் எல்லாவற்றிலும் சாத்தானும் அவனுடைய பிசாசுகளும் அடங்கும்.

சாத்தானும் இயேசுவும் "ஆவிக்குரிய சகோதரர்கள்" என்று நம்புவதற்கு, வேதத்தின் தெளிவான போதனைகளை ஒருவர் மறுக்க வேண்டும். எல்லாவற்றையும் படைத்தவர் இயேசு கிறிஸ்து என்றும், திரியேகத் தேவனின் இரண்டாவது நபரான கிறிஸ்து முழுமையாகவும் தனித்துவமாகவும் தேவன் என்று வேதம் மிகவும் தெளிவாக உள்ளது. வேதாகமத்தின் பல பத்திகளில் இயேசு தன்னை தேவன் என்று கூறினார். யோவான் 10:30 இல் இயேசு, "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என்றார். இயேசு தன்னை மற்றொரு சிறிய தேவன் என்று கூறவில்லை. அவர் முழுமையான தேவன் என்று அறிவித்தார். யோவான் 1:1-5 ல் இயேசு ஒரு சிருஷ்டிக்கப்பட்டவர் அல்ல என்பதும் அவரே எல்லாவற்றையும் சிருஷ்டித்தார் என்பதும் தெளிவாகிறது. "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" (யோவான் 1:3). இது எவ்வளவு தெளிவாக இருக்கிறது? "எல்லாம்" என்பது அது என்னக் கூறுகிறது என்பதை தெளிவாகக் குறிக்கிறது, அதாவது மற்ற தேவதூதர்கள் மற்றும் பிசாசுகளைப் போலவே சாத்தான் ஒரு தேவதூதனாகத் தானும் உருவாக்கப்பட்டது இதில் அடங்கும். சாத்தான் தேவனுக்கு எதிராகக் கலகம் செய்த ஒரு வீழ்ந்துபோன தேவதூதன் என்றும் இயேசுவை தேவன் என்றும் வேதம் வெளிப்படுத்துகிறது. சாத்தானுக்கும் இயேசுவுக்கும் இடையே இருக்கும் ஒரே உறவு, சிருஷ்டிகர் மற்றும் சிருஷ்டிப்பு, இயேசு கிறிஸ்து நீதியுள்ள நியாயாதிபதி மற்றும் சாத்தான் பாவமுள்ளவனாக உருவாக்கப்பட்டவன்.

மோர்மன்களைப் போலவே, யேகோவாவின் சாட்சிகளும் இயேசுவும் சாத்தானும் ஆவிக்குரிய சகோதரர்கள் என்று கற்பிக்கிறார்கள். சில மோர்மன்களும் யேகோவாவின் சாட்சிகளும் சில சமயங்களில் இந்த போதனையை புறக்கணிக்க முயற்சி செய்யலாம்,

ஏனெனில் இது வேதாகமம் உண்மையில் என்ன சொல்கிறதோ அதற்கு எதிரானது, இருப்பினும் இது இந்த அமைப்புகள் நம்புவது மற்றும் அவர்களின் அதிகாரப்பூர்வ கோட்பாட்டின் ஒரு பகுதியாகும்.

இயேசுவும் லூசிஃபரும் "ஏலோஹிமின் ஆவிக்குரியப் பிள்ளைகள்" என்பது மட்டுமல்லாமல், மனிதர்களும் ஆவிக்குரியக் குழந்தைகள் என்று மோர்மோன்கள் நம்புகிறார்கள். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், "தேவன், தேவதூதர்கள் மற்றும் மனிதர்கள் அனைவரும் ஒரே இனம், ஒரே வகை, ஒரு பெரிய குடும்பம்" என்று அவர்கள் நம்புகிறார்கள். அதனால்தான் தாங்களும் ஒரு நாள் இயேசுவைப் போல அல்லது பிதாவாகிய தேவனாக மாறுவார்கள் என்று அவர்கள் நம்புகிறார்கள். தேவனுக்கும் அவருடைய சிருஷ்டிப்புக்கும் இடையே உள்ள தெளிவான வேறுபாட்டை வேதத்தில் பார்ப்பதற்குப் பதிலாக, அவர்கள் ஒரு நாள் தாங்களாகவே தேவனாக இருப்பார்கள் என்று நம்புகிறார்கள். நிச்சயமாக இது ஏதேன் தோட்டத்தில் இருந்து சாத்தான் நமக்கு சொல்லி வரும் அதே பழைய பொய் (ஆதியாகமம் 3:15). தேவனுடைய சிங்காசனத்தை அபகரிக்கும் ஆசை மனிதர்களின் இருதயங்களில் உள்ளது.

மத்தேயு 16:15-ல் இயேசு முக்கியமான கேள்வியைக் கேட்டார்: "நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்கள்?" இது இரட்சிப்புக்கு இன்றியமையாத ஒரு கேள்வி மற்றும் மோர்மோன்களும் யேகோவாவின் சாட்சிகளும் இதைத் தவறாகப் புரிந்துகொள்கின்றனர். இயேசு சாத்தானின் ஆவி சகோதரன் என்ற அவர்களின் பதில் தவறானது. இயேசு தேவனுடைய குமாரன், அவரில் தெய்வீகத்தின் முழுமையாக சரீரத்தில் வாசம்பண்ணுகிறது (கொலோசெயர் 2:9). அவர் சாத்தானை உருவாக்கினார், ஒரு நாள் அவர் தேவனுக்கு எதிரான கலகத்திற்காக நியாயமான தண்டனையாக சாத்தானை அக்கினிக் கடலில் தள்ளுவார். துரதிர்ஷ்டவசமாக அந்த நியாயத்தீர்ப்பு நாளில் சாத்தானின் பொய்களில் வீழ்ந்தவர்களும் சாத்தானுடனும் அவனுடைய பிசாசுகளுடனும் அக்கினிக் கடலிலேத்

தள்ளப்படுவார்கள். மோர்மோன்கள் மற்றும் யேகோவாவின் சாட்சிகளின் தேவன் தன்னை வேதத்தில் வெளிப்படுத்திய தேவன் அல்ல. அவர்கள் மனந்திரும்பி, ஒரே உண்மையான தேவனைப் புரிந்துகொண்டு வணங்காத வரை, அவர்களுக்கு இரட்சிப்பின் நம்பிக்கை இல்லை.

37. இயேசு சைவ உணவு உண்பவராக இருந்தாரா? ஒரு கிறிஸ்தவர் சைவ உணவு உண்பவராக இருக்க வேண்டுமா?

இயேசு சைவ உணவு உண்பவராக இருக்கவில்லை. இயேசு மீன் (லூக்கா 24:42-43) மற்றும் ஆட்டுக்குட்டியின் இறைச்சி (லூக்கா 22:8-15) சாப்பிடுவதை வேதாகமம் பதிவு செய்கிறது. இயேசு அற்புதம் செய்து பெரும் ஜனக்கூட்டங்களுக்கு மீன் மற்றும் அப்பத்தை அளித்தார், அவர் ஒரு சைவ உணவு உண்பவர் என்றால் அவர் இப்படி ஒரு விசித்திரமான விஷயத்தை எங்ஙனம் செய்யக்கூடும் (மத்தேயு 14:17-21). அப்போஸ்தலனாகிய பேதுருவுக்கு ஒரு தரிசனத்தில், விலங்குகள் உட்பட எல்லா உணவுகளையும் சுத்தமாக இருப்பதாக இயேசு அறிவித்தார் (அப்போஸ்தலர் 10:10-15). நோவாவின் காலத்தில் ஏற்பட்ட வெள்ளத்திற்குப் பிறகு, இறைச்சி சாப்பிட தேவன் மனிதகுலத்திற்கு அனுமதி அளித்தார் (ஆதியாகமம் 9:2-3). தேவன் இந்த அனுமதியை ஒருபோதும் ரத்து செய்யவில்லை.

ஒரு கிறிஸ்தவர் சைவ உணவு உண்பதில் தவறில்லை. இறைச்சி சாப்பிட வேதாகமம் கட்டளையிடவில்லை. இறைச்சி சாப்பிடுவதைத் தவிர்ப்பதில் தவறில்லை. வேதாகமம் என்ன சொல்கிறது என்றால், இந்த விவகாரம் குறித்த நம்முடைய நம்பிக்கையை மற்றவர்கள் மீது கட்டாயப்படுத்தக்கூடாது அல்லது அவர்கள் சாப்பிடுவது அல்லது சாப்பிடாதவற்றால் நாம் தீர்ப்பளிக்கக்கூடாது. ரோமர் 14:2-3 நமக்கு சொல்கிறது, "ஒருவன் எந்தப் பதார்த்தத்தையும் புசிக்கலாமென்று நம்புகிறான்; பலவீனனோ மரக்கறிகளை மாத்திரம் புசிக்கிறான். புசிக்கிறவன் புசியாதிருக்கிறவனை அற்பமாயெண்ணாதிருப்பானாக; புசியாதிருக்கிறவனும் புசிக்கிறவனைக் குற்றவாளியாகத் தீர்க்காதிருப்பானாக; தேவன் அவனை ஏற்றுக்கொண்டாரே."

மீண்டும், ஜலப்பிரளயத்திற்குப் பிறகு இறைச்சி சாப்பிட தேவன் மனிதகுலத்திற்கு அனுமதி அளித்தார் (ஆதியாகமம் 9:3). பழைய ஏற்பாட்டுச் சட்டத்தில், சில உணவுகளை சாப்பிட வேண்டாம் என்று இஸ்ரவேல் தேசத்துக்குக் கட்டளையிடப்பட்டது (லேவியராகமம் 11:1-47), ஆனால் ஒருபோதும் இறைச்சி சாப்பிடுவதற்கு எதிராக எந்த ஒரு கட்டளையும் இல்லை. எல்லா வகையான இறைச்சிகள் உட்பட எல்லா உணவுகளையும் சுத்தமாக இருப்பதாக இயேசு அறிவித்தார் (மாற்கு 7:19). எதையும் போலவே, ஒவ்வொரு கிறிஸ்தவரும் அவன் / அவள் என்ன சாப்பிட வேண்டும் என்று வழிகாட்டுதலுக்காக ஜெபிக்க வேண்டும். நாம் எதைச் சாப்பிட முடிவு செய்தாலும் அதை வழங்கியதற்காக தேவனுக்கு நன்றி செலுத்தும்வரை அது ஏற்றுக்கொள்ளத்தக்கது (1 தெசலோனிக்கேயர் 5:18) ஆகும். "ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்" (1 கொரிந்தியர் 10:31).

38. யூதாஸ் இயேசுவை ஏன் காட்டிக் கொடுத்தார்?

யூதாஸ் ஏன் இயேசுவைக் காட்டிக் கொடுத்தார் என்று நாம் உறுதியாக இந்த காரியந்தான் என்று கூற முடியாது என்றாலும், சில விஷயங்கள் உறுதியாக உள்ளன. முதலாவதாக, யூதாஸ் பன்னிரண்டு பேரில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் (யோவான் 6:64), எல்லா வேதப்பூர்வ ஆதாரங்களும் இயேசுவை தேவன் என்று அவன் ஒருபோதும் நம்பவில்லை என்பதாக சுட்டிக்காட்டுகின்றன. இயேசு மேசியா என்று அவர் நம்பவில்லை (யூதாஸ் புரிந்து கொண்டபடி). இயேசுவை "ஆண்டவர்" என்று அழைத்த மற்ற சீடர்களைப் போலல்லாமல், யூதாஸ் இந்த தலைப்பை இயேசுவுக்கு ஒருபோதும் பயன்படுத்தவில்லை, அதற்கு பதிலாக அவரை "ரபீ" என்று அழைத்தார், இது இயேசுவை ஒரு ஆசிரியரைத் தவிர வேறில்லை என்று ஒப்புக் கொண்டது ஆகும். மற்ற சீஷர்கள் சில சமயங்களில் விசுவாசத்தையும் உண்மையையும் பெரிதும் செய்தார்கள் (யோவான் 6:68; 11:16), யூதாஸ் ஒருபோதும் அவ்வாறு செய்யவில்லை, அமைதியாக இருந்ததாகத் தெரிகிறது. இயேசுவின் மீதான இந்த நம்பிக்கையின்மையே கீழே பட்டியலிடப்பட்டுள்ள மற்ற எல்லா கருத்தாய்வுகளுக்கும் அடித்தளமாகும். அது நமக்கும் பொருந்தும். இயேசுவை தேவனுடைய அவதாரம் என்று நாம் அங்கீகரிக்கத் தவறினால், நம்முடைய பாவங்களுக்கு மன்னிப்பையும், அதனுடன் வரும் நித்திய இரட்சிப்பையும் வழங்கக்கூடிய ஒரே ஒருவர் என்பதை விசுவாசிக்க தவறினால் - தேவனைப் பற்றிய தவறான பார்வையில் இருந்து உருவாகும் பல சிக்கல்களுக்கு நாம் உட்படுவோம்.

இரண்டாவதாக, யூதாஸுக்கு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை இல்லை என்பது மட்டுமல்லாமல், இயேசுவோடு தனிப்பட்ட உறவும் இல்லை. சமநிலை நற்செய்திகள் பன்னிரண்டு பேர்களைப் பட்டியலிடும்போது, அவை எப்போதும் ஒரே மாதிரியான பொதுவான மாறுபாடுகளுடன் பட்டியலிடப்படுகின்றன (மத்தேயு 10: 2-4; மாற்கு

உயிர்த்தெழுதலுக்குப் பிறகு இயேசுவின் உடல் நிலை இருந்தது மயக்கநிலைக் கோட்பாடு தவறானது என்பதற்கு வேறு சான்றுகள் உள்ளன. ஒவ்வொரு தோற்றத்திலும், இயேசுவின் உடல் மகிமைப்படுத்தப்பட்ட நிலையில் இருப்பதாகக் காட்டப்பட்டது, மேலும் அவர் சிலுவையில் அறையப்பட்டதற்கான சான்றாக எஞ்சியிருக்கும் அடையாளங்கள் தோமாவிடம் அவர் யார் என்பதற்கான சான்றாகத் தொடும்படி கேட்டுக் கொண்டார். இயேசு அனுபவித்ததை அனுபவித்த எவரும் உடல்ரீதியாக குணமடைய மாதங்கள் தேவைப்பட்டிருக்கும். இயேசுவின் உடலில் அவரது கைகளிலும் கால்களிலும் நகங்களின் அடையாளங்கள் மட்டுமே இருந்தன. சிலுவையில் அறையப்பட்ட பிறகு இயேசுவின் உடல் ஆயத்தம்பண்ணப்பட்ட விதம் கோட்பாட்டை மறுப்பதற்கான கூடுதல் சான்றாகும். இயேசு மட்டும் சுயநினைவின்றி மயக்கநிலையில் இருந்திருந்தால், அவர் ஒரு மனிதனாக

இருந்திருந்தால், அவர் போர்த்தப்பட்டிருந்த துணியிலிருந்து தப்பிக்க இயலாது. இயேசுவின் உடலை பெண்கள் பார்த்த விதம் அவருடைய மரணத்திற்கு கூடுதலான சான்றாகும். ஓய்வுநாளின் ஆரம்பத்திற்கு முன்னதாக அவருடைய உடலைத் ஆயத்தம்பண்ண அவர்களுக்கு சிறிது நேரம் இருந்ததால், வாரத்தின் முதல் நாளில் அவரது உடலை கந்தவர்க்கமிட்டு தைலங்களால் அபிஷேகம் செய்வதற்காக அவர்கள் கல்லறைக்கு வந்தனர். கோட்பாடு கூறுவது போல் இயேசு வெறும் மயக்கத்தில் இருந்திருந்தால், அவருடைய உயிர்த்தெழுதலுக்கு உதவும் மருத்துவக் கருவிகளை பெண்கள் கொண்டு வந்திருப்பார்கள்.

மயக்கநிலைக் கோட்பாட்டின் நோக்கம் இயேசுவின் மரணத்தை மறுப்பது அல்ல, மாறாக, அது அவரது உயிர்த்தெழுதலை நிராகரிக்க முயல்கிறது. இயேசு உயிர்த்தெழவில்லை என்றால், அவர் தேவன் இல்லை. இயேசு உண்மையிலேயே மரித்து உயிர்த்தெழுந்தார் என்றால், மரணத்தின் மீது உள்ள அவருடைய வல்லமை அவர் மெய்யாகவே தேவனுடைய குமாரன் என்பதை நிரூபிக்கிறது. சான்றுகள் தீர்ப்பைக் கோருகின்றன: இயேசு உண்மையிலேயே சிலுவையில் மரித்தார், இயேசு உண்மையிலேயே மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார்.

55. இயேசு வெள்ளிக்கிழமை சிலுவையில் அறையப்பட்டாரா? அப்படியானால், அவர் ஞாயிற்றுக்கிழமை உயிர்த்தெழுந்திருக்க, எப்படி மூன்று நாட்கள் கல்லறையிலிருந்தார்?

இயேசு வாரத்தின் எந்த நாளில் சிலுவையில் அறையப்பட்டார் என்று குறிப்பிட்டு வேதாகமத்தில் தெளிவாக கூறவில்லை. அநேகரால் பெரும்பாலும் நம்பப்படுகிற இரண்டு கருத்துப்பாங்குகள் இருக்கிறது, அதாவது புதன்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை ஆகும். சிலர் இந்த கருத்துக்களையும் ஒருமித்து ஆராய்ந்து வியாழக்கிழமை என்றும் விவாதிக்கிறார்கள்.

இயேசு மத்தேயு 12:40-ல் ''யோனா இரவும் பகலும் மூன்று நாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்'' என்று கூறுகிறார். வெள்ளிக்கிழமைத்தான் சிலுவையில் அறையப்பட்டார் என்று வாதிடுவோர் அவர்களுடைய கருத்துக்கு ஏற்கக்கூடிய வகையில் இயேசு மூன்று நாட்கள் கல்லறையில் இருந்தார் அதற்கான காரணங்கள் உள்ளன என்று கூறுகிறார்கள். முதல் நூற்றாண்டு யூதர்களுடைய மனதில், ஒரு நாளின் ஒரு பகுதி ஒரு முழு நாளாக கருதப்பட்டது. இயேசு வெள்ளிக்கிழமை ஒரு பகுதி கல்லறையில் இருந்தார். பின்பு சனிக்கிழமை முழுவதும் மற்றும் ஞாயிற்றுக்கிழமையின் ஒரு பகுதி - இவ்வாறு அவர் மூன்று நாள் கல்லறையில் இருந்திருப்பார் என்று கருதப்படுகின்றது. வெள்ளிக்கிழமைத்தான் சிலுவையில் அறையப்பட்டார் என்பதற்கு பிரதானமான விவாதங்களில் ஒன்று மாற்கு 15:42ல் காண்கிறோம், அதாவது ''ஓய்வுநாளுக்கு முந்தினநாள்'' என்று குறிப்பிட்டிருப்பது ஒரு முதன்மையான வாதமாக இருக்கிறது. அதாவது சனிக்கிழமை,

வாரத்தின் ஓய்வுநாளானால், சிலுவையில் அறையப்பட்டது வெள்ளிக்கிழமையாகத் தானே இருக்க வேண்டும். வெள்ளிக்கிழமைத்தான் என்ற மற்றொரு வாதத்தில் மத்தேயு16:21 மற்றும் லூக்கா 9:22 இயேசு மூன்றாவது நாள் உயிர்தெழுவார் என்று போதிக்கிறது. அவர் கல்லறையில் மூன்று இரவும் பகலும் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. சில மொழிப்பெயர்ப்புகள் 'மூன்றாம் நாளில்' என்று உபயோகிக்கப்பட்டுள்ளது. எல்லோரும் ''மூன்றாம் நாளில்'' என்று மொழிப்பெயர்க்கப்பட்டதை சிறந்தது என்று ஏற்றுக் கொள்வதில்லை. மேலும் மாற்கு 8:31 ''மூன்று நாளைக்குப்பின்பு'' இயேசு உயிர்தெழுவார் என்று கூறுகிறது.

வியாழக்கிழமை என்ற வாதம் வெள்ளிக்கிழமையின் கருத்தை விரிவாக்கி கிறிஸ்துவின் அடக்கத்திலிருந்து ஞாயிற்றுக்கிழமை காலைவரை அநேகக் காரியங்கள் நடக்கின்றன. (அதாவது இருபதிற்கும் மேற்பட்ட) வெள்ளிக்கிழமை சாயங்காலத்திலிருந்து ஞாயிற்றுக்கிழமை காலைவரை ஆகும். வியாழக்கிழமை என்று கூறுபவர்கள் வெள்ளிக்கிழமைக்கும் ஞாயிற்றுக்கிழமைக்கும் இடையே ஒரே ஒரு முழு நாள் தான், அதுவும் சனிக்கிழமை யூதருடைய ஓய்வுநாள். இன்னொரு நாள் அல்லது இரண்டு நாட்கள் என்கிற விளக்கம் மற்ற விவாதத்தை நீக்கிப்போடுகிறது. வியாழக்கிழமை என்று வாதிடுவோர் இதை விளக்கமாக கூறுகின்றனர். ஒரு வேளை உங்கள் நண்பரை நீங்கள் திங்கட்கிழமை மாலையிலிருந்து பார்க்கவில்லை என்றால், அடுத்து அவரை வியாழன் காலையில்தான் பார்க்கிறீர்கள் என்றால் நீங்கள் என்ன சொல்வீர்கள்'' நான் உங்களை மூன்று தினங்களாக பார்க்கவில்லையே'' என்று, அது சரியாக 60 மணி நேரமாக (2.5 நாட்கள்) இருந்தாலும் ஒரு வேளை வியாழக்கிழமை இயேசு சிலுவையில் அறையப்பட்டிருந்தால் இந்த விளக்கம் மூன்று நாட்கள் என்று கூறுகிறது.

புதன்கிழமை என்ற கருத்தையுடையவர்கள் அந்த வாரத்தில் இரண்டு ஓய்வுநாட்கள் இருந்ததாக கூறுகிறார்கள். முதல் ஓய்வு நாள் (இது சிலுவையில் அறையப்பட்ட அன்று சாயங்காலத்தில் (மாற்கு 15:42, லூக்கா 23:52-54) ஒரு ஸ்திரீ நளதங்களை வாங்கினாள். இது ஓய்வு நாளுக்குப் பிறகு நடந்தது. (மாற்கு 16:1) புதன்கிழமை என்ற 'ஓய்வுநாள்' என்பது பஸ்கா (லேவியராகமம் 16:29-31, 23:24-32,39) பரிசுத்த நாட்கள் என்பது வாரத்தின் ஏழாவது நாளாக சொல்லப்படவில்லை, அது ஓய்வுநாளாக சொல்லப் படுகிறது. இரண்டாவது ஓய்வுநாள் என்பது அந்த வாரத்தின் ஓய்வுநாள் ஆகும். லூக்கா 23:56-ல் கந்தவர்கங்களையும், பரிமளத்தைலங்களையும் வாங்கின ஸ்திரீ அதை தயார்படுத்தி பின்பு "ஓய்வு நாளை" உபசரித்தாள். ஆக, இந்த வாதம் என்ன கூறுகிறது என்றால், கந்தவர்க்கங்களையும் பரிமளத்தைலங்களையும் ஓய்வு நாளுக்குப்பின்பு வாங்க முடியாது, மற்றும் அதை ஓய்வு நாளுக்கு முன்பு தயார் செய்யவும் வேண்டும். இரண்டு ஓய்வு நாட்கள் இருந்தாலொழிய இப்படி நடக்க முடியாது. இந்த இரண்டு ஓய்வுநாள் கருத்தின்படி, கிறிஸ்து வியாழக்கிழமை சிலுவையில் அறையப்பட்டாரானால் பரிசுத்த ஓய்வு நாளானது (பஸ்கா) வியாழக்கிழமை சூரிய அஸ்தமனத்திலிருந்து துவங்கி வெள்ளிக்கிழமை சூரிய அஸ்தமனத்தில் முடிந்திருக்கும். இது வாரத்தின் ஓய்வுநாள் அல்லது சனிக்கிழமை. கந்தர்வர்க்கங்களையும் பரிமளத்தைலங்களையும் முதல் ஓய்வு நாளுக்கு (பஸ்கா) பிறகு வாங்கியிருந்தால் அது சனிக்கிழமை ஓய்வுநாளை பரிசுத்த குலைச்சலாக்கினதாக இருக்கும்.

ஆகவே, புதன்கிழமை என்ற கருத்தின்படி, வேதத்தை மீறாமல் கொடுக்கப்பட்ட விளக்கம் ஸ்தீரியும் பரிமளத்தைலங்களையும் குறித்த விளக்கம் மத்தேயு 12:40-ஐ விளக்கி, கிறிஸ்து புதன்கிழமையில்தான் சிலுவையில் அறையப்பட்டார் என்று கூறுகிறது. 'ஓய்வுநாள்' எனக்கூடிய பரிசுத்த ஓய்வுநாள் (பஸ்கா) வியாழக்கிழமை அனுசரிக்கப்பட்டது. அந்த ஸ்திரீ பொருட்களை (பிறகு)

வெள்ளிக்கிழமை வாங்கி அதே நாளில் அதைத் தயார் செய்து, சனிக்கிழமை ஓய்வுநாளை அனுசரித்தாள். பின்பு ஞாயிற்றுக்கிழமை அந்தப் பொருட்களை கல்லறைக்குக் கொண்டுவந்தாள். இயேசு புதன்கிழமை சூரிய அஸ்தமத்தில் கல்லறையில் வைக்கப்பட்டார். யூதருடைய நாள் காட்டியில் அது வியாழக்கிழமையின் தொடக்கம். யூதருடைய நாட்காட்டியைக் கொண்டு பார்க்கும்போது, வியாழக்கிழமை இரவு (முதல்நாள் இரவு) வியாழக்கிழமை பகல் (முதல்நாள்) வெள்ளிக்கிழமை பகல் (இரண்டாவது நாள்) சனிக்கிழமை இரவு (மூன்றாவது இரவு). அவர் எப்பொழுது உயிர்தெழுந்தார் என்ற நேரம் நமக்கு தெளிவாகத் தெரியாது. ஆனால் ஞாயிற்றுக்கிழமை சூரிய உதயத்திற்கு முன்பு என்று தெரியும். ஒருவேளை அவர் சனிக்கிழமை சூரிய அஸ்தமத்திற்கு சற்று தள்ளி உயிரோடு எழுந்திருக்கலாம், அது யூதருடைய வாரத்தின் முதல்நாள். கல்லறை வெறுமையாயிருந்ததை கூடிய உதயத்தின்போது தான் கண்டுக்கொண்டிருக்க வேண்டும். (மாற்கு 16:2) அப்பொழுது முழுவதுமாக விடியாமல் இருந்தது.(யோவன் 20:1)

புதன்கிழமை என்ற கருத்திற்கு இருக்கிற ஒரு எதிர்க்கருத்து என்னவெனில், எம்மாவு சீஷர்களோடு இயேசு உயிர்தெழுந்த 'அதே நாளில்' நடந்து சென்றார். (லூக்கா 24:13) இயேசு என்று அறியாத அந்த சீஷர்கள், அவரிடம் இயேசுவின் சிலுவையைக் குறித்து (24:21) கூறுகிறார்கள். அதோடு ''இவைகள் சம்பவித்து இன்று மூன்று நாளாகிறது'' என்றும் கூறுகிறார்கள். புதன்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாட்கள் ஆகிறது. அவர்கள் புதன்கிழமை சாயங்காலம் கிறிஸ்துவின் அடக்கம் முதல் அதாவது யூதருடைய வியாழக்கிழமையின் தொடக்கம் முதல் ஞாயிற்றுக்கிழமைவரை மூன்று நாட்களாக கணக்கில் கொண்டிருக்க வேண்டும்.

இதன் கடைத்தொகை என்னவென்றால், அவர் எந்த நாளில் சிலுவையிலறையப்பட்டார் என்பது முக்கியமே கிடையாது. அது மிக

முக்கியமானதாக இருந்திருக்குமானால், தேவனுடைய வார்த்தை அதைத் தெளிவாக நமக்கு சொல்லியிருக்கும். எது முக்கியம் என்றால் அவர் மரித்து, சரீரத்தில் மரித்தோரிலிருந்து உயிரோடு எழும்பினார். மேலும் எது முக்கியமென்றால், அவர் மரித்து, பாவிகளாகிய நம் மேல் வந்திருக்க வேண்டிய தண்டனையை அவர் எடுத்துக் கொண்டார். யோவான் 3:16 மற்றும் 3:36 ஆகிய வசனங்கள் அவர்மீது நம்பிக்கை வைக்கும்போது நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வோம் என்று கூறுகிறது. இது அவர் புதன்கிழமை, வியாழக்கிழமை அல்லது வெள்ளிக்கிழமையில் சிலுவையில் அறையப்பட்டிருந்தாலும் நடந்தேறும்.

56. இயேசு தனது மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையில் நரகத்திற்குச் சென்றாரா?

இந்தக் கேள்வியைக் குறித்து பெரிய குழப்பம் உள்ளது. இயேசு சிலுவையில் மரித்தபிறகு நரகத்திற்குச் சென்றார் என்கிற கருத்து அப்போஸ்தலருடைய விசுவாச அறிக்கையிலிருந்துதான் முதலாவது வருகிறது. அது சொல்லுகிறது, "நரகத்தில் இறங்கினார்". சில வேத வாக்கியங்கள் அவைகள் மொழிபெயர்க்கப்பட்ட முறையில் இயேசு நரகத்திற்கு சென்றதாக விளக்குகிறது. இந்தக் காரியத்தை நாம் படிப்பதற்கு முன்பாக, பரிசுத்த வேதாகமம் மரித்தோருடைய தேசத்தைக் குறித்து என்ன போதிக்கின்றது என்று புரிந்து கொள்ள வேண்டும்.

எபிரேய வேத வாக்கியங்களில், மரித்தோர்கள் இருக்கிற தேசத்தை விளக்க ஷேயோல் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. அதனுடைய அர்த்தம் "மரித்தோருடைய இடம்" அல்லது "இறந்துபோன ஆத்துமாக்களின் இருப்பிடம்". ஷேயோல் என்ற வார்த்தைக்கு புதிய ஏற்பாட்டில் கிரேக்கச் சொல் "ஹேட்ஸ்" அதுவும் "மரித்தோருடைய இடம்" என்று பொருள்படுகின்றது. மற்ற புதிய ஏற்பாட்டின் வேத வாக்கியங்கள் ஷேயோல்/ஹேட்ஸ் என்பது ஒரு தற்காலிகமான இடம் என்றும் அங்கு இறுதியான உயிர்த்தெழுதல் மற்றும் நியாயத்தீர்ப்பிற்காக ஆத்துமாக்கள் வைக்கப்பட்டிருக்கிற இடம் என்றும் கூறுகின்றது. வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15 வரை 'ஹேட்ஸ்'க்கும் அக்கனி கடலுக்கும் தெளிவான வித்தியாசத்தை கொடுக்கின்றது. அக்கினிக்கடல் என்பது ஒரு நிரந்தரமான இடம், அது இரட்சிக்கிப்படாதவர்களுடைய கடைசி நியாத்தீர்ப்பிற்கு பிறகு அவர்கள் சென்றடையும் இடமாகும். அநேகர் ஹேட்ஸ்' மற்றும்

அக்கினி கடல் இவை இரண்டையுமே 'நரகம்' என்று கூறுகிறதினாலேதான் இந்த குழப்பம் வருகிறது. இயேசு அவருடைய மரணத்திற்குப் பிறகு வாதிக்கப்படுகின்ற வேதனையுள்ள இடத்திற்குச் செல்லவில்லை, மாறாக ஹேட்ஸ்'-க்குச் சென்றார்.

ஷேயோல் / ஹேட்ஸ் இரண்டு பிரிவுகள் கொண்ட ஒரு இடமாகும். ஆசீர்வாதமான இடம் மற்றும் நியாயந்தீர்க்கப்படுகிற இடம் (மத்தேயு 11:23; 16:18; லூக்கா10.15; 16:23; அப்போஸ்தலர் 2:27-31). இரட்சிக்கப்பட்டவர்கள் மற்றும் இரட்சிக்கப்படாதவர்கள் ஆகிய இந்த இருகூட்டத்தாரும் இருக்கின்ற இடத்திற்கு 'ஹேட்ஸ்' என்றே வேதாகத்தில் அழைக்கப்படுகின்றது. இரட்சிக்கப்பட்டவர்கள் இருக்கிற இடத்தை 16:22 -இல் 'ஆபிரகாமுடைய மடி' என்றும் லூக்கா 23:43-இல் 'பரதீசு' என்றும் அழைக்கப்படுகின்றது. இரட்சிக்கப்படாதவர்களுடைய இருப்பிடம் 'நரகம்' அல்லது 'ஹேட்ஸ்' என்றும் லூக்கா 16:23-இல் அழைக்கப்படுகின்றது. இரட்சிக்கப்பட்டவர்கள் இருக்கிற இருப்பிடத்திற்கும், இரட்சிக்கப்படாதவர்கள் இருக்கிற இருப்பிடத்திற்கும் இடையே 'பெரும்பிளவு' இருக்கின்றது (லூக்கா 16.26). இயேசு மரித்த பின்னர் ஷேயோலின் ஆசீர்வாதமான இடத்திற்குச் சென்றார். அங்கிருந்து விசுவாசிகளை அவரோடுகூட பரலோகத்திற்குக் கொண்டு சென்றார் (எபேசியர் 4:8-10). ஷேயோலின் நியாந்தீர்க்கப்படுகிற பகுதி மாறாமல் அப்படியே இருந்தது. இரட்சிக்கப்படாமல் மரித்தவர்கள் அங்கு கடைசி நியாயத்தீரப்புக்காக காத்திருக்கின்றனர். இயேசு ஷேயோல்/ ஹேட்ஸ்க்கு சென்றாரா? ஆம் எபேசியர் 4:8-10 மற்றும் 1 பேதுரு 3:18-20 ஆகிய வேதபகுதிகள் இப்படி கூறுகிறது.

சங்கீதம் 16:10-11 போன்ற சில வசனங்கள் மொழிப்பெயர்க்கப்பட்ட விதத்தில் சில குழப்பம் இருகின்றது "என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவை காணவொட்டீர், ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்". இங்கே "பாதாளம்" என்பது சரியான

மொழிபெயர்ப்பு கிடையாது. சரியான வார்த்தை "கல்லறை" அல்லது "ஷேயோல்". இயேசு தனது பக்கத்தில் இருந்த கள்ளனிடம் "இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய்" (லூக்கா23:43); அவர் "பாதாளத்தில் / நரகத்தில் பார்ப்போம்" என்று சொல்லவில்லை. இயேசுவின் சரீரம் கல்லறையில் இருந்தது, அவருடைய ஆவி/ஆத்துமா ஆசீர்வதிக்கப்பட்ட இடமான ஷேயோல்/ஹேட்ஸ் என்ற இடத்திற்கு சென்றது. துரதிஷ்டவசமாக வேதாகமத்தின் பல பதிப்புகளில் மொழிபெயர்ப்பாளர்கள் சரியாக அல்லது ஒரே மாதிரியாக "ஷேயோல்", "ஹேட்ஸ்" "நரகம்" என்ற எபிரேய மற்றும் கிரேக்க வார்த்தைகளை மொழிபெயர்க்கவில்லை.

சிலர் வேறொரு கண்ணோட்டத்தை உடையவளாயிருக்கிறார்கள். இயேசு நரகத்திற்குச் சென்று மேலும் நம் பாவத்திற்கு தண்டிக்கப்பட்டார் என்று கூறுகிறார்கள். இது முற்றிலும் வேதத்திற்கு புறம்பானது ஆகும். சிலுவையில் இயேசு மரித்தது நம்முடைய மீட்புக்கு போதுமானது ஆகும். அவருடைய சிந்தப்பட்ட இரத்தமே நம்முடைய பாவம் கழுவப்பட போதுமானது (1 யோவான் 1:7-9). அவர் சிலுவையில் தொங்கும் போது அவர் மொத்த மனுக்குலத்தின் பாவச்சுமையைச் சுமந்தார். அவர் நமக்காக பாவமானார் "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்" (2 கொரிந்தியர் 5:21). இயேசு பாவத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்ட இந்த காரியம் அவர் கெத்சமனே தோட்டத்தில் இந்தப் பாவத்தின் பாத்திரம் தன்மேல் சிலுவையில் ஊற்றப்படப் போகிறதை நினைத்து தத்தளித்தது ஏன் என்று நமக்கும் புரியும்.

இயேசு மரணத்தை நெருங்கியபோது, அவர் "எல்லாம் முடிந்தது" (யோவான் 19:30) என்று கூறினார். அவருடைய ஆத்துமா/ஆவி ஹேட்ஸ் (மரித்தோருடைய இடம்) என்ற இடத்திற்குச் சென்றது. இயேசு "நரகம்" அல்லது தண்டிக்கப்படுகிற இடத்திற்குச்

செல்லவில்லை. அவர் "ஆபிரகாமின் மடி" அல்லது "ஹேட்ஸின்" ஆசீர்வாதமான இடத்திற்குச் சென்றார். பாவத்திற்காக விலைக்கிரயம் ஏற்கனவே கொடுக்கப்பட்டாயிற்று. அவர் அதன்பின் சரீரத்தின் உயிர்தெழுதலுக்காகவும் மகிமையில் எடுத்துக் கொள்ளப்படவும் காத்துக் கொண்டிருந்தார். இயேசு நரகத்திற்குச் சென்றாரா? இல்லை, இயேசு நரகத்திற்குச் செல்லவில்லை. இயேசு ஷேயோல் அல்லது ஹேட்ஸ் என்ற இடத்திற்குச் சென்றாரா? ஆம்.

57. இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதல் உண்மையா?

வேத வாக்கியங்கள் இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதலைக் குறித்து முழுமையானச் சான்றுகளை அளிக்கிறது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் குறித்து மத்தேயு *28:1-20*, மாற்கு *16:1-20* லூக்கா *24:1-53* மற்றும் யோவான் *20:1-21:5* ஆகிய வேத பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. உயிர்த்தெழுந்த இயேசு அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்திலும் தரிசனம் ஆனார் *(அப்போஸ்தலர் 1:1-11)*. இந்த வாக்கியங்களிலிருந்து இயேசுகிறிஸ்து உயிர்தெழுந்ததற்கு அநேக "சாட்சிகள்" நமக்கு கிடைக்கும். முதலாவது சீஷர்களுடைய வியப்பூட்டுகிற மாற்றம். ஒரு கூட்டமாய் பயந்து ஒளிந்து இருந்ததிலிருந்து திடமான, தைரியமான சாட்சிகளாய் உலகமுழுவதிலும் சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறவர்களானார்கள். இந்த வியப்பூட்டுகிற மாற்றத்தை உயிர்தெழுந்த இயேசு அவர்களுக்கு தரிசனமாகிய நிகழ்ச்சிதான் கொண்டு வந்திருக்க வேண்டும்.

இரண்டாவது அப்போஸ்தலனாகிய பவுலுடைய வாழ்க்கை. எந்த செயல் அப்போஸ்தலனாகிய பவுலை, சபையை துன்புறுத்துபவனாய் இருந்ததிலிருந்து சபையின் அப்போஸ்தலனாக மாற்றியது? உயிர்த்தெழுந்த கிறிஸ்து அவருக்கு தமஸ்கு போகிற வழியில் தரிசனமானதுதான். *(அப்போஸ்தலர் 9:1-6)*. மூன்றாவது உறுதியானச்சான்று காலியாயிருந்த கல்லறைதான். ஒருவேளை கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால் அவருடைய சரீரம் எங்கே? சீஷர்களும் மற்றவர்களும் அவர் அடக்கம்பண்ணப்படும்போது கல்லறையை கண்டார்களே. அவர்கள் மறுபடியும் வரும்பொது, அவருடைய சரீரம் அங்கே இல்லை. தூதர்கள் "அவர் இங்கே இல்லை, தான் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்," என்று கூறினார்கள். நான்காவது அவர் அநேகருக்கு தரிசனமானதும் அவருடைய

உயிர்தெழுதலுக்கு சாட்சியே (மத்தேயு 28:5,9, 16-17; மாற்கு 16:9; லூக்கா 24:13-35;யோவான் 20:19,24,26-29, 21:1-14; அப்போஸ்தலர் 1:6-8; I கொரிந்தியர் 15:5-7).

வேறொரு சான்று என்னவெனில், அப்போஸ்தலர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவமும் ஒரு சான்றுதான். இயேசுவின் உயிர்த்தெழுதலுடைய முக்கிய வேதபகுதி 1 கொரிந்தியர் 15. இந்த அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை புரிந்துகொண்டு நம்புவது எவ்வளவு இன்றியமையாதது என்று விளக்கியுள்ளார். உயிர்த்தெழுதல் கீழ்வரும் காரியங்களினால் முக்கியமானதாக இருக்கிறது: 1) கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழாதிருந்தால் விசுவாசிகளும் உயிர்த்தெழ இயலாது (I கொரிந்தியர் 15:12-15). 2) கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழாதிருந்தால் அவர் பாவத்தின் பரிகாரத்திற்கு தன்னை பலியாக ஒப்புக்கொடுத்தது போதுமானதில்லை என்று ஆகியிருக்கும். (I கொரிந்தியர் 15:16-19). இயேசுவின் உயிர்த்தெழுதல் தேவன் அவருடைய மரணத்தை நம்முடைய பாவத்திற்காக பாவநிவாரணமாக ஏற்றுக்கொண்டார் என்று தெளிவுப்படுத்துகிறது. அவர் ஒருவேளை மரித்து மரித்தவர்களோடு இருந்திருப்பாரானால் அவருடைய மரணம் போதுமானதாக இருந்திருக்காது. அதன் விளைவாக விசுவாசிகள் பாவம் மன்னிக்கப்படாமல், அவர்கள் இறந்தப்பின்பும் மரித்தவர்களாகவே இருந்திருப்பார்கள் (I கொரிந்தியர் 15:16-19). நித்திய ஜீவன் என்கிற ஒன்றும் இருந்திருக்காது (யோவன் 3:16) "*கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்'' (I கொரிந்தியர்15:20).*

இறுதியாக, வேதவாக்கியம் இயேசுகிறிஸ்துவின் மீது விசுவாசம் வைப்பவர்கள் நித்திய ஜீவனுக்காக அவர் உயிர்த்தெழுந்தது போலவே மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பப்படுவார்கள் என்று தெளிவாகிறது (I கொரிந்தியர் 15:20-23). 1 கொரிந்தியர் 15-வது அதிகாரம் மேலும் அவர் பாவத்தை எப்படி வென்று நமக்கும் பாவத்தை

மெற்கொண்டு ஜெயத்தோடு வாழ்கிற வல்லமையைக் கொடுத்திருகிறார் என்பதை விளக்குகின்றது. (I கொரிந்தியர்15:24-34). அது நாம் பெறப்போகிற மகிமையான உயிர்த்தெழுதலின் சரீரத்தைக் குறித்து விளக்குகின்றது. (கொரிந்தியர் 15:35-49). மேலும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால், அவரை விசுவாசிக்கிறவர்கள் யாவரும் மரணத்தின்மீது ஜெயம் எடுப்பார்கள் என்றும் கூறுகின்றது. (I கொரிந்தியர் 15:50-58).

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் என்ன ஒரு மகிமையான சத்தியமாக இருக்கிறது! "ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (I கொரிந்தியர் 15:58) . வேதாகமத்தின்படி இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஒரு நிதர்சனமான உண்மையாகும். வேதம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை பதிவு செய்கின்றது. மேலும் 400க்கும் மேற்பட்ட சாட்சிகளும், இயேசுவின் உயிர்தெழுதலின் உண்மையின் மீது மிகவும் முக்கியமான கிறிஸ்தவ அடிப்படை உபதேசத்தைக் கட்டி எழுப்புயுள்ளது.

58. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஏன் முக்கியமானது?

இயேசுவின் உயிர்த்தெழுதல் பல காரணங்களுக்காக முக்கியமானதாக இருக்கிறது. முதலில், உயிர்த்தெழுதல் தேவனுடைய மாபெரும் மகத்தான வல்லமைக்கு சாட்சிகள். உயிர்த்தெழுதலில் நம்பிக்கை கொள்வது என்பது தேவன்மீது நம்பிக்கை வைப்பதாகும். தேவன் இருக்கிறார் என்றால், அவர் பிரபஞ்சத்தை உருவாக்கி அதன் மேல் அதிகாரத்தை கொண்டிருந்தால், இறந்தவர்களை உயிர்த்தெழுப்பவும் அவருக்கு அதிகாரம் உண்டு. அவர் அத்தகைய வல்லமையைக் கொண்டிருக்கவில்லை என்றால், நம்முடைய விசுவாசத்தையும் ஆராதனையையும் ஏற்றுக்கொள்வதற்கு அவர் தகுதியற்றவர் அல்ல என்றாகிவிடும். உயிரைப் படைத்தவர் இறப்பிற்குப்பின் அதை உயிர்ப்பிப்பார், பயங்கரமான மரணத்தை மறைப்பார், அவர் மட்டுமே கூறை அகற்றி, பாதாளத்தை வெல்ல முடியும் *(1 கொரிந்தியர் 15:54-55)*. இயேசுவை மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலில் உயிர்த்தெழுப்பப்படுகையில், உயிர் மற்றும் மரணத்தின் மீது அவருடைய முழுமையான இறையாண்மையை நமக்கு நினைவுபடுத்துகிறார்.

இயேசு தம்மை யார் எனக் கூறினார் என்பதற்கும் உயிர்த்தெழுதல் அதாவது, அவர் தேவனுடைய குமாரனாகிய மேசியா என்பதற்கும் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலும் முக்கியம் நியமித்தார். இயேசுவின் கூற்றுப்படி, அவருடைய உயிர்த்தெழுதல் அவருடைய "ஊழியத்தை உறுதிப்படுத்துகிற" பரலோக சாட்சியாகும் *(மத்தேயு 16:1-4)*. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நூற்றுக்கணக்கான சாட்சிகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது *(1 கொரிந்தியர் 15:3-8)*, அவர் உலகத்தின் இரட்சகராக இருப்பதை மறுக்க முடியாத ஆதாரத்தை அளிக்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு மற்றொரு காரணம் முக்கியமானது, அது அவருடைய பாவமற்ற தன்மையையும் தெய்வீக தன்மையையும் நிரூபிக்கிறது. தேவன் "பரிசுத்தர்" ஒருபோதும் தீமையை பார்க்க மாட்டார் என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன (சங்கீதம் 16:10), இயேசு இறந்த பின்னரும் கூட பிழைகள் ஒருபோதும் கண்டதில்லை (அப்போஸ்தலர் 13:32-37). கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் அடிப்படையில் இது பவுல் பிரசங்கித்தார், "இவர் மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகிறது" (அப்போஸ்தலர் 13:38-39).

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அவருடைய தெய்வீகத்தின் மிகச் சிறந்த சரிபார்ப்பு மட்டுமல்ல; இயேசுவின் பாடுகளையும் துன்பங்களையும் உயிர்த்தெழுதலையும் முன்னறிவித்த பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களையும் இது உறுதிப்படுத்துகிறது (அப்போஸ்தலர் 17:2-3). கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூன்றாம் நாளில் உண்டாயிருக்கும் என்று கூறிய அவருடைய சொந்த கூற்றுகளை உறுதிப்படுத்தியது (மாற்கு 8:31; 9:31; 10:34). இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுப்பப்படாவிட்டால், நாம் நம்பிக்கை இல்லாதவர்களாக இருப்போம். உண்மையில், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு அப்பால், நமக்கு இரட்சகர் இல்லை, இரட்சிப்பு இல்லை, நித்திய ஜீவ நம்பிக்கையுமில்லை. பவுல் சொன்னபடி, நம்முடைய விசுவாசம் "பயனற்றது", சுவிசேஷம் முற்றிலும் சக்தியற்றது, மேலும் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படாமல் இருக்கும் (1 கொரிந்தியர் 15:14-19).

"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" (யோவான் 11:25) என்று இயேசு சொன்னார், அந்த அறிக்கையில் அந்த இருண்டிற்கும் அவரே ஆதாரம் என்பதையும் கூறுகிறார். கிறிஸ்துவிலிருந்து உயிர்த்தெழுதல் இல்லைஎன்றால், நித்திய வாழ்வும்

இல்லை. இயேசு ஜீவனாக இருக்கிறபடியினால், ஜீவனைக் கொடுக்கிறார்; அதனால்தான் மரணதிற்கு அவர்மேல் எந்த அதிகாரமுமில்லை. இயேசு தம்மை நம்புபவர்களில் தம் ஜீவனைப் பகிர்கிறார், அதனால் மரணத்தின் மேலுள்ள அவருடைய வெற்றியை நாம் பகிர்ந்து கொள்ள முடியும் *(1 யோவான் 5:11-12)*. இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற எவனும் உயிர்த்தெழுதலை அனுபவிப்பான். ஏனென்றால், இயேசு கொடுக்கிற ஜீவனைக் கொண்டு நாம் மரணத்தை ஜெயித்திருக்கிறோம். மரணம் வெற்றி பெற முடியாதது *(1 கொரிந்தியர் 15:53-57)*.

இயேசு *"நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானவர்" (1 கொரிந்தியர் 15:20)*. வேறு வார்த்தைகளில் சொன்னால், இயேசு மரணத்திற்குப் பிறகு ஜீவனுக்கு வழிவகுத்தார். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், மனிதர்களின் உயிர்த்தெழுதலுக்கான சாட்சியாக மிகவும் முக்கியமானதாக இருக்கிறது, இது கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை அம்சமாகும். மற்ற மதங்களைப் போலல்லாமல், கிறிஸ்தவம் மரணம் கடந்து ஒரு நிறுவனரைக் கொண்டுள்ளது மற்றும் அவரைப் பின்பற்றுபவர்கள் அதேயே செய்வார்கள் என்று வாக்குறுதியளிக்கிறார். மற்ற எல்லா மதங்களும் கல்லறையில் அடைப்பட்டுப்போன மனிதர்கள் அல்லது தீர்க்கதரிசிகளால் நிறுவப்பட்டன. கிறிஸ்தவர்களாகிய நமக்கு தேவன் மனிதனானார், நம்முடைய பாவங்களுக்காக மரித்தார், மற்றும் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்பது நன்றாகத் தெரியும். அவர் உயிரோடு இருக்கிறார், அவர் இன்று பரலோகத்தில் பிதாவின் வலதுபக்கத்தில் அமர்ந்திருக்கிறார் *(எபிரெயர் 10:12)*.

இயேசு கிறிஸ்து தமது சபையை எடுத்துக்கொள்ள வரும்போது விசுவாசிகள் உயிர்த்தெழுவார்கள் என்கிற அத்தாட்சியை தேவனுடைய வார்த்தை கூறுகிறது. இப்படிப்பட்ட விளைவுகள் வெற்றியின் முழக்கத்தை பரைசாற்றுகிறதாக இருக்கிறது, அப்போஸ்தலனாகிய பவுல் வெற்றி முழக்கத்தின் மாபெரும் பாட்டை

1 கொரிந்தியர் 15:55-ல் எழுதுகிறார், "மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" (ஓசியா 13:14).

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம் இப்போது கர்த்தருக்கு நம் சேவையில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. உயிர்த்தெழுதலில் பவுல் தன்னுடைய சொற்பொழிவை இந்த வார்த்தைகளால் முடிக்கிறார்: "ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (1 கொரிந்தியர் 15:58). நாம் ஒரு புதிய வாழ்வுக்காக உயிர்த்தெழுப்பப்படுவோம் என்பதை அறிந்திருப்பதால், கிறிஸ்துவின் நிமித்தமாக நாம் துன்புறுத்துதலையும் ஆபத்துக்களையும் சகிப்போமாக (வசனங்கள் 30-32). இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் காரணமாக, ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ இரத்த சாட்சிகள் வரலாற்றின் முலம் தங்கள் பூமிக்குரிய வாழ்க்கையை நித்திய ஜீவனுக்காகவும் உயிர்த்தெழுதலின் வாக்குறுதியின்படியும் மனமுவந்து பரப்பியிருக்கிறார்கள்.

உயிர்த்தெழுதல் என்பது ஒவ்வொரு விசுவாசிக்கும் வெற்றிகரமான மற்றும் மகத்தான ஜெயமாகும். இயேசு கிறிஸ்து மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் எழுந்தார் (1 கொரி. 15:3-4). அவர் மீண்டும் வருகிறார்! அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம் (1 தெசலோனிக்கேயர் 4:13-18). இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஏன் முக்கியமானது? இயேசு யார் என்பதை இது நிரூபிக்கிறது. நம்முடைய சார்பாக இயேசுவின் பலி ஏற்றுக்கொள்ளப்பட்டதைக் காட்டுகிறது. மரித்தோரிலிருந்து

நம்மை உயிர்த்தெழுப்ப வல்லவர் தேவன் என்பதை இது காட்டுகிறது. கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களின் சரீரங்கள் மரித்திருக்காது, நித்திய ஜீவனுக்காக உயிர்த்தெழுப்பப்படும் என்பதையும் இது உறுதிப்படுத்துகிறது.

59. இயேசு கிறிஸ்துவின் பரமேறிச் செல்லுதலின் பொருள் மற்றும் முக்கியத்துவம் என்ன?

மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்த இயேசு பிறகு, அவர் "அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்" (அப். 1:3) அதாவது கல்லறைக்கு அருகில் இருந்த பெண்களுக்கு (மத்தேயு 28:9-10), அவருடைய சீஷர்களுக்கு (லூக்கா 24:36-43), மற்றும் ஒரே நேரத்தில் 500-க்கும் மேற்பட்டவர்கள் (1 கொரிந்தியர் 15:6) என அநேகருக்கு தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். அவரது உயிர்த்தெழுதலுக்குப் பிந்தைய நாட்களில், இயேசு தனது சீஷர்களுக்கு தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி கற்பித்தார் (அப். 1:3).

உயிர்த்தெழுந்து நாற்பது நாட்களுக்குப் பிறகு, இயேசுவும் அவருடைய சீஷர்களும் எருசலேமுக்கு அருகிலுள்ள ஒலிவ மலைக்குச் சென்றனர். அங்கு, சீஷர்கள் விரைவில் பரிசுத்த ஆவியைப் பெறுவார்கள் என்று இயேசு வாக்குறுதி அளித்தார், மேலும் ஆவியானவர் வரும் வரை எருசலேமில் இருக்கும்படி அவர்களுக்கு அறிவுறுத்தினார். பின்னர் இயேசு அவர்களை ஆசீர்வதித்தார், அவர் ஆசி வழங்கியபோது, எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்க அவர் பரலோகத்திற்கு ஏறிப்போகத் தொடங்கினார். லூக்கா 24:50-51 மற்றும் அப்போஸ்தலர் 1:9-11 ஆகிய வேதப்பகுதிகளில் இயேசுவினுடைய பரமேறுதலின் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இயேசுவின் பரமேறுதல் என்பது பரலோகத்திற்கு சரீரத்தில் ஏறிப்போவது என்பது வேதத்திலிருந்து மிகத்தெளிவாக விளங்குகிறது. அவர் படிப்படியாக மற்றும் வெளிப்படையாக தரையில் இருந்து உயரே எழும்பி பரலோகத்திற்கு ஏறிப்போனார், பலரும் அதை மிகவும் ஆர்வமாக பார்த்தனர். சீஷர்கள் இயேசுவின் இறுதிக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, ஒரு மேகம் அவரை அவர்களின்

பார்வையில் இருந்து மறைத்தது, அப்போது இரண்டு தேவதூதர்கள் தோன்றி, "உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்" (அப்போஸ்தலர் 1:11).

இயேசு கிறிஸ்துவின் பரமேறுதல் பல காரணங்களுக்காக மிகவும் அர்த்தமுள்ளதாக இருக்கிறது:

1) அது அவருடைய பூமிக்குரிய ஊழியத்தின் முடிவைக் குறிக்கிறது. பிதாவாகிய தேவன் தனது குமாரனை பெத்லகேமில் அன்புடன் உலகிற்கு அனுப்பினார், இப்போது குமாரன் பிதாவிடம் திரும்பிச் செல்கிறார். அவரது மனித தன்மையின் வரம்பின் காலம் முடிவடைந்தது.

2) அது அவருடைய பூமிக்குரிய கிரியையில் வெற்றியைக் குறிக்கிறது. அவர் செய்ய வந்த அனைத்தையும் அவர் வெற்றிகரமாக செய்து முடித்தார்.

3) இது அவரது பரலோக மகிமைக்கு மீண்டுமாய் திரும்புவதைக் குறிக்கிறது. இயேசுவின் மகிமை அவர் பூமியில் இருந்த காலத்தில் மறைக்கப்பட்டது, ஒரு சிறிய விதிவிலக்காக மறுரூப மலையில் மட்டும் அவர் மகிமையில் தோன்றும் காட்சி மூன்று சீஷர்களால் காணப்பட்டது (மத்தேயு 17:1-9).

4) இது பிதாவாகிய தேவனால் உயர்த்தப்படும் அவரது மேலான மேன்மையை அடையாளப்படுத்துகிறது (எபேசியர் 1:20-23). பிதா பிரியமாய் இருந்தவர் (மத்தேயு 17:5) இப்போது கௌரவமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு எல்லா நாமத்திற்கும் மேலாக ஒரு நாமம் கொடுக்கப்பட்டது (பிலிப்பியர் 2:9).

5) நமக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்தும்படிக்கு அது அவரை அனுமதித்தது (யோவான் 14:2).

6) பிரதான ஆசாரியராக (எபிரெயர் 4:14-16) மற்றும் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக (எபிரெயர் 9:15) அவரது புதிய கிரியையின் தொடக்கத்தை அது சுட்டிக்காட்டுகிறது.

7) அது அவர் மீண்டுமாய் திரும்பி வருவதற்கான மாதிரியை அமைத்தது. இயேசு ராஜ்யத்தை அமைக்க மீண்டுமாய் வரும்போது, அவர் சென்றபடியே மீண்டுமாய் திரும்புவார் அதாவது மெய்யாகவே சரீரத்தில், மற்றும் மேகங்களில் தோன்றி வருவார் (அப். 1:11; தானியேல் 7:13-14; மத்தேயு 24:30; வெளிப்படுத்துதல் 1:7).

தற்போது, கர்த்தராகிய இயேசு பரலோகத்தில் இருக்கிறார். வேதம் அடிக்கடி அவரைப் பிதாவின் வலது பாரிசத்தில் இருப்பதாக சித்தரிக்கிறது, அது அவருக்குள்ள கனம் மற்றும் அதிகாரத்தைக் குறிக்கிறது (சங்கீதம் 110:1; எபேசியர் 1:20; எபிரேயர் 8:1). கிறிஸ்து திருச்சபையில் தலையாக இருக்கிறார் (கொலோசெயர் 1:18), ஆவிக்குரிய வரங்களை வழங்குபவராக இருக்கிறார் (எபேசியர் 4:7-8), மற்றும் அனைத்தையும் நிரப்புபவர் (எபேசியர் 4:9-10). கிறிஸ்துவின் பரமேறுதல் இயேசுவை அவரது பூமிக்குரிய ஊழியத்திலிருந்து அவருடைய பரலோக ஊழியத்திற்கு மாற்றிய நிகழ்வு ஆகும்.

60. கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் பொருள் என்ன?

"கிறிஸ்துவின் இரத்தம்" என்ற சொற்றொடர் புதிய ஏற்பாட்டில் பல முறை பயன்படுத்தப்படுகிறது மற்றும் இது நம் சார்பாக மரித்த இயேசுவின் பலிமரணம் மற்றும் முழு பாவப் பிராயச்சித்த கிரியையின் வெளிப்பாடாகும். இரட்சகரின் இரத்தத்தைப் பற்றிய குறிப்புகளில், அவர் மெய்யாகவே சிலுவையில் இரத்தம் சிந்தினார் என்பது மறுக்க இயலாத உண்மையாகும், ஆனால் இன்னும் குறிப்பிடத்தக்க வகையில் அவர் பாவிகளுக்காக இரத்தஞ்சிந்தி மரித்தார் என்பது மிக முக்கியமானதாகும். எல்லா யுகங்களிலும் எண்ணற்ற மக்கள் செய்த எண்ணற்ற பாவங்களுக்கு பரிகாரம் செய்யும் வல்லமை கிறிஸ்துவின் இரத்தத்திற்கு உள்ளது, மேலும் அந்த இரத்தத்தின் மேல் நம்பிக்கை வைத்திருக்கும் அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள்.

பாவபரிகாரத்தின் வழிமுறையாக கிறிஸ்துவின் இரத்தத்தின் யதார்த்தம் மோசேயின் நியாயப்பிரமாணத்தில் இருந்து தோன்றியது ஆகும். வருடத்திற்கு ஒருமுறை, ஜனங்களின் பாவங்களுக்காக தேவாலயத்தின் பலிபீடத்தின் மீது மிருகங்களின் இரத்தத்தை காணிக்கையாக்க வேண்டும். "நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" (எபிரேயர் 9:22). ஆனால் இது ஒரு இரத்தப் பலி அதன் செயல்திறனில் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது, அதனால்தான் இது மீண்டும் மீண்டும் ஒவ்வொரு ஆண்டும் ஆசாரியனால் செலுத்தப்பட்டு வந்தது. இது இயேசுவால் சிலுவையில் செலுத்தப்பட்ட பலி மூலமாக அவர் "தம்மைத்தாமே பலியிட்டதினாலே ஒரேதரம் செய்து முடித்தார்" தியாகத்தின் முன்னறிவிப்பாகும் (எபிரெயர் 7:27). அந்த பலி

செலுத்தப்பட்டதுடன், வெள்ளாட்டுக்கடாக்கள், இளங்காளைகள் இவைகளுடைய இரத்தம் தேவை இல்லை.

கிறிஸ்துவின் இரத்தம் புதிய உடன்படிக்கையின் அஸ்திபாரமாகும். சிலுவைக்குச் செல்வதற்கு முந்தைய இரவில், இயேசு தமது சீஷர்களுக்கு திராட்சைரசம் நிறைந்த பாத்திரத்தை எடுத்து கொடுத்து, "இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்" (லூக் 22:20). பாத்திரத்தில் உள்ள திராட்சைரசம் கிறிஸ்துவின் இரத்தத்தை குறிக்கிறது, அது அவரை விசுவாசிக்கும் அனைவருக்காகவும் சிந்தப்படுகிற இரத்தமாய் இருக்கிறது. அவர் சிலுவையில் தனது இரத்தத்தை சிந்தியபோது, மிருகங்களின் தொடர்ச்சியான பலிகளுக்கான பழைய உடன்படிக்கையின் தேவையை இயேசு நீக்கிவிட்டார். அவைகளின் இரத்தம் தற்காலிக அடிப்படையில் ஒரு பாவ நிவாரணத்தைக் கொண்டுவந்ததே அல்லாமல், மக்களின் பாவங்களை முற்றிலுமாய் கழுவி நீக்க போதுமானதாக இல்லை, ஏனென்றால் பரிசுத்தமான மற்றும் எல்லையற்ற தேவனுக்கு எதிராக செய்த பாவத்திற்கு பரிசுத்தமான மற்றும் எல்லையற்ற பலி தேவைப்படுகிறது. பாவங்களை "காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் நிவிர்த்திசெய்யமுடியாது" (எபிரெயர் 10:3). காளைகள் மற்றும் வெள்ளாட்டுக்கடாக்களின் இரத்தம் பாவத்தின் நினைவூட்டலாக "இருக்கும்போது," குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம் (1 பேதுரு 1:19), நாம் தேவனுக்கு கடன்பட்டிருக்கும் பாபத்தின் சகல கடனையும் முழுமையாக செலுத்தித் தீர்த்தது, அதுமட்டுமின்றி பாவத்திற்காக நமக்கு மேலும் ஒரு பலி இனித் தேவையில்லை. இயேசு சிலுவையில் தொங்கி மரித்துக்கொண்டிருந்தபோது, "எல்லாம் முடிந்தது" என்று சொன்னார், மீட்பின் முழுப் பணியும் என்றென்றுமாய் நிறைவடைந்தது, இயேசு "தம்முடைய சொந்த இரத்தத்தினால்

ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்" (எபிரெயர் 9:12).

கிறிஸ்துவின் இரத்தம் விசுவாசிகளை பாவத்திலிருந்தும் நித்திய தண்டனையிலிருந்தும் மீட்பது மட்டுமல்லாமல், அவருடைய "இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு நம்முடைய மனச்சாட்சியைச் செத்தக்கிரியைகளறச் சுத்திகரிக்கவும்" செய்தது (எபிரெயர் 9:14). இதன் பொருள் என்னவென்றால், நாம் இப்போது இரட்சிப்பைப் பெறுவதற்கு "பயனற்றவைகளாக" இருக்கின்ற புலிகளை செலுத்துவதில் இருந்து விடுபடுவது மட்டுமல்லாமல், தேவனைப் பிரியப்படுத்த தேவையற்ற மாம்சத்தின் பயனற்ற மற்றும் பலனற்ற செயல்களை சார்ந்திருப்பதில் இருந்தும் விடுபெற்று இருக்கிறோம். கிறிஸ்துவின் இரத்தம் நம்மை மீட்டுள்ளதால், நாம் இப்போது கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிகளாக இருக்கிறோம் (2 கொரிந்தியர் 5:17), அவருடைய இரத்தத்தால் நாம் ஜீவனுள்ள தேவனுக்கு சேவை செய்யவும், அவரை மகிமைப்படுத்தவும், அவரில் என்றென்றும் மகிழ்ந்திருக்கவும் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறோம்.

61. நம்முடைய பாவத்திற்கான விலையை இயேசு செலுத்தினார் என்றால், நாம் ஏன் இன்னும் நம் பாவத்தின் விளைவுகளை அனுபவிக்கிறோம்?

நம்முடைய பாவத்திற்கான விலையை இயேசு செலுத்தினார் என்கிற நற்செய்தியை வேதாகமம் தருகிறது (எபேசியர் 1:7), இன்னும் பல வழிகளில் நம் பாவங்களின் விளைவுகளை நாம் அனுபவிக்கிறோம். உதாரணமாக, ஒரு போதைப்பொருள் வியாபாரி சிறையில் ஒரு கிறிஸ்தவராக மாறலாம், ஆனால் அவர் அடுத்த நாள் சிறையில் இருந்து விடுவிக்கப்படுவார் என்று அர்த்தமல்ல - அவர் தனது கடந்தகால பாவத்தின் விளைவுகளை இன்னும் அனுபவிப்பார். விபச்சாரத்தில் விழும் மீண்டும் பிறந்த கிறிஸ்தவன் தனது குடும்பம், தொழில் போன்றவற்றை இழக்க நேரிடலாம் - அவர் தனது பாவத்தை ஒப்புக்கொண்டு விட்டுவிட்ட பிறகும், அவரது பாவத்தின் விளைவுகள் இருக்கும். கிறிஸ்துவிடம் வருவது பாவத்தின் தற்காலிக விளைவுகளை அழிக்காது; மாறாக, பாவத்தின் நித்திய விளைவுகளை நாம் சந்திக்க மாட்டோம் என்று நமது இரட்சிப்பு உத்தரவாதம் அளிக்கிறது.

பாவத்தின் விளைவு மரணம் (ரோமர் 6:23அ). பாவிகளாகிய நாம் தேவனிடமிருந்தும் அவருடைய பரிசுத்தத்திலிருந்தும் என்றென்றும் பிரிக்கப்படுவதற்கு தகுதியானவர்கள். சிலுவையில் கிறிஸ்து தம்முடைய சொந்த இரத்தத்தால் நம்முடைய பாவத்தின் தண்டனையைச் செலுத்தினார். பாவம் அறியாதவர் நமக்காக பாவமாக்கப்பட்டார் (2 கொரிந்தியர் 5:21). கிறிஸ்துவின் பரிபூரண பலியின் அடிப்படையில், விசுவாசிக்கிறவர்கள் இனி தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்பட்டவர்கள் அல்ல (ரோமர் 8:1).

கிறிஸ்துவின் விசுவாசி பாவத்தின் விளைவுகளை அனுபவிக்கும் போது, அவர் கடவுளின் கண்டனம் (ரோமர் 8:1), அவருடைய கோபம்

(1 தெசலோனிக்கேயர் 5:9) அல்லது அவருடைய பதில்செய்தல் (2 தெசலோனிக்கேயர் 1:8) விசுவாசிகள் தேவனுடைய கிருபையின் கீழ் இருக்கிறார்கள் (ரோமர் 6:15). இயேசு தேவனுடைய கோபத்தை தன்மீது ஏற்றார் (ஏசாயா 53:10). விசுவாசிகள் இன்னும் அனுபவிக்கும் பாவத்தின் விளைவுகள் பின்வரும் வழிகளில் ஒன்றில் வகைப்படுத்தப்படலாம்:

உலகளாவிய விளைவுகள். நாம் அனைவரும் ஆதாமின் பிள்ளைகள் என்பதால், பாவத்தின் சில விளைவுகளை பூமியில் உள்ள ஒவ்வொரு மனிதனும் நிரந்தரமாக அனுபவிக்கிறோம். நாம் அனைவரும் நம் தோட்டங்களில் களைகள் வளர்க்கிறோம், நாம் அனைவரும் இயற்கை பேரழிவுகளை எதிர்கொள்கிறோம், நாம் அனைவரும் நோய்வாய்ப்பட்டு முதுமை அடைகிறோம், நாம் அனைவரும் இறுதியில் சரீரத்தில் இறக்கிறோம் (ரோமர் 5:12). பாவம் நிறைந்த உலகில் வாழும் பாவிகளாக, அசல் பாவத்தின் இந்த விளைவுகளைத் தவிர்க்க முடியாது.

இயற்கை விளைவுகள். விதைத்தல் மற்றும் அறுத்தல் விதி முழுமையாக நடைமுறையில் இருக்கும் காரணமும் விளைவுகளும் நிறைந்த உலகில் நாம் வாழ்கிறோம். பாவி இரட்சிக்கப்பட்டாலும் அல்லது இரட்சிக்கப்படாவிட்டாலும், பாவத்தின் சில விளைவுகள் உள்ளமைக்கப்பட்டவை மற்றும் நடைமுறையில் உத்தரவாதம் அளிக்கப்படுகின்றன. பாலியல் ஒழுக்கக்கேடு ஒருவரின் சொந்த சரீரத்திற்கு எதிராக செய்யப்படும் பாவம் என்று வேதாகமம் எச்சரிக்கிறது (1 கொரிந்தியர் 6:18). "தன் வஸ்திரம் வேகாமல் மடியிலே எவனாவது நெருப்பை வைத்துக்கொள்ளக்கூடுமோ?" (நீதிமொழிகள் 6:27). நீங்கள் எதையாவது திருடினால், நீங்கள் பிடிபட்டு, திருட்டு பாவத்தைத் தொடரும் இயற்கை விளைவுகளை சந்திக்க நேரிடும். நீங்கள் பிடிபடும்போது கைது செய்வதை எதிர்த்தால், அதிக விளைவுகளை நீங்கள் குவிப்பீர்கள். விதைத்ததை அறுவடை செய்தல்.

அறிவுறுத்தல் விளைவுகள். அநேகமாக, பாவத்தின் கொடூரமான தன்மையை நமக்குக் கற்பிக்கவும், தேவனுடைய கிருபையைச் சார்ந்து இருப்பதை நினைவூட்டவும், பாவத்தின் சில விளைவுகள் நம் வாழ்வில் நிலைத்திருக்க தேவன் அனுமதிக்கிறார். பாவம் என்பது தேவன் தம்முடைய குமாரனை இறப்பதற்கு உலகிற்கு அனுப்புவதற்குப் போதுமான தீவிரமான பிரச்சனை. பாவத்தை இலகுவாக எடுத்துக்கொள்ள நாம் துணிவதில்லை. பாவத்தின் விளைவுகளை எதிர்கொள்ளும்போது, நாம் நம்மைத் தாழ்த்தி, தேவனுடைய ராஜ்யத்தையும் நீதியையும் இன்னும் அதிகமாகத் தேடுகிறோம் (மத்தேயு 6:33 ஐப் பார்க்கவும்). அனனியாவும் சப்பீராளும் தங்கள் பாவத்திற்காக சிட்சிக்கப்பட்டபோது, அது திருச்சபைக்கு அறிவுறுத்தலாக இருந்தது: "சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயமுண்டாயிற்று" (அப்போஸ்தலர் 5:11). 1 கொரிந்தியர் 5:5 மற்றும் 1 தீமோத்தேயு 1:20 ஐயும் பார்க்கவும்).

ஒழுங்குமுறை விளைவுகள். பாவத்தின் சில விளைவுகள், தேவன் நம்மைத் தம் பிள்ளைகளுக்கு ஒரு தப்பனாகக் கருதியதன் விளைவு. பாவத்திற்கான தண்டனைக்கும் பாவத்திற்கான ஒழுக்கத்திற்கும் வித்தியாசம் உள்ளது. தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், சரியான பாதையில் நம்மை வழிநடத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒழுக்கத்தை அனுபவிக்கிறோம். "என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்" (எபிரெயர் 12:5-6; நீதிமொழிகள் 3:11-12). தேவனுடைய பிள்ளைகளில் எத்தனை பேர் ஒழுக்கத்திற்கு உட்படுகிறார்கள் என்பதைக் கவனியுங்கள்: "எல்லோரும்" (எபிரெயர் 12:8). நாம் அனைவரும் சில நேரங்களில் வழிதவறி இருக்கிறோம். அவருடைய இயல்பிற்கு உண்மையாக,

பாவத்தின் ஒழுங்கு விளைவுகளை அனுபவிக்க அனுமதிக்கும் தேவனுடைய நோக்கம் சரியானது: "தேவன் தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்" (எபிரெயர் 12:10).

கிறிஸ்தவர்கள் தங்கள் பாவத்தின் ஒழுங்கு விளைவுகளை எதிர்கொள்கிறார்கள் என்பதற்கு கொரிந்து திருச்சபை ஒரு உதாரணம் அளிக்கிறது: கர்த்தருடைய மேசையை தகுதியற்ற முறையில் சாப்பிட்டு, அவர்கள் தேவனுடைய அதிருப்தியைக் கொண்டுவந்தார்கள்: "இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்" (1 கொரிந்தியர் 11:30). 2 சாமுவேல் 12ல் இதே போன்ற ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதைக் காண்கிறோம். தாவீது தன் பாவத்தை ஒப்புக்கொண்டு மன்னிக்கப்பட்ட பிறகும், தாவீதுக்கும் அவருடைய வீட்டாருக்கும் சில விளைவுகள் ஏற்பட தேவன் அனுமதித்தார் (வசனங்கள் 11-14).

தேவன் நம்மீது தம்முடைய அன்பைக் காட்ட பாவத்தின் சில தற்காலிக விளைவுகளை அனுபவிக்க அனுமதிக்கிறார். வழிதவறிப் போகும் தம் பிள்ளைகளை தேவன் ஒருபோதும் கண்டிக்கவில்லை என்றால், அவர் ஒரு நல்ல தகப்பனாக இருக்க மாட்டார். நாம் ஒருபோதும் ஒழுக்கமடையாமல் அல்லது நமது தவறான செயலுக்கான விளைவுகளை ஒருபோதும் அனுபவிக்கவில்லை என்றால், நாம் ஒருபோதும் சரியிலிருந்து தவறிலிருந்து கற்றுக்கொள்ள மாட்டோம். நாம் நமது வெற்றிகளில் இருந்து கற்றுக் கொள்வதை விட, நமது தவறுகளில் இருந்து கற்றுக் கொள்ள முனைகிறோம்.

கர்த்தருடைய நன்மைக்காக அவரைத் துதியுங்கள். பாவத்தின் தற்காலிக விளைவுகளை அனுபவிக்க அவர் அனுமதிக்கிறார் (அதுவும் நம் சொந்த நன்மைக்காக). ஆனால் பாவத்தின் நித்தியமான விளைவுகளிலிருந்து அவர் நம்மைக் காப்பாற்றினார். நம்முடைய

பாவங்களுக்கான தண்டனையை இயேசு செலுத்தினார், எனவே நாம் ஒருபோதும் இரண்டாவது மரணத்தை அனுபவிக்க மாட்டோம், அதாவது அக்கினியும் கந்தகமும் எரிகிற அக்கினிக்கடல் (வெளிப்படுத்துதல் 20:14). கிறிஸ்துவை நம்புபவர்களுக்கு பாவத்தின் சாபமும் விளைவுகளும் ஒரு நாள் முழுவதுமாக அகற்றப்படும் என்றும், "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை" (ஏசாயா 11:9).

62. கிறிஸ்து எப்பொழுது திரும்ப வருவார்?

கி.பி. 2000ஆம் ஆண்டின் பிறப்பு வாணிப உலகில் பெரும் பர பரப்பை உருவாக்கிவிட்டது. புத்தாயிரமாண்டு 2001 ஜனவரியில் தான் துவங்கியதெனினும் 2000 எனும் எண் எல்லாரையும் குலுக்கி விட்டது. Y2K எனும் கணிப்பொறிச் சிக்கலுக்காக இந்தியா மட்டுமே ஏறத்தாழ 1500 முதல் 2000 கோடி ரூபாய்களைச் செலவழித்துள்ளது. ஆனால் விபரீதங்கள் ஏதும் நடந்துவிடவில்லை, கர்த்தருக்கு ஸ்தோத் திரம்! மார்க்கவுலகும் இது நடக்கும் அது நடக்குமெனப் பல்வேறு காரியங்களைச் சொல்லி நின்றது. இந்த 2000ஆம் ஆண்டில் கிறிஸ்து திரும்ப வரக்கூடுமென புத்தாண்டு விழிப்பாராதனைகளில் பிரசங் கங்கள் செய்யப்பட்டன. இக்காரியத்தைக் குறித்து வேதம் என்னதான் சொல்லுகிறதென உண்மையான கிறிஸ்தவர்கள் அறிய விரும்பு கின்றனர்.

கிறிஸ்து எப்பொழுது திரும்ப வருவாரென்பதற்கு முடிவான பதில் திருமறையில் எழுதப்பட்டுள்ள அவரது கடைசிச் செய்தியில் உண்டு: "மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்" (வெளி 22:20). "மெய் யாகவே" என்ற பதம் நம்மை ஊக்குவிக்கவும், "சீக்கிரமாய்" என்ற பதம் நமக்குச் சவாலிடவும் சொல்லப்பட்டது. சபைகளுக்கு அனுப் பிய தமது செய்திகளில் ஆண்டவர் அடிக்கடி "சீக்கிரமாய்" எனும் பதத்தைப் பயன்படுத்தினார் (வெளி 2:5,16; 3:11; 22:7,12). முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் இதை அப்படியே நம்பியிருந்தார்கள். "கர்த்தர் வருகிறார்" எனும் பொருள்படும் "மாரநாதா" எனும் அர மேயச் சொல்லினால் அவர்கள் ஒருவரையொருவர் வாழ்த்தியதற்கு அது ஒரு காரணமாகும் (1 கொரி 16:22).

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை ஒவ்வொரு வினாடியும் எதிர்பார்த்தவர்களாய் முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களே வாழ்ந் திருப்பார்களானால் இன்று நமது எதிர்பார்ப்பு எவ்வளவு அதிக மாயிருக்கவேண்டும்! ஆனாலும், நாள் குறிப்பிடுவதை வேதம் நெடு கவே கூடாதெனப் போதித்துவருகிறது. தமது பிரிவு வார்த்தைகளில் கிறிஸ்து தமது சீடரிடம், "பிதாவானவர் தமது அதிகாரத்தால் குறித்து வைத்துள்ள காலங்களையும் நேரங்களையும் அறிவது உங்களுக்கு உரியதல்ல" என்றார் (அப் 1:7). அதற்கு முன்னதாகவே பலமுறை அவர்களிடம், "மனுமகன் வரும் நாளோ வேளையோ உங்களுக்குத் தெரியாதபடியால் விழித்திருங்கள்" என்று சொல்லியிருந்தார் (மத் 24:42; 25:13). ஆனால் அறிய வேண்டாததை அறிவதிலேயே மனி தன் எப்பொழுதும் நாட்டங்கொள்ளுவான்! தாம் எப்பொழுது திரும்பு வாரென தமக்கே தெரியாதெனக் கிறிஸ்து சொல்லும்போது அதை அறிந்துகொள்ள நாம் துடிப்பதேனோ? (மாற் 13:32).

ஒன்றுமட்டும் நிச்சயம் - அதாவது, முந்திய தலைமுறையினரை விட இத்தலைமுறையினராகிய நாம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு இன்னும் நெருங்கி வந்துவிட்டோம். எழுப்புதல் வீரன் லியோனார்டு ரேவன்ஹில் அடிக்கடி சொல்வதுபோல், "நாம் வாழும் காலம் கடைசி நாட்களல்ல, கடைசி நிமிடங்கள்!" கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னர் நிகழுமென முன்னறிவிக்கப்பட் டவை பெரும்பாலும் நிறைவேறிவிட்டன. மிக முக்கிய அடையா எங்களில் ஒன்றாகிய அகிலவுலக நற்செய்திப்பணி அதின் இறுதிக் கட்டத்திலுள்ளது. சபைச் சரித்திரத்தில் என்றுமில்லாத வேகத்தில் அப்பணி நடந்துகொண்டிருக்கிறது (மத் 24:14). பாவம் பெருகி "அக் கிரமத்தின் பாத்திரம்" நிரம்பி வழிகிறது (மத் 24:12). நியாயாதிபதி "வாசற்படிக்கு" வந்துவிட்டார்! (யாக் 5:9).

வேதாகமச் சம்பவங்களின் நாட்காட்டியில் இதுவரை நடந்த அதி முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்த விதத்தைக் கவனிக்குங்கால், இத்தலை முறையில் கிறிஸ்து திரும்பவர சாத்தியக்கூறுகள் ஏராளம். அவர் வரும் நாளை நாம் குறிப்பாய் அறிந்திருந்தால் நாம் எப்பொழுதும் ஆயத்தமாயிராமல் கடைசி நிமிடம்வரை நமது ஆயத்தத்தைத் தள் ளிப்போட்டுக்கொண்டேயிருப்போம். தமது சுத்தக் கிருபையினாலும் ஏகாதிபத்திய ஞானத்தினாலுமே பிதாவானவர் இதை இரகசியமாய்த் தம்மிடம் வைத்துள்ளார்.

நாளைக் குறிப்பிடுவதற்குப் பதிலாகப் பணிக்குக் குறிகளை நிய மித்துக்கொண்டு "எருசலேம், முழு யூதேயா, சமாரியா மற்றும் உலகின் கடையெல்லைவரை" நற்செய்தியைப் பரப்புவோம் (அப் 1:7,8). கிறிஸ்துவின் வருகையைக் குறித்துப் புதிய வெளிப்பாடு களனும் அடையாளங்கள், தரிசனங்கள் மற்றும் சத்தங்களின் பின் னால் செல்லாதீர்கள் (மத் 24:23-26). வேதத்தில் தெளிவாய்க் கொடுக்கப்பட்டுள்ள வெளிப்பாடுகளில் திருப்தியடைந்திருங்கள்; வேதமே மவுனமாயிருக்கும் இரகசியங்களைத் தோண்டித் துருவா திருங்கள் (உபா 29:29).

63. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்றால் என்ன?

சகலமும் தேவனுடைய ஆளுகையின்கீழ் உள்ளது மற்றும் அவரளித்த வாக்குத்தத்தங்கள் மற்று தீர்க்கத்தரிசனங்களை நிறைவேற்ற அவர் உண்மையுள்ளவராக இருக்கிறார் என்பதற்கான விசுவாசிகளின் நம்பிக்கையே இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையாகும். கிறிஸ்துவின் முதலாம் வருகை, எளிமையின் ரூபமாக, குழந்தையின் வடிவில், வாக்குதத்தம் நிறைவேற பெத்லகேமில் மானுடனாக வந்தார். தீர்க்கதரிசன வார்த்தைகளின்படி இயேசு அவருடைய பிறப்பு, வாழ்க்கை, ஊழியம், இறப்பு மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாக நிறைவேற்றி முடித்தார். மேசியாவைக் குறித்த இன்னும் சில தீர்க்கதரிசனங்கள் இன்னும் நிறைவேற வேண்டியதாயிருக்கிறது. மேசியாவாக வந்த இயேசு விட்டுப்போன சில தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றி முடிக்க அல்லது பரிபூரணமாக்க அவரது இரண்டாம் வருகை அமையப்போகிறது. இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகை ஒரு வேதனையை அனுபவிக்கிற ஊழியக்காரனாக / வேலைக்காரனாக இருந்தது. ஆனால் அவரது இரண்டாம் வருகையில் பரலோக சேனைகளுடன் ராஜாதி ராஜாவாக வரப்போகிறார்.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் இவ்விரு வருகையைப்பற்றி யுள்ள வேறுபாட்டினை தெளிவாக குறிப்பிடவில்லை. அது ஏசாயா 7:14; 9:6-7 மற்றும் சகரியா 14:4 ஆகிய வேதபாகங்களில் கண்டுகொள்ளலாம். அதினிமித்தமாக யூத ஆய்வாளர்கள் இருவேறு நபராக கருதுகிறார்கள். மேசியா என்பது ஒருவரே. இரண்டு பகுதிகளாக பரிபூரணமாக்குபவர் என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை. இயேசு கிறிஸ்து தன் முதலாம் வருகையின்போது தாழ்மையின் ரூபமாக அடிமையின் கோலமெடுத்து (ஏசாயா 53), தனது நோக்கத்தினை நிறைவேற்றினார். இஸ்ரவேலின் மீட்பராக,

ராஜாதி ராஜாவாக, தனது மகிமையை வெளிப்படுத்ததக்கதாக அவரது இரண்டாம் வருகை வரப்போகிறது. சகரியா 12:10 மற்றும் வெளி:1:7-ல் சொல்லப்பட்டுள்ளபடி அவரின் முதலாம் வருகையின்போது அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்ளாதவர்கள், அதாவது இஸ்ரவேலரும் உலகத்தார் அனைவரும் மனந்திரும்பி கர்த்தரை நோக்கித் திரும்பாவிட்டால் துக்கித்து புலம்புவார்கள்.

இயேசுவானவர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, தூதர்கள் அப்போஸ்தலரை பார்த்து, "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்" (அப். 1:11). சகரியா 14:4-ல் அவரின் இரண்டாவது வருகை ஒலிவ மலைமேல் நிகழப்போவதாக கூறுகிறது. மத்தேயு 24:30-ல் இரண்டாம் வருகை இப்படியாக முன்னுரைக்கப்பட்டுள்ளது, "அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்" என்பதாகவும், தீத்து 2:13-ல் "மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய "மகிமையின் பிரசன்னமாகுதலை" எதிர்பாத்திருக்க வேண்டும் என்பதாக கூறப்பட்டுள்ளது.

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையினைப் பற்றி வெளிப்படுத்தின விசேஷம் 19:11-16ல் விரிவாகக் கூறப்பட்டுள்ளது, "பின்பு, பரலோகம் திறந்திருக்கக்கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார். அவருடைய கண்கள்

அக்கினிஜ்வாலையைப்போலிருந்தன, அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன; அவருக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது. இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே. பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந்தரித்தவர்களாய், வெள்ளைக்குதிரைகளின்மேல் ஏறி, அவருக்குப் பின்சென்றார்கள். புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது; இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார்; அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார். ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின்மேலும் அவருடைய தொடையின்மேலும் எழுதப்பட்டிருந்தது.

64. இயேசு எப்போது திரும்பி வருகிறார் என்பதை அறிய முடியுமா?

மத்தேயு 24:36-44 அறிவிக்கிறது, "அந்த நாளையும் அந்த நாழிகைகளையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்...உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்... நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்." முதல் பார்வையில், இந்த வசனங்கள் கேள்விக்கு தெளிவான மற்றும் சரியான பதிலை அளிப்பதாகத் தெரிகிறது. இல்லை, இயேசு எப்போது திரும்பி வருவார் என்று யாருக்கும் தெரியாது. எனினும், இயேசு எப்போது திரும்பி வருவார் என்பதை யாராலும் அறிய முடியாது என்று அந்த வசனங்கள் கூறவில்லை. பெரும்பாலான வேதாகம அறிஞர்கள், இப்போது பரலோகத்தில் மகிமைப்படுத்தப்பட்ட இயேசு, அவர் திரும்பி வரும் நேரம் தெரியும், "அல்லது குமாரன்" என்ற சொற்றொடர் இயேசு எப்போது திரும்பி வருவார் என்று தெரியாது என்று குறிப்பிடுவதாக அர்த்தமில்லை என்கிறார்கள். அதுபோலவே, மத்தேயு 24:36-44 இயேசுவின் திரும்ப வரும் நேரத்தை அந்த நேரத்தில் யாராலும் அறிய முடியவில்லை என்று குறிப்பிடும் அதே வேளையில், எதிர்காலத்தில் யாரோ ஒருவருக்கு இயேசு திரும்பி வரும் நேரத்தை தேவன் வெளிப்படுத்த முடியும்.

கூடுதலாக, அப். 1:7 உள்ளது, அதில், "பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல." அந்த நேரத்தில் அவர் இஸ்ரவேலுக்கு ராஜ்யத்தை மீட்டெடுக்கப் போகிறாரா என்று சீடர்கள் கேட்ட பிறகு இயேசு அவர்களுக்குச் சொன்னார். இது

மத்தேயு 24 இன் செய்தியை உறுதிப்படுத்துவதாகத் தெரிகிறது. இயேசு திரும்பி வரும் நேரத்தை நாம் அறிவது அல்ல. ஆனால் இந்தப் வேதப்பகுதிகள் எந்த வருகையைக் குறிப்பிடுகின்றன என்ற கேள்வியும் உள்ளது. அவை சபை எடுத்துக்கொள்ளப்படுதல் அல்லது மகிமையுள்ள இரண்டாவது வருகை பற்றி பேசுகிறதா? எந்த வருகை அறியமுடியாதது-சபை எடுத்துக்கொள்ளப்படுதல், மகிமையுள்ள இரண்டாவது வருகை அல்லது இரண்டும்? சபை எடுத்துக்கொள்ளப்படுதல் உடனடி மற்றும் இரகசியமானதாக வழங்கப்பட்டாலும், இரண்டாவது வருகையின் நேரம் கடைசிக்கால தீர்க்கதரிசனத்தின் அடிப்படையில் அறியப்படலாம்.

அதைக்கொண்டு, நாம் மிகவும் தெளிவாக இருப்போம்: இயேசு எப்போது திரும்பி வருவார் என்பதை தேவன் யாருக்காவது வெளிப்படுத்தினதாக நாம் நம்புவதில்லை, மேலும் இயேசு எப்போது திரும்பி வருவார் என்பதை தேவன் யாருக்காவது எப்போதாவது வெளிப்படுத்துவார் என்பதைக் குறிக்கும் எதையும் நாம் வேதத்தில் காண்பதில்லை. மத்தேயு 24:36-44, இயேசுவின் காலத்தில் மக்களிடம் நேரடியாக பேசப்பட்டது, ஒரு பொதுவான கொள்கையையும் கொண்டுள்ளது. இயேசுவின் வருகை எப்போது இருக்கும் மற்றும் யுகத்தின் முடிவு எப்போது என்று நமக்குத் தெரியாது. வேதம் எங்கும் தேதியை தீர்மானிக்க முயற்சி செய்யவேண்டும் நம்மை ஊக்குவிப்பதுமில்லை. மாறாக, "ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்" (வசனம் 42) என்று ஊக்குவிக்கப்படுகிறோம். நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும், ஏனென்றால் "நாம் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்" (வசனம் 44). எதிர்காலத்தில் ஒரு கட்டத்தில் யாராவது இயேசு இன்ன சமயத்தில் திரும்பி வருவார் என்பதை கூறினால் அது இயேசு கூறிய இந்த வார்த்தைகளின் வலிமையைக் குறைக்கிறதாய் இருக்கிறது. மேலும் அவர் வரும் தேதி கண்டுபிடிக்கப்பட்டால், நாம் இனி "விழித்திருத்தல்" அல்லது

"ஆயத்தமாக இருக்க" தேவையில்லை. எனவே, மத்தேயு 24:36-44 இல் கூறப்பட்ட கோட்பாடு மனதில் இருக்கும்போது, இயேசு திரும்பி வரும் தேதியை யாராலும் அறிய முடியாது என்பது தெளிவாகிறது.

இவ்வளவு தெளிவான வேதாகமக் கோட்பாடு இருந்தபோதிலும், கிறிஸ்தவ வரலாறு முழுவதும் பலர் இயேசு இன்ன தேதியில் திரும்பி வருவார் என்று தேதியை முன்னறிவிக்க முயன்றனர். இதுபோன்ற பல தேதிகள் முன்மொழியப்பட்டுள்ளன, அவை அனைத்தும் பொய்த்துபோயின. இயேசு இன்ன நாளில் வருவார் என்று இயேசுவின் வருகைக்கான குறிப்பிட்ட தேதிகளை கணித்தவர்களில் பெரும்பாலானவர்கள், இல்லாவிட்டாலும், பிற பிரச்சனைகளில் கோட்பாட்டு நிலைப்பாடுகள் இல்லை. மத்தேயு 24:36 மற்றும் அப்போஸ்தலர் 1:7 ஆகியவற்றின் அடிப்படையில் மேலே கூறியது போல, இயேசு திரும்பி வரும் நாளை நாம் கணக்கிடுவது தேவனுடைய விருப்பம் அல்ல. அத்தகைய பணியை மேற்கொள்ளும் எவரும், வெறுமனே தவறாக வழிநடத்தப்படுகிறார்கள்.

முக்கிய குறிப்புகள் (1) இயேசுவின் வருகையின் நேரத்தைக் கண்டறிய வேதாகமம் எங்கும் நம்மை ஊக்குவிப்பதில்லை மற்றும் (2) இயேசுவின் வருகையின் நேரத்தை தீர்மானிக்கக்கூடிய தெளிவான தரவை வேதாகமம் நமக்குக் கொடுக்கவில்லை. இயேசு எப்போது திரும்பி வருகிறார் என்பதை அறிய காட்டுவதற்கு மற்றும் ஊக கணக்கீடுகளை வளர்ப்பதற்கு பதிலாக, வேதாகமம் நம்மை "விழித்திருங்கள்" மற்றும் "ஆயத்தமாக இருங்கள்" என்று ஊக்குவிக்கிறது (மத்தேயு 24:42-44). இயேசு மீண்டும் திரும்பி வரும் நாள் நமக்குத் தெரியவில்லை என்னும் காரியம் நம்மை கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கி ஆயத்தமாக ஒவ்வொரு நாளும் அதன் வெளிச்சத்தில் வாழ நம்மைத் தூண்ட வேண்டும்.

65. இயேசு இரவிலே திருடன் வருகிற விதமாய் திரும்புவார் என்றால் என்ன அர்த்தம்?

இயேசு கிறிஸ்துவின் வருகை இரவிலே ஒரு திருடன் வருகிற விதத்திற்கு ஒப்பிடப்படுகிறது. இரண்டு பத்திகள் "இரவிலே திருடன் வருகிற விதமாய்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றன: மத்தேயு 24:43, "திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டானென்று அறிவீர்கள்" மற்றும் 1 தெசலோனிக்கேயர் 5:2, "இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்."

மத்தேயு 24 இல், இயேசு உபத்திரவத்தின் முடிவில் தனது இரண்டாவது வருகையைப் பற்றி பேசுகிறார். பவுல் 1 தெசலோனிக்கேயரில் "கர்த்தருடைய நாள்" என்று அழைக்கிறார். இது வானியல் எழுச்சியையும், வானத்தில் காணக்கூடிய "மனுஷகுமாரனின் அடையாளத்தையும்" உள்ளடக்கிய தெய்வீக பதில் செய்யும் நாளாகும் (மத்தேயு 24:29-30). இது "அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே" (வசனம் 29, ESV) நடக்கும் என்று இயேசு கூறுகிறார், இது உபத்திரவத்திற்கு முன்பு நடக்கும் நிகழ்வை சபை எடுத்துகொள்ளப்படுவதிலிருந்து வேறுபடுத்துகிறது.

இரண்டாவது வருகை இரவிலே திருடன் வருகிற விதமாய் எப்படி இருக்கும்? இயேசுவின் ஒப்பீட்டின் முக்கிய அம்சம் என்னவென்றால், அவர் எப்போது திரும்ப வருவார் என்பது யாருக்கும் தெரியாது. ஒரு திருடன் ஒரு வீட்டைத் திருட யாருக்கும் தெரியாமல் வருவது போல, இயேசுவும் நியாயத்தீர்ப்பைக் கொடுப்பதற்கு திரும்ப வரும்போது அவிசுவாச உலகத்தை ஆச்சரியத்தில் ஆழ்த்துவார். உலகில் எல்லா

காலத்திலும் இருப்பதைப் போல, "ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண்கொண்டும் பெண்கொடுத்தும்" இருப்பார்கள் (வசனம் 38). ஆனால், அவர்கள் அறிவதற்கு முன், நியாயத்தீர்ப்பின் நாள் அவர்கள் மீது வரும் (வசனங்கள் 40-41). பவுல் இதை இவ்வாறு கூறுகிறார்: "சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை" (1 தெசலோனிக்கேயர் 5:3).

விசுவாசி இந்த விரைவான மற்றும் திடீர் நியாயத்தீர்ப்புக்கு பயப்படுவதில்லை; "இரவில் திருடன்" வரும் வருகை நம்மை ஆச்சரியப்படுத்தாது. கிறிஸ்தவர்கள் ஒரு தனி பிரிவில் உள்ளனர்: "சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே" (1 தெசலோனிக்கேயர் 5:4). இருளில் இருப்பவர்கள் மட்டுமே தெரியாமல் அழைத்துச் செல்லப்படுவார்கள், மேலும் நாம் அனைவரும் "வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறோம்; நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே" (வசனம் 5). கர்த்தருக்கு ஸ்தோத்திரம், "தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார்" (வசனம் 9).

இரட்சிக்கப்படாதவர்கள் இயேசுவின் எச்சரிக்கைக்கு செவிசாய்க்க வேண்டும்: "நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்" (மத்தேயு 24:44). நீங்கள் எப்படி ஆயத்தமாக இருக்க முடியும்? நீங்கள் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள தேவன் ஒரு வழியை வழங்கியுள்ளார். அந்த வழி இயேசு கிறிஸ்து (யோவான் 14:6). இயேசுவை உங்கள் கர்த்தராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்வதன் மூலம், நித்திய ஜீவனின் வாக்குத்தத்துடன்

பாவமன்னிப்பு, இரக்கம் மற்றும் இரட்சிப்பு உங்களுக்கு வழங்கப்படுகிறது (யோவான் 3:16; எபேசியர் 2:8-9). "திருடன்" வருகிறார், ஆனால் நீங்கள் அந்த நாளின் பிள்ளையாக இருக்கலாம். அதை தள்ளி வைக்காதே; இதுவே "கர்த்தருடைய அநுக்கிரக வருஷம்" (லூக்கா 4:19).

66. இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள் என்பதன் அர்த்தம் என்ன?

நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டிருக்கிறீர்களா? இந்த கேள்வியை சரியாக புரிந்துகொள்ள நீங்கள் முதலில் "இயேசு கிறிஸ்து", "சொந்த", மற்றும் "இரட்சகர்" ஆகிய சொற்களின் அர்த்தத்தை புரிந்துகொள்ள வேண்டும்.

இயேசு கிறிஸ்து யார்? அநேக மக்கள் இயேசு கிறிஸ்துவை ஒரு நல்ல மனிதனாக, மாபெரும் போதகராக அல்லது தேவனுடைய ஒரு தீர்க்கதரிசியாக ஏற்றுக்கொள்வர். இயேசு கிறிஸ்துவை பொறுத்தமட்டில் இந்த விஷயங்கள் யாவும் சரியானவைகள் தான், ஆனாலும் இயேசு மெய்யாகவே யார் அவர் எப்படிப்பட்டவர் என்பதை இவைகள் முழுமையாக வரையறுத்து கூறவில்லை. இயேசு மாம்சத்தில் வந்த தேவன் மற்றும் மனித உருவில் வந்த தேவன் என்று வேதாகமம் கூறுகிறது (யோவான் 1:1, 14-ஐ பாருங்கள்). நமக்கு போதித்து, நம்மை குணமாக்கி, நம்மை திருத்தி, நம்மை மன்னித்து, நமக்காக மரிக்கும்படியாக தேவன் இந்த உலகத்தில் வந்தார்! இயேசு கிறிஸ்து தேவன், சிருஷ்டிகர் மற்றும் பரமாதிகாரமுள்ள ஆண்டவராக இருக்கிறார். இந்த இயேசுவை நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்களா?

ஒரு இரட்சகர் என்றால் என்ன, நமக்கு ஏன் ஒரு இரட்சகர் வேண்டும்? நாம் எல்லோரும் பாவம் செய்திருக்கிறோம் என்றும் நாம் எல்லோரும் தீய செயல்களை செய்திருக்கிறோம் என்றும் வேதாகமம் சொல்கிறது (ரோமர் 3:10-18). நம்முடைய பாவத்தின் விளைவாக, நாம் தேவனுடைய கோபத்தையும் நியாயத்தீர்ப்பையும் பெற்றுக்கொள்ள தகுதியுள்ளவர்கள் ஆனோம். நாம் செய்த பாவத்திற்கான நீதியான தண்டனை என்னவென்றால், அளவில்லாத நித்திய தேவனிடத்தில் இருந்து நிதியமான தண்டனை ஆகும் (ரோமர்

6:23; வெளிப்படுத்துதல் 20:11-15). அதனால்தான் நமக்கு ஒரு இரட்சகர் தேவையாக இருக்கிறது!

இயேசு கிறிஸ்து இப்பூமியில் வந்து நம் ஸ்தானத்தில் மரித்தார். இயேசுவின் மரணம் நம்முடைய பாவங்களுக்காக செலுத்தி முடித்த எல்லையற்ற முடிவில்லாத தொகையாகும் (2 கொரிந்தியர் 5:21). இயேசு நம்முடைய பாவங்களுக்கான தண்டனையின் விலைக்கிரயத்தை செலுத்தும்படியாக மரித்தார் (ரோமர் 5:8). இயேசு விலைக்கிரயத்தை கொடுத்து தீர்த்தபடியினால் நாம் கொடுக்க வேண்டியதில்லை. மரித்தோரிலிருந்து இயேசு உயிர்த்தெழுந்தபோது, நம்முடைய பாவங்களுக்காக செலுத்தப்படவேண்டிய தொகையை செலுத்த போதுமானவையாக இருந்தது என்று நிரூபித்தார். அதனால்தான் இயேசு ஒரே ஒருவர் மட்டும்தான் இரட்சகர் (யோவான் 14:6, அப்போஸ்தலர் 4:12)! இயேசுவை நீங்கள் உங்களுடைய இரட்சகராக நம்புகிறீர்களா?

இயேசு உங்கள் "சொந்த" இரட்சகராக இருக்கிறாரா? பலர் கிறிஸ்தவத்தை சபையில் கலந்துகொள்பவர்கள், சில சடங்குகளை ஆசரிப்பது, மற்றும் / அல்லது சில பாவங்களைச் செய்யாமல் இருப்பதுதான் என கருதுகின்றனர். அது கிறிஸ்தவம் அல்ல. உண்மையான கிறிஸ்தவம் என்பது இயேசு கிறிஸ்துவுடன் தனிப்பட்ட உறவு அல்லது ஐக்கியத்தில் இருப்பதாகும். உங்கள் சொந்த இரட்சகராக இயேசுவை ஏற்றுக்கொள்வதன் மூலம் உங்கள் சொந்த விசுவாசத்தையும் நம்பிக்கையையும் இயேசுவின்மேல் வைக்கிறீர்கள். மற்றவர்களின் விசுவாசத்தால் யாரும் இரட்சிக்கப்படுவதில்லை. சில நற்செயல்களை செய்வதன் மூலம் யாரும் மன்னிக்கப்படுவதில்லை. இரட்சிக்கப்படுவதற்கான ஒரே வழி இயேசுவை உங்கள் வாழ்வில் இரட்சகராக தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்வதாகும். மேலும் உங்களுடைய பாவங்களுக்கான தண்டனையின் விலைக்கிரயத்தை செலுத்தும்படியாக அவர் மரித்தார் என்றும் அதை தம்முடைய உயிர்த்தெழுதலினாலே உறுதிபடுத்தினார் என்றும் பரிபூரணமாக

நம்பவேண்டும் (யோவான் 3:16). இயேசு தனிப்பட்ட முறையில் உங்கள் இரட்சகராக இருக்கிறாரா?

நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்கள் தனிப்பட்ட அல்லது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள விரும்பினால், பின்வரும் வார்த்தைகளை தேவனிடம் கூறுங்கள். நீங்கள் ஜெபிக்கிற இந்த ஜெபமோ அல்லது இதுபோன்ற மற்ற ஜெபங்களோ உங்களை இரட்சிப்பது இல்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவில் நீங்கள் வைக்கிற நம்பிக்கை மட்டுமே உங்களை உங்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்கும். அவர்மேல் உங்களுக்கு இருக்கிற நம்பிக்கை மற்றும் அவரால் நீங்கள் பெற்றிருக்கிற இரட்சிப்பை வெளிப்படுத்துகிற ஒரு செயல் தான் இந்த ஜெபம். "ஆண்டவரே, நான் உமக்கு விரோதமாக பாவம் செய்திருக்கிறேன் என்றும் அதினிமித்தம் பாவத்திற்கான தண்டனையை அடைவதற்கு பாத்திரமாய் இருக்கிறேன் என்றும் அறிந்திருக்கிறேன். ஆனால் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்து அவரில் நான் மன்னிப்பை பெறத்தக்கதாக நான் அடையவேண்டிய தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டார் எனவும் அறிந்திருக்கிறேன். இரட்சிப்பிற்காக உம்மில் எனது பரிபூரண நமிக்கையை வைக்கிறேன். எனக்கு அருளிய இலவச பரிசாகிய நித்திய ஜீவனுக்காக நீர் காண்பித்திருக்கிற அற்புதமான கிருபைக்காகவும் மன்னிப்பிற்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறேன்! ஆமென்!"

67. இயேசு இரட்சிக்கிறார் என்பதன் அர்த்தம் என்ன?

"இயேசு இரட்சிக்கிறார்" என்பது பம்பர் ஸ்டிக்கர்களின் ஒரு பிரபலமான கோஷம், தடகள நிகழ்வுகளின் குறியீடுகள், மற்றும் சிறிய விமானங்களால் வானத்தில் இழுத்துச் செல்லப்படுகிற பதாகைகளாக வருகிறது. வருத்தகரமாக, "இயேசு இரட்சிக்கிறார்" என்ற சொற்றொடரைக் காணும் சிலர் மட்டுமே அதை உண்மையாகப் புரிந்துகொள்கிறார்கள். அந்த இரண்டு வார்த்தைகளிலும் மிகப்பெரிய சக்தியும் சத்தியமும் நிறைந்திருக்கிறது.

இயேசு இரட்சிக்கிறார், ஆனால் இயேசு யார்?

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரவேலில் வாழ்ந்த ஒரு மனிதராக இயேசுவை பெரும்பாலான மக்கள் புரிந்துகொள்கிறார்கள். உலகிலுள்ள எல்லா மதங்களும் இயேசுவை ஒரு சிறந்த ஆசிரியராகவும் / அல்லது ஒரு தீர்க்கதரிசியாகவும் கருதுகின்றன. இந்த விஷயங்கள் இயேசுவைக்குறித்த உண்மையான கூற்றுகளாக இருக்கிறது என்கிறபோதிலும், இயேசு உண்மையிலேயே யார் என்பதையும் அவர் எதற்காக இரட்சிக்கிறார் என்பதையும் அவர்கள் சரியாகக் கைப்பற்றவில்லை, மற்றும் அவர்கள் விளக்கமளிக்கவுமில்லை. இயேசு மனித உருவில் இருக்கும் தேவனாக இருக்கிறார் (யோவான் 1:1, 14). இயேசு தேவன், பூமிக்கு வந்த, உண்மையான மனிதன் (1 யோவான் 4:2). நம்மை இரட்சிப்பதற்காக தேவன் இயேசுவில் ஒரு மனிதனாக வந்தார். அது அடுத்த கேள்வியைக் கொண்டுவருகிறது: நாம் ஏன் இரட்சிக்கப்பட வேண்டும்?

இயேசு இரட்சிக்கிறார், ஆனால் நாம் ஏன் இரட்சிக்கப்பட வேண்டும்?

உயிரோடிருந்த அல்லது ஜீவிக்கிற ஒவ்வொரு மனிதனும் பாவம் செய்ததாக வேதாகமம் கூறுகிறது (பிரசங்கி 7:20, ரோமர் 3:23). பாவம் செய்தல் என்பது, சிந்தனை, வார்த்தை, அல்லது செயலில் தேவனுடைய பரிபூரண மற்றும் பரிசுத்தமான தன்மையை முரணாக இருக்கின்ற காரியங்கள் ஆகும். நம்முடைய பாவத்தின் காரணமாக, நாம் எல்லாரும் தேவனால் நியாயந்தீர்க்கப்பட பாத்திரர்களாக இருக்கிறோம் (யோவான் 3:18, 36). தேவன் பரிபூரணமாக நீதியுள்ளவராக இருக்கிறார், ஆகவே பாவம் மற்றும் தீமைகளை அவர் தண்டிக்க முடியாதபடி அனுமதிக்க இயலாது. தேவன் எல்லையற்றவர் மற்றும் நித்தியமானவர் என்பதால், எல்லா பாவங்களும் தேவனுக்கு விரோதமாக இருக்கிறது (சங்கீதம் 51:4), ஒரு முடிவற்ற மற்றும் நித்தியமான தண்டனை மட்டுமே அதற்குப் போதுமானதாக இருக்கிறது. நித்திய மரணம் மட்டுமே பாவத்திற்கு ஏற்ற நீதியுள்ள தண்டனையாக இருக்கிறது. அதனால்தான் நாம் இரட்சிக்கப்பட வேண்டும்.

இயேசு இரட்சிக்கிறார், ஆனால் அவர் எப்படி இரட்சிக்கிறார்?

நாம் எல்லையற்ற தேவனுக்கு எதிராக பாவம் செய்தபடியால், ஒரு வரையறுக்கப்பட்ட மனிதனாக நாம் நம்முடைய பாவங்களுக்காக அளவற்ற நேரங்களாக நமது விலைக்கிரயத்தை செலுத்த வேண்டும், அல்லது எல்லையற்ற நபராகிய (இயேசு) ஒரு முறை நம்முடைய பாவங்களுக்காக விலைக்கிரயத்தை செலுத்த வேண்டும். வேறு எந்தஒரு தேர்வும் இல்லை. நம்முடைய இடத்தில் மரித்ததன் மூலம் இயேசு நம்மை இரட்சிக்கிறார். இயேசு கிறிஸ்து என்னும் நபரில் தேவன் தம்மையே நம் சார்பாக பலியாக கொடுத்தார், அதனிமித்தம் எல்லையற்ற மற்றும் நித்திய தண்டனைக்குரிய விலையை அவரால் மட்டுமே செலுத்த முடியும் (2 கொரிந்தியர் 5:21; 1 யோவான் 2:2).

ஒரு பயங்கரமான நித்திய விதியிலிருந்து நம்மை இரட்சிப்பதற்காக, பாவத்தின் விளைவாக நாம் அடையவேண்டிய தகுதியுள்ள தண்டனையை இயேசு தம்மீது எடுத்துக்கொண்டார். நம்மீது அவர் வைத்திருந்த அன்பின் காரணமாக, இயேசு தம் உயிரைக் கொடுத்தார் (யோவான் 15:13), நாம் சம்பாதித்த பாவ தண்டனையை செலுத்தினார், ஆனால் அதை நம்மால் செலுத்த முடியவில்லை. இயேசு உயிர்த்தெழுப்பப்பட்டார், அவருடைய மரணம் நம்முடைய பாவங்களுக்காக செலுத்தப்பட வேண்டிய தண்டனைக்கு போதுமானதாக இருந்தது என நிரூபிக்கப்பட்டது (1 கொரிந்தியர் 15).

இயேசு இரட்சிக்கிறார், ஆனால் யாரை அவர் இரட்சிக்கிறார்?

இரட்சிப்பின் ஈவைப்பெற்றுக்கொள்கிற அனைவருக்கும் இயேசு இரட்சிக்கிறார். பாவத்திற்குக் விலைக்கிரயமாக செலுத்த இயேசுவின் பலியில் மட்டுமே விசுவாசம் வைக்கும் அனைவரையும் இயேசு இரட்சிக்கிறார் (யோவான் 3:16; அப்போஸ்தலர் 16:31). இயேசுவின் பலி எல்லா மனிதகுலத்தின் பாவங்களுக்காக செலுத்த வேண்டிய விலைக்கிரயத்திற்கு போதுமானதாக இருக்கிறபோதினும், தம்முடைய இந்த மிக அருமையான ஈவுகளை இயேசுவை தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்கிறவர்களை மட்டுமே இரட்சிக்கிறார் (யோவான் 1:12).

நீங்கள் இப்பொழுது இயேசு இரட்சிக்கிறார் என்பதை புரிந்துகொண்டு, உங்கள் சொந்த இரட்சகராக அவரை நம்பி ஏற்றுக்கொள்ள விரும்பினால், அதை நீங்கள் மெய்யாகவே புரிந்துகொண்டு, பின்வருமாறு நம்புகிறீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள், அதேபோல் விசுவாசத்தின் செயலாக, தேவனுக்கு கீழ்படிந்து பின்வருபவற்றை தேவனிடத்தில் சொல்லுங்கள். "ஆண்டவரே, நான் ஒரு பாவி என்பதை அறிந்திருக்கிறேன், நான் உமக்கு விரோதமாக பாவம் செய்திருக்கிறேன் என்றும் அதினிமித்தம் பாவத்திற்கான தண்டனையை அடைவதற்கு பாத்திரமாய் இருக்கிறேன்

என்றும் அதினிமித்தமாக நித்தியமாக உம்மிலிருந்து பிரிக்கப்பட்டு இருப்பேன் என்றும் அறிந்திருக்கிறேன். நான் பெற்றுக்கொள்ள தகுதியில்லாத போதிலும், என்னை நேசித்து கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாக என்னுடைய பாவத்திற்கான தியாக பலியை ஏற்ப்படுத்தினதற்காக நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். நான் மன்னிப்பை பெறத்தக்கதாக நான் அடையவேண்டிய தண்டனையை இயேசு ஏற்றுக்கொண்டார் என விசுவாசிக்கிறேன். இந்த தருணத்திலிருந்து எனது வாழ்க்கையை பாவத்திற்காக அல்லாமல் உமக்காக வாழ உதவி செய்யும். நீர் எனக்கு தந்த இந்த ஆச்சரியமான இரட்சிப்புக்கு நன்றியுள்ளவனாக எனது மீதமுள்ள வாழ்நாளெல்லாம் வாழ உதவி செய்யும். இயேசுவே, என்னை இரட்சித்ததற்காக உமக்கு நன்றி!"

68. பரலோகத்திற்கு போகிறதற்கு ஒரே வழி இயேசு மட்டும்தானா?

ஆம், பரலோகத்திற்கு போக ஒரே வழி இயேசு மட்டுமே. இத்தகைய பிரத்யேக அறிக்கை ஒருவேளை குழப்பத்தை ஏற்படுத்தலாம், ஆச்சரியத்தை தரலாம் அல்லது புண்படுத்தவும் செய்யலாம், ஆனால் இது உண்மையாக கூற்று. இரட்சிப்பு அடைவதற்கு இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறு வழியில்லை என்று வேதாகமம் மிகத்தெளிவாக போதிக்கிறது. யோவான் 14:6ல் இயேசுவே இதை கூறுகிறார்: "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்". அவர் பல வழிகளில் ஒரு வழி இல்லை மாறாக அவர் தான் ஒரே ஒரு வழி. நற்பெயர், சாதனை, சிறந்த அறிவு மற்றும் தனிப்பட்ட பரிசுத்ததன்மை ஆகியவற்றால் எந்த ஒரு நபரும் தேவனிடத்திற்கு வர முடியாது, இயேசு ஒருவர் மட்டும்தான் வழி. ஆம் இயேசுவைத் தவிர வேறு எந்த வழியாகவும் எவரும் பிதாவினிடம் வர இயலாது.

பரலோகம் செல்ல இயேசு மட்டுமே ஒரே வழி என்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. இரட்சகராக இருக்கும்படிக்கு இயேசு "தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்" ஆகும் (1 பேதுரு 2:4). பரலோகத்திலிருந்து இறங்கி வந்தவரும் மீண்டும் ஏறிப்போனவரும் இயேசு ஒரே ஒருவர் மட்டுதான் (யோவான் 3:13). பரிபூரணமான மனித வாழ்வு வாழ்ந்த ஒரே ஒரு மனிதர் இயேசு ஒருவர் மட்டும்தான் (எபிரெயர் 4:15). பாவத்தினுடைய பரிகாரத்திற்கான ஒரே பலியாக பலியானவர் இயேசு ஒருவர் மட்டும்தான் (1 யோவான் 2:2; எபிரெயர் 10:26). நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றினவர் இயேசு ஒருவர் மட்டும்தான் (மத்தேயு 5:17). மரணத்தை என்றென்றுமாய் ஜெயித்த ஒரே மனிதன் இயேசு ஒருவர்

மட்டும்தான் (எபிரெயர் 2:14-15). தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் உள்ள ஒரே ஒரு மத்தியஸ்தர் இயேசு ஒருவர் மட்டும்தான் (1 தீமோத்தேயு 2:5). எல்லா நாமத்திற்கும் மேலான நாமம் தந்து தேவன் உயர்த்தின ஒரே மனிதன் இயேசு ஒருவர் மட்டும்தான் (பிலிப்பியர் 2: 9).

யோவான் 14: 6-ஐ தவிர மற்ற பல இடங்களிலும், இயேசு தாம் ஒருவரே பரலோகம் செல்லும் வழி என்று மொழிந்துள்ளார். மத்தேயு 7:21-27-ல் விசுவாசத்தின் பொருளாக அவர் தன்னையே முன்வைத்தார். அவர் மொழிந்த அவரது வார்த்தைகள் யாவும் ஜீவனுள்ளவை எனக்கூறினார் (யோவான் 6:63). அவரை விசுவாசிக்கிறவர்கள் யாவரும் நித்திய ஜீவனை அடைவார்கள் என்று அவர் வாக்குறுதி அளித்திருக்கிறார் (யோவான் 3:14-15). அவர் ஆடுகளுக்கு வாசல் (யோவான் 10:7); ஜீவ அப்பம் (யோவான் 6:35); உயிர்த்தெழுதல் (யோவான் 11:25). இயேசு ஒருவரை தவிர இப்படிப்பட்ட தலைப்புகளை வேறு ஒருவரும் உரிமை பாராட்டியது கிடையாது.

அப்போஸ்தலருடைய பிரசங்கங்கள் யாவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் குறித்து மட்டுமே கவனம் செலுத்துகிறதாக இருந்தது. சனகெரிப் சங்கத்தோடு பேதுரு பேசியபோது, பரலோகத்திற்கு செல்லுவதற்கான ஒரே வழி இயேசு மட்டும்தான் என்று தெளிவாக கூறியுள்ளார்: "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்" (அப்போஸ்தலர் 4:12) . அந்தியோகியாவிலுள்ள ஒரு ஜெப ஆலயத்தில் பவுல் பேசியபோது, இயேசுவே இரட்சகர் என முழக்கமிட்டார்: "இவர் மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகிறதென்றும், மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி

நீதிமான்களாக்கப்படக்கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது" (அப்போஸ்தலர் 13:38-39). அப்போஸ்தலனாகிய யோவான் திருச்சபைக்கு எழுதுகிறபோது, நம்முடைய பாவமன்னிப்பு கிறிஸ்துவின் நாமத்தில் மட்டுமே தெளிவாக குறிப்பிடுகிறார்: "பிள்ளைகளே, அவருடைய நாமத்தினிமித்தம் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன்" (1 யோவான் 2:12). இயேசுவையல்லாமல் வேறொருவராலும் பாவத்தை மன்னிக்கமுடியாது.

பரலோகத்தில் நித்திய காலமாக வாழ்கிற நித்திய ஜீவன் அருளப்படுவது கிறிஸ்து மூலமாக மட்டுமே ஆகும். இயேசு இப்படியாக ஜெபம் செய்தார்: "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" (யோவான் 17:3). இந்த இலவச பரிசாகிய இரட்சிப்பினை பெறுவதற்கு, நாம் இயேசுவை மட்டுமே நோக்கி பார்க்கவேண்டும். நமது பாவ கடனை செலுத்துவதற்காக இயேசு சிலுவையில் மரித்தார் என்றும் மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தார் என்றும் நாம் நம்ப வேண்டும். "அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமே இல்லை" (ரோமர் 3:22).

இயேசுவினுடைய ஊழியத்தின் ஒரு கட்டத்தில், அவரைப் பின்பற்றின கூட்டத்தாரில் பலர் அவரைவிட்டு திரும்பி வேறொரு இரட்சகரை தேடி போய்விட்டார்கள். அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: "நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ" என்றார்" (யோவான் 6:67). அப்பொழுது பேதுரு அளித்த பதில் சரியான பதிலாக இருந்தது: "ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று

நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான்" (யோவான் 6:68-69). பேதுரு பகிர்ந்துகொண்ட விசுவாசதைப்போலவே இயேசு கிறிஸ்துவில் மட்டுமே நித்திய ஜீவன் இருக்கிறது என நாம் அனைவரும் பகிர்ந்து கொள்வோமாக!

69. இயேசுவுக்கு சகோதர சகோதரிகள் (உடன்பிறந்தவர்கள்) இருந்தார்களா?

இயேசுவின் சகோதரர்கள் பல வேதாகம வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர். மத்தேயு 12:46, லூக்கா 8:19, மற்றும் மாற்கு 3:31, ஆகிய வசனங்கள் இயேசுவின் தாயும் அவரது சகோதரர்களும் அவரைப் பார்க்க வந்தனர் என்று கூறுகின்றன. இயேசுவுக்கு நான்கு சகோதரர்கள் இருப்பதாக வேதாகமம் சொல்கிறது: யாக்கோபு, யோசே, சீமோன், மற்றும் யூதா (மத்தேயு 13:55). இயேசுவிற்கு சகோதரிகள் இருந்ததாகவும் வேதாகமம் சொல்லுகிறது, ஆனால் அவர்களின் பெயரோ அல்லது எண்ணிக்கையோ குறிப்பிடப்படவில்லை (மத்தேயு 13:56). யோவான் 7:1-10 ல், இயேசுவின் சகோதரர்கள் பண்டிகைக்குச் செல்கின்றனர், இயேசுவோ பின்னாக இருந்தார். அப்போஸ்தலர் 1:14-ல் அவருடைய சகோதரர்களும் தாயாரும் சீஷர்களுடன் சேர்ந்து ஜெபம் செய்வதை விவரிக்கிறது. கலாத்தியர் 1:19ல் கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபை என்று குறிப்பிடுகிறார். இயேசு மெய்யாகவே ஒன்றுவிட்ட உடன்பிறந்தோரை கொண்டிருந்தார் என்பது இந்த வசனங்களின் மிக உயர்ந்த முடிவு.

இந்த "சகோதரர்கள்" உண்மையில் இயேசுவின் உறவினர்கள் என்று சில ரோமன் கத்தோலிக்கர்கள் கூறுகின்றனர். எனினும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், "சகோதரன்" என்பதற்கான குறிப்பிட்ட கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தை மற்ற உறவினர்களைக் குறிக்கும் என்கிறபோதிலும், அதன் இயல்பான மற்றும் சொல்லர்த்தமான பொருள் ஒரு உடல்நிலை சகோதரர் என்பதாகும். "உறவினர்" என்கிற கிரேக்க வார்த்தை இருக்கிறது, ஆனால் அது பயன்படுத்தப்படவில்லை. மேலும், அவர்கள் இயேசுவின் உறவினர்களாக மட்டும் இருந்திருந்தால், இயேசுவின் தாயாரான

மரியாளுடன் அவர்கள் இருப்பதை அடிக்கடி ஏன் விவரிக்க வேண்டும்? அவரது தாயார் மற்றும் அவருடைய சகோதரர்கள் அவரைப் பார்க்க வருவதற்கு, அவர் எழுத்தியல் பிரகாரமாக அவர்களுடைய இரத்தம் சம்பந்தப்பட்ட, தாயார் மற்றும் ஒன்றுவிட்ட உடன்பிறந்த சகோதரர்கள் என்பதைத்தவிர வேறொன்றுமில்லை.

இரண்டாவது ரோமன் கத்தோலிக்க வாதம் என்னவென்றால், இயேசுவின் சகோதரர்களும் சகோதரிகளும் யோசேப்பினுடைய முந்தைய திருமணத்திலிருந்து பிறந்த பிள்ளைகளாக இருந்தார்கள் என்பதாகும். மரியாளைக் காட்டிலும் யோசேப்பு அதிக வயதானவர், முன்பே திருமணமானவர், அநேக பிள்ளைகளையுடையவர், மனைவியை இழந்தவர் போன்ற கருத்தும் எண்ணமும் ஜோடிக்கப்பட்ட உண்மையற்ற கதையாகும், இதற்கு வேதாகமத்தில் எந்த சான்றுகளும் அடிப்படையும் இல்லை. இதில் இருக்கிற பிரச்சனை என்னவென்றால், மரியாளை திருமணம் செய்து கொள்வதற்கு முன்னர் யோசேப்பு திருமணம் செய்துகொண்டார் அல்லது பிள்ளைகளை கொண்டிருந்தார் என்பதற்கான ஒரு நிழல்கூட வேதாகமம் குறிப்பிடுவதில்லை. மரியாளை மணப்பதற்கு முன்பாக யோசேப்புக்கு குறைந்தது ஆறு குழந்தைகள் இருந்திருந்தால், யோசேப்பும் மரியாளும் பெத்லகேமுக்கு செல்லும்போது ஏன் குறிப்பிடப்படவில்லை *(லூக்கா 2:4-7)* அல்லது அவர்களது எகிப்தின் பயணம் *(மத்தேயு 2:13-15)* மற்றும் அவர்கள் நாசரேத்திற்கு பயணம் செய்தபோது *(மத்தேயு 2:20-23)* யோசேப்பின் பிள்ளைகளைப்பற்றி ஏன் குறிப்பிடவில்லை?

இந்த உடன்பிறப்புகள் யோசேப்பு மற்றும் மரியாளின் உண்மையான பிள்ளைகள் என்பதைத்தவிர வேறொன்றும் நம்புவதற்கு வேதாகமத்தில் காரணமில்லை. இயேசுவின் ஒன்றுவிட்ட உடன்பிறந்த சகோதரர்களையும் ஒன்றுவிட்ட உடன்பிறந்த சகோதரிகளையும் மறுத்து எதிர்ப்பவர்கள், வேதாகமத்தை சரியாக வாசித்து அதிலிருந்து கூறுகிறதில்லை, மாறாக மரியாளின் நிரந்தர

கன்னித்தன்மையைக் குறித்து முன்னமே இருக்கிற கருத்திலிருந்தே இவ்வாறு கூறுகிறார்கள். ஆனால் இது வேதாகமம் உரைக்கிற காரியத்திற்கு முரணானதாகும்: "அவள் (மரியாள்) தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான் (யோசேப்பு)." இயேசுவிற்கு ஒன்றுவிட்ட உடன்பிறந்த சகோதரர்கள், ஒன்றுவிட்ட உடன்பிறந்த சகோதரிகள் மற்றும் ஒன்றுவிட்ட உடன்பிறப்புகள் இருந்தார்கள், அவர்கள் யோசேப்பு மற்றும் மரியாளின் பிள்ளைகள் ஆவர். இது தேவனுடைய வார்த்தையின் மிகத்தெளிவான மற்றும் நேரடிப் பொருள் கொண்டுள்ள போதனையாகும்.

70. இயேசு கிறிஸ்துவின் பன்னிரண்டு (12) சீஷர்கள் / அப்போஸ்தலர்கள் யார்?

"சீஷன்" என்கிற வார்த்தை கற்பவர் அல்லது பின்பற்றுகிறவர் என்பதைக் குறிக்கிறது. "அப்போஸ்தலன்" என்கிற வார்த்தைக்கு "அனுப்பப்பட்டவன்" என்று அர்த்தமாகும். இயேசு இந்த பூமியில் இருந்த நாட்களில் அவரை பின்பற்றிய இந்த பன்னிரண்டு பேர்களும் "சீஷர்கள்" என்று அழைக்கப்பட்டனர். இந்த பன்னிரண்டு சீஷர்களும் இயேசுகிறிஸ்துவைப் பின் பற்றினர், அவரிடமிருந்து கற்றுக்கொண்டனர் மற்றும் அவரால் போதிக்கப்பட்டனர். அவர் உயிர்த்தெழுந்தபிறகு மற்றும் பரமேறிச்செல்வதற்கு முன்பதாக இயேசு சீஷர்களை அவருடைய சாட்சியாக இருக்கும்படி அனுப்பினார் (மத்தேயு 28:18-20; அப்போஸ்தலர். 1:8). பின்பு அவர்கள் பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் என்று அழைக்கப்பட்டனர். எனினும், இயேசு இப்பூமியில் இருந்த நாட்களில் சீஷர்கள் மற்றும் அப்போஸ்தலர்கள் என்கிற வார்த்தைகள் மாறி மாறி பயன்படுத்தப்பட்டது.

அசலான பன்னிரண்டு சீஷர்கள் / அப்போஸ்தலர்கள் குறித்த பட்டியல் மத்தேயு 10:2-4 வரையிலுள்ள வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது, "அந்தப் பன்னிரண்டு அப்போஸ்தலருடைய நாமங்களாவன: முந்தினவன் பேதுரு என்னப்பட்ட சீமோன், அவன் சகோதரன் அந்திரேயா, செபெதேயுவின் குமாரன் யாக்கோபு, அவன் சகோதரன் யோவான், பிலிப்பு, பற்தொலொமேயு, தோமா, ஆயக்காரனாகிய மத்தேயு, அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, தேயு என்னும் மறுநாமமுள்ள லெபேயு, கானானியனாகிய சீமோன், அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்து என்பவைகளே." வேதாகமத்தில் இந்த பன்னிரண்டு சீஷர்கள் / அப்போஸ்தலர்களுடைய நாமங்களின் பட்டியல் மாற்கு 3:16-19 மற்றும் லூக்கா 6:13-16 ஆகிய வேதப்பகுதிகளிலும்

கொடுக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று வேதப்பாகங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவர்களுடைய நாமங்களில் ஒரு சில சிறிய வித்தியாசங்கள் இருப்பதைக் கண்டுகொள்ளலாம்.

தேயு தான் "யாக்கோபின் குமாரனாகிய யூதா" (லூக்கா 6:16) மற்றும் லெபேயு (மத்தேயு 10:3) என்பதாக அழைக்கப்பட்டதாக தோன்றுகிறது. செலோத்தே எனப்பட்ட சீமோன், கானானியனாகிய சீமோன் என்றும் அழைக்கப்பட்டான் (மாற்கு 3:18). இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் காரியோத்தின் இடத்தில் மத்தியா என்பவன் பன்னிரண்டு அப்போஸ்தலர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டான் (அப்போஸ்தலர் 1:20-26). சில வேதாகம ஆசிரியர்கள் மத்தியாவை தேவையில்லாத அப்போஸ்தலன் என்றும் யூதாஸ் காரியோத்தின் இடத்தில் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட 12வது அப்போஸ்தலன் பவுல் தான் என்றும் விசுவாசிக்கின்றனர்.

பன்னிரண்டு சீஷர்கள் / அப்போஸ்தலர்கள் சாதாரண மனிதர்களாக இருந்தார்கள், அவர்களை தேவன் அசாதாரணமான முறையிலே பயன்படுத்தினார். இந்த பன்னிரண்டு பேர்களில் சிலர் மீனவர்கள், வரிவசூலிப்பவர்கள் மற்றும் புரட்சியாளர்கள். இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றிய இந்த பன்னிரண்டு சீஷர்களின் தொடர்ச்சியான தோல்விகள், தடுமாற்றங்கள், மற்றும் சந்தேகங்கள் ஆகியவற்றை சுவிசேஷ புத்தகங்கள் குறிப்பிடுகின்றன. இயேசுவின் உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறிச்சென்றதை சாட்சியாக கண்ட பின்பு இவர்கள் இந்த உலகத்தையே கலக்கும்படியான வல்லமையுள்ள மனிதர்களாக பரிசுத்த ஆவியானவர் சீஷர்களை / அப்போஸ்தலர்களை மறுரூபமாக்கினார் (அப்போஸ்தலர் 17:6). மாற்றம் என்னவாக இருந்தது? இந்த பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் / சீஷர்களும் இயேசுவோடு கூட இருந்தார்கள் (அப்போஸ்தலர் 4:13). இதுவே நம்மைக்குறித்தும் சொல்லப்படுவதாக!

71. இயேசு 'நான் இருக்கிறேன்' என்று சொன்னபோது என்ன அர்த்தம் கொண்டார்?

இயேசு, "நீர் யார் என்று நினைக்கிறீர்?" என்கிற பரிசேயர்களின் கேள்விக்கு அவர் பதில் கூறினார், "உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான் என்றார். அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே, நீ ஆபிரகாமைக் கண்டாயோ என்றார்கள். அதற்கு இயேசு: ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது அவர்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள். இயேசு மறைந்து, அவர்கள் நடுவே கடந்து, தேவாலயத்தை விட்டுப்போனார்." இயேசுவின் "நான் இருக்கிறேன்" அறிக்கைக்கு யூதர்களின் ஆவேசம் மற்றும் வன்முறையான மாறுத்திரம், அவர் எதை அறிவிக்கிறார் என்பதை அவர்கள் தெளிவாக புரிந்து கொண்டிருப்பதைக் குறிக்கிறது அதாவது அவர் யாத்திராகமம் 3:14 இல் தேவன் தம்மைக்குறித்து கொடுத்த "நான் இருக்கிறேன்" என்னும் கூற்றுடன் இயேசு தன்னை சமப்படுத்திக் கொண்டார்.

இயேசு ஆபிரகாமின் காலத்திற்கு முன்பே இருந்தார் என்பதை சொல்ல விரும்பியிருந்தால், அவர் "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே, நான் இருந்தேன்" என்று கூறியிருந்திருப்பார். ஆபிரகாமின் விஷயத்தில் மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தைகள் மற்றும் இயேசுவின் விஷயத்தில் மொழிபெயர்க்கப்பட்ட "நான் இருக்கிறேன்" ஆகியவை முற்றிலும் வேறுபட்டவை ஆகும். ஆவியானவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்த்தைகள் ஆபிரகாம் "உருவாக்கப்பட்டவன்" என்பதை தெளிவுபடுத்துகின்றன, ஆனால் இயேசு நித்தியமானவராகவே இருந்தார் மற்றும் இருக்கிறார் (யோவான் 1:1).

யூதர்கள் அவர் சொல்வதை புரிந்துகொண்டார்கள் என்பதில் சந்தேகமில்லை, ஏனென்றால் தேவனுடன் சமமாக இருப்பதாக அவர் கூறினபடியினால் அவரைக் கொல்ல அவர்கள் கற்களை எடுத்தனர் (யோவான் 5:18). அத்தகைய அறிக்கையானது, உண்மையானதாக இல்லாவிட்டால், அது தேவதூஷணம் ஆகும், மற்றும் மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி அதற்குப் பரிந்துரைக்கப்பட்ட தண்டனை மரணம் ஆகும் (லேவியராகமம் 24:11-14). ஆனால் இயேசு எந்த தேவதூஷணமும் சொல்லவில்லை; காரணம் அவர் தேவனாக இருந்தார், தேவனின் ஆள்தத்துவத்தின் இரண்டாவது நபர் ஆவார், எல்லா வகையிலும் பிதாவுக்கு நிகரானவர் ஆவார்.

இயேசு தன்னைப் பற்றிய ஏழு "நான் இருக்கிறேன்" கூற்றுகளில் "நான் இருக்கிறேன்" என்கிற அதே சொற்றொடரைப் பயன்படுத்தினார். ஏழிலும், அவர் உலகத்தை இரட்சிக்க வந்த தனது இரட்சிப்பின் உறவை வெளிப்படுத்தும் பிரம்மாண்டமான உருவகங்களுடன் "நான் இருக்கிறேன்" என்பதை இணைக்கிறார். அனைத்தும் யோவான் எழுதின சுவிசேஷப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அவை யாதெனில், நானே ஜீவ அப்பம் (யோவான் 6:35, 48, 51); நான் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறேன் (யோவான் 8:12); நானே ஆடுகளுக்கு வாசல் (யோவான் 10:7, 9); நானே நல்ல மேய்ப்பன் (யோவான் 10:11, 14); நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் (யோவான் 11:25); நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் (யோவான் 14:6); நான் மெய்யான திராட்சச்செடி (யோவான் 15: 1,5).

72. "இயேசு மட்டுமே" / "ஒன்றான பெந்தகொஸ்தே"-க்களின் நம்பிக்கைகள் என்ன?

"இயேசு மட்டுமே" இயக்கம், ஒன்றான பெந்தேகோஸ்தே அல்லது ஒன்றான இறையியல் என்றும் அறியப்படுகிறது, தேவன் ஒருவரே என்று போதிக்கிறது, ஆனால் தேவனுடைய மூன்று ஆள்தன்மைகளின் ஒற்றுமையை மறுக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒன்றான இறையியல் தேவனுடைய தனித்துவமான மூன்று நபர்களை அங்கீகரிக்கவில்லை: பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர். இது பல்வேறு வடிவங்களைக் கொண்டுள்ளது-சிலர் இயேசு கிறிஸ்துவை ஒரே தேவனாகப் பார்க்கிறார்கள், அவர் சில சமயங்களில் பிதாவாகவோ அல்லது பரிசுத்த ஆவியானவராகவோ தன்னை வெளிப்படுத்துகிறார் என்கிறார்கள். ஒன்றான பெந்தகோஸ்தே / இயேசு மட்டுமே என்பதன் முக்கிய கோட்பாடு இயேசுவே பிதாவானவர் மற்றும் இயேசுவே பரிசுத்த ஆவியானவர் என்பதாகும். அதாவது தேவன் ஒருவரே, அவர் வெவ்வேறு "முறைகளில்" தன்னை வெளிப்படுத்தும் தேவனாக இருக்கிறார்.

இயேசு மட்டுமே / ஒன்றான பெந்தேகொஸ்தேக்களின் இந்த போதனை பல நூற்றாண்டுகளாக, ஒரு வடிவத்தில் அல்லது மற்றொரு வடிவமாக உள்ளது. தேவன் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வடிவங்களில் அல்லது முறைகளில் செயல்பட்டார் என்று மோடலிசம் போதிக்கிறது-அதாவது சில சமயங்களில் பிதாவாகவும், சில சமயங்களில் குமாரனாகவும், சில சமயங்களில் பரிசுத்த ஆவியானவராகவும் செயல்பட்டார். ஆனால் மத்தேயு 3:16-17 போன்ற பகுதிகள், இரண்டு அல்லது மூன்று தேவனுடைய நபர்கள் ஒரே நேரத்தில் உள்ளனர் என்பதை வலியுறுத்துகிறது, இது மாதிரியான பார்வைக்கு முரணானது. இரண்டாம் நூற்றாண்டிலேயே மோடலிசம் துர்உபதேசம் என்று கண்டனம் செய்யப்பட்டது. தேவன்

கண்டிப்பாக வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வடிவங்களில் செயல்படும் ஒரு தனி நபர் என்ற கருத்துக்கு எதிராக ஆரம்பகால திருச்சபை கடுமையாக வாதிட்டது. ஒன்றுக்கு மேற்பட்ட தெய்வீக ஆள்தன்மை கொண்ட நபர்கள் ஒரே நேரத்தில் காணப்படுவதாலும், அவர்கள் ஒருவருக்கொருவர் அடிக்கடி தொடர்பு கொள்வதாலும் தேவனுடைய திரித்துவ ஒற்றுமை தெளிவாகத் தெரிகிறது என்று அவர்கள் வேதத்திலிருந்து வாதிட்டனர் (எடுத்துக்காட்டுகள்: ஆதியாகமம் 1:26; 3:22;11:7; சங்கீதம் 2:7; 104:30; 110:1; மத்தேயு 28:19; யோவான் 14:16). ஒன்றான பெந்தேகோஸ்தேவாதம் / இயேசு மட்டுமே கோட்பாடு வேதாகமத்திற்கு எதிரானது.

மறுபுறம், தேவனுடைய திரியேக-ஒற்றுமை பற்றிய கருத்து வேதம் முழுவதும் உள்ளது. இது வரையறுக்கப்பட்ட மனதால் எளிதில் கிரகிக்கப்படும் ஒரு கருத்து அல்ல. மனிதன் தனது இறையியலில் அனைத்தையும் புரிந்து கொள்ள விரும்புவதால், இயேசு மட்டுமே இயக்கம் போன்ற இயக்கங்கள்-குறிப்பாக யெகோவாவின் சாட்சிகளைப் போன்றவர்கள்-தேவனுடைய இயல்பை விளக்குவதற்கு வழக்கமாக எழுகின்றன. நிச்சயமாக, வேதாகம பகுதிக்கு வன்முறை செய்யாமல் இதைச் செய்ய முடியாது. தேவனுடைய இயல்பு, நாம் அவருக்கு வைக்க விரும்பும் வரம்புகளுக்கு உட்பட்டது அல்ல என்பதை கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப்பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது" (ஏசாயா 55:8-9). அவருடைய எண்ணங்களையும் வழிகளையும் நம்மால் புரிந்துகொள்ள முடியாவிட்டால், அவருடைய இயல்பையும் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது என்பதை ஒப்புக்கொள்கிறோம்.

73. மறுரூபமாதலின் பொருள் மற்றும் முக்கியத்துவம் என்ன?

ஏறக்குறைய ஒரு வாரத்திற்குப் பிறகு, இயேசு தனது சீடர்களிடம் தான் பல பாடுகள்படவும், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்படவும், கொல்லப்படவும், மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்திருக்கவும் வேண்டும் என்று சொன்னார் (லூக்கா 9:22), ஜெபிப்பதற்காக இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக்கொண்டு உயர்ந்த மலையின்மேல் போய், அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார், மேலும் அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று. அப்பொழுது மோசேயும், எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள். பேதுரு, அவர் என்ன சொல்லுகிறார் என்று தெரியாமல் மிகவும் பயந்து, அவர்களுக்காக மூன்று கூடாரங்கள் அமைக்க முன்வந்தார். இது சந்தேகத்திற்கு இடமின்றி, இஸ்ரவேலர்கள் 7 நாட்கள் கூடாரங்களில் தங்கியிருந்த போது, கூடாரப் பண்டிகையைக் கொண்டாடப் பயன்படுத்தப்படும் கூடாரங்களின் குறிப்பு ஆகும் (லேவியராகமம் 23:34-42). பேதுரு அந்த இடத்தில் தங்க விருப்பம் தெரிவித்தார். ஒரு மேகம் அவர்களை சூழ்ந்தபோது, ஒரு சத்தம் உரைத்தது, "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்" மேகம் உயர்ந்தது, மோசேயும் எலியாவும் மறைந்துவிட்டனர், இயேசு மிகவும் பயந்திருந்த அவருடைய சீடர்களுடன் தனியாக இருந்தார். இயேசு உயிர்த்தெழுந்த பிறகு அவர்கள் பார்த்ததை யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று எச்சரித்தார். இந்த நிகழ்வின் மூன்று வேதக் குறிப்புகள் மத்தேயு 17:1-8, மாற்கு 9:2-8, மற்றும் லூக்கா 9:28-36 இல் காணப்படுகின்றன.

சந்தேகத்திற்கு இடமின்றி, கிறிஸ்துவை அவருடைய பரலோக மகிமையின் ஒரு பகுதியாக மறுரூபமாவதன் நோக்கம் அவருடைய சீடர்களின் "உள் வட்டத்தில்" இருப்பவர்கள் இயேசு யார் என்பதைப் பற்றிய அதிக புரிதலைப் பெற முடியும். சீடர்கள் அவருடைய மகிமையில் அவரைப் பார்க்கும் வகையில் கிறிஸ்து தோற்றத்தில் வியத்தகு மாற்றத்திற்கு உள்ளானார். அவருடைய மனித உடலில் அவரை மட்டுமே அறிந்திருந்த சீடர்கள், இப்போது கிறிஸ்துவின் தெய்வீகத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், அதை இன்னும் அதிகமாக உணர்ந்துகொண்டனர். அவருடைய மரணம் பற்றிய அதிர்ச்சியூட்டும் செய்திகளைக் கேட்ட பிறகு அவர்களுக்குத் தேவையான உறுதியை அது அளித்தது.

அடையாளமாக, மோசே மற்றும் எலியாவின் தோற்றம் நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசிகளைக் குறிக்கிறது. ஆனால் பரலோகத்திலிருந்து தேவனுடைய சத்தம் – "அவருக்குச் செவிகொடுங்கள்!" – நியாயப்பிரமாணம் தீர்க்கதரிசிகளும் இயேசுவுக்கு வழிவிட வேண்டும் என்பதை தெளிவாகக் காட்டியது. புதிய மற்றும் வாழும் வழி பழையதை மாற்றுகிறது; அவர் பழைய ஏற்பாட்டில் உள்ள நியாயப்பிரமாணம் மற்றும் எண்ணற்ற தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுகிறார். மேலும், அவருடைய புகழ்பெற்ற வடிவத்தில் அவர்கள் அரசர்களின் அரசராகவும், ஆண்டவர்களின் ஆண்டவராகவும் அவரது வரவிருக்கும் மகிமைப்படுத்தல் மற்றும் சிங்காசனத்தின் முன்னோட்டத்தைக் கண்டனர்.

அன்று மலையில் நடந்ததை சீடர்கள் மறக்கவில்லை, இது நோக்கமாக இருந்தது என்பதில் சந்தேகமில்லை. யோவான் தனது நற்செய்தியில் எழுதினார், "அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவான் 1:14). பேதுருவும் இதைப் பற்றி எழுதினார், "நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல,

அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம். இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்றபோது, அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக்கேட்டோம்" *(2 பேதுரு 1:16-18).* மறுரூபத்தைக் கண்டவர்கள் மற்ற சீடர்களுக்கும் பல நூற்றாண்டுகளாக எண்ணற்ற மில்லியன் கணக்கானவர்களுக்கும் சாட்சியம் அளித்தனர்.

74. இயேசு பிரதான தூதனாகிய மிகாவேலா?

இயேசு பிரதான தூதனாகிய மிகாவேல் அல்ல. இயேசுவை மிகாவேல் (அல்லது அந்த வகையில் வேறு எந்த தேவதூதனும்) என்று வேதாகமம் எங்கும் அடையாளப்படுத்தவில்லை. எபிரெயர் 1:5-8, இயேசுவுக்கும் தேவதூதர்களுக்கும் இடையேயுள்ள தெளிவான வேறுபாட்டைக் காட்டுகிறது: "எப்படியெனில், நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்றும்; நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார் என்றும், அவர் தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டா? மேலும், தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச்செய்தபோது: தேவதூதர் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள் என்றார். தேவதூதரைக்குறித்தோ தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினிஜ்வாலைகளாகவும் செய்கிறார் என்று சொல்லியிருக்கிறது. குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது." பரலோகத்தில் உள்ளவைகளின் படிநிலை இந்த பத்தியில் தெளிவாக்கப்படுகிறது- தேவதூதர்கள் தனித்து தன்னிகரற்று இருக்கும் இயேசுவை தேவனாக வணங்குகிறார்கள், அவர் ஒருவரே ஆராதனைக்குப் பாத்திரர். வேதத்தில் எந்த தேவதூதனும் ஆராதிக்கப்பட்டதாக குறிப்பிடவில்லை; எனவே, இயேசு (ஆராதனைக்குத் தகுதியானவர்) மிகாவேலோ அல்லது வேறு எந்த தேவதூதனாகவோ இருக்க முடியாது (காரணம் அவர்கள் ஆராதனைக்குத் தகுதியற்றவர்கள்). தேவதூதர்கள் தேவகுமாரர் என்று அழைக்கப்படுகிறார்கள் (ஆதியாகமம் 6:2-4; யோபு 1:6; 2:1; 38:7), ஆனால் இயேசு தேவனுடைய குமாரன் (எபிரெயர் 1:8; மத்தேயு 4:3-6).

மிகாவேல் தேவதூதன் அனைத்து தேவதூதர்களிலும் மிக உயர்ந்தவனாக இருக்கலாம். வேதாகமத்தில் "பிரதான தூதன்" (யூதா வசனம் 9) என்று நியமிக்கப்பட்ட ஒரே தேவதூதன் மிகாவேல் மட்டுமே. பிரதான தூதனாகிய மிகாவேல், ஒரு தேவதூதன் மட்டுமே. அவன் தேவன் இல்லை. மிகாவேல் மற்றும் இயேசுவின் வல்லமையிலும் அதிகாரத்திலும் உள்ள தெளிவான வேறுபாட்டை, மத்தேயு 4:10-ல் ஒப்பிட்டுப் பார்க்க முடியும், அங்கு இயேசு சாத்தானைக் கடிந்துகொள்கிறார், யூதா வசனம் 9ல், மிகாவேல் தூதன் சாத்தானுக்கு எதிராக "தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல்". கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்று சொன்னான். இயேசு தேவனுடைய மனித அவதாரம் (யோவான் 1:1,14). மிகாவேல், வல்லமை வாய்ந்த ஒரு பிரதான தூதனாக இருந்தாலும், அவன் ஒரு தேவதூதன் மட்டுமே.

75. ஜனங்கள் ஏன் இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதபடிக்கு நிராகரிக்கிறார்கள்?

இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது என்பது இறுதியான வாழ்க்கையின் முடிவாகும். இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிக்க பலர் ஏன் தேர்வு செய்கிறார்கள்? கிறிஸ்துவை நிராகரிப்பவர்கள் பலர் இருப்பதைப் போலவே, அவரை நிராகரிப்பதற்கு அவர்களுக்கு பல காரணங்கள் இருக்கலாம், ஆனால் பின்வரும் நான்கு காரணங்கள் பொதுவான வகைகளாக செயல்படக்கூடும்:

1) சிலர் தங்களுக்கு ஒரு இரட்சகர் தேவை என்று நினைக்கவில்லை. இந்த மக்கள் தங்களை "அடிப்படையில் நல்லவர்கள்" என்று கருதுகிறார்கள், மேலும் அவர்கள் எல்லா மக்களையும் போலவே, தங்கள் சொந்த விதிமுறைகளின்படி தேவனிடம் வரமுடியாத பாவிகள் என்பதை உணரவில்லை. ஆனால் இயேசு, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:6) என்று கூறுகிறார். கிறிஸ்துவை நிராகரிப்பவர்கள் தேவனுக்கு முன்பாக நிற்க முடியாது, தங்கள் சொந்த வழக்கின் அடிப்படையில் தங்கள் சொந்த வழக்கை வெற்றிகரமாக மன்றாடுகிறார்கள்.

2) சமூகத்தால் நிராகரிக்கப்படும் நிராகரிப்பு அல்லது உபத்திரவம் குறித்த பயம் சிலரை கிறிஸ்துவை இரட்சகராகப் ஏற்றுக்கொள்ளுவதிலிருந்து தடுக்கிறது. யோவான் 12:42-43-ல் உள்ள அவிசுவாசிகள் கிறிஸ்துவை ஒப்புக்கொள்ள மாட்டார்கள், ஏனென்றால் அவர்கள் தேவனுடைய சித்தத்தைச் செய்வதை விட சகாக்களிடையே இருக்கும் தங்கள் அந்தஸ்தைப் பற்றியே அதிகம்

அக்கறை கொண்டிருந்தார்கள். இவர்களே பரிசேயர்களாக இருந்தார்கள், அவர்களுடைய நிலைப்பாடு மற்றும் பிறரின் மரியாதை அவர்களை கண்மூடித்தனமாகக் காட்டியது, ஏனென்றால் "அவர்கள் தேவனுடைய அங்கீகாரத்தைக் காட்டிலும் மனிதர்களின் அங்கீகாரத்தையே நேசித்தார்கள்."

3) சிலருக்கு, இந்த உலகம் வழங்கக்கூடிய தற்போதைய காரியங்கள் நித்தியமான காரியங்களை விட மிகவும் ஈர்க்கக்கூடியவைகளாக இருக்கின்றன. அத்தகைய மனிதனின் கதையை மத்தேயு 19:16-23-ல் வாசிக்கிறோம். இயேசுவோடு நித்திய ஐக்கியத்தைப் பெறுவதற்காக இந்த மனிதன் தனது பூமிக்குரிய உடைமைகளை இழக்கத் தயாராக இல்லை (2 கொரிந்தியர் 4:16-18 ஐயும் காண்க).

4) கிறிஸ்துவை விசுவாசிக்க பரிசுத்த ஆவியானவர் எடுக்கும் முயற்சிகளை பலர் எதிர்க்கிறார்கள். ஆரம்பகால திருச்சபையின் தலைவரான ஸ்தேவான், தன்னைக் கொலை செய்யப் போகிறவர்களிடம், "வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாக்களைப்போல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்துநிற்கிறீர்கள்" (அப்போஸ்தலர் 7:51) என்று கூறினார். அப்போஸ்தலனாகிய பவுல் அப்போஸ்தலர் 28:23-27-ல் நற்செய்தியை நிராகரிப்பவர்களின் குழுவுக்கு இதேபோன்ற ஒரு அறிக்கையை வெளியிட்டார்.

ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிப்பதற்கான காரணங்கள் எதுவாக இருந்தாலும், அவர்கள் நிராகரிப்பது பேரழிவு தரும் நித்திய விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பது மறுக்கமுடியாத உண்மை. இயேசுவின் நாமம் அல்லாமல் (அப்போஸ்தலர் 4:12) "இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம்

கட்டளையிடப்படவும் இல்லை" (அப்போஸ்தலர் 4:12), அவரை நிராகரிப்பவர்கள், எந்த காரணத்திற்காகவாக இருந்தாலும் தங்களது நித்தியத்தை "காரிருளில்" எதிர்கொள்கிறார்கள், நரகத்தில் "அழுகையும் பற்கடிப்பும்" உண்டாயிருக்கும் (மத்தேயு 25:30).

76. இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று' இயேசு சொன்னபோது என்ன அர்த்தம் கொண்டார்?

கடைசிக்காலத்தைப் பற்றிய இயேசுவின் இந்த மேற்கோள் மத்தேயு 24:34; மார்க் 13:30; மற்றும் லூக்கா 21:32 இல் காணப்படுகிறது. இயேசு கூறினார், "இவைகளெல்லாம் சம்பவிக்குமுன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." இயேசு பேசிக்கொண்டிருந்த காரியங்கள்-அந்திக்கிறிஸ்துவின் எழுச்சி, பரிசுத்த ஸ்தலத்தில் பாழாக்கும் அருவருப்பை ஏற்படுத்துதல் மற்றும் சூரியன் இருண்டுபோதல்-இயேசுவின் காலத்தில் உயிருடன் இருந்த மக்களின் வாழ்நாளில் இவை நடக்கவில்லை. வெளிப்படையாக, இயேசு "இந்தச் சந்ததியைப்" பற்றி பேசியபோது வேறு ஒன்றை அர்த்தப்படுத்தினார்.

"இவைகளெல்லாம் சம்பவிக்குமுன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று" இயேசு சொன்னதன் அர்த்தத்தை புரிந்து கொள்வதற்கான திறவுகோல் அதன் பின்னணி சூழல்; அதாவது, மத்தேயு 24:34 சுற்றியுள்ள வசனங்களை, குறிப்பாக அதற்கு முந்தைய வசனங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மத்தேயு 24:4-31 இல், இயேசு தெளிவாக ஒரு தீர்க்கதரிசனத்தை உரைக்கிறார்; அவர் இனி சம்பவிக்கப் போகிற எதிர்கால நிகழ்வுகளைப் பற்றி பேசுகிறார். இயேசு தமது பூமிக்குரிய ஊழியத்தின்போது வாழ்ந்தவர்களிடம் ராஜ்யம் அவர்களிடமிருந்து எடுக்கப்பட்டது என்று ஏற்கனவே கூறியிருந்தார் (மத்தேயு 21:43). எனவே, மத்தேயு 24-25 இல் கூறப்பட்டுள்ள எதிர்கால சம்பவங்களை கையாள்வது அவசியம். இயேசு திரும்பி வரும் வரை "இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று" கூறுகிற சந்ததி எதிர்கால சந்ததி, அதாவது, முன்னறிவிக்கப்பட்ட நிகழ்வுகள் நிகழும்போது வாழும் மக்கள். மத்தேயு 24-25 இல்

கூறப்பட்டுள்ள நிகழ்வுகள் நடக்கும்போது எதிர்காலத்தில் உயிரோடிருக்கும் மக்களை இந்த வார்த்தை குறிக்கிறது.

"இவைகளெல்லாம் சம்பவிக்குமுன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று" இயேசு கூறிய அறிக்கையில், கடைசிக்கால நிகழ்வுகள் விரைவாக நடக்கவிருக்கும் காரியங்களாகும். உலகத்தின் முடிவின் அடையாளங்கள் கவனிக்கப்பட ஆரம்பித்தவுடன், முடிவு நன்றாக அதன் பாதையில் செல்லும்-இரண்டாவது வருகை மற்றும் நியாயத்தீர்ப்பு அந்த கடைசி சந்ததிக்குள் நிகழும். இயேசு இந்த அர்த்தத்தை மத்தேயு 24:32-33 இல் ஒரு உவமையால் கூறி வலியுறுத்துகிறார்: "அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்த காலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்." கோடைக்காலத்தின் உறுதியான அறிகுறி அத்தி மரத்தின் இலைகளாகும்; உலகின் முடிவுக்கான ஒரு உறுதியான அறிகுறி "இவை அனைத்தும்" (மத்தேயு 24) நடைபெறுகிறது. பூமியில் இருப்பவர்களுக்கு இன்னும் சிறிது காலம் மட்டுமே உள்ளது.

மற்றொரு விளக்கம் என்னவென்றால், மத்தேயு 24 இல் இயேசு உரைத்த தீர்க்கதரிசனம் "இரட்டை நிறைவேறுதல்" கொண்டது. இந்த பார்வையில், "இந்த சந்ததி" அந்த காலத்தில் இயேசு பேசும் வாழ்ந்த மக்களாகும்-அவர் முன்னறிவித்ததில் சில அவர்களின் வாழ்நாளில் நடக்கும். கி.பி. 70 இல் ரோமர்கள் எருசலேமை அழித்தபோது, இயேசுவின் தீர்க்கதரிசனம் ஓரளவு நிறைவேறியது; எருசலேமின் வீழ்ச்சி வரவிருக்கும் மோசமான காரியங்களின் முன்னறிவிப்பை வழங்கியது. இருப்பினும், இயேசுவின் தீர்க்கதரிசனத்தின் பல அம்சங்கள் கி.பி. 70 இல் நிகழவில்லை; உதாரணமாக, மத்தேயு 24:29-31 இல் வானத்தின் அடையாளங்கள் நிறைவேறவில்லை. "இரட்டை-நிறைவேறுதல்" விளக்கத்தின் முக்கிய பிரச்சனை

என்னவென்றால், "இந்த சந்ததியில்" "இவை அனைத்தும்" நடக்கும் என்ற இயேசுவின் கூற்றுடன் ஒத்துப்போகவில்லை. ஆகையால், "இந்த சந்ததி" என்பது கடைசிக்கால நிகழ்வுகள் உண்மையில் நிகழும் போது உயிரோடுள்ள தலைமுறையைக் குறிப்பிடுவதைப் புரிந்துகொள்வது நலமாயிருக்கும்.

அடிப்படையில், கடைசிக்கால நிகழ்வுகள் சம்பவிக்கத் தொடங்கியவுடன், அவை விரைவாக நடக்கும் என்று இயேசு கூறுகிறார். கிருபையின் காலம் மிக நீண்ட காலமாக தொடர்கிறது. ஆனால் நியாயத்தீர்ப்புக்கான நேரம் இறுதியாக வரும்போது, காரியங்கள் அதிவேகமாக முடிக்கப்படும். தேவனுடைய காரியங்களை விரைவாக முடிப்பதற்கான இந்த கருத்து வேதத்தின் பல பகுதிகளில் எதிரொலிக்கிறது (மத்தேயு 24:22; மாற்கு 13:20; வெளிப்படுத்துதல் 3:11; 22:7, 12, 20).

77. இயேசு எப்படி நம் ஓய்வுநாள் ஓய்வாக இருக்கிறார்?

இயேசு எப்படி நம் ஓய்வுநாள் ஓய்வு என்பதை புரிந்து கொள்வதற்கான திறவுகோல் எபிரேய வார்த்தையான சாபத் என்பதில் இருக்கிறது, அதாவது "ஓய்வெடுப்பது அல்லது நிறுத்துதல் அல்லது வேலையை நிறுத்துதல்" என்பதாகும். சாபத்தின் தோற்றம் சிருஷ்டிப்புக்கு செல்கிறது. தேவன் ஆறு நாட்களில் வானத்தையும் பூமியையும் படைத்த பிறகு, அவர் "தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்" (ஆதியாகமம் 2:2). தேவன் சோர்வாக இருந்தார் மற்றும் ஓய்வு தேவை என்று இது அர்த்தப்படுத்துவதில்லை. தேவன் சர்வ வல்லமையுள்ளவர், உண்மையில் "அனைத்து வல்லமையும் வாய்ந்தவர்" என்பதை நாம் அறிவோம். அவர் ஒருபோதும் சோர்வடைய மாட்டார், மேலும் அவரது மிகக் கடினமான ஆற்றல் செலவு அவரது சக்தியைக் குறைக்காது. எனவே, தேவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் என்றால் என்ன அர்த்தம்? வெறுமனே அவர் செய்வதை நிறுத்திவிட்டார் என்பதாகும். அவர் தனது வேலையை முடித்துவிட்டார். சாபத் நாளின் ஸ்தாபித்தல் மற்றும் நமது ஓய்வுநாளில் கிறிஸ்துவின் பங்கைப் புரிந்துகொள்வதில் இது முக்கியமானது.

தேவன் தனது மக்களுக்கு சாபத் நாளின் ஓய்வின் கொள்கையை நிறுவ ஏழாவது நாளில் தனது ஓய்வுக்கான உதாரணத்தைப் பயன்படுத்தினார். யாத்திராகமம் 20:8-11 மற்றும் உபாகமம் 5:12-15 இல், தேவன் இதை இஸ்ரவேலர்களுக்கு அவருடைய பத்து கட்டளைகளில் நான்காவது கட்டளையாகக் கொடுத்தார். அது ஓய்வுநாளை "ஆசரிக்கவேண்டும்" மற்றும் "பரிசுத்த நாளாக ஆசரிக்கவேண்டும்" என்று கூறினார். ஒவ்வொரு ஏழு நாட்களில் ஒரு நாள், இஸ்ரவேலர்கள் தங்கள்

கடின உழைப்பிலிருந்து ஓய்வெடுக்க வேண்டும், அதே நாளில் தங்கள் வேலைக்காரர்களுக்கும் மிருகங்குகளுக்கும் ஓய்வு கொடுக்க வேண்டும். இது உழைப்பின் முழுமையான நிறுத்தமாகும். அவர்கள் எந்த வேலையில் ஈடுபட்டிருந்தாலும் ஒவ்வொரு வாரமும் ஒரு நாள் முழுவதும் நிறுத்த வேண்டும். (சாபத் நாள், சனிக்கிழமை மற்றும் ஞாயிறு மற்றும் சாபத் நாள் ஆகிய எங்களது மற்ற கட்டுரைகளையும் வாசித்து இந்தப் பிரச்சினையை மேலும் ஆராயவும்.) மக்கள் தங்கள் வேலைகளிலிருந்து ஓய்வெடுக்கவும், ஒரு நாள் ஓய்வுக்குப் பிறகு புதிதாகத் தொடங்கவும் சாபத் நாள் நிறுவப்பட்டது.

சாப்பத்தின் பல்வேறு கூறுகள் மேசியாவின் வருகையை அடையாளப்படுத்துகின்றன, அவர் தனது மக்களுக்கு நிரந்தர ஓய்வு அளிக்கிறார். பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின் கீழ், யூதர்கள் தங்களை தேவனுக்கு ஏற்றவர்களாக மாற்றிக் கொள்ள தொடர்ந்து "வேலை" செய்து கொண்டிருந்தனர். ஆசரிப்பு சடங்காச்சார நியாயப்பிரமாணம், தேவாலய நியாயப்பிரமாணம், தனி உரிமைகள் சம்பந்தமான நியாயப்பிரமாணம் போன்றவற்றில் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை என பலவற்றை அவர்கள் கடைப்பிடிக்க முயன்றனர். அப்படிச்செய்தால் அவர்கள் அவரிடம் மன்னிப்புக்காக வந்து அவருடனான ஐக்கியத்தை மீட்டெடுக்க முடியும், ஆனால் தற்காலிகமாக மட்டுமே. ஒரு நாள் ஓய்வுக்குப் பிறகு அவர்கள் தங்கள் சரீர உழைப்பை மீண்டும் தொடங்கியதைப் போலவே, அவர்களும் தொடர்ந்து பலிகளைச் செலுத்த வேண்டியிருந்தது. எபிரெயர் 10:1 நமக்குச் சொல்கிறது, "வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது." இருப்பினும், இந்த பலிகள் எதிர்காலத்தை சுட்டிக்காட்டின. சிலுவையில் கிறிஸ்துவின் கடைசி பலியை எதிர்பார்த்து அவை வழங்கப்பட்டன, அவர் "பாவங்களுக்காக ஒரே பலியைச்

செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார்" (எபிரெயர் 10:12). இறுதி பலியைச் செலுத்தியபின், இயேசு உட்கார்ந்து "ஓய்வெடுத்தார்"-அதாவது, அவர் செய்த பிராயச்சித்தத்தை முடித்துவிட்டார், ஏனென்றால் இனி செய்யவேண்டியது எதுவும் இல்லை. மீட்பின் வேலை முடிந்தது (யோவான் 19:30). இயேசு செய்ததன் காரணமாக, தேவனுடைய பார்வையில் நீதிமானாக்கப்படுவதற்கு நாம் இனி நியாயப்பிரமாணத்தை பராமரிப்பதில் "வேலை" வேண்டியதில்லை. நாம் தேவன் மற்றும் அவர் அளித்த இரட்சிப்பில் ஓய்வெடுக்கவே இயேசு வந்தார்.

சாபத் ஓய்வின் மற்றொரு முக்கியமான அம்சம் என்னவென்றால், தேவன் அதை ஆசீர்வதித்தார், தூய்மையாக்கினார், பரிசுத்தப்படுத்தினார். கிறிஸ்துவின் அடையாளத்தை நம் ஓய்வுநாளில் இங்கே பார்க்கிறோம்-பரிசுத்தமான, பரிபூரணமான தேவனுடைய குமாரன், அவரை நம்பும் அனைவரையும் பரிசுத்தமாக்குகிறார். தேவன் ஓய்வுநாளைப் பரிசுத்தப்படுத்தியது போலவே, அவர் கிறிஸ்துவைப் பரிசுத்தப்படுத்தி உலகிற்கு அனுப்பினார் (யோவான் 10:36). அவரிடத்தில் நம் சுய முயற்சியின் உழைப்பிலிருந்து முழுமையான ஓய்வைக் காண்கிறோம், ஏனென்றால் அவர் மட்டுமே பரிசுத்தர் மற்றும் நீதிமான். “நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொரிந்தியர் 5:21). நாம் இப்போது அவருக்குள் ஒரு ஆவிக்குரிய ஓய்வைப் பெற்றிருக்கிறோம், வாரத்தில் ஒரு நாள் மட்டுமல்ல, எப்போதும்.

இயேசுவும் நமது ஓய்வுநாள் ஓய்வு, ஏனெனில் அவர் "ஓய்வுநாளுக்கும் கர்த்தராக இருக்கிறார்" (மத்தேயு 12:8). மனித அவதாரம் எடுத்த தேவன், அவர் சாப்பாத்தின் உண்மையான அர்த்தத்தை தீர்மானிக்கிறார், ஏனென்றால் அவரே அதை உருவாக்கினார், மேலும் அவர் மாம்சத்தில் நம்

ஓய்வுநாள் ஓய்வாக இருக்கிறார். ஓய்வுநாளில் இயேசுவை குணமாக்கியதற்காக பரிசேயர்கள் விமர்சித்தபோது, ஓய்வுநாளில் ஒரு ஆட்டை ஒரு குழியிலிருந்து வெளியே இழுக்க அவர்கள் தயங்க மாட்டார்கள் என்பதை அவர் அவர்களுக்கு நினைவூட்டினார். அவர் தனது "ஆடுகளை" தேடி வந்து இரட்சித்ததால், அவர் சாபத் விதிகளை மீற முடியும். ஆடுகளை விட மக்கள் முக்கியம், மற்றும் இயேசு வழங்கும் இரட்சிப்பு விதிகளை விட மிகவும் முக்கியமானது. "மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது" (மாற்கு 2:27) என்று கூறி, இயேசு தனது கிரியையிலிருந்து விடுபட சாபத் ஓய்வு நிறுவப்பட்டது என்ற கொள்கையை மீண்டும் கூறினார். பரிசேயர்கள் சாப்பாத்தை சுமை விதிமுறைகளின் நாளாக மாற்றினர். இயேசு அவருடைய கிருபையால் நியாயப்பிரமாணத்திலிருந்து நம்மை விடுவிக்க வந்தார் (யோவான் 1:17; ரோமர் 6:14). அவர் நம்முடைய சொந்த இரட்சிப்பை அடைய முயற்சி செய்வதிலிருந்து நம்மை விடுவிக்கும் சாப்பாத்தின் கர்த்தர். அவரில், நாம் நம்முடைய வேலைகளிலிருந்து ஓய்வெடுக்கிறோம், நம் சார்பாக அவர் செய்து முடித்த வேலையை நம்புகிறோம்.

எபிரேயர் 4 ஆம் அதிகாரம் இயேசுவை நமது ஓய்வுநாள் ஓய்வு என்று உறுதியாகக் கூறுகிறது. கிறிஸ்து வழங்கிய ஓய்வுநாளின் "உள்ளே பிரவேசியுங்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலர்கள் வனாந்தரத்தில் செய்ததைப் போல, அவருக்கு எதிராக நம் இருதயங்களைக் கடினப்படுத்துவதை மாற்ற வேண்டும். அவர்களின் நம்பிக்கையின்மை காரணமாக, இஸ்ரவேலர்களின் தலைமுறை வாக்குறுதியளிக்கப்பட்ட தேசத்தை அணுகுவதை தேவன் தடைப்பண்ணினார், "என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லை" (எபிரெயர் 3:11). எபிரெயர் புத்தகத்தின்

எழுத்தாளர் இயேசு கிறிஸ்துவில் தேவனுடைய ஓய்வுநாளை நிராகரிப்பதன் மூலம் அதே தவறை செய்ய வேண்டாம் என்று கோருகிறார். "ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனிவருகிறதாயிருக்கிறது. ஏனெனில், அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான். ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்" (எபிரேயர் 4:9-11).

இயேசுவைத் தவிர வேறொரு ஓய்வுநாள் ஓய்வு இல்லை. அவர் மட்டுமே நியாயப்பிரமாணத்தின் தேவைகளை பூர்த்தி செய்கிறார், மேலும் பாவத்திற்கு பரிகாரம் செய்யும் பலியை அவர் மட்டுமே செலுத்துகிறார். அவர் நம்முடைய தேவனின் ஏற்பாடாக இருக்கிறார், நம்முடைய சொந்த வேலைகளின் உழைப்பிலிருந்து நம்மை நிறுத்தி ஓய்வெடுக்க அனுமதிக்கிறார். இந்த ஒரே இரட்சிப்பின் வழியை நாம் நிராகரிக்கத் துணியவில்லை (யோவான் 14:6). தேவனுடைய திட்டத்தை நிராகரிக்கத் தேர்ந்தெடுப்பவர்களுக்கு தேவனுடைய எதிர்வினை எண்ணாகமம் 15 இல் காணப்படுகிறது. அங்கு, சாபத் நாளில் ஒரு மனிதன் விறகு குச்சிகளை சேகரிப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த அத்துமீறல் வேண்டுமென்றே செய்த பாவமாகும், இது பகல் நேரத்தில் தைரியமாக, தெய்வீக அதிகாரத்தை வெளிப்படையாக மீறிச் செய்யப்பட்டது. "கர்த்தர் மோசேயை நோக்கி: அந்த மனிதன் நிச்சயமாய்க் கொலைசெய்யப்படவேண்டும்" என்று கூறினார் (வசனம் 35). ஆகவே, கிறிஸ்துவுக்குள் சாபத் ஓய்வின் தேவனுடைய ஏற்பாட்டை நிராகரிக்கும் அனைவருக்கும் அது இருக்கும். "இவ்வளவு பெரிதான

இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்?" (*எபிரெயர்* 2:3).

78. கிறிஸ்துவை உண்மையாக பின்பற்றுதல் என்பதன் அர்த்தம் என்ன?

நற்செய்தி நூல்களில் (மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான்), "என்னைப் பின்பற்றி வா" என்ற இயேசுவின் கட்டளை மீண்டும் மீண்டும் தோன்றுகிறது (எ.கா, மத்தேயு 8:22; 9:9, மாற்கு 2:14; லூக்கா 5:27; யோவான் 1:43). பல சந்தர்ப்பங்களில், இயேசு தம்முடைய சீடர்களாக மாறும் பன்னிரண்டு பேரை அழைத்தார் (மத்தேயு 10:3-4). ஆனால் மற்ற சமயங்களில், அவர் வழங்கியதை யார் விரும்பினார்களோ அவர்களுடன் பேசினார் (யோவான் 3:16; மாற்கு 8:34).

மத்தேயு 10:34-39 இல், இயேசு தம்மைப் பின்பற்றுவதன் அர்த்தம் என்ன என்பதை தெளிவாகக் கூறினார். அவர் சொன்னார், "பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன். எப்படியெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினை உண்டாக்க வந்தேன். ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே. தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல. தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்.."

இயேசு ஒரு "வாளை" கொண்டுவந்து, குடும்ப உறுப்பினர்களை ஒருவருக்கொருவர் எதிராகத் திருப்புவது, "அவரை விசுவாசிக்கிறவான் எவனோ அவன் கெட்டுப்போவதில்லை" (யோவான் 3:16) போன்ற வார்த்தைகளுக்குப் பிறகு கொஞ்சம் கடுமையாகத் தோன்றலாம்.

ஆனால் இயேசு ஒருபோதும் சத்தியத்தை மென்மையாக்கவில்லை, சத்தியம் என்னவென்றால், அவரைப் பின்பற்றுவது கடினமான தேர்வுகளுக்கு வழிவகுக்கிறது. சில நேரங்களில் மனந்திரும்புவது மிகவும் கவர்ச்சிகரமானதாக தோன்றலாம். இயேசுவின் போதனை அருட்கொடைகளிலிருந்து (மத்தேயு 5:3-11) வரவிருக்கும் சிலுவைக்குச் சென்றபோது, அவரைப் பின்பற்றிய பலர் விலகிச் சென்றனர் (யோவான் 6:66). அவர் கைது செய்யப்பட்ட இரவில் இயேசுவைப் பின்தொடர்வது மிகவும் கடினம் என்று சீடர்கள் கூட முடிவு செய்தனர். அவர்களில் ஒவ்வொருவரும் அவரை விட்டு விலகினார்கள் (மத்தேயு 26:56; மாற்கு 14:50). அந்த இரவில், கிறிஸ்துவைப் பின்பற்றுவது என்பது சாத்தியமான கைது மற்றும் மரணதண்டனை. தன்னுடைய ஜீவனைப் பணயம் வைப்பதற்குப் பதிலாக, பேதுரு இயேசுவை மூன்று முறை அவரை அறிந்திருக்கவில்லை என்று மறுதலித்தார் (மத்தேயு 26:69-75).

கிறிஸ்துவை உண்மையாக பின்பற்றுவதென்றால் அவர் நமக்கு எல்லாமுமாகிவிட்டார். எல்லோரும் எதையாவது பின்பற்றுகிறார்கள்: நண்பர்கள், பிரபலமான கலாச்சாரம், குடும்பம், சுயநல ஆசைகள் அல்லது தேவன். நாம் ஒரு நேரத்தில் ஒன்றை மட்டுமே பின்பற்ற முடியும் (மத்தேயு 6:24). அவருக்கு முன்பாக வேறு தெய்வங்கள் நமக்கு இருக்கக்கூடாது என்று தேவன் கூறுகிறார் (யாத்திராகமம் 20:3; உபாகமம் 5:7; மாற்கு 12:30). கிறிஸ்துவை உண்மையாக பின்பற்றுவதென்றால் நாம் வேறு எதையும் பின்பற்றக்கூடாது. லூக்கா 9:23 ல் இயேசு சொன்னார், "ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்." "பாதிவழி சீடன்" என்று எதுவும் இல்லை. சீஷர்கள் விளங்கப்பண்ணினபடி, ஒருவராலும் கிறிஸ்துவைப் பின்பற்ற முடியாது. தங்கள் சொந்த பலத்தில் தேவனுக்குக் கீழ்ப்படிய முயற்சித்தவர்களுக்கு பரிசேயர்கள் சிறந்த எடுத்துக்காட்டுகள். அவர்களின் சுயமுயற்சி தேவனுடைய

பிரமாணத்தின் முழு நோக்கத்தையும் ஆணவத்திற்கும் சிதைப்பதற்கும் வழிவகுத்தது (லூக்கா 11:39; மத்தேயு 23:24).

இயேசு தம்மை உண்மையாகப் பின்பற்றுவதற்கான இரகசியத்தை சீடர்களுக்குக் கொடுத்தார், ஆனால் அந்த நேரத்தில் அவர்கள் அதை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அவர் கூறினார், "ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது" (யோவான் 6:63). மேலும் "ஒருவன் என் பிதாவின் அருளைப் பெறாவிட்டால் என்னிடத்திற்கு வரமாட்டான் என்று இதினிமித்தமே உங்களுக்குச் சொன்னேன் என்றார்" (வசனம் 65). சீடர்கள் மூன்று வருடங்கள் இயேசுவோடு நடந்து, கற்று, கவனித்து, அவருடைய அற்புதங்களில் பங்கு பெற்றனர். ஆனாலும், அவர்களால் கூட தங்கள் சொந்த பலத்தில் அவரை உண்மையாக பின்பற்ற முடியவில்லை. அவர்களுக்கு உதவியாளர் தேவைப்பட்டார்.

தாம் பிதாவினிடத்தில் ஏறிச் சென்றவுடன், அவர்களுக்கு ஒரு "தேற்றரவாளரை" அனுப்புவேன் என்று இயேசு பலமுறை வாக்குறுதி அளித்தார் - பரிசுத்த ஆவியானவர் (யோவான் 14:26; 15:26). உண்மையில், அவர் பரிசுத்த ஆவியானவர் வருவதற்காக, அவர்களுடைய நன்மைக்காகவே அவர் போகிறார் என்று அவர்களிடம் கூறினார் (யோவான் 16:7). பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு விசுவாசியின் இருதயத்திலும் குடியிருக்கிறார் (கலாத்தியர் 2:20; ரோமர் 8:16; எபிரெயர் 13:5; மத்தேயு 28:20). இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களை எச்சரித்தார், "உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும்" அவர்கள் அவரைப் பற்றி சாட்சியமளிக்க வேண்டாம் (லூக்கா 24:49; அப்போஸ்தலர் 1:4). பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் அந்த முதல் விசுவாசிகள் மீது வந்தபோது, அவர்கள் திடீரென்று கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்குத் தேவையான அனைத்து பெலனையும் பெற்றனர், தேவைப்பட்டால் மரிக்கவும் கூடத் தயாராக இருந்தனர் (அப். 2:1-4; 4:31; 7:59-60).

இயேசுவைப் பின்பற்றுவது என்பது அவரைப் போல் இருக்க முயற்சி செய்வதாகும். அவர் எப்பொழுதும் தம்முடைய பிதாவுக்குக் கீழ்ப்படிந்திருந்தார், அதனால் நாம் அதைச் செய்ய முயற்சி செய்கிறோம் (யோவான் 8:29; 15:10). கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்றுவதென்றால், அவரை எஜமானராக்குவதாகும். இயேசுவை நம் வாழ்வின் கர்த்தராக ஆக்குவதன் அர்த்தம் இதுதான் (ரோமர் 10:9; 1 கொரிந்தியர் 12:3; 2 கொரிந்தியர் 4:5). எல்லாவற்றிலும் அவரை மகிமைப்படுத்தும் குறிக்கோளுடன் ஒவ்வொரு முடிவும் கனவும் அவருடைய வார்த்தையின் மூலம் வடிகட்டப்படுகிறது (1 கொரிந்தியர் 10:31). கிறிஸ்துவுக்காக நாம் செய்யும் காரியங்களால் நாம் இரட்சிக்கப்படுவதில்லை (எபேசியர் 2:8-9) ஆனால் அவர் நமக்காகச் செய்ததன் மூலம். அவருடைய கிருபையின் காரணமாக, எல்லாவற்றிலும் அவரைப் பிரியப்படுத்த விரும்புகிறோம். நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் பரிசுத்த ஆவியானவர் முழுமையான கட்டுப்பாட்டை வைத்திருக்க நாம் அனுமதிப்பதால் இவை அனைத்தும் நிறைவேற்றப்படுகின்றன (எபேசியர் 5:18). அவர் வேதவசனங்களை விளக்குகிறார் (1 கொரிந்தியர் 2:14), ஆவிக்குரிய வரங்களால் நம்மை பலப்படுத்துகிறார் (1 கொரிந்தியர் 12:4-11), நம்மை ஆறுதல்படுத்துகிறார் (யோவான் 14:16), நம்மை வழிநடத்துகிறார் (யோவான் 14:26). கிறிஸ்துவைப் பின்பற்றுவதென்றால், அவருடைய வார்த்தையிலிருந்து நாம் கற்றுக்கொண்ட சத்தியங்களைப் பின்பற்றி, இயேசு நமக்குப் பக்கத்தில் நேரில் நடந்ததைப் போல வாழ்வோம்.

79. மத்தேயு 16:18 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாறை எது?

கிறிஸ்து தமது சபையைக் கட்டியெழுப்பும் "பாறை" பேதுருவா அல்லது இயேசு "ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்" (மத்தேயு 16:16) என்ற பேதுருவின் அறிக்கையா. எல்லா நேர்மையிலும், எந்தக் கருத்து சரியானது என்று நாம் உறுதியாகக் கூற வழி இல்லை. இந்த பகுதியின் கிரேக்க இலக்கண கட்டமைப்பு வேறொன்றைப் பார்க்க அனுமதிக்கிறது.

முதல் பார்வை என்னவென்றால், இயேசுவானவர் பேதுரு தமது சபையை கட்டும் "பாறை" என்று அறிவித்தார் என்பதாகும். இயேசு தாம் பயன்படுத்திய வார்த்தைகளில் ஒரு வார்த்தை ஜாலத்தைப் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. "நீ பேதுருவாய் (பெட்ரோஸ்) இருக்கிறாய், இந்த பாறையின்மேல் (பெட்ரா) நான் என் சபையைக் கட்டுவேன்." பேதுருவின் பெயருக்கு "பாறை" என்று பொருள் இருப்பதால், இயேசு தனது சபையை ஒரு பாறையின் மீது கட்டப்போகிறார்-அதாவது இங்கே கிறிஸ்து இரண்டையும் ஒன்றாக இணைக்கிறார் என்று தோன்றுகிறது. சபையின் அஸ்திபாரத்தில் தேவன் பேதுருவை பெரிதும் பயன்படுத்தினார். பெந்தெகொஸ்தே நாளில் முதன் முதலில் நற்செய்தியை அறிவித்தவர் பேதுரு (அப் 2:14-47). சமாரியர்கள் முதன் முதலில் பரிசுத்த ஆவியைப் பெற்றபோது பேதுருவும் அங்கே இருந்தார் (அப்போஸ்தலர் 8:14-17), மேலும் அவர் புறஜாதியினருக்கு நற்செய்தியை எடுத்துச் சென்றார் (அப்போஸ்தலர் 10:1-48). ஒரு வகையில், பேதுரு சபையின் பாறை "அஸ்திபாரம்".

பாறையைக் குறித்த பிற பிரபலமான விளக்கம் என்னவென்றால், இயேசு குறிப்பிடுவது பேதுருவை அல்ல, ஆனால் 16-வது வசனத்தில் பேதுரு கூறிய அறிக்கை ஆகும்: "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து." இயேசு ஒருபோதும் பேதுருவுக்கும் மற்ற

சீடர்களுக்கும் தனது அடையாளத்தின் முழுமையை வெளிப்படையாக கற்பிக்கவில்லை, மேலும் தேவன் இறையாண்மையுள்ளவராய் பேதுருவின் கண்களைத் திறந்து இயேசு உண்மையில் யார் என்பதை அவன் காணும்படிக்கு வெளிப்படுத்தினார் என்பதை பேதுரு உணர்ந்தார். தேவனுடைய குமாரனாக இயேசுவைக் குறித்த அறிக்கை அவரிடமிருந்து ஊற்றப்பட்டது, கிறிஸ்துவின் மீதான பேதுருவின் தனிப்பட்ட நம்பிக்கையின் இதயப்பூர்வமான அறிவிப்பு. கிறிஸ்துவின் மீதான இந்த தனிப்பட்ட நம்பிக்கையே உண்மையான கிறிஸ்தவனின் தனிச்சிறப்பாகும். பேதுருவைப் போல கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்த அனைவரும் சபையே. பேதுரு இந்த உண்மையை 1 பேதுரு 2:4-5 இல் வெளிப்படுத்துகிறார்: "மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்."

பேதுருவின் அறிக்கைக்குப் பிறகு, தேவன் பேதுருவுக்கு சத்தியத்தை வெளிப்படுத்தியதாக இயேசு அறிவிக்கிறார். "பேதுரு," பெட்ரோஸ் என்ற வார்த்தையின் அர்த்தம் "ஒரு சிறிய கல்" என்பதாகும் (யோவான் 1:42). இயேசு அதனுடன் தொடர்புடைய பெட்ரா என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார், அதாவது "அஸ்திபாரக் கல்". அதே வார்த்தையை மத்தேயு 7:24, 25 இல் இயேசு புத்தியுள்ள மனுஷன் தனது வீட்டை கட்டும் கற்பாறையை விவரித்தார். பேதுருவும் தனது முதல் நிருபத்தில் அதே உருவகத்தைப் பயன்படுத்துகிறார்: சபையானது ஏராளமான சிறிய பெட்ரோக்களால் கட்டப்பட்டுள்ளது, "ஜீவனுள்ள கற்கள்" (1 பேதுரு 2:5), இயேசு கிறிஸ்து, ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று பேதுருவின் அறிக்கையைப் பகிர்ந்து கொள்கிறார். அந்த விசுவாச அறிக்கை சபையின் அஸ்திபாரமாகும்.

கூடுதலாக, புதிய ஏற்பாடு கிறிஸ்து சபையில் அஸ்திபாரம் (அப். 4:11, 12; 1 கொரிந்தியர் 3:11) என்பதை தெளிவுபடுத்துகிறது. பேதுருவுக்கு இயேசு இந்த பாக்கியத்தை கொடுத்தார் என்று நினைப்பது தவறு. சபையைக் கட்டுவதில் அனைத்து அப்போஸ்தலர்களும் அஸ்திபாரத்தைப் போடும் பாத்திரத்தை வகித்தனர் (எபேசியர் 2:20), ஆனால் முதன்மை நிலை கிறிஸ்துவுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. கிறிஸ்து "மூலைக்கு தலைக்கல்லாக" அழைக்கப்படுகிறார் (1 பேதுரு 2:6, 7; எபேசியர் 2:20; லூக்கா 20:17; அப்போஸ்தலர் 4:11). கிறிஸ்து மூலக்கல்லாக இருந்தால், பேதுரு எப்படி சபை கட்டப்பட்ட பாறையாக இருக்க முடியும்?

எனவே, மத்தேயு 16:18 இல் உள்ள இயேசுவின் வார்த்தைகள் சொற்களின் எளிய ஜாலமாக விளங்குகின்றன. "பேதுரு, நீ" சிறிய கல் "என்று அழைக்கப்படுகிறாய், ஆனால் உன் வாயிலிருந்து வந்த அறிக்கையாகிய ஒரு பாறாங்கல் போன்ற சத்தியம் சபையின் அஸ்திபாரமாக இருக்கும்."

ரோமன் கத்தோலிக்க திருச்சபை பேதுரு இயேசு குறிப்பிட்ட பாறை என்று வாதிடுகிறார்கள், பின்னர் அது ஒரு உண்மையான சாவை என்பதற்கு ஆதாரமாக அந்த விளக்கத்தைப் பயன்படுத்துகிறது. ஆனால், நாம் பார்த்தபடி, பேதுரு அந்த பாறையாக இருப்பது மட்டும் சரியான விளக்கம் அல்ல. மத்தேயு 16:18 இல் பேதுரு பாறையாக இருந்தாலும், அது ரோமன் கத்தோலிக்க சபைக்கு எந்த அதிகாரத்தையும் கொடுக்காது. பேதுரு ரோமாபுரியில் இருப்பதை வேதம் எங்கும் பதிவு செய்யவில்லை. மற்ற அப்போஸ்தலர்கள் மீது பேதுரு அதிகாரம் கொண்டவர் அல்லது ஆரம்பகால சபையின் முதன்மைத் தலைவர் என்று வேதம் ஒருபோதும் விவரிக்கவில்லை. பேதுரு முதல் போப் அல்ல. கத்தோலிக்க திருச்சபையின் தோற்றம்

பேதுரு அல்லது வேறு எந்த அப்போஸ்தலரின் போதனைகளிலும் இல்லை.

80. இயேசு பரிபூரண ஜீவனை வாக்குத்தத்தமாக அளித்தபோது அவர் எதை அர்த்தப்படுத்தினார்?

யோவான் 10:10ல் இயேசு சொன்னார், "திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்." திருடனைப் போல ஆண்டவர் இயேசு சுயநலமான காரணங்களுக்காக வரவில்லை. அவர் கொடுக்க வருகிறார், பெறுவதற்காக அல்ல. ஜனங்கள் அவரில் அர்த்தமுள்ள, நோக்கமுள்ள, மகிழ்ச்சியான மற்றும் நித்தியமான ஜீவனைப் பெறுவதற்காக அவர் வருகிறார். அவரை நம்முடைய இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் தருணத்தில் இந்த பரிபூரண ஜீவனைப் பெறுகிறோம்.

கிரேக்க மொழியில் "பரிபூரணமாக" என்ற இந்த வார்த்தையானது பெரிஸ்ஸன் ஆகும், அதாவது "அதிகமாக, மிக அதிகமாக, அளவிட முடியாத அளவுக்கு, அளவுக்கதிகமாக, மிதமிஞ்சியதாக, ஒருவர் நினைப்பதைவிட அல்லது எதிர்பார்ப்பதை விட கணிசமாக அதிகமாக இருக்கும் அளவுக்கு மிகுதியாக உள்ளது" என்று அர்த்தமாகும். சுருக்கமாகச் சொன்னால், 1 கொரிந்தியர் 2:9-ஐ நினைவுபடுத்தும் ஒரு கருத்து, நாம் கற்பனை செய்வதைவிட மிகச் சிறந்த ஜீவனையே இயேசு நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்: "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை." நாம் கேட்பது அல்லது நினைப்பது அனைத்திற்கும் மேலாக தேவன் மிகுதியாகச் செய்ய வல்லவர் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார், நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய்

நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய தேவன் (எபேசியர் 3:20).

ஆடம்பரமான வீடுகள், விலையுயர்ந்த கார்கள், உலகளாவிய கப்பல்கள் மற்றும் நமக்கு என்ன செய்வது என்று தெரிந்ததை விட அதிகமாக இருக்கும் பணம் ஆகியவற்றைக் குறித்த தரிசனங்களைப் பெறத் தொடங்குவதற்கு முன்பு, இந்த பரிபூரணமான ஜீவனைக் குறித்து இயேசு என்ன கற்பிக்கிறார் என்பதைப் பற்றி நாம் சற்று நிதானித்து சிந்திக்க வேண்டும். இவ்வுலகில் செல்வம், கௌரவம், பதவி, அதிகாரம் ஆகியவை தேவனின் முதன்மையானவை அல்ல என்று வேதாகமம் சொல்லுகிறது (1 கொரிந்தியர் 1:26-29). பொருளாதாரம், கல்வி மற்றும் சமூக அந்தஸ்தின் அடிப்படையில், பெரும்பாலான கிறிஸ்தவர்கள் சலுகை பெற்ற வகுப்பினரிடமிருந்து வரவில்லை. அப்படியானால், பரிபூரணமான ஜீவன் என்பது அளவுக்கதிகமான பொருள்களைக் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகிறது. அப்படி இருந்திருந்தால், மனிதர்களில் இயேசுவே செல்வந்தராக இருந்திருப்பார். ஆனால் இதற்கு நேர்மாறானது உண்மையாயிருக்கிறது (மத்தேயு 8:20).

பரிபூரணமான ஜீவன் என்பது நித்திய வாழ்வு, நாம் கிறிஸ்துவிடம் வந்து அவரை நம்முடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் தருணத்தில் தொடங்கி, நித்தியம் முழுவதும் செல்லுகிற ஒரு வாழ்க்கை. ஜீவனின் வேதாகம வரையறை - குறிப்பாக நித்திய ஜீவன் - இயேசுவால் வழங்கப்படுகிறது: "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" (யோவான் 17:3). இந்த வரையறை நாட்களின் நீட்டிப்பு, ஆரோக்கியம், செழுமை, குடும்பம் அல்லது தொழில் ஆகியவற்றைக் குறிப்பிடவில்லை. உண்மையில், அது குறிப்பிடும் ஒரே விஷயம் தேவனைப் பற்றிய அறிவு மட்டுமே, இது உண்மையிலேயே பரிபூரணமான ஜீவனுக்கான திறவுகோலாகும்.

பரிபூரணமான ஜீவன் என்றால் என்ன? முதலாவதாக, பரிபூரணமான என்பது ஆவுக்குரிய பரிபூரணம் ஆகும், பொருள்களின் திரட்சி அல்ல. உண்மையில், தேவன் நம் வாழ்வின் பௌதிக சூழ்நிலைகளில் அதிக அக்கறை காட்டுவதில்லை. என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று அவர் நமக்கு உறுதியளிக்கிறார் (மத்தேயு 6:25-32; பிலிப்பியர் 4:19). சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் தேவனை மையமாகக் கொண்ட வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம்; நம்முடைய செல்வமோ அல்லது வறுமையோ தேவனோடு நாம் நிலைத்து நிற்கும் உறுதியான அறிகுறி அல்ல. சாலமோன் ஒரு மனிதனுக்கு கிடைக்கக்கூடிய அனைத்துப் பொருட்களின் ஆசீர்வாதங்களையும் கொண்டிருந்தார், ஆனால் அவை அனைத்தும் அர்த்தமற்றவையாகக் கண்டார் (பிரசங்கி 5:10-15). மறுபுறம், பவுல் எந்த சூழ்நிலையிலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன் என்கிறார் (பிலிப்பியர் 4:11-12).

இரண்டாவதாக, நித்திய ஜீவன், ஒரு கிறிஸ்தவன் உண்மையிலேயே அக்கறைக் கொண்டுள்ள வாழ்க்கை, இது காலத்தால் தீர்மானிக்கப்படுவதில்லை, ஆனால் தேவனுடனான நமது உறவால் தீர்மானிக்கப்படுகிறது. அதனால்தான், நாம் மனந்திரும்பி பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றவுடன், நிச்சயமாக, அதன் முழுமையுடன் இல்லாவிட்டாலும் நித்திய ஜீவனை ஏற்கனவே பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது (1 யோவான் 5:11-13). பூமியில் வாழ்வின் நீளம் ஏராளமான வாழ்க்கைக்கு ஒத்ததாக இல்லை.

இறுதியாக, ஒரு கிறிஸ்தவனின் ஜீவன் "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருதல்" சுற்றியே சுழல்கிறது (2 பேதுரு 3:18). பரிபூரண ஜீவன் என்பது கற்றல், கைக்கொள்ளுதல் மற்றும் முதிர்ச்சி அடைதல்,

தோல்வி, மீளுதல், சரிசெய்தல், சகித்துக்கொள்வது மற்றும் சமாளித்தல் ஆகியவற்றின் தொடர்ச்சியான செயல்முறையாகும் என்பதை இது நமக்குக் கற்பிக்கிறது, ஏனெனில், நமது தற்போதைய நிலையில், "இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம்" *(1 கொரிந்தியர் 13:12)*. ஒரு நாள் நாம் தேவனை நேருக்கு நேர் முகமுகமாய்க் காண்போம், நாம் அப்பொழுது நாம் அறியப்பட்டிருக்கிறபடியே, முமையாக அறிந்துகொள்ளுவோம் *(1 கொரிந்தியர் 13:12)*. நாம் இனி பாவத்துடனும் சந்தேகத்துடனும் போராட மாட்டோம். இது தான் இறுதியில் பரிபூரனமான வாழ்வாக இருக்கும்.

நாம் இயற்கையாகவே உலப்பிரகாரமான பொருள்களை விரும்பினாலும், கிறிஸ்தவர்களாகிய நம்முடைய ஜீவனைப் பற்றிய கண்ணோட்டம் புரட்சிகரமாக இருக்க வேண்டும் *(ரோமர் 12:2)*. கிறிஸ்துவிடம் வரும்போது நாம் புதிய சிருஷ்டியாக மாறுவது போல *(2 கொரிந்தியர் 5:17)*, "பரிபூரணம்" பற்றிய நமது புரிதலும் மாற்றப்பட வேண்டும். உண்மையான பரிபூரணமான ஜீவன் அன்பு, சந்தோஷம், சமாதானம் மற்றும் ஏனைய ஆவியின் கனிகள் ஆகும் *(கலாத்தியர் 5:22-23)*, அவை மிகுதியான "பொருட்கள்" அல்ல. இந்த ஜீவனானது நித்தியமான வாழ்க்கையைக் கொண்டுள்ளது, எனவே, நமது விருப்பம் நித்தியத்தின்மேல் உள்ளது, தற்காலிகமானதின்மேல் அல்ல. பவுல் நமக்கு அறிவுரை கூறுகிறார், "பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது" *(கொலோசெயர் 3:2-3)*.

81. மலைப் பிரசங்கம் என்றால் என்ன?

மத்தேயு 5-7 அதிகாரங்களில் இயேசு கொடுத்த பிரசங்கமே மலைப் பிரசங்கம் என்றறியப்படுகிறது. மத்தேயு 5:1-2 வசனங்களே இது மலைப் பிரசங்கம் என்று அறியப்படுவதற்குக் காரணம்: "அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின் மேல் ஏறினார்; அவர் உட்கார்ந்தபொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள். அப்பொழுது அவர் தமது வாயைத் திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்..." மலைப் பிரசங்கம் இயேசு இதுவரை வழங்கிய பிரசங்கங்களில் மிகவும் பிரபலமானது, ஒருவேளை இதுவரை யாரும் வழங்கிய பிரசங்கங்களில் மிகவும் பிரபலமானது.

மலைப் பிரசங்கம் பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கியது. இந்த கட்டுரையின் நோக்கம் ஒவ்வொரு பகுதியிலும் கருத்து தெரிவிப்பது அல்ல, மாறாக அதில் உள்ளவற்றை சுருக்கமாக வழங்குவது. மலைப்பிரசங்கத்தை ஒரே வாக்கியத்தில் சுருக்கமாகச் சொன்னால், அது இப்படித்தான் இருக்கும்: தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மற்றும் பிரியமான, மாய்மாலம் இல்லாத, அன்பும் கிருபையும் நிறைந்த, ஞானம் நிறைந்த வாழ்க்கையை எப்படி வாழ்வது. மற்றும் பகுத்தறிவு.

5:3-12 - பாக்கியவான்கள்

5:13-16 - உப்பு மற்றும் ஒளி

5:17-20 - இயேசு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினார்

5:21-26 - கோபமும் கொலையும்

5:27-30 - இச்சை மற்றும் விபச்சாரம்

5:31-32 - விவாகரத்து மற்றும் மறுமணம்

5:33-37 - ஆணைகள்

5:38-42 - கண்ணுக்கு கண்

5:43-48 - உங்கள் சத்துருக்களை நேசியுங்கள்

6:1-4 - இல்லாதவர்களுக்கு கொடுங்கள்

6:5-15 - எப்படி ஜெபிக்க வேண்டும்

6:16-18 - உபவாசம் இருப்பது எப்படி

6:19-24 - பரலோகத்தில் பொக்கிஷங்கள்

6:25-34 - கவலைப்படாதிருங்கள்

7:1-6 - மாய்மாலமாக நியாயந்தீர்க்காதீர்கள்

7:7-12 - கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்

7:13-14 - இடுக்கமான வாசல்

7:15-23 - கள்ளத்தீர்க்கதரிசிகள்

7:24-27 - கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷன்

மத்தேயு 7:28-29 பின்வரும் கூற்றுடன் மலைப்பிரசங்கத்தை நிறைவுச் செய்கிறது: " இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது, அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால், ஜனங்கள் அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்." நாம் அனைவரும் அவருடைய போதனைகளைக் கண்டு வியந்து, மலைப்பிரசங்கத்தில் அவர் போதித்த கொள்கைகளைப் பின்பற்றுவோம்!

82. தேவன் மன்னிக்காத பாவம் ஏதேனும் உள்ளதா?

தேவனுடைய மறுபடியும் பிறந்த பிள்ளைக்கு, மன்னிக்க முடியாத பாவம் இல்லை. விசுவாசியின் பாவம் யாவும் சிலுவையில் மன்னிக்கப்பட்டது, கிறிஸ்துவில் இருப்பவர்களுக்கு இனி எந்த ஆக்கினைத்தீர்ப்பும் இல்லை (ரோமர் 8:1).

"உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்" (யோவான் 3:17). அவருடைய ஊழியம் முழுவதும், இயேசு தேவனுடைய அற்புதமான மற்றும் ஆச்சரியமான மன்னிப்பை வழங்கினார். சகேயு (லூக்கா 19), கானாவில் உள்ள பாவமுள்ள பெண் (லூக்கா 7), கலிலேயாவில் திமிர்வாதக்காரன் (லூக்கா 5)-அவர்கள் அனைவரும் கர்த்தரால் மன்னிக்கப்பட்டனர். அவர்கள் என்ன செய்தார்கள் என்பது முக்கியமல்ல; தேவனால் அவர்களை மன்னிக்க முடிந்தது. இயேசு "ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 21:31) என்றார்.

சிலுவையிலிருந்து மொழிந்த இயேசுவின் கூற்று, "முடிந்தது" (யோவான் 19:30), பாவத்திற்கான தண்டனை முழுமையாக செலுத்தப்பட்டது என்று அர்த்தம். "முடிந்தது" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை கிரேக்கத்தில் ஒரு வார்த்தை: டெட்டலஸ்டாய் (tetelestai). இது ஒரு அற்புதமான வார்த்தை. டெட்டலஸ்டாய் ரசீதுகளில் முத்திரையிடப்பட்டது, அவை "முழுமையாக செலுத்தப்பட்டது" எனக் குறிக்க இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டது. தண்டனை பெற்ற குற்றவாளி தனது தண்டனையை முடித்து சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டபோது,

டெட்டலஸ்டாய் என்று ஒரு அடையாளத்தை அவர் இனி சமுதாயத்திற்கு கடன்பட்டிருக்க மாட்டார் என்பதற்கான அடையாளமாக அவரது வீட்டின் வாசலில் ஆணியடித்து வைப்பார்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பாவத்திற்கான நமது பலி மற்றும் "உலகத்தின் பாவத்தை சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29). அவர் சரியான பலி (எபிரெயர் 9:14). கிறிஸ்துவை நம்புகிறவர்களுக்கு வாக்குறுதி என்னவென்றால், அவர்கள் செய்த அல்லது செய்த ஒவ்வொரு பாவமும் மன்னிக்கப்படும். "இயேசுவின் இரத்தம் சகல பாவத்திலிருந்தும் நம்மை சுத்திகரிக்கிறது (1 யோவான் 1:7). 1 கொரிந்தியர் 6:9-10 ஒரு காலத்தில் கொரிந்திய விசுவாசிகளில் உண்டாயிருந்த பாவங்களை பல்வேறு அவதூறு பாவங்களை பட்டியலிடுகிறது. இந்த சத்தியத்தை வழிநடத்த பவுல் அந்தப் பட்டியலைப் பயன்படுத்துகிறார்: "உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்" (வசனம் 11). அவர்களுடைய பாவம் போய்விட்டது, அவர்களிடமிருந்து "கிழக்கிலிருந்து மேற்குக்கு எவ்வளவு தூரமோ" (சங்கீதம் 103:12) அவ்வளவாய் நீக்கப்பட்டுள்ளது.

தேவனுடைய பாவ மன்னிப்பின் நிலையை புரிந்து கொள்வது அவசியம். கர்த்தராகிய இயேசுவின் மூலம் மட்டுமே நாம் தேவனிடம் வர முடியும். இயேசு கூறினார், "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:6). இயேசுவைப் ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் தேவனுடைய மன்னிப்பு கிடைக்கும் (யோவான் 3:16; அப்போஸ்தலர் 10:43), ஆனால் கர்த்தராகிய இயேசுவை நிராகரிப்பவர்களுக்கு மன்னிப்பு அல்லது பாவமன்னிப்பு இல்லை (1 யோவான் 5:12). தேவன் கிறிஸ்துவில் அனைத்து

பாவங்களையும் மன்னிப்பார். கிறிஸ்துவில் இல்லாதவர்களுக்கு மன்னிப்பு இல்லை: "குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" (யோவான் 3:36).

யோவான் மீண்டும் பிறந்த விசுவாசிகளுக்கு தனது முதல் நிருபத்தை எழுதினார், மேலும் அவர் இந்த வாக்குத்தத்தையும் உள்ளடக்கியிருந்தார்: "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோவான் 1:9). நாம் அனைவரும் பாவம் செய்கிறோம் (1 யோவான் 1:8). ஆனால், நாம் செய்யும்போது, தேவனுடைய கிருபை அவருடைய பிள்ளைகளை மன்னிக்கவும், ஐக்கியத்தை மீட்டெடுக்கவும் தயாராக உள்ளது.

1 யோவான் 1:9 இன் தொடக்கத்தில் ஆல் என்ற ஒரு நிபந்தனையை குறிக்கிறது: நாம் "அறிக்கையிட்டால்". கிரேக்க மொழியில் இந்த வார்த்தை ஹோமோலோகியா (எழுத்தியல் பிரகாரம், "அதே வார்த்தை"), இதன் பொருள் "அதையே சொல்வது" ஆகும். நம் பாவத்தை அறிக்கைச் செய்யும்போது தேவனைப் பற்றி நாம் உடன்படுவதாகும். தேவனுடைய மன்னிப்பு தொடர்ந்து பாவம் செய்வதற்கு தடையற்ற வாய்ப்பை நமக்குத் தருவதில்லை. நாம் கிருபையை இலகுவாக நடத்துவதில்லை (ரோமர் 6:1 & 2); மாறாக, தேவனுடன் ஐக்கியத்தில் நடந்துகொண்டிருக்கும் ஒரு மீண்டும் பிறந்த விசுவாசி பாவத்திற்கு உணர்திறன் உடையவனாகவும், அதை விரைவாக கர்த்தரிடம் அறிக்கையிடவும் செய்வான்.

வேதத்தின் மிக அற்புதமான உண்மைகளில் ஒன்று, தேவன் பாவத்தை ஈவாக மன்னிக்கிறார். தேவனுடைய கிருபை எல்லையற்றது என்பதால், தேவன் கிறிஸ்துவில் மன்னிக்க விரும்பும் பாவத்திற்கு வரம்பு இல்லை. எந்த பாவமும் தேவனுடைய கிருபைக்கு

அப்பாற்பட்டது. "பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று" (ரோமர் 5:20). அப்போஸ்தலனாகிய பவுல் அவருடைய இரட்சிப்புக்கு முன்னே "நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன்" (1 தீமோத்தேயு 1:13) என்கிறார். அவர் தன்னை பாவிகளில் பிரதான பாவி என்று அழைத்தார், ஆனால் தேவனுடைய கிருபையை அவர் கண்டறிந்த பிறகு, "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்" (1 தீமோத்தேயு 1:15) என்றார். தேவனால் பவுலை இரட்சிக்க முடியும் என்றால், அவர் யாரையும் இரட்சிக்க முடியும்.

83. இயேசு நம்முடைய பாவத்திற்காக மரிப்பதற்கு முன்பு மக்கள் எப்படி இரட்சிக்கப்பட்டார்கள்?

மனிதன் பாவத்தில் விழுந்து போன பிறகு, இரட்சிப்புக்கு அடித்தளமே கிறிஸ்துவின் மரணமாகத்தான் இருந்ததது. சிலுவைக்கு முன்போ அல்லது சிலுவைக்கு பின்போ உலக வரலாற்றில் திருப்பு முனையான நடந்தேறிய ஒரு சம்பவமில்லாமல் ஒருவனும் இரட்சிக்கப்பட்டிருக்க முடியாது. கிறிஸ்துவின் மரணத்தில் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுடைய கடந்தகால பாவங்களுக்கும், புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுடைய எதிர்கால பாவங்களுக்கும் கிரயம் செலுத்தப்பட்டாயிற்று.

இரட்சிப்புக்கு இன்றியமையாதது எப்போதுமே விசுவாசம் மட்டும் தான். ஒருவருடைய விசுவாசத்தின் கருப்பொருள் எப்பொழுதுமே தேவனாகத்தான் இருகிறார். "அவரை அண்டிக்கொள்கிற யாவரும் பாக்கியவான்கள்" *(சங்கீதம் 2:12)* என்று சங்கீதக்காரன் எழுதுகிறார். ஆதியாகமம் *15:6*ல் ஆபிரகாம் தேவனை விசுவசித்தான் அதை தேவன் அவனுக்கு நீதியாக எண்ணினார் *(ரோமர் 4:3-8)*. எபிரேயர் *10:1-10* வரையிலுள்ள வேதபாகம் தெளிவாக போதிக்கின்றதுபோல, பழைய ஏற்பாட்டு பலியின் முறைமைகள் பாவத்தை முற்றிலுமாக எடுதுப்போடவில்லை. அதேவேளையில், அது தேவனுடைய குமாரன் பாவமனுக்குலத்திற்காக இரத்தஞ்சிந்தபோகிற நாளை சுட்டிக்காண்பிக்கிறதாக இருந்தது.

காலங்கள் பல கடந்தபோதும் ஒரு விசுவாசி எதை விசுவசிக்கிறார் என்பதில்தான் மாற்றம் நிகழ்ந்துள்ளது. எதை விசுவாசிக்க வேண்டும் என்ற தேவனுடைய எதிர்பார்ப்பு அந்த காலம்வரைக்கும் மனுகுலத்திற்கு கொடுக்கப்பட்ட வெளிப்பாட்டைக் பொறுத்து தான் இருந்தது. இது படிப்படியாக வளர்ந்து வருகிற விசுவாசம் எனப்படும். ஆதாம் ஆதியாகமம் *3:15*ல் ஸ்திரீயின் வித்து சாத்தானை ஜெயிக்கும்

என்ற வாக்குத்தத்தத்தை விசுவசித்தான். ஆதாம் அவரை விசுவசித்தான், ஏவாளுக்கு அவன் ஏவாள் என்று பெயரைக் கொடுத்ததன் மூலமாக அதைக் காண்பித்தான் (ஆதியாகமம் 3:20). தேவன் தம்முடைய அங்கீகாரத்தை தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினதில் தெரியப்படுத்தினார் (ஆதியாகமம் 3:21). அந்த நேரத்தில் ஆதாம் அதை மட்டும்தான் அறிந்திருந்தான், அதையே விசுவாசித்தும் வந்தான்.

ஆதியாகமம் 12 மற்றும் 15 வது அதிகாரங்களில் தேவன் ஆபிரகாமிற்கு கொடுத்த வாக்குத்தத்தங்கள் மற்றும் புதிய வெளிப்பாடுகளைக் கொண்டு ஆபிரகாம் தேவனை விசுவசித்தான். மோசேவுக்கு முன்பாக வேதவாக்கியங்கள் எதுவும் எழுதப்படவில்லை, ஆனாலும் தேவன் மனுமக்களுக்கு வெளிப்படுத்தின காரியங்களுக்கு அவர்கள் பொறுப்புடையவவர்களாக இருந்தார்கள். பழைய ஏற்பாடு முழுவதுமே விசுவாசிகள் தேவன் ஒரு நாள் பாவத்தை பார்த்துக்கொள்வார் என்கிற விசுவாசத்தில் இரட்சிப்புக்குள் வந்தார்கள். இன்றோ, நாம் பின்னோக்கி பார்த்து, இயேசு ஏற்கனவே சிலுவையில் பாவத்தை ஜெயித்தார் என்பதை விசுவசிக்கிறோம் (யோவான் 3:16; எபிரேயர் 9:28).

கிறிஸ்துவின் நாளில் வாழ்ந்தவர்கள், அதாவது சிலுவைக்கும் உயிர்தெழுதலுக்கும் முன்பாக வாழ்ந்த விசுவாசிகளின் நிலை என்ன? அவர்கள் எதை விசுவசித்தார்கள்? கிறிஸ்து அவர்களுடைய பாவங்களுக்காக மரித்ததை முழுவதையும் புரிந்து கொண்டார்களா? அவர் ஊழியம் செய்து கொண்டிருக்கையில், "அதுமுதல் இயேசு, தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத்தொடங்கினார்" (மத்தேயு 16:21-22). இந்த செய்திக்கு சீஷர்களுடைய பதில் என்னவாயிருந்தது? "அப்பொழுது, பேதுரு

அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோய்: ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான்". பேதுருவுக்கும் மற்ற சீஷர்களுக்கும் சத்தியம் எதுவென்று முழுமையாக அறியாதிருந்தார்கள், ஆனாலும் இரட்சிக்கப்பட்டிருந்தார்கள் காரணம் அவர்கள் தேவன் அவர்கள் பாவத்திற்குரிய கிரயத்தைப் பார்த்துக் கொள்வார் என்று விசுவாசித்தார்கள். அதை எப்படி தேவன் செய்து முடிப்பார் என்று அவர்களுக்குத் தெரியாது. ஆதாமைவிட, ஆபிரகாமைவிட மோசேயைவிட, தாவீதைவிட சற்று அதிகம் கூட அவர்களுக்கு தெரியாது, ஆனாலும் தேவனை விசுவசித்தார்கள்.

இன்றைக்கு, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு முன்பாக வாழ்ந்த மனிதர்களைவிட நமக்கு அதிக வெளிப்பாடு உள்ளது; நமக்கு முழுமையான சித்திரம் தெரியும். "பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" *(எபிரேயர் 1:1-2)*. நம்முடைய இரட்சிப்பு இப்பொழுதும் கிறிஸ்துவின் மரணத்தை அடித்தளமாக கொண்டேயுள்ளது, நாம் இரட்சிக்கப்பட விசுவாசமே தேவையாக இருக்கிறது, நம் விசுவாசத்தின் கருப்பொருள் தேவனே. இன்று நாம் இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தாரென்றும், அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாவது நாள் உயிர்தெழுந்தாரென்றும் விசுவசிக்கின்றோம் *(1 கொரிந்தியர் 15:3-4)*.

84. நீங்கள் எவ்வளவு இளமையாக இருக்கும்போது உங்களுடைய இரட்சகராக இருக்கும்படிக்கு இயேசுவிடம் கேட்கலாம்?

இரட்சிப்புக்கு நிச்சயமாக வயது தேவை இல்லை. இயேசுவே சொன்னார், "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" (மத்தேயு 19:14). பிள்ளைகள் பாவம் செய்துவிட்டார்கள் என்பதை புரிந்து கொள்ளும் அளவுக்கு வயது வந்தவுடன் (ரோமர் 3:23), இயேசு அவர்களின் பாவங்களுக்கான தண்டனையை செலுத்த மரித்தார் (ரோமர் 5:8; 6:23), என்பதை உணர்ந்து இரட்சிப்புக்காக அவர்கள் இயேசுவின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் (யோவான் 3:16), பின்னர் அவர்கள் இரட்சிக்கப்படக்கூடிய வயதாகிவிட்டனர் எனலாம்.

இரட்சிப்பின் கோட்பாட்டின் ஒரு பகுதியாக இருக்கும் அனைத்து சிக்கலான பிரச்சினைகளையும் ஒரு பிள்ளை புரிந்து கொள்ள வேண்டியதில்லை. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் அடிப்படை பிரச்சினைகளை (மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி) புரிந்துகொள்வதை உறுதி செய்வது முக்கியம், ஆனால் அப்போஸ்தலர் 16:31 இன் வாக்குத்தத்தம் ஒரு வயது வந்தவர் அல்லது பிள்ளையைப் பொறுத்தவரை சமமான உண்மை: "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்."

சிறு பிள்ளைகள், விசுவாசிகளுக்கோ அல்லது அவிசுவாசிகளுக்கோ பிறந்திருந்தாலும், தேவனால் தேர்ந்தெடுக்கப்படலாம், கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டு, பரிசுத்த ஆவியின் கிரியையை அவர்களின் இருதயங்களில் வைத்திருக்கலாம், அதனால் பரலோகத்தில் பிரவேசிக்கலாம். அவர்களின் வாழ்க்கையின் எந்தக் கட்டத்தில்

அவர்கள் இந்த விஷயங்களை உணர்கிறார்கள் என்பது பிள்ளைக்கு பிள்ளை மாறுபடும். சில இளம் பிள்ளைகள் குறிப்பாக மென்மையான இருதயங்களைக் கொண்டுள்ளனர், அவர்களுக்காக இயேசு மரித்தார் என்று கேள்விப்பட்டவுடன், அவர்களின் பாவ சுபாவங்களை உடனடியாக உணர்ந்து பதிலளிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அதிக சாமான்ய ஆளுமைகளைக் கொண்ட மற்றவர்கள் இன்னும் வயதாகும்வரை இந்த விழிப்புணர்வுக்கு வரமாட்டார்கள். இருதயத்தின் எண்ணங்களை கர்த்தர் மட்டுமே அறிவார், அவருடைய பரிபூரண விருப்பத்திற்கும் நேரத்திற்கும் ஏற்ப "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவும்" (லூக்கா 19:10) நாம் அவரையே நம்புகிறோம்.

85. கிறிஸ்துவுக்காக பாடநுபவித்தல் எப்போதும் கிறிஸ்துவைப் பின்பற்றுதலின் ஒரு பகுதியாக இருக்கப் போகிறதா?

கிறிஸ்துவுக்காக துன்பப்படுவதைக் குறித்து வேதாகமம் நிறைய கூறுகிறது. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், இயேசுவைப் பின்பற்றுபவர்கள் பெரும்பாலும் தங்கள் சொந்த குடும்பங்கள் மற்றும் சமூகங்களால் ஒதுக்கி வைக்கப்பட்டனர். சில மோசமான துன்புறுத்தல்கள் மதத் தலைவர்களிடமிருந்து வந்தன (அப்போஸ்தலர் 4:1-3). இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களிடம், "நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது" (மத்தேயு 5:10) என்றார். "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்" (யோவான் 15:18) என்று அவர் தம் சீடர்களுக்கு நினைவுபடுத்தினார்.

2 தீமோத்தேயு 3:12 கூறுகிறது, "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்." வேதாகமக் காலங்களில் இருந்ததைப் போலவே, இன்றும் பல கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவில் விசுவாசத்தை பகிரங்கமாக அறிவிப்பது சிறைவாசம், அடித்தல், சித்திரவதை அல்லது மரணம் போன்றவற்றை விளைவிக்கலாம் (எபிரெயர் 11:32-38; 2 கொரிந்தியர் 12:10; பிலிப்பியர் 3:8; அப்போஸ்தலர். 5:40). சுதந்திரமான தேசங்களில் உள்ள நம்மைப் போன்றவர்கள் பெரும்பாலும் சிந்தனையில் நடுங்குகிறோம், ஆனால் நாம் ஒப்பீட்டளவில் பாதுகாப்பாக உணர்கிறோம். கிறிஸ்துவின் நிமித்தம் ஆயிரக்கணக்கானோர் தினமும் துன்புறுகிறார்கள் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம், நாம் செய்ய வேண்டிய அவசியமில்லை. ஆனால் ஒரே ஒரு வகையான துன்புறுத்தல் இருக்கிறதா?

தம்மைப் பின்பற்றுவதன் அர்த்தம் என்ன என்பதை இயேசு தெளிவாகக் கூறினார்: "பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான். மனுஷன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன்னைத் தான் கெடுத்து நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?" (லூக்கா 9:23-25) "தங்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றுங்கள்" என்ற சொற்றொடர் பற்றிய நமது நவீன புரிதல் பெரும்பாலும் போதுமானதாக இல்லை. இயேசுவின் நாளில் சிலுவை எப்போதும் மரணத்தை அடையாளப்படுத்துகிறது, ஒரு மனிதன் சிலுவையை சுமந்தபோது, அவன் ஏற்கனவே மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தான், இயேசு, அவரைப் பின்பற்றுவதற்கு, ஒருவன் மரிக்க தயாராக இருக்க வேண்டும் என்று கூறினார், நாம் அனைவரும் இரத்த சாட்சிகளாக மரிக்க மாட்டோம். நம் விசுவாசத்திற்காக நாம் அனைவரும் சிறையில் அடைக்கப்பட மாட்டோம், அடிக்கப்பட மாட்டோம், அல்லது சித்திரவதை செய்யப்பட மாட்டோம். அப்படியானால், இயேசு எந்த வகையான மரணத்தை அர்த்தப்படுத்தினார்?

கலாத்தியர் 2:20-ல் பவுல் விளக்குகிறார், "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்." கிறிஸ்துவைப் பின்பற்றுவதென்றால், நம்முடைய சொந்த வழியில் நாம் செய்யும் காரியங்களுக்காக நாம் இறக்கிறோம். அவருடன் சிலுவையில்

அறையப்பட வேண்டும் என்றுள்ள நம் விருப்பம், நம் உரிமைகள், நம் உணர்வுகள் மற்றும் நம் இலக்குகளை நாம் கருதுகிறோம். நம் சொந்த வாழ்க்கையை வழிநடத்தும் உரிமை நமக்கு இறந்துவிட்டது (பிலிப்பியர் 3:7-8). மரணம் துன்பத்தை உள்ளடக்கியது. மாம்சம் இறக்க விரும்புவதில்லை. சுயமாக இறப்பது வேதனையானது மற்றும் நமது சொந்த இன்பத்தைத் தேடுவதற்கான நமது இயற்கையான விருப்பத்திற்கு எதிரானது. ஆனால் நாம் கிறிஸ்துவையும் மாம்சத்தையும் பின்பற்ற முடியாது (லூக்கா 16:13; மத்தேயு 6:24; ரோமர் 8:8). "கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல" (லூக்கா 9:62) என்று இயேசு சொன்னார்.

பவுல் இயேசுவின் நிமித்தம் பலரைக் காட்டிலும் அதிகமாக பாடுபட்டார். பிலிப்பி பட்டணத்தில் உள்ள கிறிஸ்தவர்களிடம் அவர் இவ்வாறு கூறினார்: "ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர்நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது" (பிலிப்பியர் 1:29). இங்கு அருளப்பட்டிருக்கிறது என்ற வார்த்தையின் அர்த்தம் "இறக்கம் காண்பிக்கப்பட்டது, இலவச ஈவாக வழங்கப்பட்டது." பவுல் துன்பத்தை ஒரு சாபமாக முன்வைக்கவில்லை, ஆனால் ஒரு நன்மை.

பாடுகள் பல வடிவங்களில் இருக்கலாம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதைத் தேர்ந்தெடுப்பதன் மூலம், நாம் உலகத்துடன் முரண்படுகிறோம். கலாத்தியர் 1:10 கூறுகிறது, "இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே" (NASB). வேதாகமத்தின்

போதனைகளை நெருக்கமாகக் கடைப்பிடிப்பதன் மூலம், நிராகரிப்பு, அவமானம், தனிமை அல்லது துரோகம் ஆகியவற்றிற்கு நம்மை நாமே அமைத்துக் கொள்கிறோம். பெரும்பாலும், கொடூரமான துன்புறுத்தல்கள் தங்களை ஆவிக்குரியவர்கள் என்று கருதுபவர்களிடமிருந்து வருகிறது, ஆனால் தங்கள் சொந்த கருத்துக்களுக்கு ஏற்ப தேவனை வரையறுத்துள்ளனர். நீதி மற்றும் வேதாகம சத்தியத்திற்காக ஒரு நிலைப்பாட்டை எடுக்க நாம் தேர்வுசெய்தால், நாம் தவறாகப் புரிந்து கொள்ளப்படுவோம், கேலி செய்யப்படுவோம் அல்லது மோசமாக இருப்போம். துன்பத்தின் எந்த அச்சுறுத்தலும் அப்போஸ்தலர்களை கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதிலிருந்து தடுக்கவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். உண்மையில், எல்லாவற்றையும் இழப்பது மதிப்புக்குரியது என்று பவுல் கூறினார், "இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி இருப்பதை அறிவேன்" (பிலிப்பியர் 3:10, NASB). அப்போஸ்தலர்கள் இயேசுவைக் குறித்துப் பிரசங்கித்ததற்காக மற்றொரு அடியைப் பெற்ற பிறகு அவர்களின் எதிர்வினையை அப்போஸ்தலர் 5:40-41 விவரிக்கிறது: "அப்பொழுது அவர்கள் அவனுடைய யோசனைக்கு உடன்பட்டு, அப்போஸ்தலரை வரவழைத்து, அடித்து, இயேசுவின் நாமத்தைக் குறித்துப் பேசக்கூடாதென்று கட்டளையிட்டு, அவர்களை விடுதலையாக்கினார்கள். அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனை சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போனார்கள்."

கிறிஸ்துவை உண்மையாக பின்பற்றுபவராக இருப்பதன் ஒரு பகுதியாக எப்பொழுதும் துன்பங்கள் இருக்கும். வாழ்க்கையை

வழிநடத்தும் பாதை கடினமானது என்று இயேசு கூறினார் (மத்தேயு 7:14). நமது கஷ்டமும் அவருடைய துன்பத்தை ஒரு சிறிய வழியில் அடையாளம் காணும் ஒரு வழியாகும்.

மனிதர்களுக்கு முன்பாக நாம் அவரை மறுதலித்தால், பரலோகத்திலுள்ள தம்முடைய பிதாவுக்கு முன்பாக அவர் நம்மை மறுதலிப்பார் என்று இயேசு கூறினார் (மத்தேயு 10:33; லூக்கா 12:9). கிறிஸ்துவை மறுதலிக்க பல நுட்பமான வழிகள் உள்ளன. நம்முடைய செயல்கள், வார்த்தைகள், வாழ்க்கை முறை அல்லது பொழுதுபோக்குத் தேர்வுகள் அவருடைய சித்தத்தைப் பிரதிபலிக்கவில்லை என்றால், நாம் கிறிஸ்துவை மறுதலிக்கிறோம். நாம் அவரை அறிந்திருப்பதாகக் கூறிக்கொண்டு, நாம் அறியாதது போல் வாழ்ந்தால், நாம் கிறிஸ்துவை மறுதலிக்கிறோம் (1 யோவான் 3:6-10). பலர் கிறிஸ்துவை மறுதலிக்கும் அந்த வடிவங்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள், ஏனென்றால் அவர்கள் அவருக்காக துன்பப்பட விரும்பவில்லை.

இருதயத்தின் மீதான கட்டுப்பாட்டிற்காகப் போராடும்போது, அதன் சொந்த விருப்பத்திற்கு இறந்து கிறிஸ்துவின் கர்த்தத்துவத்திற்கு சரணடைய வேண்டும் (ரோமர் 7:15-25). துன்பம் எந்த வடிவத்தில் வந்தாலும், அப்போஸ்தலரைப் போலவே நாமும் "அவருடைய நாமத்தின் நிமித்தம் அவமானத்தை அனுபவிக்கத் தகுதியானவர்களாகக் கருதப்பட்டோம்" என்பதை கனமாக மற்றும் ஒரு பாக்கியமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

86. இயேசுவின் இரத்தத்தைச் சொல்லி மன்றாடுவது வேதாகமத்தின் படியானதா?

ஜெபத்தில் "இயேசுவின் இரத்தத்தைச் சொல்லி மன்றாடுதல்" என்பது வேர்ட் ஆஃப் ஃபெயித் *(Word of Faith)* இயக்கத்தின் ஆரம்பகால தலைவர்களில் சிலருக்கு ஒரு போதனையாகும். "ஜெபத்தில் இயேசுவின் இரத்தத்தைச் சொல்லி மன்றாடுவது" என்று ஜனங்கள் பேசும்போது, "நான் _____ மீது இயேசுவின் இரத்தத்தை மன்றாடுகிறேன்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தி எந்தவொரு மற்றும் ஒவ்வொரு பிரச்சனையிலும் கிறிஸ்துவின் வல்லமையைக் "கோரி" ஏறெடுக்கப்படும் மன்றாட்டு நடைமுறையைக் குறிப்பிடுகின்றனர்.

"இயேசுவின் இரத்தத்தைச் சொல்லி மன்றாடுதல்" என்பதற்கு வேதத்தில் எந்த அடிப்படையும் இல்லை. வேதாகமத்தில் உள்ள எவரும் கிறிஸ்துவின் இரத்தத்தை "கேட்கவில்லை". "இரத்தத்தைச் சொல்லி மன்றாடுபவர்கள்" அந்த வார்த்தைகளில் ஏதோ மந்திரம் இருப்பது போல் அல்லது அவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் அவர்களின் ஜெபம் எப்படியாவது அதிக வல்லமை வாய்ந்தது போல் நினைத்து அப்படிச் செய்கிறார்கள். இந்த போதனை ஜெபத்தின் தவறான மற்றும் துருபதேசப் பார்வையில் இருந்து பிறந்தது, ஜெபம் உண்மையில் தேவனுடைய சித்தம் செய்யப்பட வேண்டும் என்று ஜெபிப்பதை விட நாம் விரும்புவதைப் பெற தேவனைக் கையாளும் ஒரு வழியைத் தவிர வேறில்லை. விசுவாசம் என்பது ஒரு வல்லமை என்ற தவறான போதனையின் அடிப்படையில் முழு விசுவாச இயக்கமும் நிறுவப்பட்டது, போதுமான விசுவாசத்துடன் நாம் ஜெபித்தால், தேவன் நமக்கு ஆரோக்கியம், செல்வம் மற்றும் மகிழ்ச்சியைத் தருவதாக உத்தரவாதம் செய்கிறார், மேலும் ஒவ்வொரு பிரச்சனையிலிருந்தும் ஒவ்வொரு சூழ்நிலையிலிருந்தும் நம்மை விடுவிப்பார். இந்தக்

கண்ணோட்டத்தில், வேதாகமம் அவரை வெளிப்படுத்தும் பரிசுத்தமான, இறையாண்மையுள்ள, பரிபூரணமான மற்றும் நீதியுள்ள சிருஷ்டிகராக இருப்பதற்குப் பதிலாக நாம் விரும்புவதைப் பெறுவதற்கான ஒரு வழியாகத் தேவன் எண்ணப்படுகிறார்.

இந்த விசுவாசத்தின் வார்த்தையைப் பொய்யாகக் கற்பிப்பவர்கள் மனிதனைப் பற்றிய உயர்ந்த பார்வையையும், நாம் விரும்புவதை மன்றாடுவதற்கும், நாம் விரும்பும் வழியில் தேவனைப் பதிலளிப்பதற்கும் தங்களது "உரிமை"யைக் கொண்டுள்ளனர். இது பவுலின் வாழ்க்கையிலும், துன்பம் மற்றும் சோதனைகளுக்கான அணுகுமுறையிலும் எடுத்துக்காட்டப்பட்ட உண்மையான வேதாகம விசுவாசத்திற்கு எதிரானது. பவுல் 2 தீமோத்தேயுவில் எழுதினார், "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2 தீமோத்தேயு 3:12). ஆனால், நாம் துன்பப்பட்டால் அல்லது நோய்வாய்ப்பட்டால் அல்லது பாவத்துடன் போராடினால், அது நமக்கு போதுமான விசுவாசம் இல்லாததால் அல்லது நமக்கானதை உரிமையாகக் கோருவதற்கு இயேசுவின் இரத்தத்தை நாம் மன்றாடவில்லை என்று விசுவாச வார்த்தை கற்பிக்கிறது. ஆனால், பவுல் கிறிஸ்துவின் இரத்தத்தை மன்றாடுவதையோ அல்லது சோதனைகள் மற்றும் துன்புறுத்தல்களை எதிர்கொண்டபோது "சரியாக அவருடையது" என்று கூறுவதையோ நாம் காணவில்லை. மாறாக, எந்தச் சூழ்நிலையிலும் கிறிஸ்துவின் மீது அவர் வைத்திருந்த அசையாத விசுவாசத்தைக் காண்கிறோம்: "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" (2 தீமோத்தேயு 1:12).

பவுல் "என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்,

வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலிப்பியர் 4:11-13). பவுலின் விசுவாசம் கிறிஸ்துவில் மட்டுமே இருந்தது, மேலும் அவர் உறுதியாகச் சொல்ல முடியும், "கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்!" (2 தீமோத்தேயு 4:18).

பொதுவாக நடைமுறையில் உள்ள "இரத்தத்தைச் சொல்லி மன்றாடுதல்" என்பது வேதாகம ஜெபத்தை விட மாயவாதத்துடன் பொதுவானது-ஒரு மந்திர சூத்திரத்தை ஓதுவது மற்றும் அது செயல்படும் என்று நம்புவது. சில வார்த்தைகளைக் கூறுவது நமது ஜெபங்களை மந்திர சக்தியாக மாற்றாது. மேலும், சாத்தானை தோற்கடிக்க கிறிஸ்துவின் "இரத்தத்தைச் சொல்லி மன்றாடுவது" தேவையில்லை. அவன் ஏற்கனவே தோற்கடிக்கப்பட்டுவிட்டான், நாம் உண்மையிலேயே மீண்டும் பிறந்தவர்களானால், தேவன் தனது நோக்கத்திற்காகவும் மகிமைக்காகவும் அனுமதிப்பதைத் தவிர சாத்தானுக்கு நம்மீது எந்த அதிகாரமும் இல்லை. கொலோசெயர் 1:13 இதை முற்றிலும் தெளிவுபடுத்துகிறது: "அவர் நம்மை இருளின் அதிகாரத்தினின்று விடுவித்து, தம்முடைய அன்பான குமாரனுடைய ராஜ்யத்தில் நம்மை மாற்றினார், அவருடைய இரத்தத்தினாலே நமக்கு பாவமன்னிப்பு உண்டு."

பாதுகாப்பிற்காக அல்லது அதிகாரத்திற்காக கிறிஸ்துவின் "இரத்தத்தைச் சொல்லி மன்றாடுவதற்கு" பதிலாக, கிறிஸ்தவர்கள் யாக்கோபு 4:7 இல் உள்ள கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டும், "ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து

நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்." வேதாகமத்திற்கு மாறான ஜெபத்தைப் பின்பற்றுவதற்குப் பதிலாக, நாம் வேதத்தின் எளிய கட்டளைகளைப் பின்பற்ற வேண்டும் - தேவனுக்கு முன்பாக ஒரு பரிசுத்த வாழ்க்கையை நடத்துவது, பாவத்திற்கு இடம் கொடுக்காமல் இருக்க நம் எல்லா எண்ணங்களையும் சிறைபிடிப்பது, அந்த முதல் இரண்டு கட்டளைகளை நாம் தவறினால் பாவங்களை அறிக்கை செய்வது, மற்றும் எபேசியர் 6:13-17 இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை அணிந்துகொள்ளவேண்டும்.

கிறிஸ்துவில் வெற்றிகரமான வாழ்வில் வேதாகமம் நமக்கு பல அறிவுரைகளை அளிக்கிறது, மேலும் "இயேசுவின் இரத்தத்தைச் சொல்லி" மன்றாடுவது அவற்றில் ஒன்றல்ல. கிறிஸ்துவின் இரத்தத்தால் நாம் சுத்திகரிக்கப்பட்டோம், அவர் நமக்காக "எப்பொழுதும் பரிந்து பேசுகிறார்" (எபிரெயர் 7:25) அவர் நம்முடைய பிரதான ஆசாரியரும் மத்தியஸ்தருமானவர். அவருடைய ஆடுகளாகிய நாம் ஏற்கனவே அவருடைய பாதுகாப்பில் இருக்கிறோம்; அவர் ஏற்கனவே வாக்குறுதி அளித்து வழங்கியதற்காக நாம் அவரை நம்பி ஒவ்வொரு நாளும் வாழ வேண்டும்.

87. இயேசு தேவனென்றால், அவர் தேவனிடம் எப்படி ஜெபிக்க முடியும்? இயேசு தன்னிடமே ஜெபித்துக்கொள்ளுகிறாரா?

பூமியில் வந்த தேவனாகிய இயேசு பரலோகத்திலுள்ள தமது பிதாவிடம் ஜெபித்ததை புரிந்துகொள்வதற்கு, நித்திய பிதாவும் நித்திய குமாரனுமாக ஒரு மனிதனின் வடிவத்தில் இயேசு இப்பூமிக்கு வருவதற்கு முன்பே நித்திய இருவரும் நித்திய உறவு கொண்டிருந்ததை நாம் உணர வேண்டியது அவசியமாக இருக்கிறது. யோவான் 5:19-27 வரையிலுள்ள வசனங்களை வாசியுங்கள், குறிப்பாக 23-ம் வசனத்தை வாசிக்கவும். அதில் பிதாவானவர் குமாரனை அனுப்பியதாக இயேசு கற்பிக்கிறார் (காண்க: யோவான் 15:10). இயேசு பெத்லகேமில் பிறந்தபோது அவர் தேவனுடைய குமாரனாகவில்லை. மாறாக அவர் எப்பொழுதும் நித்தியகாலமாக தேவனுடைய குமாரனாக இருந்தார், இப்பொழுதும் தேவனுடைய குமாரனாக இருக்கிறார், மற்றும் இனியும் அவர் தேவனுடைய குமாரனாக இருப்பார்.

ஏசாயா 9:6, "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்" என்பதை நமக்கு சொல்லுகிறது. இயேசு எப்பொழுதும் பரிசுத்த ஆவியோடும் சேர்ந்து திரித்துவத்தில் ஒரு பாகமாக இருக்கிறார். திரித்துவம் எப்பொழுதுமே இருக்கிறது, பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், மற்றும் ஆவியாகிய தேவன் ஆகிய மூன்று தேவர்கள் அல்ல, ஆனால் ஒரே ஒரு தேவன் மூன்று ஆள்தன்மையுள்ள நபர்களாக இருகிறார். இயேசு அவரும் அவருடைய பிதாவும் ஒன்றாக இருப்பதாக போதித்தார் (யோவான் 10:30). அதாவது, அவர் மற்றும் அவரது பிதா ஆகிய இருவரும் ஒரே சாராம்சத்தில் ஒரே பொருளாக இருக்கின்றனர் என்று

அர்த்தப்படுகிறது. பிதா, குமாரன் மற்றும் ஆவியானவர் தேவனாக உள்ள மூன்று சமமானவர்கள் ஆகும். இந்த மூவரும் தொடர்ந்து, ஒரு நித்திய உறவில் இருந்தார்கள் மற்றும் இருக்கிறார்கள்.

தேவனுடைய நித்திய குமாரனாகிய இயேசு பாவமற்ற மனித அவதாரத்தை ஏற்றுக்கொண்டபோது, அவர் தம்முடைய பரலோக மகிமையை விட்டுவிட்டு ஒரு அடிமையின் ரூபத்தை எடுத்துக்கொண்டார் (பிலிப்பியர் 2:5-11). தேவ-மனிதன் என்கிற நிலையில், அவர் பிதாவிற்கு கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது (எபிரெயர் 5:8). அவர் சாத்தானால் சோதிக்கப்பட்டார், மனிதரால் தவறாக குற்றம் சாட்டப்பட்டார், ஜனங்களால் நிராகரிக்கப்பட்டார், இறுதியில் சிலுவையில் அறையப்பட்டார். அவர் பரலோகத்திலிருக்கிற தம்முடைய பிதாவிடம் ஜெபித்ததன் காரணம் அவரிலிருந்து வல்லமையையும் (யோவான் 11:41-42) ஞானத்தையும் (மாற்கு 1:35; 6:46) பெற்றுக்கொள்ளுவதற்கான ஜெபமாக இருந்தது. அவரது ஜெபம் தமது பிதாவின் சித்தத்திற்கு ஒப்புகொடுத்து சார்ந்திருந்ததையும், பிதாவின் மீட்பின் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பிதாவை சார்ந்திருந்ததையும் அவரது பிரதான ஆசாரிய ஜெபம் காண்பிக்கிறதாக இருக்கிறது (யோவான் 17). அவருடைய ஜெபமானது அவர் இறுதியில் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து, நாம் தேவனுடைய பிரமாணங்களை மீறியதற்கான தண்டனையை (மரணத்தை) செலுத்தியதைக் காண்பிக்கிறது (மத்தேயு 26:31-46). மெய்யாகவே அவர் கல்லறையிலிருந்து சரீரத்தில் உயிர்த்தெழுந்து, பாவத்திலிருந்து மனந்திரும்பி அவரை இரட்சகராக நம்புகிறவர்களுக்கு மன்னிப்பையும் நித்திய ஜீவனையும் அளிக்கிறவரானார்.

பிதாவாகிய தேவனிடத்தில் தேவனாகிய குமாரன் ஜெபிக்கிறதினாலோ அல்லது பேசுகிறதினாலோ எந்தப் பிரச்சனையும் இல்லை. முன்னமே குறிப்பிட்டுள்ளபடி, கிறிஸ்து ஒரு மனிதனாக இப்பூமிக்கு வருவதற்கு முன்பே அவர்களுக்குள் நித்திய உறவு இருந்தது.

இந்த உறவு சுவிசேஷங்களில் சித்தரிக்கப்பட்டுள்ள தேவனுடைய குமாரனின் உறவு, எவ்வாறு தேவனுடைய குமாரன் அவருடைய பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினார் என்பதைக் காண்பிக்கிறதாகவும், அவ்வாறு செய்வதன் மூலம் அவருடைய பிள்ளைகளுக்கு மீட்பைப் பெற்றுத்தந்ததையும் காண்பிக்கிறது (யோவான் 6:38). அவருடைய பரலோகப் பிதாவிற்கு கிறிஸ்துவின் தொடர்ச்சியான கீழ்ப்படிதல் அவருடைய ஜெப வாழ்க்கையின் மூலம் அதிகாரம் பெற்றதாக விளங்கியது. ஜெபிக்கிறதில் நாம் கிறிஸ்துவின் முன்மாதிரியை பின்பற்ற வேண்டும்.

பரலோகத்திலுள்ள தம் பிதாவோடு இயேசு கிறிஸ்து ஜெபித்ததினால் அவர் இந்த பூமியில் சிறிய தேவன் என்று அர்த்தமில்லை. பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கு ஜெபம் எவ்வளவு முக்கியமென்று பாவமில்லாதவராக இயேசு இருந்தபோதிலும், இயேசு சித்தரிக்கிறார். இயேசு பிதாவிடம் ஜெபம் செய்தார் என்பது திரித்துவத்தில் அவருக்குண்டான அவரது உறவு பற்றியும், நம்முடைய தேவையான பெலனும் ஞானமும் பெறுவதற்கு தேவனியே சார்ந்து கொள்ளவேண்டும் என்பதற்கான முன்மாதிரியுமாக இருக்கிறார். தேவ-மனிதனாகிய கிறிஸ்துவைப் போல, தேவனோடுள்ள பிரமிக்கத்தக்க ஜெப வாழ்க்கை தேவைப்படுவதால், இன்று கிறிஸ்துவின் சீஷராக நாமும் நம்முடைய ஜெபவாழ்க்கையைக் கொண்டிருப்பது அவசியமாக இருக்கிறது.

88. அன்புள்ள இயேசு சுவாமி என்று ஜெபிக்கலாமா?

இன்றைக்கு பெரும்பாலான விசுவாசிகளும். ஏன் பெரிய ஊழியக்காரர்களும் கூட அன்புள்ள இயேசு சுவாமி என்று சொல்லித்தான் ஜெபத்தை ஆரம்பிக்கின்றனர். இப்படி ஜெபிப்து திரித்துவத்தை மறுதலிப்பதாகும்; இப்படி ஜெபிப்பது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை தரக் குறைவாக்குவதாகும். தெரியாமல் பலர் ஜெபிப்பது பரவாயில்லை. அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவராய் இருப்பார் (அப். 17:30) தெரிந்தும் ஜெபிப்பது மரணத்துக்கேதுவான பாவம் (1 யோ. 5:16). எபி. 12:1ல் சொல்லப்பட்ட ஆண்டவனை பார்க்காமல், ஆட்களையே பார்ப்பதால் ஏற்பட்ட விளைவு இது. சத்தியம் கருகலாக்கப் பட்டிருக்கிறது. இதை ஆவியானவர் விளக்குவராராக!

2001 ஆண்டுகளுக்கு முன்பாக இயேசு மனிதனாய் வந்து ஊழியம் செய்தபோது ஒரு முறை அவரே சீஷர்களுக்கு ஜெபம் பண்ண கற்றுக்கொடுத்தார் (மத். 6:9-13); இன்னொரு முறை ஒரு சீஷர் கேட்டபோது சொல்லிக் கொடுத்தார் (லூக். 11:2-4) இரண்டு முறையும் பிதாவிடம் தான் ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தார்; இயேசுவிடம் அல்ல. பிதாவிடம். பலர் இந்த ஜெபத்தையே மனப்பாடம் பண்ணி அதையே ஜெபம் பண்ணும் போதெல்லாம் ஒப்பிக்கின்றனர். இந்த ஜெபத்தை அப்படியே ஒப்பித்தால் தான் பலன் உண்டு என நம்புகின்றனர். சிலர் இதை முக்கியமான நேரங்களில் (உதாரணமாய் இராப்போஜனம்) அப்படியே ஒப்பிக்கின்றனர். இன்னும் பலருக்கு "இது வல்ல ஜெபம்; இது ஜெபம் பண்ண வேண்டிய விதம்" (மத். 6:9) என்று தெரியவில்லை. இவர்களின் மனக்கண்கள் இன்னும் பிரகாசம் ஆகவில்லை (எபே. 1:19). இயேசு சொல்லிக் கொடுத்த விதத்தை

மாத்திரமல்ல: யாரை நோக்கி ஜெபிக்க வேண்டும். யார் மூலம் ஜெபிக்க வேண்டும் என்பதையும் மறந்துவிட்டனர். யோ. 16:23.24; 15:16; 14:13,14ஐ வாசியுங்கள் "மெய்யாகவே மெய்யாகவே" என்று எங்கெல்லாம் இயேசு சொல்லியிருக்கிறாரோ அந்த வசனங்களெல்லாம் மிகமிக முக்கியமானவை. பிதாவினிடத்தில் மீட்புக்காய் தேவன் கொடுத்த நாமம், இயேசு என்னும் நாமம் (அப் 4:12) பிதா கொடுத்த இந்த நாமத்தினால் பிதாவிடமே ஜெபிக்க வேண்டும் கேட்க வேண்டும் என்று இயேசுவே விரும்புகிறார். இயேசுவின் சித்தத்திற்கு, வார்த்தைக்கு மாறாய் செயல்படுவதே துரோகம். இப்படி இயேசுவை நோக்கி ஜெபிப்பதானது, பிதாவாகிய தேவன். மூன்று ஆள்தத்துவத்தில் ஒருவர் - என்பதை மறுதலிப்பதாகும். இது திரித்துவக் கொள்கைக்கு விரோதமானதாகும்.

மேலும் "சுவாமி" என்று இயேசுவை அழைப்பது அவரின் மகிமைக்கு இழுக்கானது. சுவாமி என்ற வார்த்தை அந்நிய தெய்வங்களை குறிக்கும்படி நியா. 17:5; யோனா 1:6ல் எழுதப்பட்டுள்ளது. அந்நிய தெய்வங்களுக்குள்ள வார்த்தையை அண்டசராசரங்களையும் படைத்த இரட்சகர் இயேசுவுக்கு சூட்டி, அழைக்கலாமா? இது மாபெரும் பாவமல்லவா! அந்நிய தெய்வங்களை பின்பற்றுபவர்களின் நாமத்தை கூட உச்சரிக்கவே மாட்டேன் என்று சொன்ன தேவனை (சங். 16:4) அந்நிய தெய்வங்களோடு விபச்சாரம் வேசித்தனம் செய்கிறீர்கள் என்று "விபச்சாரக்காரரே" என்று இஸ்ரேலரை அழைத்த தேவனை, அந்நிய ஸ்திரிகளோடு சேர்ந்து அந்நிய தெய்வங்களுக்கு பலிபீடம் கட்டிய சாலமோனின் ஞானியை விசுவாசிகளின் பட்டியலிலே இல்லாமல் ஆக்கிய (எபி. 11) தேவனை, அந்நிய தெய்வ விக்ரகங்களை சுட்டெரிக்கச் சொன்ன தேவனை, அந்நிய தெய்வ வணக்கம் (கன்றுக்குட்டி) செய்த இஸ்ரேலரின் பெயரை ஜீவ புஸ்தகத்தில் கிறுக்கிப் போடுவேன் என்று சொன்ன தேவனை, அந்த அந்நிய தெய்வ அழைப்பான சுவாமி என்ற பெயரால் கூப்பிடலாமா?

இந்த செய்தியை வாசிக்கும் தேவ பிள்ளையே! இன்னும் மாயக்காரர் பின்னால் ஓடாதே! அவர்கள் போல் ஜெபிக்காதே! தேவ கோபாக்கினை வரும்! பிதாவை நோக்கி இயேசுவின் நாமத்தில், இயேசு சொல்லிக் கொடுத்த முறைப்படி ஜெபி! வீணே சாபத்தை கட்டிக் கொள்ளாதே! மத். 7:21. 22. எப்போதும் நினைவில் இருக்கட்டும்.

89. இயேசு ஊதியது ஏன்?

உயிர்த்தெழுந்த இயேசு "அவர்கள் மேல் ஊதி பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்" (யோ. 20:22) என்றார். இந்த சத்தியம் நிறைய கிறிஸ்தவர்களுக்கு புரியாத புதிராய் கருகலாய் இருக்கிறது. ஒரு சிலர் இதை வைத்து பரிசுத்த ஆவியின் அபிசேஷக் காரியத்தை கள்ள உபதேசமாகக் போதிக்கிறார்கள். தேவன் விளக்குவாராக.

வேதத்திலே தேவன் இரண்டு இடங்களில் மனிதர் மேல் ஊதினார். ஒன்று ஆதாம் உருவாக்கப்பட்ட போது (ஆதி. 2:7). மற்றொன்று உயிர்த்தெழுந்த பின் (யோ. 20:22). எசே 37:9ல் சொல்லப்பட்டது தீர்க்கதரிசன வார்த்தை. ஆதாமின் நாசியிலே ஜீவ சுவாசத்தை ஊதினார். அவன் ஜீவாத்மாவனான். தேவன் மனிதனை சிருஷ்டிக்கும் போதே ஆவியினால் சிருஷ்டித்தார். இயேசு பிறந்ததும் பரி. ஆவியினால் தானே. நாமும் கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பரி. ஆவியினால் தானே பிறந்தோம் (யோ. 3:35) இயேசுவோடு இருந்த அப்போஸ்தலர்களும். சீஷர்களும் மறுபடியும் பிறந்தவர்கள்: ஞானஸ்நானம் பெற்றவர்கள். அப்பேர்ப்பட்டவர்கள் இயேசு மரித்தார் என்ற உடனே பயந்து ஒளித்துக் கொண்டார்கள். உயிர்த்தார் என்று கேள்விப்பட்டும், கலிலேயா கடற்கரைக்கு வரச் சொல்லியும் போகாமல், அவிசுவாசத்தால் கல்லறைக்கு போனார்கள். மறுபடியும் மீன்பிடிக்கும் எண்ணம் வந்தது. என்ன காரணம்? அவர்கள் பரி. ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு (அப். 1:4.8) உலகமெங்கும் போக வேண்டுமே! யோ. 14:17 (In English)ன் படி இவர்களுடனே பரிசுத்த ஆவியானவர் இருந்தால் தானே. வரப்போகிற ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற முடியும். ஆவியானவர் இவர்களோடு இல்லாததால் தானே இவர்களின் நடைமுறை தாறுமாறாய் இருக்கிறது. ஆவியினாலும் வசனத்தாலும் பிறந்த

ஆவிக்குரியவர்கள், மாம்சத்திற்குரியவர்களாகி விட்டீர்களே? இனி இவர்களை Recoup பண்ணுவது எப்படி? அதனால்தான் இயேசு இவர்கள் மேல் ஊதி பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றார் உடனே அவர்களுக்கு மறுபடியும்பிறந்த அனுபவம் வந்தது. தேவனைத் துதித்து மகிழ்ந்தார்கள் (லூக். 24:53) பரி. ஆவியின் ஞானஸ்நானத்தை யோ. 14:17ன்படி பெற்றுக் கொண்டார்கள். ஆனால் இன்றைக்கோ, நாம் பின் மாறி. பரி ஆவியின் ஞானஸ்நானத்தை பெறமுடியாத நிலையில் இருந்தோமானால், நமக்கு ஊத இயேசு மனுஷீகமாய் இல்லை. ஆனால் அன்று அப்போஸ்தலர்களுக்கு இல்லாத சிலாக்கியம் இன்று நமக்கு இருக்கிறதே; வேத வசனப் புத்தகம் இருக்கிறது; வசனத்தால் Recoup பண்ண முடியும். வசனத்தை போதிக்கும் போதகர்கள் நமக்குண்டு. இவர்களும் நம்மை Recoup பண்ணுவார்கள். நாம் பாக்கியசாலிகள்.

90. இயேசு மட்டும் தான் பரலோகம் போனாரா?

"பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷ குமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை" (யோ. 3:13) என்ற வசனத்தை வைத்துக் கொண்டு இயேசு ஒருவர் தான் பரலோகம் போனார் என்று பலர் நம்புகின்றனர். அதே நேரத்தில் 2 ராஜா. 2:11ன்படி எலியா பரலோகம் போனான் என்றும் ஆதி. 5:24 மற்றும் எபி. 11:5ல் ஏனோக்கு பரலோகம் போனான் என்றும் 2 கொரி. 12:2ன்படி பவுலும் பரலோகம் போனான் என்றும் பலர் நம்புகின்றனர். அப்படியானால் யோ. 3:13ல் சொல்லப்பட்ட கருத்து பொய்யா? தேவனுடைய வார்த்தைகள் அனைத்தும் சத்தியமானதன்றோ! இந்தக் கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

யோ. 3:13ல் சொல்லப்பட்ட வார்த்தை இயேசுவின் வார்த்தை அல்ல என்றும் அது யோவானின் மூலம் தேவனால் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தை என்றும் முதலில் அறிய வேண்டும். இதற்கு ஒத்ததான நீதி. 30:4ஐயும் வாசியுங்கள். ஏனோக்கு பரலோகம் போனான்; எலியாவும் பரலோகம் போனான்: இயேசுவும் பரலோகம் போனார். இதிலே விந்தியாசம் என்னவென்றால் ஏனோக்கும் எலியாவும் எடுத்துக் கொள்ளப்பட்டார்கள் (Taken Away) எபிரேய பாஷையிலே Law-Kakh அதாவது to take Away என்றும். முறையே ஆதி. 5:24 மற்றும் 2 ராஜா. 2:11 போன்ற வசனங்களில் வருகின்றன. இதன் பொருள் அவர்கள் தேவனால் எடுத்துக் கொள்ளப் பட்டார்கள் என்பதாகும். நாமும் அதேபோலத்தான் இயேசுவின் இரகசிய வருகையிலே எடுத்துக் கொள்ளப்படுவோம் என்று 2 தெச. 4:16-16 சொல்லுகின்றது. ஆனால் யோ. 3:13ல் இயேசு பரலோகத்துக்கு ஏறினார் என்பதற்கு எபிரேயு பாஷையிலே Anabaino, அதாவது "to go

up of on power" என்று போடப்பட்டுள்ளது. இதன் பொருள் கிறிஸ்துவாகவே தன்னுடைய வல்லமையினாலே பரலோகத்துக்கு ஏறினார் என்பதாகும். ஆனால் ஏனோக்கு எலியா போன்றோரெல்லாம், தங்களுடைய வல்லமையினால் பரலோகம் போகவில்லை: தேவனால் தான் பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். இதிலிருந்து நாமறிவது என்ன? குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே அல்லாமல் தன்னுடைய தெய்வீக வல்லமையினாலே பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை. அல்லேலூயா! இதனால் தான் இவரை தேவனென்று சொல்ல முடிகிறது. ஆனால் ஏனோக்கும் எலியாவும் தேனவனல்லவே! அவர்கள் மனிதர்கள்தானே! எனவே அவர்கள் தங்கள் சொந்த பலத்தால் பரலோகம் போகவில்லை என்றும் தேவனே எடுத்துக் கொண்டார் என்றும் அறிகிறோம். ஆனால் இயேசுவோ, தானே பரலோகம் ஏறினார் என்றும். இதனாலே இவர் தேவன் என்று நிரூபணமாகிறார் என்றும் அறிகிறோம். தேவனுக்கே மகிமையுண்டாவதாக! இப்படியாய் இயேசுவைப் போல் தானே பரலோகம் ஏறினவனோ இறங்கினவனோ ஒருவருமில்லை என யோ *3:13*ன் மூலம் தேவன் வெளிப்படுத்துகிறார். இந்த கருகலான சத்தியத்தை உலகறியச் செய்யும் தேவனுக்கே மகிமை. *(எலியாவும், ஏனோக்கும் எடுத்துக் கொள்ளப்பட்டபின் எங்கே இருக்கிறார்கள் என வெளிப்பாடு இல்லை. ஆனால் இயேசுவோ, பரலோகில் பிதாவின் வலது பாரிசத்தில் இருக்கிறார்.)*

91. கிறிஸ்துவின் ஆயிர வருட ஆட்சி

இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து 1000 வருடம் ஆட்சி செய்வார் என்று வசனங்கள் தெளிவாகக் கூறுகின்றன. ஆயிரம் வருடம் என்பதற்கு ஆங்கிலத்தில் 'மில்லேனியம்' (MILLENNIUM) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இது லத்தீன் வார்த்தையை தழுவியது. லத்தீன் மொழியில் 'மில்லே' (MILLE) என்றால் 'ஆயிரம்' என்றும், ஆனம் (ANNUM) என்றால் 'வருடம்' என்றும் பொருள். ஆயிர வருட ஆட்சிக்கு முன் சபை எடுத்துக்கொள்ளப்படும் (வெளி.20:1-10). இதைத் தொடர்ந்து மகா உபத்திரவ காலம் ஆரம்பமாகும்.

I. மகா உபத்திரவ காலம்

பரிசுத்தவான்கள் இயேசுவின் இரகசிய வருகையில் மத்திய வானில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். இதைத் தொடர்ந்து இந்த உலகில் மகா உபத்திரவ காலம் ஆரம்பிக்கும். சாத்தான் இந்த உலகில் முழுமையாக செயல்படமுடியாத அவனை தடுத்துக் கொண்டிருப்பது இயேசுகிறிஸ்துவின் சபை. சபை எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் சாத்தான் இந்த பூமியிலே தள்ளப்படுவான் (2 தெச.2:3-8;வெளி .12:7-9).

1. அந்திக்கிறிஸ்து ஆட்சி

அந்திக்கிறிஸ்து இந்த உலகத்தில் பெரிய அரசியல் நிபுண னாக தன்னை வெளிப்படுத்துவான். 7 வருடம் யூதருடன் உடன் படிக்கை பண்ணி தன்னை சமாதான தலைவனாகக் காண்பிப்பான். உலகம் அவனை தலைவனாக ஏற்றுக்கொள்ளும். யூதர்கள் அவனை

மேசியாவாக ஏற்றுக்கொள்வார்கள். 7 வருடம் அவன் ஆட்சி செய்வான்.

தானியேல் 9:27ல் ஒரு வாரம் என்பது தீர்க்கதரிசனமாய் கூறப்பட்ட 7 வருடங்களைக் குறிக்கும். முதல் 3 .5 ஆண்டுகள் அந்திக்கிறிஸ்து நல்லவனாக நடிப்பான். யூதருக்கு நன்மைகள் பல செய்வான். பிந்தின 3.5 ஆண்டுகளில் தன் சுயரூபத்தைக் காண்பிப்பான். தன்னையே யாவரும் வணங்கும்படி கட்டளை யிடுவான். யூதர்கள் அதை எதிர்ப்பார்கள். உலகில் இதுவரை இருந்திராத உபத்திரவம் உண்டாகும். குறிப்பாக யூதர்கள் மிக அதிகமாக உபத்திரவப்படுவார்கள் (2 தெச.2:4; மத்.24:15-22).

2. இந்த பிந்தின 3.5 ஆண்டுகளைப் பற்றிய பல விளக்கங்கள்

*ஒரு காலமும் (1 ஆண்டு), காலங்களும் (2 ஆண்டு), அரைக் காலமும் (1/2 ஆண்டு) என்று கூறப்பட்டுள்ளது. தானி.12:7; வெளி.12:14. (மொத்தம் 3.5 ஆண்டு).

*42 மாதங்கள் (3.5 ஆண்டு) வெளி.11:2; 13:5

*1260 நாட்கள் (3.5 ஆண்டு) வெளி.11:3

எனவே அந்திக்கிறிஸ்துவின் ஆட்சி என்று கூறப்பட்டுள்ளது 7 வருடம். இதில் பிந்தின 3.5 ஆண்டுகள் மகா உபத்திரவம் உண்டாகும். இந்த உபத்திரவ காலத்தில் நடக்கும் சம்பவங்கள் வெளிப்படுத்தல் 6-18 அதிகாரங்களில் விளக்கப்பட்டுள்ளன.

II. ஆயிர வருட அரசாட்சி

உபத்திரவகாலம் முடிந்தவுடன் இரகசிய வருகையில் மத்திய ஆகாயத்திற்கு எடுத்துக்கொண்ட பரிசுத்தவான்களுடன் இயேசு கிறிஸ்து பகிரங்கமாக இந்த உலகத்திற்கு வருவார் (யூதா 14,15). வெளிப்படுத்தல் 20:1-10 வசனங்களில் இயேசுகிறிஸ்து இந்த உலகில் 1000 வருடம் ஆட்சி செய்வார் என்று தெளிவாகக் கூறப் பட்டுள்ளது. முதல் 7 வசனங்களில் '1000 வருடம்' என்பது மட்டும் 6 தடவை வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வெளியரங்கமாய் வருவதை முழு உலகமும் காணும்.

இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்: பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென் (வெளி.1:7).

.....அவர்கள் உயிர்த்து கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள் (வெளி.20:4).

முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகார மில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள் (வெளி.20:6).

III. ஆயிரம் வருட அரசாட்சியைக் குறித்த 3விதக் கொள்கைகளைப் பற்றிய விளக்கம்

1. ஆயிர வருட ஆட்சிக்குப் பின்தான் இயேசுகிறிஸ்து இந்த பூமிக்கு வருவார் என்ற கொள்கை

இதற்கு POST MILLENNIALISM என்று பெயர். அதாவது "ஆயிர வருட ஆட்சிக்குப் பின்" என்பது பொருள்.

இந்தக் கொள்கையின்படி சுவிசேஷத்தைப் பிரசங்கித்து உலகத்தை இரட்சிப்புக்குள் நடத்தும்போது நாளடைவில் உலகம் முன்னேற்றமடைந்து பரிசுத்தவான்களின் சமுதாயமாய் மாறும். இப்படி முன்னேற்றமடைந்த பரிசுத்தவான்கள் ஆயிரம் வருடம் ஆட்சி செய்தபின் இயேசுவின் வருகை இருக்கும் என்பதாகும்.

இந்தக் கொள்கை தவறான ஒன்று. இயேசுவின் வருகைக்கு முன் உலகம் நாளுக்கு நாள் சீர்கெட்டுப்போகும் என்றுதான் வேதம் கூறுகிறது (1 தீமோ.4:1; 2 தீமோ.3:1-5). இந்தக் கொள்கையை பிரபலப்படுத்தியவர் யூனிட்டேரியன் போதகர். டேனியல் விட்பி என்பவர் (கி.பி.1638-1726). இந்த கொள்கையை நம்பின பரிசுத்த வான்களில் சிலர் சார்லஸ் ஸ்பர்ஜன், டி.எல்.மூடி, வில்பர் சேப்மன், ஏ.ஜே. ஜோர்டன், எ.பி.சிம்ஸன்.

2. ஆயிர வருட அரசாட்சி இந்த உலகில் நடைபெறாது, பரலோகத்தில்தான் நடக்கும் என்ற கொள்கை.

இதற்கு AMILLENNIALISM என்று பெயர். அதாவது இயேசு கிறிஸ்து ஆயிரவருடம் இந்த உலகை ஆட்சி செய்யமாட்டார் என்ற கொள்கை. இந்தக் கொள்கையும் தவறானது. ஏனெனில் இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து இந்த பூமியை 1000 வருடம் ஆட்சி செய்வார் என்பதை வசனம் தெளிவாக விளக்குகின்றது.

பசுவும் கரடியும் கூடி மேயும், சிங்கம் மாட்டைப்போல் வைக் கோல் தின்னும் என்ற காரியங்களெல்லாம் இந்த உலகத்திலே தானே நடைபெறும் (ஏசாயா 11:6-9).

3. இயேசு இந்த உலகத்திற்கு வந்து 1000 வருடம் ஆட்சி செய்வார் என்ற கொள்கை

இந்த கொள்கைக்கு PREMILLENNIALISM என்று பெயர். இதைத்தான் அப்போஸ்தலர் விசுவாசித்தனர். நாம் விசுவாசிக்கும் உபதேசமும் இதுதான்.

IV. ஆயிர வருட ஆட்சியில் நடக்கும் முக்கிய சம்பவங்கள்

1. யூதர் யாவரும் இஸ்ரேல் நாட்டில் கூட்டி சேர்க்கப்படுவார்கள் (16.36:24-28)

கி.பி.70க்குப் பின் இஸ்ரவேலர் உலகமெங்கும் சிதறிப்போய் விட்டனர். 1948ல் இஸ்ரேல் சுதந்திரம் பெற்றபோது உலகின் பல பகுதிகளிலிருந்தும் யூதர்கள் தங்கள் தேசத்திற்கு திரும்பிவர ஆரம்பித்தனர். ஆயினும் இன்னும் பலகோடி யூதர்கள் உலகின் பல நாடுகளிலும் சிதறி இருக்கின்றனர். இவர்கள் யாவரும் மேசியாவின் ஆட்சிக் காலத்திலே இஸ்ரேல் நாட்டிற்குத் திரும்பி வருவார்கள்.

2. எருசலேம் உலகின் தலைநகரமாக விளங்கும்

இயேசுகிறிஸ்து உலகின் மையத்திலிருக்கும் எருசலேம் பட்டணத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்வார் (எரே.3:17; மீகா 4:8; ஆமோஸ் 9:11,12)

3. சாத்தான் கட்டப்பட்டு 1000 வருடம் பாதாளத்தில் தள்ளப் படுவான் (வெ.20:1-3)

சாத்தான் இல்லாததால் பாவம் செய்யத்தூண்டும் சக்தி ஒன்றும் செயல்படாது. எனவே கொலை, கொள்ளை, விபச்சாரம், வேசித்தனம் ஆகிய ஒரு பாவமும் இருக்காது.

4. பூமி மிக செழிப்பாக இருக்கும் சாபமிராது இன்று இந்த பூமி சபிக்கப்பட்ட நிலையில் சாபத்துக்குள்ளாகியிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் ஆட்சியில் சாபம் நீங்கி பூமி தன் பலனைக் கொடுக்கும். எங்கும் செழிப்பும் மிகுதியான விளைச்சலும் உண்டாகும் (எசாயா 35:1,2; 55:12,13; சங் .67:6; யோவா 2:24).

5. மிருகங்களுக்குள் பகை இருக்காது காடுகளிலுள்ள மிருகங்கள் ஒன்றுக்கு ஒன்று பகையுடன் வாழ்கின்றன. ஒன்றை ஒன்று கொன்று அழிக்கின்றன. ஆயிர வருட ஆட்சியில் இந்த பகை இருக்காது. ஓனாய் ஆட்டுக்குட்டி யோடே தங்கும்; புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக் கொள்ளும். ஒரு சிறுவன் அவைகளை நடத்துவான் (ஏசாயா 11:6-9; 65:25; ஓசியா 2:18).

6. மனிதனின் ஆயுசு நாட்கள் நீடிக்கப்படும் இந்த நாட்களில் மனிதர்கள் நீண்ட காலம் வாழ்வார்கள். 100 வயதுள்ளவர்கூட வாலிபர் என்றுதான் எண்ணப்படுவார் (ஏசாயா 65:20-23).

7. யுத்தங்கள் நடைபெறாது உலகமெல்லாம் சமாதானமாயிருப்பதால் யுத்தங்கள் நடை பெறாது. எனவே ஆயுதங்களை உற்பத்திசெய்வதும், அவை களைப் பயன்படுத்துவதும் இருக்காது (ஓசியா 2:18; ஏசாயா 2:4; மீகா 4:3)

8. எருசலேம் தேவாலயம் கட்டப்படும்

எருசலேம் தேவாலயம் கட்டப்பட்டு உலகிலுள்ள யாவரும் வந்து கர்த்தரை ஆராதிப்பார்கள் (எசே.37:28).

9. பரிசுத்தஆவியானவர் ஊற்றப்படுதல்

உலகிலுள்ள யாவர்மேலும் பரிசுத்தஆவியானவர் ஊற்றப் பட்டிருப்பார் (யோவேல் 2:28,29).

10. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிந்திருத்தல்

இந்த நாட்களில் உலகிலுள்ள யாவரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிந்திருப்பார்கள் (சகரியா 14:9; ஏசாயா 2:2).

92. நியாயத்தீர்ப்பு செய்பவர் பிதாவா? இயேசுவா?

"பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின் படி நியாயந்தீர்க்கிற வரை நீங்கள் பிதாவாகத் தொழுது கொண்டு வருகிறபடியால்...." (1 பேதுரு 1:17) என்ற வசனத்தின்படி நியாயந்தீர்க்கிறவர் பிதா என்றும் *"இதோ சீக்கிரம் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது" (வெளி. 22:12)* என்ற வசனத்தின்படி நியாயந் தீர்க்கிறவர் இயேசு கிறிஸ்து என்றும் வெவ்வேறு விதமான கொள்கைகள் கிறிஸ்தவ வட்டாரத்தில் நிலவி வருகின்றன. இன்றும் சிலர் இயேசுவும் பிதாவும் ஒன்று என்று சொல்லி இயேசுவாகிய பிதாதான் நியாயந் தீர்க்கிறவர் என்றும் கள்ள உபதேசத்தைப் பரப்பி வருகின்றனர். கருகலாக்கப்பட்ட உண்மையான சத்தியத்தை ஆவியானவர் வெளிப்படுத்துவாராக!

சங். 50:6: 75:7; எபி. 12:23 போன்ற வசனங்களின்படி தேவன் தான் நியாயாதிபதி என்று அறிகிறோம். நியாயத் தீர்ப்புச் செய்கிறவர் பிதாவாய் இருந்தாலும் குமாரன் மகிமைப்படும்படியாய் நியாயத் தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார் என்று *யோ. 5:22* ன் படி அறிகிறோம். இயேசுவே உயிரோடிருக்கிறவர் களுக்கும், மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதி என்று பேதுரு பிரசங்கிக்கிறார். *(அப். 10:42)* மனுஷர்களை ஒரு மனுஷனைக் கொண்டே நியாயந்தீர்க்க தேவன் திட்டமிட்டபடியினாலே தம்முடைய ஒரே பேறான குமாரனை மனிதனாய்ப் பிறக்க வைத்தார். மனிதனாய் பிறந்த அவர் மரித்த போதும், நியாயாதிபதி இவரே என்பதால் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி அதன் நிச்சயத்தை எல்லோருக்கும் விளங்கப் பண்ணினார் *(அப். 17:31)* அவர் பூமியை நியாயந்தீர்க்க சீக்கிரமாய்

வரவேண்டியிருப்பதால், மனுஷ ரூபத்தில் அவர் பரலோகம் போய் நமக்காய் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். அதே மனித ரூபத்தில் தான் அவர் மீண்டும் வந்து நியாயந்தீர்க்கப் போகிறார். அல்லேலூயா! ஆக, அல்பாவும் ஓமேகாவும், ஆதியும், அந்தமும், முந்தினவரும், பிந்தினவரும், மரித்து உயிரோடிருக் கிறவருமாகிய இயேசு கிறிஸ்துவே பூமியை நியாயந்தீர்க்க பிதாவின் அதிகாரத்தோடு வரப் போகிறார்! அந்த நாள் மிகச் சமீபமே!

93. நீதிமொழிகளில் சொல்லப்படும் "ஞானம்" இயேசுவா?

நீதி, 8ம் அதிகாரத்தில், "அவர் அருகே செல்லப் பிள்ளையாயிருந்தேன்"; "உலக முண்டாகுமுன்னே ஜெநிப்பிக்கப்பட்டேன் ; அபிஷேகம் பண்ணப்பட்டேன்" என்றெல்லாம் வரும் பல வசனங்களை வைத்துக் கொண்டு, இங்கு சொல்லப்படும் ஞானம் என்பது இயேசுதான் என்று பல ஆவிக்குரிய சபையில் கூட பிரசங்கிக்கின்றார். இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர்தாமே வெளிப்படுத்துவாராக.

நீதி. 8:24-26ன் படி ஜெநிப்பிக்கப்பட்ட ஞானம் என்பது இயேசு என்றால், அவர் படைக்கப்பட்டவர் என்றே ஆகிறது. அப்படியானால் அவர் தேவனாக இருக்க முடியாதல்லவா? நம் இயேசு மகா தேவனாயிற்றே! (தீத். 2:13). அப்படியிருக்க வீணே யேகோவாவின் சாட்சிகள் என்று சொல்வோரின் துர் உபதேசத்திற்கு ஆளாக வேண்டாம். நீதி. 1:2ஐ வாசித்தால். நீதிமொழிகள் என்ற புஸ்தகம் சாலமோனால் எழுதப்பட்டதே, நாம் ஞானம், போதகம், புத்திமதி போன்றவைகளை அறிந்து கொள்வதற்காகவே என அறியலாம் போதகம் (Instruction) புத்திமதி (words of understanding) போன்றவை எந்த ஒரு ஆள்தத்துவத்தையும் குறிக்காத போது, ஞானம் (Wisdom) மட்டும் எப்படி இயேசுவைக் குறிக்க முடியும்? ஞானத்தைப் பலவாறாக உலகம் எண்ணுகிறது. விஞ்ஞானம், அஞ்ஞானம், மெய்ஞானம் என்றெல்லாம் சொல்லப்படுகின்றது. மெய்ஞானம் தான் தேவஞானம். இந்த தேவனின் ஞானத்தைத் தேடித்தான் எத்தனையோ பேர் ஞானி என்ற பட்டமிட்டு திரிகின்றனர். இதிலிருந்து நாம் நிதானிப்பது என்னவென்றால்:- இந்த ஞானம் என்பது, சாயல் (Character) குணாதிசயம் எனலாம். இந்த தேவனின் சாயலில் ஒன்றான,

*Character*ல் ஒன்றான ஞானத்தை அடைந்து கொள்ளவே அன்றும் இன்றும் என்றும் மனிதன் தாகமாயிருக்கிறான். கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என்று நீதி. *1:7:9:10* போன்ற வசனத்தின் படி பார்த்தால், ஞானம் என்பது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அல்ல என்று தெளிவாய் உணரலாம். கர்த்தருக்குப் பயப்படுதல் என்றால் *Fear* அல்ல, *Reverential trust in God and His word* என்பதாகும். அதாவது தேவனையும் தேவனுடைய வார்த்தையையும் எல்லாவற்றிற்கும் மேலாக நம்பி செயல்படுவதாகும். கர்த்தருக்குப் பயப்படும் பயம் என்றால் தீமையை வெறுப்பதே என்று நீதி. *8:13* விளக்குகின்றது. எப்போது தீமையை வெறுக்க முடியும்? பெருமையையும், அகந்தையையும், புரட்டுவாயையும் வெறுக்க முடியும்? தேவனையும் தேவனுடைய வார்த்தையையும் மதித்து விசுவாசித்து செயல்படும்போது தானே! செயல்பட ஆரம்பிக்கும் போதே ஞானம், மனுஷசாயலில் இணைய ஆரம்பிக்கிறது. ஆமென். இது முழுமை பெறும்போது நாம் தேவனைப் போலாகி விடுகின்றோம். அல்லேலூயா!

ஞானத்தைப் பற்றி நீதி. *1:20-32; 3:13-18* போன்ற பல வசனங்கள் விவரிக்கின்றன. பிதா, குமாரன். பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவருமே இணைந்துதான் அனைத்தையும் படைத்தனர். *(ஆதி 1:1.2; யோவா 1:3; 2 கொரி 3:17) சங் 104:24: 136:5* போன்ற வசனங்களை வாசிக்கும் போது, தேவன் அனைத்தையும் ஞானமாய்ப் படைத்திருக்கிறார் என்றே அறிகிறோமே அல்லாமல், ஞானமாகிய இயேசு தான் படைத்தார் என்று அல்ல. ஞானத்தை நீதி. *8:2,3;* போன்ற இடங்களில் "அது" என்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் மூல பாஷையிலோ பெண்பாலாய், *"அவள்" (She)* என்று எழுதப்பட்டுள்ளது. இயேசு பெண்பாலா? இல்லையே. கவிஞன் தன் கலைக்கண்ணோட்டத்தோடு, ஞானத்தைப் பெண்ணாகவும், செல்லப்பிள்ளையாகவும் ரசித்து எழுதுகிறான். மற்றபடி அது பெண்ணுமல்ல; பிள்ளையுமல்ல. நீதி. *8:34*ல்

சொல்லப்பட்ட அபிஷேகம் என்பது *Anointed* அல்ல: *Setapart* என்று பொருள். தேவனிடத்தில் ஆவியிலேயே ஞானம் பிரத்தியேகமாய் இருந்தது என்பதாகும். ஞானத்தைப் பற்றி எழுதுகிற சாலமோன் தேவனிடம் கேட்டது ஞானத்தைத்தானே *(1 ராஜா. 3:11)!* ஞானம் என்பது இயேசு என்றால் இயேசுவையா கேட்டான்? தேவன் இயேசுவையா அவனுக்குக் கொடுத்தார்? இல்லையே. அவனுக்கு இயேசு என்ற பெயரே தெரியாதே! நியாயம் விசாரிக்கிறதற்கு ஏற்ற ஞானத்தை கேட்டான். தேவ ஞானத்தை தேடினால் கிடைக்கும்: அதிகாலையிலே அதாவது இளவயதிலேயே *(Early Stages)* தேட வேண்டும் *(நீதி. 8:17)*. இப்படித்தேடிப் பெற்றுக் கொண்டு சாட்சியாய் வாழ்ந்தவர்கள் தான் யோசேப்பு *(ஆதி. 41:39)* ஒரு சாமுவேல் *(1 சாமு. 7:15-17)*. சாலமோன், தானியேல் *(தானி 2:20)* போன்றோர். தேவனுக்குள்ளே ஞானம். அறிவு போன்ற பொக்கிஷங்கள் உள்ளன *(கொலோ. 2:3)*: அவற்றை இந்த தேவமனுஷர்கள் பெற்றிருந்தார்கள். நாமும் பெற வேண்டும் என்பதே சாலமோனின் விருப்பமும் தேவனின் சித்தமுமாகும்.

தேவ ஞானத்தில் பல வகைகள் உள்ளன. அதிலே பிரதானமான ஒன்று தான் *1 கொரி. 2ல்* பவுல் கூறும் தேவ ஞானம். இது தேவன் தம்முடைய மகிமைக்காய் ஏற்படுத்தி. மறைக்கப்பட்ட இரகசியமான தேவஞானம். இதுதான் இயேசு கிறிஸ்துவால் உண்டான இரட்சிப்பின் சுவிசேஷம்! இதைத்தான் தீர்க்கதரிசிகளும் தேவ தூதர்களும் கூட ஆராய்ந்தார்கள் என்று *1 பேது. 1:10-12* சொல்கின்றது. இப்படிப்பட்டதான விசேஷத்தை. தேவ ஞானம் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறது. அல்லேலூயா! உலக ஞானத்தால் இதை அறிய முடியாது. இப்படியான உலக ஞானிகளை வெட்கப்படுத்தவே உலகின் பைத்தியங்களாகிய உன்னையும் என்னையும் தெரிந்து கொண்டார். யூதர்கள் அடையாளத்தையும், அற்புதத்தையும், வல்லமையையும் கேட்டார்கள்; கிரேக்கரோ புறஜாதியாரோ ஞானத்தைக் கேட்டார்கள். தேவனால் அழைக்கப்பட்டு கிறிஸ்துவைத்

தரித்துக் கொள்பவர்களுக்கு. இரட்சிப்பின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிபவர்களுக்கு, கிறிஸ்து மூலமாகவே ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்பும் கிடைக்கிறது *(1 கொரி. 1:22-31)*.ஆக. இரட்சிப்பின் சுவிசேஷமாகிய பிரதான தேவஞானத்தைப் பெற்றுக் கொள்ளும் அத்தனை பேருக்கும். யோசேப்பின் ஞானம், சாலமோனின் ஞானம், தானியேலின் ஞானம் எல்லாம் வந்து சேரும். எனவே ஞானம் என்பது இயேசு அல்ல என்றும், ஞானத்தை உருவாக்கியவரே கர்த்தர் என்றும். அதுதான் மனிதனுக்கு மிகமிகத் தேவையென்றும் அறிவோமாக! ஞானக்கர்த்தர் இயேசுவின் சுவிசேஷமே நமக்குள் இருக்கும் போது தேவஞானம் நம்மில் பிரகாசிக்குமன்றோ!

பெந்தகொஸ்தே சபையாரால் மதித்து உபயோகப்படுத்தப்படும் *Dakes Bible* நீதி. 8:30ல் கீழ்க்கண்டவராறு விளக்கப்பட்டிருக்கிறது என்று அறிந்து கொள்ள வேண்டுகிறேன் *There is no proof here of the Diety and eternity of Jesus Christ. Wisdom is simply personified in all this pas- sage (8:1-9:18) and it has no clear reference to Christ" (See column 4 (c) page 646 of O.T)* இதை வாசிக்கும் தேவ பிள்ளையே தவறான சிந்தை கொண்டு, தவறாய் விசுவாசித்து தவறாய் எடுத்துச் சொல்லி கள்ள உபதேசம் வளர விடாமல் தடுப்போம்.

94. இரட்சிப்பின் வழி என்றால் என்ன?

நீங்கள் பசியுடன் இருக்கிறீர்களா? சரீரபிரகாரமான பசி அல்ல, மாறாக உங்கள் வாழ்கையில் ஏதோ ஒரு காரியத்தைக் குறித்ததான ஆவல் இருக்கிறதா? உங்களது ஆழ்மனதில் உங்களை இதுவரையில் திருப்திபடுத்தாத காரியங்கள் ஏதாகிலும் உண்டா? அப்படியானால் இயேசுவே அதற்கு வழி! "ஜீவ அப்பம் நானே என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" என்று யோவான் 6:35ல் இயேசு கூறியிருக்கிறார்.

நீங்கள் குழப்பம் அடைந்திருக்கிறீர்களா? உங்களது வாழ்க்கையின் பாதை அல்லது நோக்கம் தெரியாமல் இருக்கிறீர்களா? யாரோ ஒருவர் எல்லா விளக்குகளையும் அணைத்துவிட்டது போலவும் அதினிமித்தம் நீங்கள் அந்த பொத்தானை கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டதாகவும் தோன்றுகிறதா? அப்படியானால் இயேசுவே அதற்கு வழி! "நான் உலகிற்கு ஒளியாயிருக்கிறேன் என்னை பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியைப் அடைந்திருப்பான்" என்று இயேசு கூறியிருக்கிறார் (யோவான் 8:12).

உங்கள் வாழ்க்கையில் வெளியேவரமுடியாதபடி நீங்கள் அடைபட்டுப்போனதுபோல உணர்கிறீர்களா? அநேக வழிகளை நீங்கள் முயற்சித்தும் அவைகள் யாவும் வெறுமையாகவும் அர்த்தமற்றதாகவும் இருக்கின்றனவா? உங்கள் வாழ்வை ஏதாவது ஒரு வழியில் நிறப்பவேண்டும் என்று எதிர் பார்க்கிறீர்களா? அப்படியானால் இயேசுவே அதற்கு வழி! நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும்சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்" என்று இயேசு அறிவித்தார் (யோவான் 10:9).

மற்றவர்கள் எப்பொழுதும் உங்களை வெறுக்கிறார்களா? உங்களுடைய உறவுகள் ஆழமில்லாமல் வெறுமையாக இருக்கிறதா? கண்டவர்கள் யாவரும் உங்கள்மேல் ஆதிக்கம் செலுத்துகிறதாக தோன்றுகிறதா? அப்படியானால் இயேசுவே அதற்கு வழி! "நானே நல்ல மேய்ப்பன்: நல்லமேய்ப்பன் ஆடுகளுக்குக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்" என்று இயேசு சொன்னார் (யோவான் 10:11, 14, 15).

மரணத்திற்கு பிறகு என்ன சம்பவிக்கும் என ஆச்சரியப்படுகிறீர்களா? வீணான அர்த்தமில்லாத வாழ்க்கை வாழ்கிறதாக எண்ணி உங்கள் வாழ்வைக் குறித்து விரக்தியடைந்து சோர்ந்து போய்விட்டீர்களா? உங்களுடைய வாழ்க்கைக்கு ஏதாவது அர்த்தம் உண்டாயிருக்குமா என்று சந்தேகப்படுகின்றீர்களா? நீங்கள் மரித்த பின்பும் வாழ விரும்புகிறீர்களா? அப்படியானால் இயேசுவே அதற்கு வழி! இயேசு சொன்னார்: "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" (யோவான் 11:25-26).

வழி என்ன? சத்தியம் என்ன? ஜீவன் என்ன? அதற்கு இயேசு: "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:6).

உங்களுக்கு இருக்கிற பசியானது ஆவிக்குரிய பசியாகும். இந்த பசியானது இயேசு ஒருவரால் மட்டுமே போக்கி திருப்தி படுத்தமுடியும். இருளை போக்க வல்ல ஒரே ஒரு நபர் இயேசு மட்டும்தான். திருப்திகரமான வாழ்விற்குள்ள வழி இயேசு ஒருவரே. நீங்கள்

எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிற நண்பனும் மேய்ப்பனும் இயேசுவே. அவரே இம்மைக்கும் மறுமைக்கும் ஜீவனாக இருக்கிறார். இயேசுவே இரட்சிப்பின் வழியாக இருக்கிறார்.

நீங்கள் ஆவிக்குரிய பசியில் இருப்பதற்கும், காரிருளில் அமிழ்ந்து காணாமல் போய்விட்டதாக தோன்றுவதற்கும் மற்றும் உங்களுடைய வாழ்க்கைக்குரிய அர்த்தத்தை கண்டுபிடிக்காமல் போனதற்கும் காரணம் நீங்கள் தேவனை விட்டு பிரிக்கப்பட்டு இருப்பதே ஆகும். நாம் எல்லோரும் பாவம் செய்திருக்கிறோம் என்றும் அதின் விளைவாக நாம் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டோம் என்றும் வேதாகமம் கூறுகிறது (பிரசங்கி 7:20; ரோமர் 3:23). நீங்கள் உங்கள் இருதயம் வெறுமையாக இருப்பதாக உணர்வதற்கான முக்கிய காரணம் உங்கள் வாழ்வில் தேவன் இல்லாததே ஆகும். தேவனோடு ஐக்கியமும் உறவும் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நாம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். பாவத்தின் நிமித்தமாகத்தான் நாம் அந்த உறவில் இருந்து பிரிந்துபோனவர்களாய் இருக்கிறோம். இதோடு அல்லாமல் இம்மையோடு சேர்ந்து மறுமையிலும் நாம் தேவனோடு சேராதபடிக்கு இந்த பாவம் நம்மை நிரந்தரமாக தேவனிடத்திலிருந்து நம்மை பிரிக்கிறதாக இருக்கிறது (ரோமர் 6:23; யோவான் 3:36).

இந்த பிரச்சனையை எப்படி தீர்வை கொண்டுவருவது? இயேசுவே இதற்கு வழியாக இருக்கிறார்! நம்முடைய பாவங்களை இயேசு அவர்மேல் எடுத்துக்கொண்டார் (2 கொரிந்தியர் 5:21). நாம் அடையவேண்டிய தண்டனையை அவர் எடுத்துக்கொண்டு நம்முடைய ஸ்தானத்தில் இயேசு மரித்தார் (ரோமர் 5:8). பாவத்தையும் மரணத்தையும் ஜெயித்தவராய் மூன்று நாளைக்குப்பிறகு இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் (ரோமர் 6:4-5). ஏன் இதை அவர் செய்தார்? இதற்குப்பதில் இயேசுவே கூறியிருக்கிறார்: "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (யோவான் 15:13). நாம்

வாழும்படியாக இயேசு மரித்தார். நமது பாவங்களின் விலைக்கிரயத்தை கொடுத்து தீர்க்கும்படி சிலுவையில் மரித்த இயேசுவின்மேல் நமது விசுவாசத்தை வைப்போமானால், நமது எல்லா பாவங்களும் மன்னிக்கப்பட்டு நாம் சுத்திகரிக்கப்படுவோம். நாம் நமது ஆவிக்குரிய பசி தீர்ந்து திருப்தராக இருப்போம். ஒளிதருகின்ற விளக்குகள் ஒளிரும். நமது வாழ்வை நிரப்பத்தக்கதான பிரவேசனம் கொடுக்கப்பட்டு இருக்கும். நாம் நமது மெய்யான சிநேகிதரும் மேய்ப்பருமானவரை அறிந்திருப்போம். மரணத்திற்கு பிறகு ஒரு வாழ்வு உண்டு என்பதை அறிந்திருப்போம் - அதாவது உயிர்த்தெழுந்து இயேசுவோடு நித்தியத்தில் வாழ்ந்து கொண்டிருப்போம்!

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16).

95. யார் இரட்சிக்கப்பட முடியும்? யாராவது இரட்சிக்கப்பட முடியுமா?

இயேசுவை விசுவாசிக்கிற எவரையும் அவர் இரட்சிப்பார் என்று யோவான் 3:16-ல் இயேசு தெளிவாகப் போதித்தார்: "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." இந்த "எவனோ" என்பது உங்களையும் மற்றும் உலகில் உள்ள ஒவ்வொரு நபரையும் உள்ளடக்கியுள்ளது.

இரட்சிப்பு நம் சொந்த முயற்சிகளை அடிப்படையாக கொண்டிருந்தால், யாரும் இரட்சிக்கப்பட முடியாது என்று வேதாகமம் கூறுகிறது: "எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களானார்கள்" (ரோமர் 3:23). சங்கீதம் 143:2 மேலும் கூறுகிறது: "ஜீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் இல்லை." ரோமர் 3:10, "அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்று உறுதிப்படுத்துகிறது.

நம்மை நாமே இரட்சித்துக்கொள்ள முடியாது. மாறாக, நாம் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது இரட்சிக்கப்படுகிறோம். எபேசியர் 2:8-9 போதிக்கிறது: "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல". தேவனுடைய கிருபையால் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம், கிருபை என்பது வரையறுக்கப்பட்டால் அது நம்மால் சம்பாதிக்க முடியாததாக இருக்கிறது. நாம் இரட்சிப்புக்கு தகுதியற்றவர்கள் அல்ல; நாம் அதை விசுவாசத்தால் பெற்றுக்கொள்கிறோம்.

தேவனுடைய கிருபை எல்லா பாவங்களையும் மூடிமறைக்க போதுமானதாக இருக்கிறது (ரோமர் 5:20). பாவப் பின்னணியில் இருந்து இரட்சிக்கப்பட்ட ஜனங்களின் எண்ணற்ற உதாரணங்களால் வேதாகமம் நிரம்பியிருக்கிறது. பாலியல் ஒழுக்கக்கேடு, விக்கிரகாராதனை, விபச்சாரம், ஓரினச்சேர்க்கை, துரோகம், பேராசை, குடிவெறி போன்ற பல்வேறு பாவம் நிறைந்த சூழ்நிலைகளில் வாழ்ந்து வந்த கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினார். ஆனால் பவுல் அவர்களிடம், "கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்" (1 கொரிந்தியர் 6:9-11) என்று கூறுகிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல் முன்னே கிறிஸ்தவர்களை துன்புறுத்தினவராக இருந்தார், ஸ்தேவான் மரணத்திற்கும் சம்மதித்தவராக இருந்தார் (அப்போஸ்தலர் 8:1), மற்றும் கிறிஸ்தவர்களை கைதுசெய்து சிறையில் தள்ளினார் (அப்போஸ்தலர் 8:3). அவர் பின்வருமாறு எழுதுகிறார்: "முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன்; அப்படியிருந்தும், நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச்செய்தபடியினால் இரக்கம்பெற்றேன். நம்முடைய கர்த்தரின் கிருபை கிறிஸ்து இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தோடும் அன்போடுங்கூட என்னிடத்தில் பரிபூரணமாய்ப் பெருகிற்று. பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்" (1 தீமோத்தேயு 1:13-15).

தேவன் பெரும்பாலும் அவரது நோக்கங்களுக்காக சேவை செய்வதற்காக சாத்தியமற்ற நபர்களை இரட்சிப்பதை தேர்வு செய்கிறார். சிலுவையில் தொங்கி கொண்டிருந்த கள்ளனை

மரிப்பதற்கு ஒரு நிமிடத்திற்கு முன்பாக இரட்சிக்க தெரிந்துகொண்டார் (லூக்கா 23:42-43), திருச்சபையை உபத்திரவப்படுத்தியவர் (பவுல்), அவரை மறுதலித்த மீனவன் (பேதுரு), ஒரு ரோம சிப்பாய் மற்றும் அவரது குடும்பத்தினர் (அப்போஸ்தலர் 10), ஒரு ஓடிப்போன அடிமை (பிலேமோனில் உள்ள ஒநேசிமு), மற்றும் பலர். தேவனையல்லாமல் இரட்சிக்கும் திறன் வேறு எவருக்குமில்லை (காண்க ஏசாயா 50:2). நாம் விசுவாசத்தில் மறுமொழி அளிக்கவேண்டும் மற்றும் இலவச ஈவாகிய நித்திய ஜீவனையும் அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

யார் இரட்சிக்கப்பட முடியும்? ஒன்று மட்டும் நிச்சயம் - இயேசு கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டால், நீங்கள் இரட்சிக்கப்பட முடியும்! நீங்கள் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டிருக்கிறீர்களா இல்லையா என்று உறுதியாக தெரியாவிட்டால், இதுபோன்ற ஒரு ஜெபத்தோடு நீங்கள் மறுமொழி அளிக்கலாம்:

"தேவனே, நான் ஒரு பாவி என்பதை உணருகிறேன், என் சொந்த நற்செயல்களால் ஒருபோதும் பரலோகத்திற்குச் செல்ல முடியாது. என்னுடைய பாவங்களுக்காக மரித்து, மரணத்திலிருந்து உயிரோடெழுந்து எனக்கு நித்திய ஜீவனைக் கொடுத்த தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மேல் இப்பொழுதே எனது விசுவாசத்தை வைக்கிறேன். என்னுடைய பாவங்களை எனக்கு மன்னியும், உமக்காக வாழ எனக்கு உதவி செய்யும். என்னை ஏற்றுக்கொண்டு நித்திய ஜீவனைக் கொடுத்ததற்காக உமக்கு நன்றி."

96. இரட்சிப்பின் திட்டம் என்றால் என்ன?

இரட்சிப்பு என்றால் மீட்பு. எல்லா உலக மதங்களும் நாம் மீட்படைய வேண்டும் என்று கற்பிக்கின்றன, ஆனால் அவைகள் ஒவ்வொன்றும் நமக்கு என்ன தேவை அல்லது எதிலிருந்து மீட்படைய வேண்டும் என்பதைப் பற்றி வேறுபட்ட புரிந்துணர்வு கொண்டுள்ளன, அதாவது நாம் ஏன் மீட்படைய வேண்டும், எப்படி மீட்பு கிடைக்கும் அல்லது அடைய முடியும் போன்ற காரியங்களில் வேறுபடுகின்றன. இருப்பினும், ஒரே ஒரு இரட்சிப்பின் திட்டம் மட்டுமே இருப்பதாக வேதாகமம் தெளிவுபடுத்துகிறது.

இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றி புரிந்து கொள்வதற்கான மிக முக்கியமான விஷயம், அது மனிதனின் திட்டம் அல்ல மாறாக தேவனின் திட்டம் என்பதாகும். மனிதகுலத்தின் இரட்சிப்பின் திட்டம் என்பது மத சடங்குகளை ஆசரிப்பது அல்லது சில கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது அல்லது ஆவிக்குரிய அறிவொளியின் சில நிலைகளை அடைவது போன்றவைகளில் அடங்கியுள்ளது. ஆனால் இவற்றில் ஒன்றும் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின் பாகமாக இல்லை.

தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் - ஏன்

தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில், முதலில் நாம் ஏன் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். வெறுமனே எளிய நிலையில் கூறுவோமானால், நாம் பாவம் செய்ததால் நாம் இரட்சிக்கப்பட வேண்டும். எல்லோரும் பாவம் செய்ததாக வேதாகமம் கூறுகிறது *(பிரசங்கி 7:20; ரோமர் 3:23; 1 யோவான் 1:8)*. பாவமானது தேவனுக்கு விரோதமாக கலகமாக இருக்கிறது. தவறான காரியங்களைச் செய்வதற்கு நாம் அனைவரும் தீவிரமாக செயல்படுகிறோம். பாவம் மற்றவர்களுக்கு தீங்கு

விளைவிக்கும், நம்மையும் சேதப்படுத்துகிறது, மிக முக்கியமாக தேவனை கனவீனப்படுத்துகிறது. தேவன் பரிசுத்தமும் நீதியுமுள்ளவராக இருக்கிறபடியினால், அவர் பாவத்தை தண்டிக்காமல் அப்படியே கண்டுகொள்ளாமல் இருக்கமாட்டார் என்றும் வேதாகமம் போதிக்கிறது. பாவத்திற்கான தண்டனை மரணம் (ரோமர் 6:23) மற்றும் தேவனிடமிருந்து நித்தியமாக பிரிந்திருத்தல் (வெளிப்படுத்துதல் 20:11-15). தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் இல்லாமல், நித்திய மரணமே ஒவ்வொரு மனிதனின் விதியாக இருக்கிறது.

தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் - என்ன

தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில், தேவன் மட்டுமே நம் இரட்சிப்பை நமக்கு வழங்க முடியும். நம்முடைய பாவம் மற்றும் அதன் விளைவுகளின் நிமித்தமாக நம்மை நாமே இரட்சித்துக்கொள்ள முடியாது. தேவன் இயேசு கிறிஸ்துவில் மனிதனாக ஆனார். தேவன் மனித சரீரத்தை எடுத்தார், நம் மத்தியில் வாழ்ந்தார், நமக்கு கற்பித்தார் (யோவான் 1:1, 14). இயேசு பாவமில்லாத வாழ்க்கையை வாழ்ந்தார் (2 கொரிந்தியர் 5:21, எபிரெயர் 4:15, 1 யோவான் 3: 5) மற்றும் அவரையே நமக்காக பரிபூரணமான பலியாக கொடுத்தார் (1 கொரிந்தியர் 15:3; கொலோசெயர் 1:22; எபிரெயர் 10:10). இயேசு கிறிஸ்து தேவனாக இருப்பதால் அவரது மரணத்திற்கு ஒரு நித்திய மற்றும் எல்லையற்ற மதிப்பு இருந்தது. சிலுவையில் இயேசுவின் மரணம் நம்முடைய பாவத்திற்கு பரிபூரணமானதும் முழுமையானதுமான விலைக்கிரயமாக இருந்தது (1 யோவான் 2:2). நாம் அடையவேண்டிய பாவத்தின் விளைவான தண்டனையை அவர் தம்மேல் எடுத்துக்கொண்டார். மரித்தோரிலிருந்து இயேசுவின் உயிர்த்தெழுதல், அவருடைய மரணம் உண்மையிலேயே பாவத்திற்கு பரிபூரணமான பலியாக இருந்தது என்பதை நிரூபித்தது.

தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் - எப்படி

அப்போஸ்தலர் 16:30-ல் அப்போஸ்தலனாகிய பவுலைப் பார்த்து இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்று ஒரு மனிதன் கேட்டான். அதற்கு பவுல் மறுமொழியாக, "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்" (அப்போஸ்தலர் 16:31) என்று கூறினார். தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை பின்பற்றுவதற்கான வழி விசுவாசிப்பதே ஆகும். அதுவே ஒரே ஒரு தேவையாயிருக்கிறது (யோவான் 3:16; எபேசியர் 2:8-9). இயேசு கிறிஸ்துவின் வழியாக நம் இரட்சிப்புக்காக தேவன் அளித்திருக்கிறார். நாம் செய்யவேண்டியதெல்லாம் விசுவாசத்தினாலே இயேசுவை மட்டுமே இரட்சகராக முழுமையாக நம்பி அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும் (யோவான் 14:6; அப்போஸ்தலர் 4:12). இது தான் தேவனுடைய இரட்சிப்பின் திட்டம்.

தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் - நீங்கள் அதைப் பெற்றுக்கொள்வீர்களா?

நீங்கள் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை பின்பற்ற விரும்பினால், இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக விசுவாசிக்க வேண்டும். பாவத்தைத் தழுவி, பாவத்தை நிராகரித்து, இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனைத் தழுவிக்கொள்வதன் மூலம் உங்கள் மனதை மாற்றிக்கொள்ளுங்கள். உங்கள் பாவங்களுக்காக பரிபூரணமான மற்றும் முழுமையாக விலைக்கிரயம் செலுத்துபவராகிய இயேசுவின் பலியில் முழு நம்பிக்கை வைக்கவேண்டும். நீங்கள் இதை செய்தால், நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள் என்று தேவனுடைய வார்த்தை வாக்குறுதி அளிக்கிறது, உங்கள் பாவங்களும் உங்களுக்கு மன்னிக்கப்படும், நீங்கள் பரலோகத்தில் உங்கள் நித்தியத்தைச் செலவிடுவீர்கள். இதையல்லாமல் வேறே முக்கியமான முடிவு என்று

எதுவுமில்லை. உங்கள் விசுவாசத்தை இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின்மேல் இன்றே வையுங்கள்!

97. நான் எப்படி தேவனுடைய பிள்ளையாக முடியும்?

தேவனுடைய பிள்ளையாக மாறுவதற்கு இயேசு கிறிஸ்துவின் மேல் வைக்கிற விசுவாசம் தேவையாயிருக்கிறது. "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" (யோவான் 1:12).

"நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்"

நிக்கொதேமு என்னும் மதத் தலைவன் இயேசுவினிடத்தில் விஜயம் செய்தபோது, இயேசு உடனடியாக அவனுக்கு பரலோகத்திற்கு செல்லுவதற்கான உறுதியளிக்கவில்லை. அதற்கு பதிலாக, அவன் தேவனுடைய ஒரு பிள்ளையாக மாறவேண்டும் என்று கூறி, "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்" என்றார் (யோவான் 3: 3).

முதல் முறையாக ஒரு நபர் பிறக்கிறபோது, அவர் ஏதேன் தோட்டத்தில் ஆதாமின் கீழ்ப்படியாமையிலிருந்து உருவான பாவ சுபாவத்தை அவரிலிருந்து சுதந்தரித்துக்கொள்கிறார். பாவம் எப்படிச் செய்யவேண்டும் என்று ஒரு குழந்தைக்கு ஒருவரும் கற்பிக்க வேண்டியதில்லை. அந்த குழந்தை தன் சொந்த தவறான ஆசைகளை இயல்பாகவே பின்பற்றி, அதன்மூலமாக பொய், திருட்டு, வெறுப்பு போன்ற பாவங்களுக்கு கொண்டுச் செல்லப்படுகிறார். தேவனுடைய பிள்ளையாக இருப்பதற்குப் பதிலாக, அவர் கீழ்ப்படியாமையின் மற்றும் கோபாக்கினையின் பிள்ளையாயிருக்கிறார் (எபேசியர் 2:1-3).

கோபாக்கினையின் பிள்ளைகளாக, நாம் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டு நரகத்தில் பங்கடைய வேண்டும். அதிர்ஷ்டவசமாக, எபேசியர் 2:4-5 கூறுகிறது, "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்." நாம் கிறிஸ்துவுடன் எப்படி உயிரோடு எழுப்பப்படுகிறோம் / மறுபடியும் பிறக்கிறோம் / தேவனுடைய பிள்ளைகளாக உருவாக்கப்பட்டோம்? நாம் விசுவாசத்தினால் இயேசுவைப் பெற்றுக்கொள்ள வேண்டும்!

இயேசுவை ஏற்றுக்கொள்ளுங்கள்

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்." (யோவான் 1:12.). தேவனுடைய பிள்ளையாக எப்படி ஆக்குவது என்று இந்த வசனம் தெளிவாக விளக்குகிறது. நாம் இயேசுவை விசுவாசத்து அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும். இயேசுவைப் பற்றி நாம் என்ன நம்ப வேண்டும்? முதலாவதாக, இயேசுவே மனிதனான வந்த தேவனுடைய நித்திய குமாரன் என்பதை ஒரு தேவனுடைய பிள்ளை அறிந்துகொள்ளவேண்டும். இயேசு ஆதாமின் பாவ சுபாவத்திற்குரியவர் அல்ல, பரிசுத்த ஆவியின் வல்லமையினால் ஒரு கன்னியின் மகனாக பிறந்தார். ஆகையால்தான், இயேசு இரண்டாம் ஆதாம் என்று அழைக்கப்படுகிறார் (1 கொரிந்தியர் 15:22). ஆதாமின் கீழ்ப்படியாமை உலகத்திற்கு பாவத்தின் சாபத்தை கொண்டு வந்தபோது, கிறிஸ்துவின் பரிபூரணமான கீழ்ப்படிதல் ஒரு ஆசீர்வாதத்தை கொண்டுவருகிறதாக இருக்கிறது. நம்முடைய பதில்

மனந்திரும்ப வேண்டும் (பாவத்திலிருந்து திரும்புதல்) மற்றும் கிறிஸ்துவில் மன்னிப்பைத் தேட வேண்டும்.

இரண்டாவதாக, ஒரு தேவனுடைய பிள்ளைக்கு இயேசுவின்மேல் இரட்சகராக விசுவாசம் வைத்து விசுவாசிக்கிறார். தேவனுடைய திட்டம், தம்முடைய பரிபூரணமான குமாரனை சிலுவையில் நாம் அடையவேண்டிய நம்முடைய பாவத்தின் தண்டனையை செலுத்தும்படிக்கு பலியிடுவதாய் இருந்தது: அதாவது அவரது சிலுவை மரணம். பாவத்தின் தண்டனை மற்றும் வல்லமையிலிருந்து அவரை ஏற்றுக்கொள்கிறவர்களை கிறிஸ்துவின் மரணம் விடுவிக்கிறது. அவரது உயிர்த்தெழுதல் நம்மை நீதிமான்களாக்குகிறது (ரோமர் 4:25).

இறுதியாக, தேவனுடைய பிள்ளையானவன் இயேசுவைக் கர்த்தராகப் பின்பற்றுகிறார். பாவம் மற்றும் மரணத்தின் மீது வெற்றிக்கொண்டவராக கிறிஸ்துவை எழுப்பின பிறகு, தேவன் அவருக்கு எல்லா அதிகாரத்தையும் கொடுத்தார் (எபேசியர் 1:20–23). அவரை ஏற்றுக்கொள்கிற அனைவரையும் இயேசு வழிநடத்துகிறார்; அவரை நிராகரிக்கிற அனைவரையும் அவர் நியாயந்தீர்ப்பார் (அப்போஸ்தலர் 10:42). தேவனுடைய கிருபையால், நாம் தேவனுடைய பிள்ளையாக புதிய வாழ்க்கைக்கு மறுபடியும் பிறந்திருக்கிறோம். இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் - வெறுமனே அவரை அறிந்துகொண்டதுமட்டுமின்றி, இரட்சிப்புக்காக அவரையே சார்ந்து, எஜமானனுக்கு கீழ்ப்படிதலைப் போல அவருக்கு கீழ்ப்படிந்து, மற்றும் அவரை மிக உயர்ந்த பொக்கிஷமாக நேசிக்கிறவர்கள் - தேவனுடைய பிள்ளைகளாகிறார்கள்.

ஒரு தேவனுடைய பிள்ளையாகுதல்

நம்முடைய இயற்கையான சரீர பிறப்பில் நமக்கு எந்த பங்கும் இல்லாதது போலவே, நாம் நல்ல காரியங்களைச் செய்வதன் மூலம்

அல்லது நம் சொந்த விசுவாசத்தினால் மன்றாடிக்கேட்பதன் மூலம் நாம் தேவனுடைய குடும்பத்தில் பிறக்கச்செய்ய முடியாது. தேவன் ஒருவரே தமது கிருபையுள்ள சித்தத்தின்படி நமக்கு இரக்கம் காண்பித்து நாம் தேவனுடைய பிள்ளைகளாகும்படிக்கு "அதிகாரம்" கொடுத்தார். "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்" (1 யோவான் 3:1). எனவே, தேவனுடைய பிள்ளைக்கு இதில் பெருமை பாராட்டிக்கொள்வதற்கு ஒன்றுமில்லை; அவருடைய ஒரே மேன்மை கர்த்தருக்குள் இருக்கிறது (எபேசியர் 2: 8-9).

ஒரு குழந்தை தன் பெற்றோரைப் போல் தோற்றமளிக்கத்தக்க நிலையில் வளர்கிறது. அவ்வாறே, தம் பிள்ளைகள் இயேசு கிறிஸ்துவைப் போலவே அதிகமதிகமாய் வளர வேண்டுமென தேவன் விரும்புகிறார். பரலோகத்திலிருக்கிற போதுதான் நாம் பரிபூரணராக இருப்போம் என்கிறபோதிலும், தேவனுடைய பிள்ளை பாவத்திலிருந்து மனந்திரும்பாமல் பாவத்திலே உழன்று இருப்பதற்கு தன்னைப் பழகிக்கொள்ள மாட்டான். "பிள்ளைகளே நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள்; நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராய் இருக்கிறதுபோலத் தானும் நீதியுள்ளவனாய் இருக்கிறான். பாவஞ்செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான். இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்; நீதியைச்செய்யாமலும் தன் சகோதரனில் அன்புகூராமலும் இருக்கிற எவனும் தேவனாலுண்டானவனல்ல" (1 யோவான் 3: 7-10).

தவறு செய்யாதீர்கள் - தேவனுடைய பிள்ளை பாவஞ்செய்வதன் மூலம் "இல்லையென்று" கைவிடப்பட்டுள்ள நிலைக்கு செல்வதில்லை. ஆனால் கிறிஸ்துவையும் அவருடைய வார்த்தையையும் கவனத்தில் கொள்ளாமலேயே தொடர்ந்து பாவத்தை அனுபவிக்கிற ஒருவர் மறுபடியும் பிறக்கவில்லை என்பதை வெளிப்படுத்துகிறார். இப்படிப்பட்ட ஜனங்களைக் குறித்து இயேசு, "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்" என்றார் (யோவான் 8:44). தேவனுடைய பிள்ளை மறுபுறம், பாவம் செய்து அதில் தன்னை திருப்திப்படுத்திக் கொள்ளாமல் பிதாவைக் குறித்தும் அறியவும், அன்பு செலுத்தவும், மற்றும் அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்கிற ஆசைகளை மட்டுமே கொண்டிருப்பான்.

தேவனுடைய பிள்ளையாக இருப்பதன் வெகுமதி அளவில்லாததாகும். தேவனுடைய பிள்ளை என்கிற நிலையில் நாம் அவருடைய குடும்பத்தின் ஒரு அங்கமாக இருக்கிறோம் (திருச்சபை), பரலோகத்தில் ஒரு வீட்டிற்கு வாக்குறுதி அளித்திருக்கிறார், ஜெபத்தில் தேவனை அணுகுவதற்கு உரிமையைக் கொடுத்திருக்கிறார் (எபேசியர் 2:19; 1 பேதுரு 1:3-6; ரோமர் 8:15). தேவனுடைய அழைப்பின் சத்தத்திற்கு செவிகொடுத்து பாவத்தை விட்டு மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசியுங்கள். இன்றே தேவனுடைய பிள்ளையாகுங்கள்!

98. நான் ஒரு இந்து, நான் எதற்காக கிறிஸ்தவனாகவேண்டும்?

இந்துமதத்தையும் கிறிஸ்தவத்தையும் ஒப்பிடுவது சற்று சிரமமானது, அதிலும் குறிப்பாய் மேற்கத்தியர்களுக்கு இந்துமதம் அவர்களுடைய புரிதலுக்கு மிகவும் அப்பாற்பட்டதும் அளந்திடமுடியா ஆழமும், தொன்மையும், விரிவான இறையியல் கோட்பாடுகளை உடைய ஒன்று. உலகத்திலே இதைப் போன்ற பன்முக பரிமாணமும் நுண்ணிய பாரம்பரியமும் கொண்ட வேறொரு மதம் இருக்க வாய்ப்பில்லை. மதங்களின் ஒப்பிலக்கணத்தை படிக்க விரும்பும் கத்துக்குட்டி ஒருவன் இந்து-கிறிஸ்தவ மதங்களின் ஒப்பியலில் இறங்கினால் அது அவனை எளிதில் முழ்கடித்துவிடும். ஆகையால், கேட்கப்படும் கேள்வியை நாம் மிகுந்த தாழ்மையுடனும், கவனத்துடனும் கையாளவேண்டும். மேலும் கொடுக்கப்பட்ட பதிலும் இந்துமதத்தின் ஆழத்தை நன்றாகவோ அல்லது ஓரளவுக்காவது புரிந்துகொண்டோம் என்கின்ற மிதப்பிலும் வழங்கப்படவில்லை. கிறிஸ்தவம் ஏன் மேன்மையானது என்பதனை விளக்கி காட்ட இவ்விரு மதங்களுக்கு இடையே உள்ள ஒரு சில முக்கியமான குறிப்புகளை மட்டும் ஒப்பிடப்போகிறோம்.

முதலாவது, கிறிஸ்தவத்தை அதனுடைய வரலாற்றுப் பின்னணியை கருத்தில்கொண்டு அணுகவேண்டும். தடையயியல், தொல்பொருள் ஆராய்ச்சி, உரை ஒப்பீடு போன்றவைகளை கொண்டு நிரூபிக்கப்பட்ட வரலாற்று கதாபாத்திரங்களையும், சம்பவங்களையும் கொண்டதுவே கிறிஸ்தவம். இந்துமதத்திலும் வரலாற்று குறிப்புகள் உண்டு. ஆனால், அதனுடைய இறையியல், புராணம் மற்றும் வரலாறு ஒன்றோடு ஒன்று பின்னி பிசைந்திருப்பதினால் கதை எங்கே முடிகிறது, எங்கே ஆரம்பிக்கிறது என்பதை வகையறுப்பது மிகவும் கடினம். தெய்வங்கள் மற்றும் அவர்களுடைய ஆளுமையை விளக்கக்கூடிய நெடிய

கட்டுக்கதைகள் கொண்ட புராணங்கள் இந்துமதத்தில் உண்டு என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொள்கின்றனர். மேலும் வரலாற்றுத் தொடர்பான தெளிவின்மையின் காரணமாக இந்துமதம் நெகிழ்வுத்தன்மை கொண்டதும் எளிதில் மற்றவைகளோடு சமரசமாகக்கூடியதாயும் உள்ளது. ஆகவே, சரியான வரலாற்று பின்னணி இல்லாத ஒரு மதத்தை நாம் சோதித்து பார்க்க இயலாது. அதனால் அதை நாம் பொய்யென்று தீர்க்காவிட்டாலும் அதனை சரிப்பார்க்கவும் இயலாது என்பதை புரிந்துகொள்ளவேண்டும். மாறாக, கிறிஸ்தவத்தின் இறையியலை யூதர்களின் எழுத்தப்பட்ட வரலாறும், கிறிஸ்தவ பாரம்பரிய பதிவுகளும் உறுதிசெய்கின்றது. ஆதாம் மற்றும் ஏவாள் இல்லாமல் இருந்திருப்பார்களானால், எகிப்திலிருந்து இஸ்ரவேல் மக்கள் வெளியேறாமல் போயிருந்தால், யோனா ஒரு புனைக்கப்பட்ட கதாபாத்திரமாய் இருந்திருந்தால் அல்லது இயேசு பூமியில் நடக்காமல் போயிருந்தால் ஒட்டுமொத்த கிறிஸ்தவமதத்தின் நம்பிக்கையும் இந்த குறிப்புகளின் அடிப்படையில் தவிடுபொடியாயிருக்கும். கிறிஸ்தவத்தை பொறுத்தவரையில் தவறான வரலாறு ஓட்டையான இறையியலுக்கு சமம். வரலாற்றுடன் வேரூன்றியது கிறிஸ்தவத்திற்கு பெலவீனமாய் தோன்றினாலும், கிறிஸ்தவ பாரம்பரியம் வரலாற்றினால் சோதிக்கப்பட்டு உறுதிசெய்யப்படும் போது அப்பெலவீனமே பெலமாய் மாறுகிறது.

இரண்டாவது, கிறிஸ்தவம் மற்றும் இந்துமதம் இரண்டிலும் முக்கியமான வரலாற்று புருஷர்கள் இடம்பெற்றிருந்தாலும், இயேசு ஒருவரே மரித்தோரிலிருந்து சரீரப்பிரகாரமாய் உயிர்த்தெழுந்தார் என்று குறிப்பிடப்படுகிறார். வரலாற்றில் அநேகர் ஞானபோதகர்களாய் இருந்துள்ளனர் அல்லது மத இயக்கங்களை நிறுவியுள்ளனர். இந்துமதத்திலேயும் இப்படிப்பட்ட ஞானபோதகர்களும் உலகத்தலைவர்களும் உண்டு. ஆனாலும் இயேசு அவர்களுக்கு அப்பாற்ப்பட்டவர். ஒரு தெய்வீக வல்லமையின் உதவியன்றி அவருடைய ஆவிக்குரிய போதனைகளை நம்மால்

பரிசோதிக்க இயலாது: தன்னைப் பற்றிய தீர்க்கத்தரிசனத்தை உரைத்து அதனை தன்னிலே நிறைவேற்றினார் (மத்தேயு 16:21, 20:18-19, மாற்கு 8:31, லூக்கா 9:22, யோவான் 20:21, 1 கொரிந்தியர் 15)

அதுமட்டுமல்ல, உயிர்த்தெழுதலைப் பற்றிய கிறிஸ்தவ உபதேசம் இந்துமதத்தின் மறுஜென்ம நம்பிக்கையிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. இந்த இரண்டு கருத்துகளும் ஒன்றன்று. வரலாறு மற்றும் ஆதாரத்தின் அடிப்படையில் 'உயிர்த்தெழுதலை' மட்டுமே நாம் திட்டமாய் உறுதிசெய்யமுடியும். குறிப்பாக இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மட்டுமே சமுதாய அறிஞர்கள் மற்றும் நன்னெறி போதகர்கள் என்ற இரு சாராரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாய் உள்ளது. அதன் சரிபார்ப்பு இந்து மறுஜென்ம கொள்கைக்கு எவ்விதத்திலும் ஒத்ததாயில்லை. கீழ்காணும் வேறுபாடுகளை கவனியுங்கள்:

உயிர்த்தெழுதலில் ஒரு மரணம், ஒரு வாழ்க்கை, ஒரு சாவுக்கேதுவான சரீரம் மற்றும் ஒரு புதிய சாவுக்கேதுவல்லாத மகிமையின் சரீரம். உயிர்த்தெழுதல் தெய்வீக செயல்பாட்டினால் நடக்கிறதும், ஒரே தேவனை சார்ந்ததும், பாவத்திலிருந்து விடுவிக்கக்கூடியதும் மற்றும் கடைசி காலத்தில் மட்டுமே நடக்கக்கூடியதாயும் உள்ளது. மாறாக மறுஜென்மம் அல்லது மறுபிறவி கொள்கை என்பது பலமுறை மரிப்பதும், பலமுறை பிறப்பதும், பற்பலமுறை சாவுக்கேதுவான சரீரத்தை பெற்றுக்கொள்வதும், சாவுக்கேதுவல்லாத சரீரம் என்பதின் இல்லாமையையும் காண்பிக்கிறது. அதோடுகூட, மறுஜென்மம் இயற்கை விதியினாலும், அனைத்து இறைக்கொள்கையின் (எல்லாம் தெய்வம்) அடிப்படையிலும், கர்ம வினையை சார்ந்ததும், நித்தமும் இயங்கிக்கொண்டே இருக்கின்ற ஒன்றாகவும் உள்ளது. ஆனாலும், வேறுபாடுகளை மட்டும் பட்டியலிட்டு இவ்விரண்டு கொள்கைகளின் உண்மையை நாம் நிருபிக்கமுடியாது. ஆகவே, வரலாற்று பிரகாரமாக உயிர்த்தெழுதலை நிரூபிக்கக்கூடுமானால், மரணத்திற்கு அப்பால்

சம்பவிக்கும் இவ்விரண்டு தெரிந்தெடுத்தல்களையும் நாம் வேறுபடுத்தும்போது உறுதிசெய்யப்பட்டது உறுதிசெய்யமுடியாததிலிருந்து ஒரு படி உயர்ந்து நிற்கிறது. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலும், உயிர்த்தெழுதலைப் பற்றிய விளக்கமான கிறிஸ்தவ உபதேசமும் நாம் கருத்தாய் கவனிக்கவேண்டியவைகள்.

மூன்றாவது, கிறிஸ்தவ மறைநூல்கள் வரலாற்றுப்பிரகாரமாய் தலைசிறந்ததும், கவனிக்கூடியவைகளாயும் உள்ளன. பற்பல பரிசோதனைகளில் கிறிஸ்தவ வேதாகமம் இந்து வேதங்கள் மற்றும் அனைந்து பண்டைய மதஇலக்கியங்களை காட்டிலும் மேலோங்கி நிற்கிறது. எல்லா பண்டைய மத இலக்கியங்களிலும் கிறிஸ்தவ வேதாகமம் மட்டுமே வரலாற்றுப் பிரகாரமாய் மிக அதிக அளவில் நிருபிக்ககூடிய ஒன்றாய் இருப்பதால், வேதாகமத்தை சந்தேகிப்பது வரலற்றை சந்தேகிப்பதாகிவிடும். எபிரேய வேதாகமமான பழைய ஏற்பாட்டை விட கூடுதலாய் நிருபணம் பண்ணக்கூடிய புத்தகம் ஒன்று இருக்குமானல் அது புதிய ஏற்பாடு மட்டுமே. கீழே குறிப்பிட்டுள்ளவைகளை கவனியுங்கள்:

1)மற்றெந்த பண்டைய மதநூல்களைவிட புதிய ஏற்பாட்டுக்கு கூடுதலான எழுத்துபிரதிகள் காணப்படுகின்றன - 5000 பண்டைய கிரேக்க எழுத்துப்பிரதிகள், மொத்தமாக எல்லா மொழிகளிலும் 24,000 எழுத்துப்பிரதிகள். ஏராளமான கைப்பிரதிகள் நம்மிடம் காணப்படுவது ஆராய்ச்சி செய்வதற்கான நல்லதொரு அடித்தளத்தை அமைத்து தருகின்றது. அதனால் இதிலே உள்ள வேதபகுதிகளை ஒன்றோடொன்று பரிசோதித்து மூலமொழியில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றது என்பதனை நாம் அடையாளம் கண்டுகொள்ளலாம்.

2) எந்தவொரு பண்டைய மதம்சார்ந்த ஆவணத்தை விட புதிய ஏற்பாட்டு எழுத்துப்பிரதிகள் அவைகள் படைக்கப்பட்ட காலத்திற்கு

மிக சமீபத்தில் எழுதப்பட்டவைகளாய் உள்ளன. எல்லா மூலப்படைப்புகளும் சமகாலத்தில் வாழ்ந்தவர்களுடைய (கண்களால் கண்ட சாட்சிகள்) காலத்தில், கி.பி. 1-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை .மற்றும் நம்மிடம் கி.பி.125-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட கையெழுத்துப் பிரதியும் உள்ளது. கி.பி. 200-ஆம் ஆண்டில் முழுபிரதிகளும், கி.பி.250-ஆவது ஆண்டில் முழுமையான புதிய ஏற்பாட்டும் எழுத்தப்பட்டிருக்கிறது. சம்பவங்களை கண்களால் கண்ட மக்களின் காலத்திலேயே புதிய ஏற்பாட்டின் எல்லா புத்தகங்களும் எழுதப்பட்டுள்ளதால், கட்டுகதைகள், புராணங்கள் போன்றவைகளுக்குள் போக அவரகளுக்கு நேரம் இல்லாதிருந்திருக்கும். அதுமட்டுமன்றி, அப்போதிருந்த சபை மக்கள் சம்பவங்களை நேரடியாக கண்டவர்களாகையால் , உண்மையோடு இதை எளிதில் ஒப்பிட்டு பார்க்கக்கூடியவர்களாயும் இருந்தார்கள்.

3) வேறெந்த பண்டைய ஆவணங்களைக் காட்டிலும் புதிய ஏற்பாடு ஆவணங்கள் மிகவும் துல்லியமானவைகள். "ஹானஸ்ட் டு காட்" (தேவனுக்கு உண்மை) எனும் நூலில் ஜான்.R.ராபின்சன் என்பவர் புதிய ஏற்பாடு ஆவணங்கள் அனைத்தும் 99.9% துல்லியமானவை என்று குறிப்பிடுகின்றார். கிரேக்க புதிய ஏற்பாட்டின் வல்லுனராய் திகழ்ந்த ப்ரூஸ் மெட்ஸ்கெர் சற்றே கண்ணியமாய் 99.5% என்று குறிப்பிடுகின்றார்.

4) எல்லாம் தெய்வக்கொள்கை மற்றும் பலதெய்வக்கொள்கை போன்றவைகளை விட கிறிஸ்தவத்தின் ஒருதெய்வ கொள்கையில் மட்டுமே சாதகமான பல்வேறு அமசங்கள் காணப்படுகிறது. இந்துமதத்தை வெறுமனே எல்லாம் தெய்வக்கொள்கை ("எல்லாம் தெய்வம்"} அல்லது பலதெய்வக்கொள்கை ("பல தெய்வங்கள்") உடையவர்கள் என்று வகையறுக்கமுடியாது.. இந்துமதத்தில் எந்த பிரிவுடன் ஒருவர் தன்னை அடையாளம் காட்டுகிறாரோ அதன் அடிப்படையில் ஒருவர் எல்லாம் தெய்வக்கொள்கை

உடையவராகவோ, பலதெய்வக்கொள்கை கொண்டவராகவோ, எல்லாம் ஒன்று ("எல்லாமே ஒன்று") அல்லது ஒரே தெய்வம் போன்ற பல்வேறு தெரிந்தெடுத்தல்களை பின்பற்றுபவராய் இருப்பார். ஆனாலும் இந்துமதத்தின் இரண்டு வலுவான நீரோடைகள் என்று நாம் பிரித்தால், பலதெய்வக்கொள்கை மற்றும் எல்லாம் தெயவக்கொள்கை என்று அதனை இரண்டாக பிரிக்கலாம். கிறிஸ்தவத்தின் ஒருதெய்வகொள்கையை பொறுத்தவரையில் இந்த இரண்டைக் காட்டிலும் தெளிவான சாதக அம்சங்கள் காணப்படுகின்றது. இடநெருக்கடியை கருத்தில்கொண்டு இந்த மூன்று உலகப்பார்வைகளும் 'வாழ்வியல் நீதிநெறிகள்" என்பதன் அடிப்படையிலே ஒப்பிடப்படுகிறது.

பலதெய்வக் கோட்பாடு மற்றும் எல்லாம்தெய்வக் கோட்பாடு, இவ்விரண்டின் நீதிநெறி அடிப்படையும் கேள்விக்குறியவைகள். பலதெய்வக்கோட்பாட்டின்படி ஒன்றுக்கும் மேற்பட்ட தெய்வங்கள் உண்டெனில் நாம் பின்பற்றக்கூடிய உயரிய நெறிமுறைகளை கொண்ட தெய்வம் எது? பற்பல தெய்வங்கள் உண்டெனில், நீதிநெறிகளின் காரியத்தில் ஒன்று அவர்களுக்கும் வேறுபாடில்லாமல் இருக்கவேண்டும், அல்லது வேறுபாடு காணப்படவேண்டும். ஒருவேளை அப்படிப்பட்ட ஒப்பீடே இல்லை என்றால் இவர்கள் கூறும் நீதிநெறிகள் ஆதாரமற்றதாகிவிடும். இந்த நிலைபாட்டின் பெலவீனம் தானாகவே வெளியாகிறது. நீதிநெறிகளில் வித்தியாசங்கள், வேறுபாடுகள் இல்லையென்றால், எந்த கோட்பாட்டில் அவர்கள் ஒத்துப்போகிறார்கள். அப்படி அவர்களை வரிசைப்படுத்தும் தார்ப்பரியம் தெய்வங்களை காட்டிலும் பெரியவைகளாய் மாறிவிடும். இந்த தெய்வங்களும் வேறொரு அதிகாரத்தின்கீழ் இருந்து அதற்கு பதில்சொல்லவேண்டியவைகளாய் இருப்பதால், இவைகள் எல்லாவற்றிற்கும் மேலானவர்கள் என்றும் நாம் எடுக்கமுடியாது. அப்படியானால், நாம் பின்பற்றுவுதற்கு இதைவிட மேன்மையான வழி ஒன்றுண்டு என்பது தெளிவாகிறது. இந்த ஒரு உண்மையினால்

பலதெய்வக் கோட்பாட்டை வெறுமையானது என்று நாம் சொல்லாவிடினும் அது ஆழமற்றது என்பதை மறுக்கமுடியாது, தெய்வங்களுக்கு இடையே சரி தவறு என்பவைகளைக் குறித்த மதிப்பீடுகளில் வேறுபாடு காணப்படுமானால், ஒரு தெய்வத்திற்கு கீழ்ப்படிவது இன்னொரு தெய்வத்திற்கு கீழ்ப்படியாதது போல் ஆகிவிடும், அதற்கான தண்டனையையும் ஏறகவேண்டிவரும். நீதிநெறிகள் அந்தந்த தெய்வங்கள் சம்பந்தபட்ட ஒன்று. ஒருவருக்கு 'நன்மையாய்' படுவது எல்லோருக்கும் எல்லாவிதத்திலும் நன்மை என்றே பொருள்படாது, உதாரணத்திற்கு, காளி என்கின்ற தெய்வத்திற்கு தங்களுடைய குழந்தையை பலியாக கொடுப்பது இந்துமதத்தின் ஒரு பிரிவினரால் பாரட்டக்கூடியதாய் இருக்கும், ஆனால் அதுவே மற்ற பிரிவனருக்கு கண்டிக்கத்தக்கதாகவும் அமையும். ஆனால், நிச்சயமாகவே, குழந்தைகளை பலி கொடுப்பது, எவ்வித்தத்திலும் ஏற்கமுடியாத ஒன்று என்பதில் ஐயமில்லை. ஒரு சில காரியங்கள், பின்னணி, பாராம்பரியம் என்று எதுவாக இருந்தாலும், காரணரீதியிலும் தோற்றத்தின் படியேயும் ஒன்று சரி அல்லது தவறு என்று இருக்கவேண்டும்.

பல்தெய்வக்கொள்கையுடன் ஒப்பிட்டு பார்க்கையில் எல்லாம் தெய்வக்கொள்கை எவ்விதத்திலும் கூடுதல் சிறப்புமிக்கதன்று. ஏனெனில்,, நன்மை அல்லது தீமை என்று வகையறுக்கமுடியாத ஒரே பொருள் - ஒரே தெய்வீக யதார்த்தம் - உள்ளது என்பதே இதன் வாதம். 'நன்மை' மற்றும் 'தீமை' எனும் இரண்டு பிரிவுகள் ஒன்று மற்றதுடன் வேறுபட்டிருக்கையில், வகைபிரிக்கமுடியாத ஒரே நம்பிக்கை என்று அதை நாம் எடுக்கமுடியாது. சொல்லப்போனால், பல்தெய்வக்கொளைகையில் "நன்மை" "தீமை"என்கின்ற நீதிநெறி சார்ந்த வேறுபாடுகள் . நன்மையும் தீமையும் பிரிக்கமுடியாத ஒரே யதார்த்தத்தில் கலந்துவிடுகிறது. அப்படியே, "நன்மை", "தீமை" எனும் பிரிவினைகளை நாம் உண்டாக்கினாலும், 'கர்மா' என்று அறியப்படும் முன்வினைப் பயன் அந்த நிதிநெறி பிரிவினைகளை

வெறுமையாக்கிவிடும். இயற்கையில் உள்ள பூவிஈர்ப்பு அல்லது அசைவற்றத் தன்மை போன்றே 'கர்மா' என்பதும் 'ஆட்சார்பற்ற' தத்துவமாய் உள்ளது. பாவியான ஒரு ஆத்துமாவின் மேல் கர்மவினையின் பலன் வரும்போது, தெய்வீக கண்காணிப்பு நியாயத்தீர்ப்பை கொண்டுவருவதில்லை, மாறாக, அது இயற்க்கையின் 'ஆட்சார்பற்ற' எதிர்விளைவாய் அமைகிறது. ஆனால் நீதிநெறி ஒழுக்கம் ஒரு தனிநபரைச் சார்ந்தது, கர்மவினையோ தனிநபர் சாராதது. உதாரணமாக, ஒருவரை அடிக்க பயன்படுத்தப்படும் பிரம்பை நாம் குற்றஞ்சாட்டுவதில்லை . தனிப்பட்டவகையில் அந்த பிரம்பு நீதிநெறிகளையோ கடமையுணர்வையோ அறியாத ஒரு பொருள். மாறாக, அந்தப் பிரம்பை தவறாக கையாண்ட நபரைத் தான் நாம் குற்றஞ்சாட்டுகிறோம். அந்த மனிதருக்கு 'நீதிநெறிகளும், கடமையுணர்வும்' உண்டு. அப்படியே கர்மவினை வெறுமனே 'ஆட்சார்பற்ற' தன்மை கொண்டதானால் அது 'நீதிநெறிகளின்' அடிப்படையில் ஒழுக்கமில்லாதது. ஆகவே, நெறிமுறைகளை ஓப்பிடுவதற்கு போதுமான அடிப்படை காணப்படவில்லை.

ஆனாலும், கிறிஸ்தவத்தின் ஒரேதெய்வக்கொள்கையானது தேவனுடைய தன்மை மற்றும் குணாதிசயத்தின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ளது. தேவனுடைய குணாதிசயம் நல்லதாகவே இருப்பதால் அவரை சார்ந்த காரியங்களும், அவருடைய சித்தமும் 'நல்லதாகவே' இருக்கும். தேவனை விட்டு விலகியிருப்பது அல்லது தேவனுடைய சித்தத்தை சாராமல் இருப்பது 'தீமையாகவே' இருக்கும். ஆகையால், இந்த ஒரே தேவன் நீதிநெறிகளுக்கெல்லாம் அடிப்படையாய் இருப்பதால், இவர் தனிநபர் ஒழுக்கத்தின் காரணகர்த்தாவும் நன்மை தீமை பற்றிய அறிவாற்றலின் ஆதாரமாகவும் விளங்குகிறார்.

ஐந்தாவது, "உன்னுடைய பாவத்தை குறித்து என்ன செய்யப் போகிறாய்?" என்ற கேள்விக்கான விடையையும் நாம் கண்டுபிடிக்கவேண்டும். இந்தப் பிரச்சனைக்கு கிறிஸ்தவத்திலேதான்

வலுவான பதில் காணப்படுகிறது. புத்தமதத்தை போன்றே, இந்துமதத்திலும் பாவத்தைக் குறித்து இரண்டுவிதமான எண்ணங்கள் உண்டு. சிலசமயங்களில் பாவம் அறியாமை என்றும் புரிந்துகொள்ளப்படுகிறது. இந்துமத விளக்கத்தின்படி ஒருவர் உண்மை நிலையை பார்க்காமலோ ,புரிந்துகொள்ளாமலோ இருப்பதும் பாவம் என்று அறியப்படுகிறது. அதே வேளையில், 'பாவம்' என்றால் ஒழுக்கநெறி பிழை என்கின்ற தார்ப்பரியமும் உண்டு. வேண்டுமென்றே தீமையை விளைவிப்பது, ஆன்மிக அல்லது இயற்கை விதியை மீறுவது அல்லது தவறான காரியங்களை விரும்புவது, இவைகளெல்லாம் பாவம் என்று அறியப்படுகிறது. ஆனாலும், பாவத்தை பற்றிய ஒழுக்கநெறி சார்ந்த விளக்கம் ஒழுக்கநெறி பிழையை சுட்டிக்காட்டுவதால் ஒரு உண்மையான பரிகாரம் அவசியமாகிறது. எங்கிருந்து பரிகாரம் வரும்? கர்மத்தின் அடிப்படையிலான கொள்கைகளை கடைபிடிப்பதால் பரிகாரம் உண்டாகுமா? கர்மம் ஆட்சார்பற்றதும் ஒழுக்கநெறிக்கு அப்பாற்பட்டதாயும் உள்ளது. நற்காரியங்களை செய்து ஒருவேளை தராசில் சமநிலையை கொண்டுவரலாம், ஆனால் ஒட்டுமொத்தமாக பாவத்தை அகற்றமுடியாது. கர்மம் அல்லது முன்வினை கொள்கையானது ஒழுக்கப்பிழை நீதிநெறியின் அடிப்படையில் எந்த சூழமைவில் நிகழ்கின்றது என்பதனை தெளிவுப்படுத்த தவறுகிறது. உதாரணத்திற்கு, தனிமையில் பாவம் செய்யும்பொழுது நாம் யாரை காயப்படுத்துகிறோம்? அதனால் பாதிக்கப்படுவது யார்? கர்மம் ஆட்சார்பற்றதாய் இருப்பதால் எதை குறித்தும் அது கவலைப்படுவதில்லை. உதாரணத்திற்கு, ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் மகனை கொலைசெய்கிறார் என்று வைத்துக்கொள்வோம். பாதிக்கப்பட்ட மனிதருக்கு இவர் பணத்தையோ, சொத்தையோ, அல்லது தன்னுடைய சொந்த மகனையோ கொடுக்க முன்வரலாம். ஆனால், செய்த கொலையை திருப்பமுடியாதே. ஏற்பேர்ப்பட்ட நிவாரணமும் அந்த பாவத்தை ஈடுசெய்ய முடியாது. சிவன் அல்லது விஷ்ணுவை பூஜிப்பதினால் அல்லது வேண்டுவதினால் பரிகாரம்

கிடைக்குமா? அந்த தெய்வங்கள் ஒருவேளை மன்னிப்பை அருளினாலும், அந்தப் பாவத்திற்கான கடன் செலுத்தப்படாமல் இருக்குமே. அது ஒரு பெரிய விஷயம் இல்லை என்று கருதி அவர்களுடைய தெய்வங்கள் அந்தப் பாவத்தை மன்னித்து மோட்சக் கதவுகளை அவர்களுக்காக திறந்துவைக்கலாம்.

ஆனால் கிறிஸ்தவத்தில் பாவம் என்பது தேவன் என்கின்ற நபருக்கு விரோதமாக இழைக்கப்படும் முதலும் கடைசியுமான குற்றம் என்று அறியப்படுகிறது. ஆதாம் காலத்திலிருந்தே மனிதர்கள் பாவப் பிறவிகளாய் இருந்துள்ளனர். பாவம் யதார்த்தமானது, மனிதனுக்கும், தேவனுக்குமிடையே பெரிய இடைவெளியை உண்டாக்குகின்றது. பாவம் நியாயத்தை வேண்டுகிறது. அதே வேளையில் நாம் சரிசமமான அல்லது கூடுதலான நற்பணிகளை செய்து அதனை ஈடுகட்ட முடியாது.

ஒருவருடைய நற்பணிகள் அவருடைய தீயசெயல்களைவிட பத்து மடங்கு கூடுதலாய் இருந்தாலும், அந்த மனிதனுடைய மனசாட்சியில் இன்னும் தீமை குடிகொண்டிருக்கும். அப்படியானால், எஞ்சியுள்ள தீயசெயல்கள் என்னவாகும்? அது ஒன்றும் பெரிய விஷயமில்லை என்று கருதி அவைகள் அப்படியே மன்னிக்கப்படுமா? மோட்சத்தை அனுபவிக்கும் பாக்கியம் அவர்களுக்கு கிடைக்குமா? இல்லை யாருக்கும் எந்த பிரச்சனையும் இல்லாததால் இவைகள் வெறும் மாயையா? இதிலே எந்த ஒரு தெரிந்தெடுத்தலும் சரியானதன்று. மாயையைப் பற்றி பார்க்கும்போது, பாவம் மிகவும் யதார்த்தமான ஒன்றாய் நமக்கு காணப்படுவதால் அதனை மாயை என்று எளிதில் தள்ளிவடமுடியாது. பாவசுபாவத்தைப் பற்றி கவனிக்கும்போது, நேர்மையாக நாம் நம்மை ஆராய்ந்திட்டால் நாமெல்லாரும் பாவம் செய்துள்ளோம் என்பதை அறிந்துகொள்வோம். மன்னிப்பைக் குறித்து கவனிக்கும்போது, எந்தவொரு விலைக்கிரயமுமின்றி பாவத்தை அப்படியே மன்னிப்பது பாவத்தை ஒரு பொருட்டென்று கருதாதது போலாகிவிடும். அது தவறு என்று நாம் அறிந்திருக்கிறோம். மோட்சத்தை பற்றிய விஷயத்தில்,

பாவம் நுழைவதற்கான வாசல் அடைபடும் வரையில் மோட்சம் மோட்சமாகவே இராது. ஆகவே கர்மம் அல்லது முன்வினையின் தராசு நம்மை பாவ இருதயமுள்ளவர்களாயும், சரி மற்றும் தவறு என்பவைகளின் மதிப்பீடுகளை மீறினவர்களாயும் விட்டுவிடுகிறது. கடைசியில், ஒன்று மோட்சம் நம்மை ஏற்றுக்கொள்ளக்கூடது, அப்படியும் உள்ளே வருவதற்கு அது இடங்கொடுத்தாலும் அது ஒரு பூரணமான இடமாய் அமையாது.

கிறிஸ்தவத்திலோ, எல்லா பாவங்களுக்கும் தண்டனை கொடுக்கப்பட்டுவிட்டது. அது எப்படியெனில், சிலுவையில் தன்னை பலியாய் கொடுத்த கிறிஸ்து நம்முடைய ஒட்டுமொத்த பாவத்தின் தண்டனையை தன்மீது ஏற்று அக்கடனைத் தீர்த்தார். தேவன் மனிதனானார், பூரணமான வாழ்க்கையை வாழ்ந்தார், நமக்கு வரவேண்டிய பாவத்தண்டனையை சிலுவை மரணத்தில் அவர் ஏற்றார். நம் சார்பாக, நமக்கு பதிலாக, நம்மை மூடும்படிக்கு, பரிகாரபலியாக அவர் சிலுவையில் அறையப்பட்டார்.

மரணமும் அவரை ஜெயிக்கமுடியாது என்பதனை நிரூபிக்கும் வகையில் அவர் மரணத்திலிருந்து உயிருடன் எழுந்தார். மேலும், நித்திய ஜீவனுக்கேதுவான அதே உயிர்த்தெழுதலை தன்னை தேவனாகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டு அவர்மேல் நம்பிக்கை வைக்கும் ஒவ்வொருவருக்கும் அவர் வாக்களிக்கிறார் *(ரோமர் 3:10, 23, 6:23, 8:12, 10:9-10, எபேசியர் 2:8-9, பிலிப்பியர் 3:21)*

நிறைவாக, கிறிஸ்தவத்தில் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை அறிந்துள்ளோம். ஒரு நொடிப்பொழுது அனுபவத்திலோ, நம்முடைய நற்பணிகளின் கொண்டுவரும் புண்ணியத்திலோ, பக்திமிகு தியானத்திலோ, "இருப்பதாய் நம்புகிறேன்" என்று நம்முடைய விசுவாசத்தை பொய்யான தெய்வத்தின்மீதோ நாம் வைக்கவேண்டிதில்லை. உண்மையானவரும் உயிரோடிருக்கிற தேவனும், வரலாற்றில் வேரூன்றியுள்ள விசுவாசமும், தேவனைக்

குறித்த நிலையான, சோதிக்கத்தக்க வெளிப்பாடும் (வேதவசனம்), நெறிசார்ந்த வாழ்க்கையை பற்றிய இறையியல் அடிப்படையும், மோட்சலோகத்தில் (பரலோகத்தில்) தேவனோடு வாசம்பண்ணக்கூடிய ஒரு நிலையான வசிப்பிடமும் நமக்கு உண்டு.

அப்படியானால், இது உங்களுக்கு என்னவாய் தோன்றுகிறது? இயேசுவே முழுமுதல் சத்தியம், பூரணமான யதார்த்தம்! இயேசுவே நம்முடைய பாவங்களுக்கான பூரணமான பலி. அவருடைய சிநேகிதர்களாகிய நமக்கு தன் ஜீவனையே கொடுத்த இயேசுவை நமது இரட்சகர் என்று விசுவாசித்து, அவர் நமக்கு அருளும் வெகுமதியை (யோவான் 1:12) அப்படியே பெற்றுக்கொள்ளும்போது தேவன் நமக்கு மன்னிப்பையும், இரட்சிப்பையும் அளிக்கிறார்.

உங்களுடைய நம்பிக்கையை இயேசுவின்மேல் வைத்து, உங்களுடைய ஒரே இரட்சகராக அவரை ஏற்றுக்கொள்ளும்போது, பரலோகத்தில் நித்திய மகிழ்ச்சிக்கான முழு நிச்சயத்தை பெறுவீர்கள். தேவன் உங்கள் பாவங்களை மன்னித்து, உங்கள் ஆத்துமாவை சுத்தமாக்கி, உங்கள் ஆவியை புதுப்பித்து இப்பூவுலகில் பரிபூரணமான வாழ்க்கையையும், மறுஉலகில் நித்திய சந்தோஷத்தையும் உங்களுக்கு அருளுவார். இப்பேர்ப்பட்ட விலையேறப்பெற்ற வெகுமதியை நாம் எப்படி புறக்கணிக்கலாம்? தம்மையே பலியாய் கொடுத்து நம்மேல் அன்புவைத்த தேவனுக்கு நாம் எப்படி நம்முடைய முதுகை காட்டலாம்?

ஒரு வேளை, இப்போதும் நீங்கள் நம்புவதை குறித்த ஒரு நிச்சயம் உங்களுக்கு இல்லையெனில், பின்வரும் பிரார்த்தனையை ஏறெடுக்கம்படி உங்களை கேட்டுக்கொள்கிறோம், "தேவனே, உண்மை எதுவோ அதை நான் அறிந்துகொள்ள எனக்கு உதவிடும், தவறானதை வகையறுக்க உதவிடும். இரட்சிக்கப்படுவதற்கான சரியான வழியை தெரிந்தெடுக்க உதவிடும்." அப்படிப்பட்ட பிரார்த்தனையை தேவன் எப்போதும் கனப்படுத்துவார்.

இயேசு கிறிஸ்துவை உங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்ள விரும்பினால், வார்த்தைகளை கொண்டோ உள்ளத்தின் உணர்வுகளைகொண்டோ தேவனிடம் பேசுங்கள். இயேசு கிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பின் வெகுமதியை பெற்றுக்கொள்கிறேன் என்று அவரிடம் சொல்லுங்கள்.

ஒரு பிரார்த்தனையை நீங்கள் ஏறெடுக்க விரும்பினால், இதோ உங்களுக்கான மாதிரி: "தேவனே, நீங்கள் என்மீது காட்டின அன்பிற்காய் நன்றி. எனக்காக உங்களையே பலியாய் தந்தமைக்காய் நன்றி. எனக்கு மன்னிப்பையும் இரட்சிப்பையும் அளித்ததற்காய் நன்றி. இயேசுவின் நாமத்தில் இரட்சிப்பின் வெகுமதியை நான் பெற்றுக்கொள்கிறேன். இயேசுவை என்னுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்கிறேன், ஆமென்!

99. நான் ஒரு முஸ்லீம், கிறிஸ்தவனாக மாறுவதை நான் ஏன் கருத்தில் கொள்ள வேண்டும்?

உண்மைக்கிறிஸ்தவர்கள் ஈசா/இயேசுவைப் பின்பற்றுபவர்கள் ஆவர். குரானில் இயேசுவைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிற படியால், உண்மையான முஸ்லீம்கள் ஈசாவின் போதனைகளைக் கற்று அவற்றிற்கு கீழ்ப்படிய வேண்டும் (சூரா3:48- 49; 5:46). ஈசாவைக் குறித்து குரான் சொல்வது என்ன?

 # அல்லா ஈசாவை அனுப்பி, பரிசுத்த ஆவியினால் அவருக்கு உதவி செய்தார்(சூரா.2:87)

 # ஈசாவை அல்லா உயர்த்தினார் (சூரா 2:253)

 # ஈசா நீதிமானாகவும் மற்றும் பாவமில்லாதவராகவும் இருந்தார்(சூரா 3:46; 6:85; 19:19)

 # ஈசா மரித்ததிலிருந்து உயிரோடு எழுந்தார் (சூரா 19:33ரூ4)

 # ஒரு மதத்தை ஸ்தாபிக்கும்படி ஈசாவுக்கு அல்லா கட்டளையிட்டார் (சூரா 42:13)

 # ஈசா பரலோகத்திற்கு (சொர்க்கத்திற்கு) ஏறிச் சென்றார்(சூரா 4:157ரூ58)

வேதாகமம் - இயேசுவின் வார்த்தை

ஈசாவின் சீடர்களால் இஞ்சிலில்(நற்செய்தி நூல்) அவருடைய போதனைகள் எழுதிவைக்கப் பட்டுள்ளது.ஈசா மற்றும் அவருடைய செய்தியில் நம்பிக்கை வைக்கும்படிக்கு அல்லாவினால் சீடர்கள் ஏவப்பட்டனர் என்று சூரா 5:111 குறிப்பிடுகிறது. அல்லாவின்

உதவியாளர்களாக (சூரா 61:6,14), ஈசாவின் சீடர்கள் அவருடைய போதனைகளை துல்லியமாக பதிவுசெய்திருப்பர்.

தோரா(Torah) மற்றும் இன்ஜிலையும் (Gospels) நிலைநிறுத்தி அவ்விரண்டிற்கும் கீழ்படிய வேண்டுமென்றும் குர்ஆன் முஸ்லீம்களுக்கு போதிக்கிறகிறது (சூரா 5:44ள8). நற்செய்தி நூல்கள் திருத்தப்பட்டிருக்குமானால், முகமதுவுக்கு இந்தப் போதனை வழங்கப்பட்டிருக்காது. ஆகவே, முகமதுவின் காலத்தில் இருந்த நற்செய்தி நூல்களின் பிரதிகள் நம்பத்தக்கவையாகவும் துல்லியமானவையாகவும் இருந்தன. முகமது வாழ்ந்த காலத்துக்கும் 450 ஆண்டுகளுக்கு முந்திய காலத்தில் உள்ள நற்செய்தி நூல் பிரதிகள் உள்ளன. மிகவும் பழமையான பிரதிகள், முகமதுவின் காலத்தில் உள்ள பிரதிகள் மற்றும் முகமதுவின் காலத்துக்கு பிந்தினவையாக குறிக்கப்பட்டிருக்கும் கைப்பிரதிகள் இவற்றை ஒப்பிட்டுப்பார்க்கும் போது , நற்செய்தி நூல்களின் அனைத்துப் பிரதிகளும் இயேசு மற்றும் அவருடைய போதனை குறித்த தங்கள் சாட்சியில் முரñபாடற்றவையாக இருக்கின்றன. நற்செய்தி நூல்கள் திருத்தப்பட்டிருக்கின்றன என்று எந்தச் சான்றும் நிரூபிக்க முடியாது. ஆகவே, இயேசுவின் எல்லா போதனைகளும் வேதாகமத்தில் துல்லியமாக பாதுகாக்கப்பட்டுள்ளன.

இயேசுவின் வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல்

நற்செய்தி நூல்கள் உண்மை என்று அறிந்து கொள்ளுதல் போன்ற காரியங்கள் இயேசுவைக் குறித்து என்ன போதிக்கின்றன? இயேசு தான் கொலை செய்யப்பட்டு, மரித்து பின்பு மரித்தோரிலிருந்து எழும்புவேன் என்று கூறி தனது வாழ்வு நிகழ்வுகளை முன் அறிவித்ததை நற்செய்தி நூல்கள் பதிவுசெய்திருக்கிறது (மத்தேயு 20:19). இயேசு முன் அறிவித்ததைப் போலவே அவை நடந்ததை நற்செய்தி நூல்கள் பதிவுசெய்திருக்கின்றன (மத்தேயு 27- 28; மாற்கு 15,16; லூக்கா 23,24; யோவான் 19- 21)

பாவமில்லாத இயேசு கொல்லப்படுவதற்காக தன்னைத்தான் ஒப்புக்கொள்ள வேண்டும்? நீங்கள் உங்கள் நண்பனுக்காக உயிரைக்கொடுக்கும் அன்பைவிட பெரிய அன்பு வேறு இல்லை என்று இயேசு சொன்னார் (யோவான் 15:13). தனது தீர்க்கதரிசி தவறாக நடத்தப்படுவதற்கும், கொல்லப்படுவதற்கும் தேவன் ஏன் அனுமதித்தார்? நமக்காக தியாக பலியாக இயேசுவை அனுப்புமளவுக்கு அவர் நம்மை அன்புகூர்ந்தார் என்று யோவான் 3:16 சொல்கிறது.

இயேசு நமது பாவங்களுக்காக பலியானார்

இயேசு நமக்காக தன்னுடைய உயிரை ஏன் தியாகம் செய்யவேண்டும்? இது தான் இஸ்லாமிற்கும் கிறிஸ்தவத்திற்கும் இடையே உள்ள மிக முக்கியமான வித்தியாசம் ஆகும். நம்முடைய தீயச் செயல்களை விட நல்ல செயல்கள் அதிகமாக உள்ளனவா இல்லையா என்பதைப்பார்த்து அல்லா நியாயம் தீர்ப்பார் என்று இஸ்லாம் போதிக்கிறது. தீய செயல்களை விட நற்செயல்களைச் அதிகமாக செய்ய வாய்ப்பு உண்டு என்றாலும் கூட, ஒரே ஒரு பாவத்தை செய்தவனைக் கூட பரலோகத்தில் அனுமதிக்க தேவனால் முடியாது. அவர் அவ்வளவு பரிசுத்தமானவராக இருக்கிறார் (யாக்கோபு2:10)பூரணமற்ற எதையும் பரிசுத்த தேவனால் பரலோகத்தில் அனுமதிக்கமுடியாது. நாமெல்லாரும் பாவம் செய்திருக்கிறோம் என்றும் அதனால் நாம் பரலோகத்திற்குள் நுழையமுடியாது என்பதை தேவன் அறிந்திருந்தார். நாம் மன்னிக்கப்படுவதற்கான ஒரே வழி பூரணமான ஒருவர் நமக்குப் பதிலாக மரித்து நமது பாவக்கடன்களை செலுத்தி தீர்ப்பதே என்பதை தேவன் அறிந்த்திருந்தார். தன்னால் மாத்திரமே அப்படிப்பட்ட மாபெரும் கிரயத்தை செலுத்த முடியும் என்பதை தேவன் அறிந்திருந்தார்.

நம்மை மீட்பதற்கான தேவனின் திட்டம்

ஆகவே, தேவன் ஒரு கன்னியிடம் பிறக்கும்படி தமது மகனை அனுப்பினார். தேவன் மரியாளுடன் பெற்றோர்களுக்குரிய உறவு வைத்திருì¸Å¢ø¨Ä. தேவனுடனான அவருடைய உறவு மற்றும் அவருடைய தெய்வீகத்தின் அடிப்படையில், இயேசு தேவகுமாரன் ஆவார்(யோவான் *1:1,14*). தனது பாவமற்ற வாழ்க்கை, பரிபூரண செய்தி, பாவத்துக்காக மரணம் மற்றும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் போன்றவற்றால் இயேசு தன்னை தேவகுமாரன் என்று நிரூபித்தார்.

இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் மரணம் ஆகியவை உங்களுக்கு தரும் செய்தி என்ன? பாவத்திலிருந்து இரட்சிக்கும்படி இயேசுவை தங்கள் இரட்சகராக நம்புபவர்களுக்கு பாவத்திலிருந்து மீட்பை தேவன் அருளுகிறார். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் (தேவன்) பிதாவினிடத்தில் வரான்". என்று இயேசு சொன்னார்.

தேவனிடம் செல்லும் ஒரே வழி நானே என்பதை இயேசு தெளிவாக போதித்தார். இயேசுவின் மூலமாக மட்டுமே நாம் பரலோகம் சென்றடைய முடியும். தேவன் நம் பாவங்களை மன்னித்து, அவருக்காக வாழ உதவி செய்வார். அத்துடன் நித்திய வாழ்வையும் நமக்கு தருவார். இப்படிப்பட்ட விலையேறப்பெற்ற பரிசை நாம் எப்படி வேண்டாமென தள்ளிவிட முடியும்? தம்மைத்தாமே பலியாக ஒப்புக் கொடுக்குமளவுக்கு நம்மை அன்பு செய்த தேவனை எப்படி ஏற்றுக் கொள்ளாதிருக்க முடியும்?

ஒரு கிறிஸ்தவனாக மாறுதல்

சத்தியத்தைக் குறித்த உறுதி இல்லாதவர்களாக நீங்கள் இருந்தால், பின்வரும் ஜெபத்தை தேவனிடம் கூறுங்கள்: "தேவனே, தயவுசெய்து எனக்கு சத்தியத்தை வெளிப்படுத்தும். தவறாக இருப்பதை கண்டுகொண்டு அதை தள்ளிவிட உதவும். இரட்சிப்புக்கான சரியான

வழிக்கு நேராக என்னை நடத்தும்." இப்படிப்பட்ட ஜெபத்திற்கு தேவன் பதில் கொடுப்பார்.

இயேசுவை உங்கள் இரட்சகராக நம்பும்படிக்கும், அவரைப் பின்பற்றவும் தேவன் உங்களை நடத்துவாரெனில், இயேசுவின் மூலமாக வரும் இரட்சிப்பை தேவனிடம் கேளுங்கள்.. இங்கே ஒரு மாதிரி ஜெபம் தரப்பட்டிருக்கிறது. " தேவனே, நான் எனது பாவத்தை நேசிப்பதையும், எனது சொந்தக் கிரியைகளின் மூலம் சொர்க்கத்திற்கு சென்றடைய முயற்சிப்பதையும் விட்டுவிடுகிறேன். எனது பாவங்களுக்காக மரிக்கும்படி இயேசுகிறிஸ்துவை அனுப்பினதற்காகவும், அவரை மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பினதற்காகவும் நன்றி. இயேசுவை நான் எனது சொந்த இரட்சகராக நம்புகிறேன். ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன், என்னை உம்மிடம் ஒப்புக் கொடுக்கிறேன். ஆமென்!"

100. தேவனிடத்தில் நான் எப்படி சரியான நிலையைப் பெறமுடியும்?

தேவனுடன் "சரியான" நிலையைப் பெறுவதற்கு, நாம் முதலில் "தவறு" என்ன என்பதை புரிந்துகொள்ள வேண்டும். இதற்கு பதில் பாவம். "நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை" (சங்கீதம் 14:3). நாம் தேவனுடைய கட்டளைகளுக்கு எதிராக கலகம் செய்தோம்; "நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்தோம்" (ஏசாயா 53:6).

இதில் கெட்ட செய்தி என்னவென்றால், பாவத்தின் தண்டனை மரணம் என்பதுதான். "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்" (எசேக்கியேல் 18:4). இதில் நமக்குள்ள ஒரு நற்செய்தியை என்னவெனில், அன்புள்ள தேவன் நமக்கு இரட்சிப்பை அளிக்க அவர் நம்மைப் பின்தொடர்ந்தார் என்பதுதான். "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" என்று இயேசு தாம் இந்த உலகிற்கு வந்த நோக்கத்தை எடுத்துரைக்கிறார் (லூக்கா 19:10). மேலும் அவர் சிலுவையில் மரித்தபோது "முடிந்தது" என்று சொல்லி இயேசு தாம் எதற்காக இந்த உலகிற்கு வந்தாரோ அதனுடைய நோக்கம் நிறைவேறியாயிற்று என்பதையும் அறிவித்திருக்கிறார் (யோவான் 19:30).

தேவனுடன் சரியான உறவு வைத்திருக்கிறேன் என்னும் காரியம் நீங்கள் உங்கள் பாவத்தை ஒப்புக்கொள்வதில் ஆரம்பிக்கிறது. அடுத்தபடியாக நீங்கள் உங்கள் பாவத்தை மனத்தாழ்மையோடு தேவனிடத்தில் அறிக்கையிடுவதில் அடங்கியிருக்கிறது (ஏசாயா 57:15). "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்" (ரோமர் 10:10).

விசுவாசத்தினால் இந்த மனந்திரும்புதல் வருகிறதாய் இருக்கவேண்டும் - குறிப்பாக இயேசுவின் சிலுவை மரணம் மற்றும் அற்புதமான அவரது உயிர்த்தெழுதல் ஆகியவைகளின் மேலுள்ள விசுவாசம். "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" (ரோமர் 10:9). இன்னும் அநேக வேத பகுதிகள் இந்த விசுவாசத்தின் தேவையைக் குறித்து கூறுகிறது. உதாரணமாக, யோவான் 20:27; அப்போஸ்தலர் 16:31; கலாத்தியர் 2:16; 3:11, 26; மற்றும் எபேசியர் 2: 8.

தேவனோடு சரியான நிலையில் இருக்கிறேன் என்று கூறுகிற காரியம் தேவன் உங்களுக்காக செய்த காரியத்திற்கு உங்களுடைய மறுபடியாக இருக்கிறது. அவர் உங்களுக்காக இரட்சகரை அனுப்பினார், அவர் உங்கள் பாவங்களை உங்களில் இருந்து நீக்கிப்போட சிலுவையில் பலியானார் (யோவான் 1:29). அவர் உங்களுக்கு வாக்குறுதியை அளிக்கிறார்: "கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்" (அப்போஸ்தலர் 2:21).

மனந்திரும்புதலுக்கும் மன்னிப்பை பெற்றதற்கும் ஒரு அழகான உதாரணம், கெட்ட குமாரனின் உவமையாகும் (லூக்கா 15:11-32). இளைய மகன் அவனது தந்தை அவனுக்கு அளித்த பங்கை வெட்கக்கேடான பாவத்தில் வீணடித்தான் (வசனம் 13). அவன் தான் தவறு செய்ததை ஒப்புக்கொண்டபோது, அவன் தன் வீட்டுக்குத் திரும்ப தீர்மானித்தான் (வசனம் 18). அவன் இனி தன் தகப்பனுக்கு ஒரு மகனாக கருதப்பட மாட்டான் எனவும் எண்ணியிருந்தான் (வசனம் 19), ஆனால் அவன் அப்படி எண்ணியது தவறு. காரணம் அவனது தகப்பன் தன் கெட்டுப்போன மகன் திரும்பி வந்ததை கண்டு சந்தோஷப்பட்டதோடு இல்லாமல் அவனை இன்னும் அதிகமாய் நேசித்தார் (வசனம் 20). அந்த மகன் செய்த எல்லா தப்பிதங்களும்

அவனுக்கு மன்னிக்கப்பட்டன, கொண்டாட்டமும் ஏற்பாடானது (வசனம் 24). மன்னிப்பளிக்கும் வாக்குறுதி உட்பட தேவனுடைய எல்லா வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதில் அவர் நல்லவராகவே இருக்கிறார். "நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்" (சங்கீதம் 34:18).

நீங்கள் தேவனோடு சரியான நிலையை வைத்துக்கொள்ள விரும்பினால், நீங்கள் ஜெபிக்க வேண்டிய ஒரு மாதிரி ஜெபம் இதோ. நீங்கள் ஜெபிக்கிற இந்த ஜெபமோ அல்லது இதுபோன்ற மற்ற ஜெபங்களோ உங்களை இரட்சிப்பது இல்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவில் நீங்கள் வைக்கிற நம்பிக்கை மட்டுமே உங்களை உங்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்கும். அவர்மேல் உங்களுக்கு இருக்கிற நம்பிக்கை மற்றும் அவரால் நீங்கள் பெற்றிருக்கிற இரட்சிப்பை வெளிப்படுத்துகிற ஒரு செயல் தான் இந்த ஜெபம். "ஆண்டவரே, நான் உமக்கு விரோதமாக பாவம் செய்திருக்கிறேன் என்றும் அதினிமித்தம் பாவத்திற்கான தண்டனையை அடைவதற்கு பாத்திரமாய் இருக்கிறேன் என்றும் அறிந்திருக்கிறேன். ஆனால் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்து அவரில் நான் மன்னிப்பை பெறத்தக்கதாக நான் அடையவேண்டிய தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டார் எனவும் அறிந்திருக்கிறேன். இரட்சிப்பிற்காக உம்மில் எனது பரிபூரண நமிக்கையை வைக்கிறேன். ஈவாகிய நித்திய ஜீவனுக்காக நீர் காண்பித்திருக்கிற அற்புதமான கிருபைக்காகவும் மன்னிப்பிற்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறேன்! ஆமென்!"

101. கிறிஸ்தவன் என்றால் என்ன?

ஒரு அகராதியில் கிறிஸ்தவன் என்பதற்கு கொடுக்கப்பட்ட விவரணம் மற்றும் அர்த்தம் என்னவெனில், "இயேசுவில் விசுவாசம் வைத்து அவரையே கிறிஸ்துவாக ஏற்றுக்கொள்பவர் அல்லது இயேசுவின் போதனைகளின் அடிப்படையில் இயேசுவை விசுவாசிக்கிற நபர் அல்லது இயேசுவின் போதனைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு மதத்தைப் பின்பற்றுகிறவர்" என்பதாகும். இப்படி பல அகராதிகள் பல நிலைகளில் வேதாகமம் வரையறுத்து கூறுகிறதுபோல அல்லாமல் வித்தியாசமான நிலைகளில் அர்த்தங்களை கொண்டு வருகின்றன. புதிய ஏற்பாட்டில் "கிறிஸ்தவர்கள்" என்கிற வார்த்தை மூன்று முறை பயன்படுத்தப்பட்டுள்ளது (அப்போஸ்தலர் 11:26; 26:28; 1 பேதுரு 4:16). இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றிய சீஷர்கள் முதன்முதலாக அந்தியோகியாவில் தான் "கிறிஸ்தவர்கள்" என்று அழைக்கப்பட்டனர் (அப்போஸ்தலர் 11:26). ஏனென்றால் அவர்களுடைய நடத்தை, செயல்கள், பேச்சு ஆகியவை கிறிஸ்துவைப் போலவே இருந்தன. "கிறிஸ்தவன்" என்கிற வார்த்தையின் எழுத்தியல் பிரகாரமான அர்த்தம் "கிறிஸ்துவை சேர்ந்தவர்கள்" அல்லது "கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள்" என்பதாகும்.

துரதிருஷ்டவசமாக, காலப்போக்கில், "கிறிஸ்தவன்" என்னும் வார்த்தை அதன் முக்கியத்துவத்தை இழந்து விட்டது. உயர்ந்த தார்மீக மதிப்பைக் கொண்டுள்ளவர்கள், மத சம்பந்தப்பட்ட நிலையில் மெய்யாகவே கிறிஸ்துவை பின்பற்றாதவர்கள் கூட இப்படி அழைக்கப்படலாயினர். அநேகர் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்கிறார்கள், காரணம் அவர்கள் கிறிஸ்தவ சபைக்கு போகிறார்கள் அல்லது கிறிஸ்தவ நாடுகளில் வாழ்கிறார்கள். சபைக்கு போகிறதினாலோ அல்லது நல்ல மனிதராக வாழ்கிறதினாலோ ஒருவரை கிறிஸ்தவராக்கிவிடாது. ஒரு கிறிஸ்தவ சபையில்

உறுப்பினராக இருப்பதினால், கூட்டங்களில் தொடர்ந்து கலந்து கொள்ளுதலினால், சபையினுடைய வேலைக்கு கொடுப்பதினால் நீங்கள் கிறிஸ்தவராகி விடமுடியாது.

நாம் செய்யும் நற்செயல்கள் ஒருபோதும் தேவனால் அங்கீகரிக்கப்பட்டு தேவனோடு நாம் ஐக்கியப்பட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட வழி வகுக்காது என வேதாகமம் கூறுகிறது. "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்" (தீத்து 3:5). ஒரு கிறிஸ்தவன் என்பவன் தேவனாலே மறுபடியும் பிறந்தவனாவான் (யோவான் 3:3; யோவான் 3:7; 1 பேதுரு 1:23) மற்றும் இயேசு கிறிஸ்துவில் விசுவாசமும் நம்பிக்கையும் வைத்தவனாவான். "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" (எபேசியர் 2:8).

ஒரு உண்மையான கிறிஸ்தவன் என்பவன், இயேசு கிறிஸ்துவின் ஆள்தன்மை மற்றும் அவரது செயல்களில் முழு விசுவாசம் மற்றும் நம்பிக்கையை வைத்தவனாவான். மேலும், அவரது சிலுவை மரணம் மற்றும் மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்த அவருடைய உயிர்த்தெழுதலிலும் விசுவாசம் வைக்கிரவனாய் இருப்பான். "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" என்று யோவான் 1:12 கூறுகிறது. ஒரு உண்மையான கிறிஸ்தவனின் அடையாளம் என்னவென்றால், அவன் மற்றவர்களை நேசிக்கிறவனாகவும் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிகிறவனாகவும் இருப்பான் (1 யோவான் 2:4, 10). ஒரு உண்மையான கிறிஸ்தவன் மெய்யாகவே தேவனுடைய பிள்ளையாக

இருக்கிறான், தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கமாக இருக்கிறான் மற்றும் இயேசு கிறிஸ்துவில் புதிய ஜீவனை பெற்றவனாகவும் இருக்கிறான்.

102. பாவியின் ஜெபம் என்றால் என்ன?

தான் ஒரு பாவி என்றும் தனக்கு ஒரு இரட்சகர் தேவை என்றும் ஒரு நபர் அறிந்துகொள்ளும்போது, அவர் தேவனிடத்தில் ஏறெடுக்கும் ஜெபம் தான் பாவியின் ஜெபம் என பொதுவாக அழைக்கப்படுகிறது. பாவியின் ஜெபத்தை ஒருவர் வெறுமனே ஜெபிப்பதால் எந்த ஒரு பிரயோஜனமும் இல்லை. ஒரு மெய்யான பாவியின் ஜெபம் என்பது அதை ஏறெடுக்கும் நபர் எந்த அளவிற்கு தன்னுடைய பாவதன்மையையும் இரட்சிப்பின் அவசியத்தையும் அறிந்திருக்கிறார் மற்றும் விசுவாசிக்கிறார் என்பதில் அடங்கியிருக்கிறது.

ஒரு பாவியின் ஜெபத்தில் இருக்கிற முதலாவது அம்சம் என்னவென்றால், நாமெல்லாரும் பாவிகளாக இருக்கிறோம் என்பதைப் பற்றியதான புரிந்து கொள்ளுதல் ஆகும். "அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்று ரோமர் 3:10 எடுத்துரைக்கிறது. நாமெல்லாரும் பாவம் செய்திருக்கிறோம் என்று வேதாகமம் மிகத்தெளிவாக கூறுகிறது. தேவனிடத்திலிருந்து இரக்கம் மற்றும் மன்னிப்பின் தேவையை நாடி நிற்கிற பாவிகளாக நாம் இருக்கிறோம் (தீத்து 3:5-7). நம்முடைய பாவத்தின் நிமித்தம் நாம் நித்திய தண்டனையை அடைய தகுதியுள்ளவர்களாக இருக்கிறோம் (மத்தேயு 25:46). பாவியின் ஜெபம் என்பது தேவனுடைய தண்டனைக்கு பதிலாக அவருடைய கிருபைக்கு வேண்டியுள்ள மனுவாகும். கோபத்திற்கு பதிலாக இரக்கம் காண்பிக்க வேண்டியுள்ள வேண்டுகோளாகும்.

ஒரு பாவியின் ஜெபத்தில் காணப்படுகிற இரண்டாவது முக்கிய அம்சம் என்னவென்றால், நம்முடைய இழந்துபோன மற்றும் பாவ நிலையில் இருந்து நாம் மீண்டுவர தேவன் என்ன காரியம் செய்திருக்கிறார் என்பதைப்பற்றிய அறிவாகும். தேவன், இயேசு கிறிஸ்து என்னும் ஆள்தன்மையில் மாம்சத்தை தரித்து ஒரு மனிதனைப்

போல இப்பூமியில் வெளிப்பட்டார் (யோவான் 1:1,14). தேவனைக்குறித்த சத்தியத்தை போதித்ததோடு மட்டுமல்லாமல் பரிபூரண நிலையில் நீதியோடும் பவமில்லாமலும் இயேசு இப்பூமியில் வாழ்ந்தார் (யோவான் 8:46; 2 கொரிந்தியர் 5:21). பிறகு நாம் நம்முடைய பாவங்களுக்கு அடைய வேண்டிய தண்டனையை இயேசு தம்மேல் எடுத்துக்கொண்டு நம்முடைய ஸ்தானத்தில் சிலுவையில் மரித்தார் (ரோமர் 5:8). இயேசு மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்து பாவம், மரணம் மற்றும் நரகத்தின் மேலுள்ள தமது வெற்றியை நிரூபித்தார் (கோலோசெயர் 2:15; 1 கொரிந்தியர் 15ஆம் அதிகாரம்). இவை எல்லாவற்றின் நிமித்தம், நாம் இயேசு கிறிஸ்துவின் மேல் நமது விசுவாசத்தை வைத்து அவரை முழுமையாக நம்பினால், நாம் நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதோடு பரலோகத்தில் நித்திய வீட்டில் வசிக்கும் வாக்குதத்தத்தையும் அவரிடத்திலிருந்து பெறுவோம். நாம் செய்யவேண்டிய காரியம் என்னவென்றால், நம்முடைய ஸ்தானத்தில் நமக்காக இயேசு மரித்து பிறகு மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தார் என்பதை விசுவாசிக்கவேண்டும் (ரோமர் 10:9-10). கிருபையினாலே மட்டும், விசுவாசத்தைக் கொண்டு மட்டும், இயேசு கிறிஸ்துவில் மட்டும் நாம் இரட்சிக்கப்பட முடியும். "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" என்று எபேசியர் 2:8 கூறுகிறது.

பாவியின் ஜெபத்தை ஏறெடுப்பது என்பது இயேசு கிறிஸ்துவின்மேல் முழுமையாக சார்ந்து அவரையே தன்னம்பிக்கையாக கொண்டு அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டதை தேவனுக்கு முன்பாக எடுத்துறைப்பதாகும். இதிலே இரட்சிப்பை கொண்டு வருகிற "மந்திர வார்த்தைகள்" ஒன்றுமில்லை. இயேசுவின் மரணம் மற்றும் அவரது உயிர்த்தெழுதலில் வைக்கிற விசுவாசம் மட்டுமே ஆகும். இதுவே நம்மை இரட்சிக்கிறதாய் இருக்கிறது. நீங்கள் ஒரு பாவி என்றும் இயேசு கிறிஸ்துவின் மூலமாக

உங்களுக்கு இரட்சிப்பு வேண்டும் என்றும் என்பதை அறிந்தவர்களானால், தேவனிடத்தில் ஏறெடுக்கப்படவேண்டிய ஒரு பாவியின் ஜெபம் இதோ, இதை நீங்கள் தேவனிடத்தில் சொல்லுங்கள்: "ஆண்டவரே நான் ஒரு பாவி என்பதை அறிந்திருக்கிறேன். நான் செய்த பாவத்தின் நிமித்தம் பாவத்திற்கான தண்டனையை நான் அடைய வேண்டும் என்பதையும் அறிந்திருக்கிறேன். ஆனபோதிலும், இயேசு கிறிஸ்துவை எனது இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரில் பரிபூரணமாய் விசுவாசிக்கிறேன். அவருடைய சிலுவை மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் எனக்கு மன்னிப்பை கொண்டுவந்தது என்று முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறேன். நான் இயேசு கிறிஸ்துவை எனது சொந்த கர்த்தராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டு அவரை மட்டும் அவரில் மட்டுமே எனது முழு நம்பிக்கையையும் வைக்கிறேன். என்னை மன்னித்து இரட்சித்ததற்காக உமக்கு நன்றி ஆண்டவரே! ஆமென்!"

103. மன்னிப்பு கிடைத்ததா? தேவனிடமிருந்து நான் எவ்வாறு மன்னிப்பைப் பெறுவது?

"ஆதலால் சகோதரரே, இயேசுவின் மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகிறது" என்று அப்போஸ்தலர் 13:38 எடுத்துரைக்கிறது.

மன்னிப்பு என்றால் என்ன? ஏன் எனக்கு மன்னிப்பு தேவையாயிருக்கிறது?

"மன்னிப்பு" என்னும் சொல்லின் அர்த்தம் கற்பலகையை சுத்தமாக துடைத்தல், மன்னிப்பு, மற்றும் கடனை ரத்து செய்தல் என வருகிறது. நாம் யாருக்கு விரோதமாகவாவது தவறு செய்துவிட்டால், நமக்கு அவரோடு இருக்கிற உறவில் விரிசல் ஏற்பட்டு அதை நாம் இழந்துவிடாதபடிக்கு அல்லது இழந்த உறவை திரும்ப மீட்டு உறவை மேலும் வலுப்படுத்த அவரிடத்தில் மன்னிப்பு கோருகிறோம். அந்த உறவு மீட்கப்பட வேண்டும் என்பதற்காக அவர்களுடைய மன்னிப்பை நாடுகிறோம். மன்னிப்பு வழங்கப்படுவது அதை பெறுகிற மனிதன் தகுதியானவராக இருக்கிறார் என்பதற்காக அல்ல. மன்னிப்பை பெறுவதற்கு ஒருவருவருக்கும் தகுதியில்லை. மன்னிப்பு என்பது ஒரு அன்பின் செயல், இரக்கம் மற்றும் கிருபையாகும். மன்னிப்பு என்பது தனக்கு விரோதமாக எந்த காரியம் செய்யப்பட்டு இருந்தாலும் அதை கணக்கில் கொள்ளாமல் அவருக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என்கிற ஒரு தீர்மானம் ஆகும்.

நம் எல்லோருக்கும் தேவனிடத்திலிருந்து மன்னிப்பு தேவையாய் இருக்கிறது என்று வேதாகம் கூறுகிறது. நாம் எல்லாரும் பாவம் செய்திருக்கிறோம். "ஒரு பாவமும் செய்யாமல், நன்மையையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை" என்று பிரசங்கி 7:20 கூறுகிறது. "நமக்குப் பாவமில்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாய் இருப்போம், சத்தியம் நமக்குள் இராது" என்று 1

யோவான் 1:8 கூறுகிறது. எல்லா பாவமும் முதன்மையான நிலையில் தேவனுக்கு விரோதமான செயலாகும் (சங்கீதம் 51:4). இதன் விளைவாக, நமக்கு தேவனுடைய மன்னிப்பு மாபெரும் அவசியமாயிற்று. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படாவிட்டால், நாம் நமது நித்தியம் முழுவதும் இந்த பாவங்களின் விளைவுகளை அனுபவிக்கிறவர்களாக இருப்போம் (மத்தேயு 25:46, யோவான் 3: 36)
.

மன்னிப்பு - நான் எப்படிப் பெற்றுக்கொள்வது?

அதிர்ஷ்டவசமாக, தேவன் அன்பானவர், இரக்கமுள்ளவர் மற்றும் மன்னிப்பதற்கு அதீத விருப்பமுள்ளவருமாக இருக்கிறார்! "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" 2 பேதுரு 3:9 நமக்கு சொல்லுகிறது. தேவன் நம்மை மன்னிக்க விருப்பமுள்ளவராக இருக்கிறார். எனவே நம் மன்னிப்பிற்கான வழியை அவரே ஏற்படுத்தி இருக்கிறார்.

பாவத்திற்குரிய நியாயமான தண்டனை என்றால் அது மரணம் மட்டும்தான். ரோமர் 6:23-ன் முதல் பகுதி "பாவத்தின் சம்பளம் மரணம்" என அறிவிக்கிறது. நம்முடைய பாவங்கள் நிமித்தமாக நாம் சம்பாதித்த சம்பாத்தியம் தான் "நித்திய மரணம்". தேவன் தமது பரிபூரண திட்டத்தின் பிரகாரம் மனிதனானார் - அவரே இயேசு கிறிஸ்து (யோவான் 1:1, 14). நாம் அடைய இருந்த பாவத்தின் தண்டனையாகிய மரணத்தை இயேசு தம்மேல் எடுத்துக்கொண்டு சிலுவையில் மரித்தார்! "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" என 2 கொரிந்தியர் 5:21 நமக்கு போதிக்கிறது. நாம் அடைய இருந்த பாவத்தின் தண்டனையை இயேசு தாம் ஏற்றுக்கொண்டு சிலுவையில் மரித்தார். தேவன் என்கிற நிலையில் அவரது மரணம் உலகத்திலுள்ள சகல மனுஷருடைய பாவமும் மன்னிக்கப்பட ஏதுவாயிற்று.

"நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார்" என்று 1 யோவான் 2:2 எடுத்துரைக்கிறது. இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, பாவத்தின் மேலும் மரணத்தின் மேலும் தனக்குண்டாயிருந்த வெற்றியை பறைசாற்றுகிறார் (1 கொரிந்தியர் 15:1-28). தேவனுக்கே துதி உண்டாகட்டும்! இயேசு கிறிஸ்துவினுடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாக, ரோமர் 6: 23-ன் இரண்டாவது பாதி உண்மையாகியிருக்கிறது, "தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்."

உங்களுக்கு உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமா? நீங்கள் விட்டு வெளியே வர இயலாத நிலையில் உங்கள் குற்ற உணர்ச்சி உங்களுக்கு பெரும் தொல்லையாக இருக்கிறதா? இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து அவரை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வீர்களானால், உங்கள் பாவங்கள் உங்களுக்கு மன்னிக்கப்படும். "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே, இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" என்று எபேசியர் 1:7 கூறுகிறது.

நமது பாவக்கடனை எல்லாம் இயேசு நமக்காக கொடுத்து தீர்த்துவிட்டார், ஆகவே நாம் மன்னிக்கப்படுவோம். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், தேவனிடம் இயேசுவின் மூலமாக உங்களை மன்னிக்கும்படி கேளுங்கள், இயேசு உங்கள் பாவங்களிலிருந்து உங்களை மன்னிப்பதற்காக சிலுவையில் மரித்தார் என விசுவாசியுங்கள். இந்த அற்புதமான செய்தியை யோவான் 3:16-17 தன்னகத்தே கொண்டுள்ளது: "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய்

உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்."

மன்னிப்பு - அது மெய்யாகவே எளிமையானதா?

ஆமாம் அது அவ்வளவு எளிதானது! நீங்கள் உங்கள் கடின உழைப்பின் நிமித்தமாக தேவனிடமிருந்து மன்னிப்பை சம்பாதிக்க முடியாது. உங்கள் மன்னிப்புக்குரிய விலைக்கிரயத்தை உங்களால் தேவனிடத்தில் செலுத்த முடியாது. விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் நீங்கள் அதை பெற்றுக்கொள்ள முடியும்.

நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு தேவன் அளிக்கும் பாவமன்னிப்பை பெற விரும்பினால், இந்த ஜெபத்தை ஏறெடுங்கள். நீங்கள் ஜெபிக்கிற இந்த ஜெபமோ அல்லது இதுபோன்ற மற்ற ஜெபங்களோ உங்களை இரட்சிப்பது இல்லை. கிறிஸ்துவில் நீங்கள் வைக்கிற நம்பிக்கை மட்டுமே உங்களுக்கு உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்பை கொடுக்கும். அவர்மேல் உங்களுக்கு இருக்கிற நம்பிக்கை மற்றும் அவரால் நீங்கள் பெற்றிருக்கிற மனிப்பிற்கு நன்றி செலுத்துகிற ஒரு செயல் தான் இந்த ஜெபம். "ஆண்டவரே, நான் உமக்கு விரோதமாக பாவம் செய்திருக்கிறேன் என்றும் அதினிமித்தம் பாவத்திற்கான தண்டனையை அடைவதற்கு பாத்திரமாய் இருக்கிறேன் என்றும் அறிந்திருக்கிறேன். ஆனால் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்து அவரில் நான் மன்னிப்பை பெறத்தக்கதாக நான் அடையவேண்டிய தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டார் எனவும் அறிந்திருக்கிறேன். இரட்சிப்பிற்காக உம்மில் எனது பரிபூரண நமிக்கையை வைக்கிறேன். உம்முடைய அற்புதமான கிருபைக்காகவும் மன்னிப்பிற்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறேன்! ஆமென்!"

104. நான் எப்படி ஒரு கிறிஸ்தவனாக முடியும்?

ஒரு கிறிஸ்தவனாக மாறுவதற்கான முதல் படி "கிறிஸ்தவன்" என்கிற சொல்லின் அர்த்தம் என்னவென்பதை அறிந்துகொள்வதேயாகும். "கிறிஸ்தவன்" என்கிற சொல்லின் தோற்றம் கி.பி. முதல் நூற்றாண்டில் அந்தியோக்கியா என்னும் நகரில் இருந்தாகும் (காண்க அப்போஸ்தலர் 11:26). முதன் முதலில் "கிறிஸ்தவன்" என்கிற சொல், ஒரு அவமானம் என்று கருதப்பட்டிருக்கலாம். இந்த வார்த்தை முக்கியமாக "சிறிய கிறிஸ்து" என்று அர்த்தப்படுகிறது. எனினும், நூற்றாண்டுகளுக்குப் பிறகு கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகள் "கிறிஸ்தவன்" என்கிற வார்த்தையை ஏற்றுக்கொண்டு இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாக தங்களை அடையாளம் காட்ட பயன்படுத்தினர். ஒரு கிறிஸ்தவன் என்பதன் எளிய சொற்பொருள் விளக்கம் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஒரு நபர் என்பதாகும்.

நான் ஏன் ஒரு கிறிஸ்தவனாக மாறவேண்டும்?

இயேசு நான் "ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார்" என்று அறிவித்தார் (மாற்கு 10:45). பிறகு இங்கே கேள்வி எழுகிறது - நாம் ஏன் மீட்கப்பட வேண்டும்? மீட்குதல் என்னும் கருத்து ஒரு நபரை மீட்டுக்கொண்டு வருவதற்கு பதிலாக செலுத்த வேண்டிய பணம் ஆகும். இந்த கறுத்து ஒரு கடத்தலுக்கான யோசனையில் பெரும்பாலும் வருகிறது, அதாவது கடத்தல் சம்பவங்களில் பயன்படுத்தப்படுகிறது, யாரோ ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு, அவர் விடுதலையைப் பெறுவதற்கு ஒரு மீட்கும் தொகையை கடத்தியவர்கள் பெறும்வரையில் கடத்தப்பட்டவர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுதலை செய்ய இயேசு நம் மீட்கும்பொருளைக் கொடுத்தார்! என்ன அடிமைத்தனம்? பாவம் மற்றும் அதன் விளைவுகளான சரீர மரணம், பிறகு தேவனிடத்திலிருந்து பிரிந்திருக்கிற நித்தியமான பிரிவு. இயேசு ஏன் இந்த மீட்கும்பொருளை செலுத்த வேண்டியதாயிருந்தது? ஏனென்றால் நாம் எல்லோருமே பாவம் செய்திருக்கிறோம் (ரோமர் 3:23), எனவே தேவனின் நியாயத்தீர்ப்புக்குப் பாத்திரமானவர்களாக இருக்கிறோம் (ரோமர் 6:23). இயேசு நம் மீட்கும் பணத்தை எப்படிக் கொடுத்தார்? நம்முடைய பாவங்களுக்காக தண்டனை அவர் தம்மீது ஏற்றுக்கொண்டு அவைகளின் விலைக்கிரயத்தைக் கொடுப்பதற்காக சிலுவையில் மரித்தார் (1 கொரிந்தியர் 15:3; 2 கொரிந்தியர் 5:21). இயேசுவின் மரணம் நம் எல்லாருடைய பாவங்களுக்கும் போதுமானதாக எப்படி செலுத்தமுடிந்தது? இயேசு மனித உருவில் இருந்த தேவனானவர், தேவன் பூமியில் நம்மில் ஒருவரைப்போலானார், அவர் நம்மைப்போல அடையாளப்படுத்திக்கொண்டு நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் (யோவான் 1:1, 14). தேவனாக இருக்கிற இயேசுவின் மரணம் முடிவில்லாததும், முழு உலகின் பாவங்களுக்காக செலுத்த வேண்டிய விலைக்கிரயத்திற்கு போதுமானதாவும் இருந்தது (1 யோவான் 2:2). அவருடைய மரணத்திற்குப்பின்புள்ள இயேசுவின் உயிர்த்தெழுதல் போதுமான பலி என்று நிரூபித்தது, மேலும் அவர் பாவத்தையும் மரணத்தையும் உண்மையில் வென்றுவிட்டார் என்பதையும் தெரிவிக்கிறது.

நான் எப்படி ஒரு கிறிஸ்தவனாக முடியும்?

இது சிறந்த பகுதியாகும். தேவன் நம்மீது கொண்டிருக்கிற அன்பு நிமித்தமாக, ஒருவர் கிறிஸ்தவராவதற்கு மிகவும் எளிமையான வழியை ஏற்ப்படுத்தி வைத்திருக்கிறார். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, உங்கள் பாவங்களுக்காக போதுமான பலியாக அவருடைய மரணம் இருந்தது

என்று முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் (யோவான் 3:16), அவரையே உங்கள் இரட்சகராக முழுமையாய் நம்பவேண்டும் (யோவான் 14:6; அப்போஸ்தலர் 4:12). ஒரு கிறிஸ்தவராக மாறுதல் என்பது எந்தவிதமான சடங்குகள் பற்றியது அல்ல, திருச்சபைக்கு போகிறது, அல்லது வேறு விஷயங்களை மற்ற சில விஷயங்களை செய்வதிலிருந்து விலகி செய்வது போன்றவைகள் அல்ல. கிறிஸ்தவராக மாறுதல் என்பது இயேசு கிறிஸ்துவோடு தனிப்பட்ட உறவைக் கொண்டிருப்பது ஆகும். விசுவாசத்தின் மூலம் இயேசு கிறிஸ்துவுடன் தனிப்பட்ட உறவு கொள்ளுகிற ஒரு நபரையே ஒரு கிறிஸ்தவனாக உருவாக்குகிறது.

நீங்கள் ஒரு கிறிஸ்தவராவதற்கு ஆயத்தமாக இருக்கிறீர்களா?

இயேசு கிறிஸ்துவையும் உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்வதன் மூலம் நீங்கள் ஒரு கிறிஸ்தவராக மாற விரும்பினால், நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் விசுவாசிப்பது ஒன்றுதான். நீங்கள் பாவம் செய்தீர்கள் என்றும் தேவனிடமிருந்து நியாயத்தீர்ப்புக்கு தகுதியானவர்கள் என்பதையும் நீங்கள் புரிந்துகொண்டு நம்புகிறீர்களா? இயேசு உங்கள் தண்டனையை உங்களிடமிருந்து அவர்மேல் ஏற்றுக்கொண்டார் என்பதை நீங்கள் புரிந்துகொண்டு நம்புகிறீர்களா? அவருடைய மரணம் உங்கள் பாவங்களுக்காக செலுத்த வேண்டியதற்குரிய போதுமான பலியாக இருப்பதை நீங்கள் புரிந்துகொண்டு நம்புகிறீர்களா? இந்த மூன்று கேள்விகளுக்கான உங்கள் பதில்கள் ஆம் என்றால், உங்கள் இரட்சகராக இயேசுவில் உங்கள் நம்பிக்கையை வையுங்கள். விசுவாசத்தினாலே அவரை முழுமையாக நம்பி ஏற்றுக்கொள்ளுங்கள். இதுதான் ஒருவர் கிறிஸ்துவராக மாறுவதற்கு தேவையானதாக இருக்கிறது.

105. கிறிஸ்தவத்திற்கு நான் எப்படி மாறுவது?

கிரேக்க நகரான பிலிப்புவில் இருந்த ஒரு மனிதன் பவுலுக்கும் சீலாவுக்கும் இதேபோன்ற கேள்வியைக் கேட்டார். இந்த மனிதனைப் பற்றி குறைந்தபட்சம் மூன்று விஷயங்களை நாம் அறிந்திருக்கிறோம்: அவர் ஒரு சிறைச்சாலை அதிகாரி, அவர் ஒரு அஞ்ஞானி, மற்றும் அவர் ஒரு நம்பிக்கை இழந்தவராக இருந்தார். பவுல் அவரை தடுத்தபோது அவர் தன்னை தற்கொலை செய்துகொள்ளும் தருவாயில் இருந்தார். அப்பொழுதுதான் அந்த மனிதன், "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்றான்" (அப்போஸ்தலர் 16:30).

அந்த மனிதன் இந்த கேள்வியைக் கேட்டதிலிருந்து அவன் தன்னுடைய இரட்சிப்பின் தேவையை உணர்ந்து கொண்டான் என்கிற உண்மை தெளிவாகிறது - அவன் தனக்கான மரணத்தை மட்டுமே அப்பொழுது கண்டான், மேலும் அவனுக்கு அப்பொழுது உதவி தேவை என்பதையும் அவன் அறிந்திருந்தான். பவுல் மற்றும் சீலாவிடம் அவர் இப்படி கேட்பத்திலிருந்து அவர்களிடத்தில் பதில் இருப்பதாக அவர் நம்பினார்.

அந்த பதில் விரைவாகவும் எளிமையாகவும் வருகிறது: "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" (வசனம் 31). அந்த மனிதன் எப்படி தொடர்ந்து விசுவாசித்து, மாற்றப்பட்டான் என்பதை இந்த பகுதி காண்பிக்கிறது. அந்த நாளிலிருந்து அவரது வாழ்க்கை வித்தியாசத்தை வெளிப்படுத்த ஆரம்பித்தது.

மனிதனின் மாற்றம் விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதைக் கவனியுங்கள் ("விசுவாசம்"). அவர் இயேசுவை நம்புவதையல்லாமல் வேறு ஒன்றும் இல்லை. இயேசு தேவனுடைய குமாரன் ("கர்த்தர்") மற்றும் வசனங்களை நிறைவேற்றிய மேசியா

("கிறிஸ்து") என்று அந்த மனிதன் நம்பினார். அவனுடைய விசுவாசம் இயேசு பாவத்திற்காக மரித்தார் மற்றும் உயிரோடு எழுந்தார் என்பதை விசுவாசிப்பதையும் உள்ளடக்கியிருந்தது, பவுலும் சீலாவும் பிரசங்கித்த செய்தியும் இதுவேயாகும் (ரோமர் 10:9-10 மற்றும் 1 கொரிந்தியர் 15:1-4).

"மாறுதல்" என்பது எழுத்தியல் பிரகாரம் "திரும்புதல்" என்னும் அர்த்தமாகும், ஒரு காரியத்தை நோக்கி திரும்பும்போது, நாம் வேறு எதையாவது விட்டு விலகிவிடுகிறோம் என்கிற அர்த்தமாகிறது. நாம் இயேசுவிடம் திரும்பும்போது, நாம் பாவத்திலிருந்து திரும்ப வேண்டும். பாவத்திலிருந்து திரும்புதலை "மனந்திரும்புதல்" என்றும் இயேசுவிடம் திரும்புதலை "விசுவாசம்" என்றும் வேதாகமம் அழைக்கிறது. ஆகவே, மனந்திரும்புதலும் விசுவாசமும் ஒன்றுக்கொன்று நிறைவு உண்டாக்குகிறவைகளாக இருக்கின்றன. மனந்திரும்புதலும் விசுவாசமுமாகிய இவைகள் இரண்டையும் 1 தெசலோனிக்கேயர் 1:9-ல் சுட்டிக்காட்டுகின்றன - "நீங்கள் விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினீர்கள்." ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய முன்னாள் வழிகளையும் கிறிஸ்தவத்திற்கு உண்மையாக மாறின மாற்றத்தின் விளைவாக பொய்யான மதம் சம்பந்தப்பட்ட எதையுமே விட்டுவிடுவார்.

எளிய நடையில் கூறவேண்டுமானால், கிறிஸ்தவத்திற்கு மாறுவதற்கு, இயேசு உங்கள் பாவங்களுக்காக மரித்தார் என்றும், மறுபடியும் உயிர்த்தெழுந்த தேவனுடைய குமாரன் என்று நீங்கள் நம்பவேண்டும். நீங்கள் இரட்சிப்பின் தேவைக்காக நீங்கள் ஒரு பாவி என்பதை தேவனிடத்தில் ஒப்புக்கொள்ள வேண்டும், மேலும் உங்களை இரட்சிக்க இயேசு ஒருவரையே நீங்கள் நம்பவேண்டும். நீங்கள் பாவத்திலிருந்து கிறிஸ்துவுக்குத் திரும்பும்போது, உங்களை இரட்சிக்கவும் பரிசுத்த ஆவியானவரை உங்களுக்கு அளிக்கவும் தேவன் வாக்களிக்கிறார், அவர் உங்களை ஒரு புதிய சிருஷ்டியாக உருவாக்குகிறார்.

கிறிஸ்தவம், அதன் உண்மையான வடிவத்தில், ஒரு மதம் அல்ல. வேதாகமத்தின்படி கிறிஸ்தவம் இயேசு கிறிஸ்துவுடன் உள்ள ஒரு உறவாக இருக்கிறது. கிறிஸ்தவம் என்பது இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தில் விசுவாசிக்கிற யாவருக்கும் தேவன் இலவசமாக அருளுகிற ஒரு இரட்சிப்பாகும். கிறிஸ்தவத்திற்கு மாறும் ஒரு நபர் மற்றொரு மதத்திற்கு ஒரு மதத்தை விட்டு மாறுகிறதில்லை. கிறிஸ்தவத்திற்கு மாறுவது என்பது தேவன் அளிக்கும் ஈவைப்பெற்றுக்கொண்டு இயேசு கிறிஸ்துவுடன் தனிப்பட்ட உறவைத் துவங்கி, அதன் விளைவாக பாவமன்னிப்பு மற்றும் மரணத்திற்குப் பிறகு நித்தியத்தையும் அடைகிறதாகும்.

இந்த கட்டுரையில் நீங்கள் வாசித்திருக்கும் காரணத்தினால் நீங்கள் கிறிஸ்தவத்திற்கு மாற வேண்டுமென்று விரும்புகிறீர்களா? உங்கள் பதில் ஆம் எனில், நீங்கள் தேவனிடத்தில் ஏறெடுக்கவேண்டிய ஒரு மாதிரி ஜெபம் இதோ. நீங்கள் ஜெபிக்கிற இந்த ஜெபமோ அல்லது இதுபோன்ற மற்ற ஜெபங்களோ உங்களை இரட்சிப்பது இல்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவில் நீங்கள் வைக்கிற நம்பிக்கை மட்டுமே உங்களை உங்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்கும். அவர்மேல் உங்களுக்கு இருக்கிற நம்பிக்கை மற்றும் அவரால் நீங்கள் பெற்றிருக்கிற இரட்சிப்பை வெளிப்படுத்துகிற ஒரு செயல் தான் இந்த ஜெபம். "ஆண்டவரே, நான் உமக்கு விரோதமாக பாவம் செய்திருக்கிறேன் என்றும் அதினிமித்தம் பாவத்திற்கான தண்டனையை அடைவதற்கு பாத்திரமாய் இருக்கிறேன் என்றும் அறிந்திருக்கிறேன். ஆனால் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்து அவரில் நான் மன்னிப்பை பெறத்தக்கதாக நான் அடையவேண்டிய தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டார் எனவும் அறிந்திருக்கிறேன். இரட்சிப்பிற்காக உம்மில் எனது பரிபூரண நம்பிக்கையை வைக்கிறேன். ஈவாகிய நித்திய ஜீவனுக்காக நீர் காண்பித்திருக்கிற அற்புதமான கிருபைக்காகவும் மன்னிப்பிற்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறேன்! ஆமென்!"

106. பரலோகத்திற்கு செல்லுதல் - எனது நித்திய இலக்குக்கு எப்படி நான் உத்தரவாதம் அளிக்க முடியும்?

அதை எதிர்கொள்ளுங்கள். நித்தியத்திற்குள் நாம் நுழைகின்ற நாள் நாம் நினைப்பதைவிட விரைவாக வந்துவிடலாம். அந்த தருணத்திற்கு ஆயத்தப்படுவதற்கு, நாம் இந்த உண்மையை அறிந்து கொள்ள வேண்டும் - எல்லோரும் பரலோகத்திற்குப் போவதில்லை. நாம் பரலோகத்திற்குப் போகப்போகிறோம் என்பதை நாம் எவ்வாறு அறிந்துகொள்வது? சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன்பு அப்போஸ்தலர்களாகிய பேதுருவும் யோவானும் எருசலேமிலுள்ள ஒரு பெரிய கூட்டத்திற்கு இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள். பேதுரு ஒரு ஆழமான அறிக்கை ஒன்றை வெளியிட்டார், அது இன்றைய பின் நவீனத்துவ உலகில் கூடப் பிரதிபலிக்கிறது: "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழுங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப்போஸ்தலர் 4:12).

அப்போதிலிருந்து அப்போஸ்தலர் 4:12 அரசியல் ரீதியாக சரியானதல்ல. இன்று "எல்லாரும் பரலோகத்திற்குப் போகிறார்கள்" அல்லது "எல்லா வழிகளும் பரலோகத்திற்கு வழிநடத்துகின்றன" என்று சொல்வது மிகவும் பிரபலமானதாக இருக்கிறது. இயேசுவையல்லாமல் பரலோகத்தைப் பெற முடியும் என்று அநேகர் நினைக்கிறார்கள். அவர்கள் மகிமையை விரும்புகிறார்கள், ஆனால் சிலுவையினால் தாங்கள் தொந்தரவு செய்யப்படுவதை அவர்கள் விரும்புவதில்லை, அதில் மரித்தவரை ஒரு குறைவான நிலையில் கூட எண்ணிப்பார்க்க விரும்பவில்லை. பரலோகத்திற்கு செல்வதற்கான ஒரே வழியாக இயேசுவை ஏற்றுக்கொள்ள விரும்பாத பலர், மற்றொரு பாதையை

கண்டுபிடிக்க தீர்மானிக்கிறார்கள். ஆனால் இயேசு எந்த வழியிலும் இல்லை என்று எச்சரிக்கிறார், இந்த சத்தியத்தை நிராகரிப்பதற்கான விளைவு நித்திய நரகம் ஆகும். "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றார்" (யோவான் 3:36). கிறிஸ்துவில் வைக்கிற விசுவாசம் தான் பரலோகத்திற்கு செல்வதற்கான திறவுகோலாக இருக்கிறது.

பரலோகத்திற்கு செல்ல ஒரே ஒரு வழியை மட்டும் கொடுக்க தேவன் மிகக் குறுகிய மனப்பான்மை கொண்டவர் என்று சிலர் வாதிடுவார்கள். ஆனால், தேவனுக்கு விரோதமாக மனிதகுலத்தின் கிளர்ச்சியின் வெளிப்பாட்டில், பரலோகத்திற்கு எந்த வழியையும் அவர் நமக்கு அளிப்பதற்கு அவருக்கு அது மிகவும் பரந்த மனப்பான்மையாக இருக்கிறது. நாம் நியாயத்தீர்ப்புக்கு தகுதியுடையவர்கள், ஆனால் நம்முடைய பாவங்களுக்காக மரிக்கும்படி ஒரே ஒரு குமாரனை அனுப்பி, தேவன் நம்மைத் தப்புவிக்கிறார். யாராவது இதை குறுகிய அல்லது பரந்ததாக பார்க்கிறார்களா, இது சத்தியமாக இருக்கிறது. நற்செய்தி என்னவென்றால் இயேசு மறித்து மீண்டும் உயிர்த்தெழுந்தார்; பரலோகத்துக்குப் போகிறவர்கள் விசுவாசத்தினாலே இந்த சுவிசேஷத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

இன்று பலர் மனந்திரும்புதலுக்கான தேவையுடன் விட்டுக்கொடுக்கும் ஒரு நாகரீகமான நற்செய்தியைப் பிடித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் பாவத்தை குறிப்பிடாத மற்றும் தங்கள் வாழ்க்கையில் எந்த மாற்றமும் தேவையில்லை என்று கருதுகிற ஒரு "அன்பான" (நியாயம் விதிக்காத) தேவன்மேல் நம்பிக்கை வைக்க விரும்புகிறார்கள். "என் தேவன் ஒருவரை ஒருபோதும் நரகத்திற்கு அனுப்பமாட்டார்" என்று அவர்கள் கூறலாம். ஆனால் இயேசு பரலோகத்தைப் பற்றி பேசியதைவிட நரகத்தைப் பற்றித்தான் அதிகம் பேசினார், பரலோகத்திற்கு செல்வதற்கான ஒரே வழியைக்

கொடுக்கிற இரட்சகராக தம்மை அளித்தார்: " நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" யோவான் 14:6).

யார் உண்மையில் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள்? நான் பரலோகத்திற்குப் போகிறேன் என்று எப்படி உத்தரவாதம் அளிக்க முடியும்? நித்திய ஜீவனை உடையவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை வேதாகமம் தெளிவாக குறிப்பிடுகிறது: "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்" (1 யோவான் 5:12). இயேசுவின் மரணம் தங்களுடைய பாவங்களுக்கான விலைக்கிரயம் என்றும் அவருடைய உயிர்த்தெழுதலிலும் விசுவாசிக்கிறவர்கள் எவர்களோ அவர்கள் பரலோகத்திற்குப் போவார்கள். கிறிஸ்துவை புறக்கணிக்கிறவர்கள் பரலோகத்திற்கு செல்ல மாட்டார்கள். "அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாய் இராதபடியினால், அவன் ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்பட்டாயிற்று" (யோவான் 3:18).

இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்கிறவர்களுக்காக பரலோகம் அற்புதமான ஆச்சரியமூட்டுகிற இடமாக இருக்கும், அவரை நிராகரிக்கிறவர்களுக்கு நரகம் மிகவும் பரிதாபகரமான துக்கம் நிறைந்த ஒரு இடமாக இருக்கும். இதை திரும்ப திரும்ப பார்க்காமல் ஒருவரால் வேதாகமத்தை சீரிய முறையில் வாசிக்கமுடியாது - அதன் கொடு வரைக்கப்பட்டு இருக்கிறது. பரலோகத்திற்கு செல்ல ஒரே ஒரு வழிதான் இருக்கிறது - அந்த வழி இயேசு கிறிஸ்துவே என்று வேதாகமம் சொல்லுகிறது. இயேசுவின் கட்டளையைப் பின்பற்றுங்கள்: "இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது;

அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" (மத்தேயு 7:13-14).

இயேசுவில் வைக்கும் விசுவாசம் ஒன்று மட்டும்தான் பரலோகத்திற்கு செல்வதற்கான வழியாகும். விசுவாசமுள்ளவர்கள் அங்கு செல்லுவதற்கு உத்தரவாதத்தைப் பெறுகிறார்கள். நீங்கள் இயேசுவை நம்புகிறீர்களா?

107. நான் எனது விசுவாசத்தை இயேசுவின்மேல் வைத்திருக்கிறேன்... இப்பொழுது அடுத்து என்ன?

நான் எனது விசுவாசத்தை இயேசுவின்மேல் வைத்திருக்கிறேன்... இப்பொழுது அடுத்து என்ன?

வாழ்த்துக்கள்! நீங்கள் உங்கள் வாழ்க்கையில் மாற்றத்தை கொண்டு வருகிற ஒரு தீர்மானத்தை எடுத்து இருக்கிறீர்கள்! "இப்பொழுது என்ன?" தேவனோடு எனது பயணத்தை எப்படி ஆரம்பிப்பது? வேதாகமத்தில் கீழே கொடுக்கப்பட்டுள்ள ஐந்து படிகள் வேதாகமத்திலிருந்து உங்களுக்கு சரியான திசையைக் காண்பித்து வழி நடத்தும். உங்களுடைய இந்த பயணத்தில் உங்களுக்கு ஏதாவது கேள்விகள் எழுமாயின் www.GotQuestions.org என்கிற இணையதளத்திற்கு சென்று உங்கள் கேள்விகளுக்கான பதிலை தெரிந்து கொள்ளுங்கள்.

1. இரட்சிப்பு என்றால் என்ன என்பதை நீங்கள் சரியாக புரிந்து கொண்டதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

"உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்" என 1 யோவான் 5:13 கூறுகிறது. நாம் இரட்சிப்பு என்றால் என்ன என்பதை புரிந்துகொள்ள வேண்டும் என தேவன் விரும்புகிறார். மேலும் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று அறிந்திருக்கிற விஷயத்தில் திடநம்பிக்கை உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்றும் தேவன் விரும்புகிறார். இரட்சிப்பை பற்றிய முக்கியமான குறிப்புகளை சுருக்கமாக ஆராய்வோம் வாருங்கள்:

(a) நாம் எல்லோரும் பாவம் செய்திருக்கிறோம். நாமெல்லாரும் தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களை செய்திருக்கிறோம் (ரோமர் 3:23).

(b) நாம் செய்த பாவத்தின் நிமித்தமாக தேவனை விட்டு நித்திய காலமாக பிரிந்திருக்கிற தண்டனைக்குள்ளானோம் (ரோமர் 6:23).

(c) நம்முடைய பாவங்களுக்குரிய தண்டனையின் விலையை செலுத்துவதற்காக இயேசு சிலுவையில் மரித்தார் (ரோமர் 5:8; 2 கொரிந்தியர் 5:21). நாம் அடைய வேண்டிய தண்டனையை தம்மேல் ஏற்றுக்கொண்டு இயேசு நம்முடைய ஸ்தானத்தில் மரித்தார். அவர் மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்ததன் மூலம் நம்முடைய பாவங்களுடைய தண்டனையை போக்க அவருடைய மரணம் போதுமானது என்பதை நிரூபித்தார்.

(d) இயேசுவின்மேல் விசுவாசம் வைத்து நாம் அடைய வேண்டிய தண்டனையை தம்மேல் ஏற்றுக்கொண்டு இயேசு நம்முடைய ஸ்தானத்தில் மரித்தார் என்பதை நம்புகிற யாவருக்கும் தேவன் மன்னிப்பையும் இரட்சிப்பையும் அருளுகிறார் (யோவான் 3:16; ரோமர் 5:1; ரோமர் 8:1).

இதுதான் இரட்சிப்பின் செய்தி! நீங்கள் உங்கள் விசுவாசத்தை இயேசு கிறிஸ்துவின் மேல் வைத்து அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டிருந்தால், நீங்கள் இரட்சிக்கப்பட்டு இருக்கிறீர்கள்! உங்களுடைய எல்லா பாவங்கள் மன்னிக்கப்பட்டு இருக்கிறது, மேலும் தேவன் நான் உங்களை விட்டு விலகாமாட்டேன் மற்றும் உங்களை கைவிடமாட்டேன் என வாக்கு பண்ணியிருக்கிறார் (ரோமர் 8:38-39; மத்தேயு 28:20). உங்கள் இரட்சிப்பு இயேசு கிறிஸ்துவில் பாதுகாப்பாக இருக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள் (யோவான் 10:28-29). நீங்கள் உங்களது முழு நம்பிக்கையையும் இயேசுவின் மேல் மட்டும் வைத்து அவரை உங்களுடைய இரட்சகராக

ஏற்றுக்கொண்டீர்களானால், நீங்கள் உங்கள் நித்யத்தை தேவனோடு பரலோகத்தில் செலவழிக்கலாம் என திடநம்பிக்கையோடு இருக்கலாம்!

2. வேதாகமத்தை சரியாக போதிக்கிற ஒரு நல்ல திருச்சபையை கண்டுபிடியுங்கள்.

சபை என்றதும் கட்டிடத்தை சபை என்று கருதிவிட வேண்டாம். சபை என்றால் மக்கள். இயேசு கிறிஸ்துவிற்குள் இருக்கிற விசுவாசிகள் ஒருவருக்கொருவர் ஐக்கியத்தில் இருப்பதும் வளருவதும் மிகவும் முக்கியமான காரியமாகும். சபையின் முதன்மையான நோக்கங்களில் இதுவும் ஒன்றாகும். இப்பொழுது நீங்கள் உங்கள் விசுவாசத்தை இயேசு கிறிஸ்துவின்மேல் வைத்திருக்கிறீர்கள். ஆகையால் நீங்கள் இருக்கிற இடத்தில் வேதாகமத்தை விசுவாசிக்கிற மற்றும் சரியாக போதிக்கிற ஒரு நல்ல சபையை கண்டுபிடித்து உங்களை அந்த ஐக்கியத்தில் இணைத்து கொள்ளுங்கள். அந்த சபை போதகரோடு நீங்கள் புதிதாக இயேசுவை ஏற்றுக்கொண்டு புது ஜீவன் பெற்றவர் என்பதை தெரியியுங்கள். அவர் நீங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு புதிதாக விசுவாசத்திற்குள் வந்தவர் என்பதை அறிந்து கொள்ளட்டும்.

சபையின் இரண்டாவது பிரதான நோக்கம் என்னவென்றால், வேதாகமத்தை உள்ளதுபோலவே சரியாக போதிப்பதாகும். நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் கைக்கொண்டு நடக்கத்தக்கதான தேவனுடைய அறிவுறுத்தல்கள் மற்றும் ஆலோசனைகளை வேதாகமத்தில் இருந்து கற்றுக்கொள்ளலாம். வேதாகமத்தை சரியாக புரிந்து கொள்ளுகிற காரியம்தான் வலிமையான மற்றும் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்கு திறவுகோலாக இருக்கிறது. 'வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும்,

சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2 தீமோத்தேயு 3:16-17).

சபையின் முன்றாவது நோக்கம் "ஆராதனை". ஆராதனை என்பது தேவன் செய்த எல்லா காரியங்களுக்காகவும் அவருக்கு நன்றி செலுத்துதல் ஆகும். தேவன் நம்மை இரட்சித்திருக்கிறார். தேவன் நம்மை நேசிக்கிறார். தேவன் நமது தேவைகளை சந்திக்கிறார். தேவன் நமக்கு வழிகாட்டி நம்மை வழிநடத்துகிறார். இப்படியிருக்க எப்படி நாம் அவரை துதியாமல் இருக்கமுடியும்? தேவன் பரிசுத்தமுள்ளவரும், நீதியுள்ளவரும், அன்புள்ளவரும், இருக்கமுள்ளவரும் கிருபை நிறைந்தவருமாக இருக்கிறார். "கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்" என வெளி. 4:11 கூறுகிறது.

3. தேவன் மேல் கவனம் செலுத்ததக்கதாக ஒவ்வொரு நாளும் அதற்கான நேரத்தை ஒதுக்குங்கள்.

தேவன் மேல் கவனம் செலுத்ததக்கதாக நாம் ஒவ்வொரு நாளும் அதற்கான நேரத்தை ஒதுக்குவது மிகவும் முக்கியமான காரியமாகும். சிலர் இதை "அமைதியான நேரம்" என அழைக்கிறார்கள். மற்ற சிலர் இதை "தியானங்கள்" என அழைக்கிறார்கள். காரணம் நாம் தேவனோடு நம்மை ஈடுபடுத்திக்கொண்டு அவரை தியானிக்கின்ற நேரமாகும். சிலர் காலை நேரங்களில் இதற்காக நேரத்தை ஒதுக்குவார்கள். வேறு சிலர் மாலை நேரங்களில் இதற்காக நேரத்தை ஒதுக்குவார்கள். இந்த நேரத்தை நீங்கள் எப்படி அழைத்தாலும் எப்பொழுது ஒதுக்கினாலும் அதில் ஒரு பிரச்சனையும் இல்லை. நீங்கள் அனுதினமும் இவ்வகையில் நேரத்தை தேவனோடு செலவழிக்கிறீர்களா என்பதுதான் முக்கியம். நாம் தேவனோடு

நேரத்தை செலவிடும்போது எந்தெந்த காரியங்கள் எல்லாம் அதில் உள்ளடங்கியுள்ளன?

(a) ஜெபம். ஜெபம் என்பது தேவனோடு பேசுதல் என்கிற சாதாரண விஷயமாகும். உங்களைக்குறித்த கவலைகள் மற்றும் பிரச்சனைகளை தேவனிடத்தில் கூறுங்கள். உங்களுக்கு தேவையான ஞானம் மற்றும் வழிநடத்துதலை கொடுக்கும்படி அவரிடம் கேளுங்கள். உங்களது தேவைகளை அவரிடத்தில் கூறி அதை சந்திக்கும் படி கேளுங்கள். அதேவேளை நீங்கள் எந்த அளவிற்கு அவரை நேசிக்கிறீர்கள் மற்றும் அவர் உங்களுக்கு செய்த காரியங்களை மறவாமல் அவரை துதித்து உயர்த்துகிறீர்கள் என்பதையும் அவரிடத்தில் கூறுங்கள். இதுதான் ஜெபம்.

(b) வேத வாசிப்பு. வேதாகமம் சபை, ஞாயிறு பாடசாலை, வேத ஆராய்ச்சி கூட்டம் போன்றவற்றில் போதிக்கப்பட்டாலும், நீங்கள் உங்களது அனுதின வாழ்வில் வேதாகமத்தை வாசிக்கவேண்டும். நீங்கள் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்கு தேவையான அனைத்து காரியங்களும் வேதாகமத்தில் அடங்கியுள்ளன. தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ளுதல், ஞானமான தீர்மானங்களை எடுத்தல், பிறருக்கு எவ்வகையில் உதவி செய்தல் மற்றும் ஆவிக்குரிய வாழ்வில் முதிர்ச்சியை பெறுதல் போன்ற காரியங்களில் தேவனுடைய வழிநடத்துதல் நமக்கு இதில் உண்டாயிருக்கிறது. வேதாகமமானது தேவனுடைய வார்த்தையாகும். வேதாகமமானது நாம் நமது வாழ்வை தேவன் விருப்புகிற வகையிலும் நமக்கு திருப்தி அளிக்கிற நிலையிலும் எப்படி வாழவேண்டும் என்பதற்கான தேவனுடைய அறிவுறுத்தல்கள் மற்றும் ஆலோசனைகள் அடங்கிய கையேடு ஆகும்.

4. நீங்கள் உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் வளருவதற்கு உங்களுக்கு உதவி செய்து ஊக்குவிக்கும் நபர்களோடு உங்கள் உறவுகளை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

"மோசம் போகாதிருங்கள்; ஆகாதச ம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்" என்று 1 கொரிந்தியர்15:33 கூறுகிறது. தீய செயல்களை செய்யும்படி நம்மை உந்துகிற மக்களில் இருந்து வேறுபட்டு வாழத்தக்கதாக, வேதாகமம் அவர்களைப்பற்றிய எண்ணற்ற எச்சரிக்கைகளை நமக்கு கொடுக்கிறது. பாவமான காரியங்களை செய்கிறவர்களோடு நாம் நேரத்தை செலவழிக்கும் போது அவர்கள் செய்கிற தீய செயல்களை நாமும் செய்யத்தக்கதாக சோதனைக்குள்ளாவோம். அப்படிப்பட்டவர்களோடு உள்ள ஐக்கியம் நம்மை அவர்களுடைய சுபாவக்கரை படியும்படி செய்துவிடும். இதனிமித்தம் நாம் எப்பொழுதும் கர்த்தரை நேசிக்கிற மற்றும் அவருக்கு தங்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்களோடு கலந்து சேர்ந்து இருக்கவேண்டும்.

உங்கள் சபையில் இருந்து உங்களுக்கு உதவி செய்கிற மற்றும் ஊக்குவிக்கிற ஓரிரு நண்பர்களை தேர்ந்தெடுங்கள் (எபிரேயர் 3:13; 10:24). உங்களுடைய அமைதி நேரம், தேவனோடுள்ள ஐக்கியம் மற்றும் இதர காரியங்களில் பொறுப்பெடுத்து உங்களை நடத்ததக்க நிலையில் இருக்கும்படி உங்கள் நெருங்கிய நண்பரிடம் கேளுங்கள். அவர்களுக்கும் நீங்கள் இப்படி இருக்க அவர்களிடம் கேளுங்கள். இதன் அர்த்தம் கிறிஸ்துவை அறியாத மற்ற அனைத்து நண்பர்களையும் விட்டு நீங்கள் விலக வேண்டும் என்கிற அர்த்தமல்ல, தொடர்ந்து அவர்களது நண்பராக இருங்கள் அவர்களை நேசியுங்கள். இயேசு கிறிஸ்து உங்களை இரட்சித்ததையும் அவர்கள் செய்கிற எல்லா செயல்களையும் உங்களால் செய்ய இயலாது என சாதாரண நிலையில் கூறுங்கள். அவர்களிடம் இயேசுவைக் குறித்து கூறுவதற்கு உங்களுக்கு நல்ல சந்தர்ப்பங்களை கொடுக்க தேவனிடம் கேளுங்கள்.

5. ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ளுங்கள்.

அநேகருக்கு ஞானஸ்நானம் குறித்து தவறான புரிந்துகொள்ளுதல் இருக்கிறது. ஞானஸ்நானம் என்னும் சொல்லின் அர்த்தம் "தண்ணீரில்

மூழ்குதல்" என்பதாகும். ஞானஸ்நானம் என்பது வேதாகமப் பிரகாரம் ஒருவர் கிறிஸ்துவில் விசுவாசித்து புதிய வாழ்விற்குள்ளாக வந்ததையும் தொடர்ந்து இயேசுவையே பின்பற்றி செல்லுவேன் என்கிறதுமான தீர்மானத்தை வெளியரங்கமாக அறிக்கை செய்யும் ஓர் செயலாகும். தண்ணீரில் மூழ்குகிற இந்த செயல் கிறிஸ்துவோடு மரித்து அடக்கம்பண்ணப்பட்டதற்கு அடையாளமாக இருக்கிறது. தண்ணீரில் இருந்து வெளியே வருகிற செயல் கிறிஸ்துவோடு உயிர்த்தெழுந்த காரியத்திற்கு அடையாளமாக இருக்கிறது. ஆக ஞானஸ்நானம் எடுத்தல் என்கிற காரியம் இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றோடு ஒப்பிட்டு காண்பிக்கிற ஓர் அடையாளமாக இருக்கிறது (ரோமர் 6:3-4).

ஞானஸ்நானம் உங்களை ஒருபோதும் இரட்சிக்காது. ஞானஸ்நானம் உங்களுடைய பாவங்களை கழுவாது. ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவின் மூலம் மட்டுமே இரட்சிப்பு என்று நீங்கள் வெளியரங்கமாக பண்ணுகிற ஒரு விசுவாச அறிக்கையை காண்பிக்கிற ஒரு கீழ்படிதலின் படி ஆகும். ஞானஸ்நானம் என்பது முக்கியமானதுதான், காரணம் இது நமது கீழ்படிதலைக் காண்பிக்கிறதாய் இருக்கிறது. மேலும் கிறிஸ்துவின்மேல் உங்களுக்கு இருக்கிற விசுவாசத்தை அறிக்கப்பண்ணுகிற தருணமாகவும் இருக்கிறது. நீங்கள் ஒருவேளை ஞானஸ்நானம் பெற ஆயத்தமாக இருந்தால், உங்கள் போதகரிடம் இதைக்குரித்து கூறுங்கள் அவருக்கு தெரிவியுங்கள்.

எங்களின் இதர நூல்கள் (*Printed / E-Books*)

1. ஒரு வருட வேத வாசிப்பு திட்டம்
2. *One Year Bible Reading Plan*
3. சங்கீதமும் நீதிமொழிகளும்
4. சங்கீத புத்தகத்திலுள்ள ஜெபங்கள்
5. தமிழ் - வேதாகம மனப்பாட வசனங்கள் பாகம் 1
6. தமிழ் - வேதாகம மனப்பாட வசனங்கள் பாகம் 2
7. *Tanglish - Vedaagama Manappaada Vasanagal Bagam 1*
8. *Tanglish - Vedaagama Manappaada Vasanagal Bagam 2*
9. *Bible Memory Verses Volume 1*
10. *Bible Memory Verses Volume 2*
11. *Bible Coloring Books 01 Creation [Tamil, English]*
12. *Bible Coloring Books 02 Adam and Eve [Tamil, English]*
13. *Bible Coloring Books 03 Cain and Abel [Tamil, English]*
14. *Bible Coloring Books 04 Noah [Tamil, English]*
15. ஞாயிறு பள்ளி பாடங்கள் - தொடக்கநிலை - பாகம் 1
16. *Tanglish - Gnayiru Palli Paadangal - Thodakkanilai - Baagam 1*
17. *Bible Coloring Book for Sunday School Syllabus Beginners - Volume 1*
18. வேதாகம தியானங்கள் பாகம் 1 40 லெந்து நாட்கள் [ஆசிரியர்: கிளாடிஸ் சுகந்தி ஹாசிலிட்]
19. வேதாகம தியானங்கள் பாகம் 2 40 லெந்து நாட்கள் [ஆசிரியர்: கிளாடிஸ் சுகந்தி ஹாசிலிட்]
20. வேதாகம தியானங்கள் பாகம் 3 - [25 கிறிஸ்மஸ் தியானங்கள். ஆசிரியர்: கிளாடிஸ் சுகந்தி ஹாசிலிட்]
21. வேதாகம தியானங்கள் பாகம் 4 [365 நாட்கள். ஆசிரியர்: கிளாடிஸ் சுகந்தி ஹாசிலிட்]
22. தம்பிரான் வணக்கம் 1578 [ஆசிரியர்: பழங்காசு சீனிவாசன், ஏசுதாஸ் சாலொமோன்]

23. தமிழ் பைபிள் 1714 பாகம் 1 (மத்தேயு முதல் அப்போஸ்தலருடைய நடபடிகள் வரை)
24. தமிழ் பைபிள் 1714 பாகம் 2 (ரோமர் முதல் வெளிப்படுத்தல் வரை)
25. ஒருவருட வேதாகமம் (தமிழ், English, Telugu, Kannada, Malayalam, Hindi)
26. ஒருவருட வேதாகமம் - சம்பவங்கள் நடந்த கால வரிசைப்படி (தமிழ், English, Telugu, Kannada, Malayalam, Hindi)
27. தமிழ் வேதாகம ஒத்தவாக்கிய விளக்கவுரை
28. அபிஷேகம் [ஆசிரியர்: Rev. Dr. A. பிரகாசம்]
29. என் வாழ்வில் தேவனுடைய கிருபை [ஆசிரியர்: Rev. Dr. A. பிரகாசம்]
30. தமிழ் இணைநிலை வேதாகமங்கள்
31. English Parallel Bibles
32. கர்த்தருக்குச் சித்தம் [ஆசிரியர்: Rev. Dr. A. பிரகாசம்]
33. சீகன்பால்குவின் ஓலைச்சுவடி பிரசங்கங்கள்
34. தமிழ் வேதாகம பழைய மொழிபெயர்ப்புகள்
35. விசுவாச ஜீவியம் [S. பரமானந்தம் ஐயர்]
36. அன்பின் ஜீவியம் [S. பரமானந்தம் ஐயர்]
37. தேவசித்த ஜீவியம் [S. பரமானந்தம் ஐயர்]
38. நீங்கள் இயேசு கிறிஸ்துவை அறிய வேண்டியது மிக மிக அவசியம் [S. பரமானந்தம் ஐயர்]
39. கிறிஸ்தவ கடவுள் யார்? அவர் எப்படிப்பட்டவர்?
40. இயேசு கிறிஸ்து யார்? அவர் எப்படிப்பட்டவர்?
41. பரிசுத்த ஆவியானவர் யார்? அவர் எப்படிப்பட்டவர்?

- இயேசு கிறிஸ்து யார்?
- ஏன் கன்னி பிறப்பு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது?
- கிறிஸ்துவின் வருகையைக் குறித்து பழைய ஏற்பாட்டில் எங்கே முன்னறிவிக்கப்பட்டுள்ளது?
- இயேசு தேவனா? தேவனுடைய குமாரனா?
- இயேசு இந்த பூமிக்கு வந்தது எதற்காக?
- இயேசு எப்படிப்பட்ட தோற்றத்தில் இருந்தார்?
- இயேசு கிறிஸ்து எவ்வகையில் தனித்துவமானவர்?
- இயேசு தேவனுடைய ஒரேபேறான குமாரன், தாவீதின் குமாரன், மனுஷகுமாரன், பிரதான ஆசாரியர், தேவனுடைய வார்த்தை, தேவனின் அவதாரம், தேவ ஆட்டுக்குட்டி என்பதன் அர்த்தம் என்ன?
- இயேசு ஒருவர்தான் பாவமில்லாமல் பிறந்தாரா?
- இயேசு கிறிஸ்துவின் வெவ்வேறு பெயர்கள் மற்றும் தலைப்புகள் யாவை?
- மத்தேயுவிலும் லூக்காவிலும் இயேசுவின் வம்சவரலாறுகள் ஏன் மிகவும் வித்தியாசமானதாக இருக்கிறது?
- இயேசு ஒரு கட்டுக்கதையா? இயேசு மற்ற பண்டைய புற மதங்களிலிருந்த கடவுள்களின் நகலா?
- இயேசு மெய்யாகவே ஜீவித்திருந்தாரா? இயேசு ஜீவித்திருந்தார் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் ஏதேனும் உண்டா?
- இயேசுவின் குழந்தை பருவத்தில் என்ன சம்பவித்தது?
- கடவுள் ஏன் இயேசுவை முன்னரே அனுப்பவில்லை?
- இயேசுவும் சாத்தானும் சகோதரர்களா?
- இயேசு பிரதான தூதனாகிய மிகாவேலா?
- இயேசு எப்படி, யாருக்கு நம்முடைய மீட்கும் பொருளின் விலைக்கிரயத்தைச் செலுத்தினார்?
- நான் ஏன் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை வைக்கவேண்டும்?
- சிலுவையின் நிலையங்கள் என்றால் என்ன, அவற்றிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?
- ஆதாமின் சாபத்தையும் இயேசு அனுபவித்தாரா?

- இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதல் உண்மையா?
- கிறிஸ்து எப்பொழுது திரும்ப வருவார்?
- இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள் என்பதன் அர்த்தம் என்ன?
- இயேசு இரட்சிக்கிறார் என்பதன் அர்த்தம் என்ன?
- பரலோகத்திற்கு போகிறதற்கு ஒரே வழி இயேசு மட்டும்தானா?
- கிறிஸ்துவை உண்மையாக பின்பற்றுதல் என்பதன் அர்த்தம் என்ன?
- தேவன் மன்னிக்காத பாவம் ஏதேனும் உள்ளதா?
- இயேசு நம்முடைய பாவத்திற்காக மரிப்பதற்கு முன்பு மக்கள் எப்படி இரட்சிக்கப்பட்டார்கள்?
- இயேசுவின் இரத்தத்தைச் சொல்லி மன்றாடுவது வேதாகமத்தின் படியானதா?
- இயேசு தேவனென்றால், அவர் தேவனிடம் எப்படி ஜெபிக்க முடியும்? இயேசு தன்னிடமே ஜெபித்துக்கொள்ளுகிறாரா?
- நீதிமொழிகளில் சொல்லப்படும் ''ஞானம்'' இயேசுவா?
- இரட்சிப்பின் வழி என்றால் என்ன?
- யார் இரட்சிக்கப்பட முடியும்? யாராவது இரட்சிக்கப்பட முடியுமா?
- இரட்சிப்பின் திட்டம் என்றால் என்ன?
- நான் எப்படி தேவனுடைய பிள்ளையாக முடியும்?
- நான் ஒரு இந்து, நான் எதற்காக கிறிஸ்தவனாகவேண்டும்?
- நான் ஒரு முஸ்லீம், கிறிஸ்தவனாக மாறுவதை நான் ஏன் கருத்தில் கொள்ள வேண்டும்?
- தேவனிடத்தில் நான் எப்படி சரியான நிலையைப் பெறமுடியும்?
- கிறிஸ்தவன் என்றால் என்ன?
- பாவியின் ஜெபம் என்றால் என்ன?
- மன்னிப்பு கிடைத்ததா? தேவனிடமிருந்து நான் எவ்வாறு மன்னிப்பைப் பெறுவது?
- நான் எப்படி ஒரு கிறிஸ்தவனாக முடியும்?
- கிறிஸ்தவத்திற்கு நான் எப்படி மாறுவது?
- எனது நித்திய இலக்குக்கு எப்படி நான் உத்தரவாதம் அளிக்க முடியும்?